Koviloor Acadamy

நூல்

நிலையணை மந்திரோபதேசம்

ஆசிரியர்

அமிழணியாய்

KOVILOOR ADDAVAI
A. No. 46038
LIBRARY, KOVILOOR

Koviloor Acadamy

Acc.No. 46038

KOVILOOR ACADEMY LIBRARY KOVILOOR
A. No. 46038
26/14

தலையணை மந்திரோபதேசம்

அம்மணிபாய்

சற்றேறக்குறைய 75, 76 வருஷங்களுக்குமுன் செவ்வாப்பேட்டையில் சங்கரபிரஸாத் என்றொரு கௌடபிராமணனிருந்தான். அவன் வெகு தனிகன்; ஸந்தான ஸம்பத்தையும் ஈசன் அவனுக்கு அளித்திருந்தார். அவனுக்கு 15 ஆண் குழந்தைகளும், 1 அருமைப் பெண் குழந்தையுமிருந்தார்கள். வெகுநாளாக ஆண் குழந்தைகள் பாக்கியத்தை சங்கரபிரஸாத் அனுபவித்து எத்தனையோ தவம்பண்ணி ஆசைக்கு ஓர் பெண்குழந்தையைப் பெற்றெடுத்து, அதை வெகு செல்வமாய் வளர்த்து வந்தான். அக்குழந்தையின் பெயர் அம்மணிபாய். எந்தக் குழந்தையை நாம் வெகு செல்வமாய் வளர்க்கின்றோமோ அதைத்தான் நோய்கள் விசேஷமாய் கைப்பற்றுவது வழக்கம். அம்மணிபாய்க்கு 5, 6 வயதில் அம்மை வார்த்து தேகம்முடிய மயிர்க்காலுக்கு ஒரு சிறுதுழிபாய் வடுக்கள் விளங்கிவந்தன. நமக்குள்ள ஓரே பெண்குழந்தை பிழைக்கவேண்டுமே என்று வெகு சிரமத்துடன் சங்கரபிரஸாத் அதற்கு வைத்தியம் பண்ணி

அதைக் காப்பாற்றினான். அம்மணிபாய்க்கு 9-ம் வயதில் முடக்கம்மை வார்த்து ஒற்றைக்கால் குறுகி இழுத்துக் கொண்டு போயிற்று. அச் சங்கடத்திலிருந்து உயிர்பிழைத்த அம்மணிபாய்க்கு அவள் தந்தை திருப்பதிக்கு பிரார்த்தனை செய்துகொண்டு வெங்கடாசலபதி ஸ்வாமிக்கு பொன்கால் பண்ணச்செலுத்தினான். ஒன்பதாம் வயதில் கண்ட இதே நோயால் அம்மணிபாய்க்கு தலைமயிர் முக்காலும் உதிர்ந்து மிகுந்துநின்ற கால்பாகமும் அவ் வயதுக்குமேல் வளராமல் அதுவரையில் வளர்ந்த அளவில் நின்றுவிட்டது. அரைக் கிரைவித்துத் தைலம், பழந்தின்னி வெளவால் தைலம், குந்துமணி எண்ணெய் முதலானஎண்ணெய்கள் எத்தனையோ வடித்து அம்மணி தலையில் தேய்த்தும் ஒருவித அனுகூலமும் காணவில்லை. குழந்தை உயிருடன் பிழைத்த ஒரு பாக்கியமே போதும் என்று சங்கரபிரஸாத் உள்ளங்களித்து சலவிட்ட பணம் வீண் என்பதை ஒருவாறு மறந்தான். அம்மணிபாய்க்கு 15-ம் வயதில் ஒரு கண்ணில் கண்வலி கண்டது. அதற்கு சாதாரணமாய் சிற்றுமணக்கெண்ணெயும் கொதிசோறும் ஒற்றினால் உபாதி நீங்கிவிடும். வைத்தியர்கள் யஜமான் உத்தரவுப்படியும் தங்களுடைய யுக்திக்குத் தகுந்தபடியும் பனைமட்டைச்சாறு பிழிந்து அதில் வெள்ளியை உரைத்து அம்மணி கண்ணில் மையிட்டார்கள். அக் கண் குதறிக் குழம்பிப் புண்ணாய் பலநாள் அவஸ்தையின் பிறகு பூ விழுந்து ஒருவாறு காய்ந்தது. வைத்தியர்கள் கொஞ்ச நாளில் அப்பூ தானாக மாறிவிடும் என்று இனிய வார்த்தை சொல்லி கூலியைக் குறையாமல் பற்றிக்கொண்டார்கள். அம்மணிக்கோ கண் பூ விழுந்தவுடன் அக் கண் பார்வை முற்றிலும் மறுபட ஆயிற்றும்பி வராதவண்ணம் நீங்கி விட்டது. ஒரு கண் பார்வை இல்லை என்றாலும், மற்றொரு கண்ணை காளியம்மன் காப்பாற்றிவைத்தாளே என்று சங்கர பிரஸாத் சமயபுரம் கோவிலுக்கு கண்மலர் செய்து அனுப்பினான்.

Koviloor Acadamy

26/4

இவ்வளவுதூரம் நாம் இங்கு சொல்லப் புகுந்தது, இக் கிரந்தத்தையே வாய்மலர்ந்தருளிய இவ்வம்மணிக்கு, இவளது இளமைப் பருவத்தில் வந்த கண்டங்களைச் சொல்லுவதுடன், இவ்வளவு அழகான புத்தியை இவளுக்குக் கொடுத்து இந்த திவ்விய கிரந்தத்தை உலகத்தாருக்கு உபகாரமாய் இயற்றச்செய்த இவ்வம்மணியின் மேனியை இவளுடைய புத்திபோல் அழகாகவிருக்கக் கூடாதென்று கருதி ஈசன் இவளை ஏகாகூபியாகவும் அம்மைவடுவால் பொளியப்பட்ட விகார முகியாகவும் சிருஷ்டித்தார் என்று எடுத்துக்காட்டியபடி, இவளுடைய தலை வழுக்கைத்தலை என்பது முன்னமேயே நமக்குத் தெரியும். தலைமயிரும் குட்டை. இன்னும் இவள் மூக்குச் சப்பட்டை. நிறம் ஏதோ துரதிர்ஷ்டத்தால் வெகு கறுப்பான நிறம். கௌடர்கள் விசேஷமாய் எலுமிச்சம் பழம் போன்ற நிறமுள்ளவர்கள். சங்கரபிரஸாதின் பாக்கியம் அவனுடைய அருமைப் பெண் கறுப்பு வர்ணமானவளா யிருந்தாள். "காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு!"

அருமைப்பெண்; அத்துடன் நித்தியம் நோய்பாதை; இத்தனையிலும் சங்கரபிரஸாத் தனது பெண்குழந்தைக்கு ஏதாவது அவள் சக்திக்குத் தக்கபடி வித்தைப் புகட்ட வேண்டும் என்று எண்ணி, வீட்டிலேயே வந்து பாடம் சொல்லிக்கொடுக்கும்படி ஓர் உபாத்தியாயர் நியமித்திருந்தான். அவரும் பெரிய பணக்காரன் குழந்தைக்கு எவ்வளவு பயபக்தியுடன் பாடஞ் சொல்லவேண்டுமோ அவ்வளவுடனும் பாடம் சொல்லி முதல் பாடபுஸ்தகத்தில் 10-பக்கம் இரண்டாம் பாடபுஸ்தகத்தில் 5 கதை, மூன்றும் பாடபுஸ்தகத்தில் 3 பாடம் சொல்லி வைத்தார். படிப்பு கொஞ்சந்தான். எழுத்து கையெழுத்துமட்டும் சடுதியில் போடத் தெரியும். கணக்கு கூட்டல்மட்டும் தெரியும்; அதிலும் ரூபா அணா பைஸா கூட்டல் தெரியாது. உபாத்தியாயர் சொல்லிக் கொடுத்து அறிந்துகொண்டது கொஞ்சந்தான் என்றாலும்,

Koviloor Acadamy

அம்மணி யம்மாள் இயல்பாகவே வெகு புத்தியுள்ளவள்என்று அவள் தந்தை களித்தான்.

கௌடர்கள் தங்கள் பெண்குழந்தைகளை 16 வயதில் கலியாணம் செய்துகொடுப்பது வழக்கம். அவ்வழக்கப்படி சங்கரபிரஸாத் வரன்தேட ஆரம்பித்து செவ்வாப்பேட்டைக் கருகாமையிலிருக்கும் சேலத்தில் வரதபிரஸாத் என்றொரு வறிய கௌடனிருப்பதைத் தெரிந்துகொண்டான்.

வரதபிரஸாத் வெகு தரித்திரன். தன் தேகபோஷணை செய்துகொள்ள வேண்டிய பொருள் அவனுக்கில்லை. அவன் வறுமையைக் கண்டு தெய்வமே அஞ்சி அவனுக்கு உலக வழக்கப்படி அதிக ஸந்தான ஸம்பத்தைக் கொடுக்காமல் ஒரே பிள்ளையைக் கொடுத்திருந்தது. அவன் பெயர் ராம பிரஸாத். ஆள் பார்ப்பதற்கு 7 அடி உயரமிருப்பான். அழகோ கண்ணெடுத்துப் பார்க்கமுடியாத அழகு. வரத பிரஸாத் என்ன ஏழையா யிருந்தபோதிலும் தனது ஒரே மகனுக்கு கையில் தங்கக் காப்பும் சங்கிலியும் போட்டு சேலம் சமஸ்கிருத கலாசாலையில் படிக்க வைத்திருந்தான். ராம பிரஸாத் அப் பள்ளிக்கூடத்தில் படித்த நாளெல்லாம் ஒவ் வொரு வகுப்பிலும் கடைசியிலிருப்பான். ஆனால் எல்லோரும் ஆச்சரியப்படும்படி வெகு பரிசுத்தமான வஸ்திரம் உடுத்துக் கொண்டு வெகு கசியாயிருப்பான். அவன் பாடம் சரிவர ஒப்பித்த நாள் ஒருநாளாவதில்லை; எப்படியாவது கொஞ்சம் படித்தவன் என்ற பெயர் வந்தால் அது விண்போக மாட்டாதென்று அவன் தந்தை கருதி அவனைப் படிக்க வைத்திருந்தான். அது அவன் நன்மைக்காகவே முடிந்தது.

எப்படி எனில், சங்கரபிரஸாத் அம்மணிபாய்க்கு வரன் தேட ஆரம்பித்தபொழுது ராமபிரஸாத்தைப் பற்றி கேள்விப்பட்டு அவன் வறியனாயிருந்தாலும் பாதகமில்லை, அவனையே நாம் நமது மாப்பிள்ளையாகப் பண்ணிக் கொள்ளவேண்டும் என்று நிச்சயித்தான். இல்லாவிடில் இவனுடைய அழகான பெண்ணை எந்த தனிகனான கௌடன்

மணம்புரிவான்! இது இவனுக்குத் தோன்றவில்லை செவ்வாப்பேட்டைக்குச் சமீபத்தில் சேலமிருக்கிறது. நமது பெண்ணை நாம் அதிக தூரமனுப்பிவிட்டுப் பிரியவேண்டிய தில்லை. வறியவீட்டில் பெண்ணைக் கொடுத்தாற்றான் மாப்பிள்ளை நமக்கு அடங்கி நடப்பான்; அவனுக்குப் பணமில்லாவிட்டாலென்ன! நாம் ஏராளமாய் சீதனம் கொடுப்போம், என்று நினைத்துக்கொண்டான்.

அவன் உத்தேசப்படியே, அம்மணியம்மாள் விவாகம் நடந்தது. வரதபிரஸாதும் தனது வறுமை நீங்கி கொஞ்ச காலம் மருமகள் பாக்கியம் அனுபவித்துவிட்டு காலஞ் சென்றான். அதுவும் அவன் பாக்கியந்தான். ராமபிரஸாதும் அம்மணியம்மாளும் தனிமையில் குடித்தனம் பண்ண லானார்கள். அவர்களுக்கு வேண்டிய பொருளுதவி செய்து விட்டு சங்கரபிரஸாத் தனது 15 குமாரர்களுக்கும் பாகம் முதலிய ஏற்பாடுகளை முடித்துக்கொடுத்து சிவபதம் சேர்ந்தான்.

அம்மணிபாய் வெகு விகாரமான உருவத்துடனிருந்த போதிலும் வேண்டியதற்கு மேலாக பொருள் கொண்டு வந்தவளாகையால் ராமபிரஸாத் அவளுக்கு பிராண நாயகனாகவே யிருந்தான். அவ்விருவர்களுடைய அன்பிற்கும் அபிமானத்திற்கும் தகுந்தபடி 5, 6 குழந்தைகள் அவர் களுடைய சிறுவயதிலேயே பிறந்தன. குழந்தைகள் தாயைக் கொள்ளாமல் தகப்பனாரை அனுசரித்து அழகாகவே யிருந்தன.

அவ்விருவர்களும், குடித்தனம் செய்துவந்த பொழுது அவர்களுள் மனைவி கொஞ்சம் படித்தவளாகவும் புருஷன் படிப்பு அதிகமாக இல்லாதவனாகவு மிருந்தபடியால் அம்மணிபாய் ஒழிந்தவேளைகளிலெல்லாம் தனது கணவனுக்கு மந்திரோபதேசங்கள் செய்வது வழக்கம். விசேஷமாய் பகற்காலமெல்லாம் பெண்டுகளுக்கு வீட்டுக்காரியம்

Koviloor Acadamy

பார்ப்பதிலும் குழந்தைகளைக் கவனிப்பதிலும் போய் விடுமாகையால் பகலில் இவ்வித உபதேசங்கள் செய்ய சாவகாசம் கிட்டாதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அம்மணிபாய்க்கு மட்டும் எப்படிக் கிட்டும்! ஆகையால் அவள் ஒவ்வொரு நாள் வேலைகளும் முடிந்து இரவு ஒசை அடங்கி "அம்மா இன்றையப்பொழுது போயிற்று" என்று வெற்றிலை யுண்டு படுக்கையில் படுத்துக்கொள்ளும் சமயம் வரும்பொழுது, தனக்கு என்னதான் சிரமம் மேலிட்டிருந்தபோதிலும், நித்திராதேவி என்னதான் தன் கண்களை மயக்கினபோதிலும், கொஞ்சநேரமாவது தனது படுக்கையில் படுத்தபடியே தனது பிராணநாயகன் காதில் ஸாங்கோபாங்கமாய் சில மந்திரோபதேசங்கள் செய்யாமல் ஒருநாளும் உறங்கமாட்டாள்.

தலையணையில் தலைவைத்தபடியே அம்மணிபாய் இவ் வுபதேசங்களை வாய்மலர்ந்தருளியபடியால் இக்கிரந்தத்துக்கு "தலையணை மந்திரோபதேசம்" என்று பெயரிடப்பட்டது. அச்சமயமின்றி மற்ற வேளைகளிலும் இம் மாதுசிரோமணி செய்த உபதேசங்கள் வெகுசிலாக்கியமான வைகளாகையால் அவைகளையும் இவ் வுபதேசங்களுடன் ஒன்றுசேர்த்தே உலகத்துக்கு விளங்கச் செய்யத் துணிந்தோம். இவ் வுபதேசங் களில் படித்து அறிந்துகொள்ளவேண்டிய ரகசியங்கள் பலவென்பது இக் கிரந்தத்தைப் படிக்கும் ஒவ்வொரு நாயகனுக்கும் நாயகிக்கும் படிக்கும்பொழுதே விளங்கும். அவைகளை பிரமசாரியாகிய நாம் எடுத்துச் சொல்ல நமக்கு யோக்கியதை யில்லை.

ஆனால் எழுதமட்டும் யோக்கியதை எப்படி வந்தது என்று கேட்டாலோ, நாம் அதே சேலத்தில் ராமபிரஸாதி னுடைய அடுத்த வீட்டில் வெகுநாள் வரையில் வசித்தோ மாகையாலும், அம்மணியம்மாள் செய்த பிரஸங்கங்கள் விசேஷமாய் நான்கு வீடுகள் மட்டும் கேட்கும்படியான பிரஸங்கங்களாகையாலும், அவைகளில் பலவற்றை நாமே

Koviloor Academy

நேராகக் கேட்டிருக்கின்றோ மாகையாலும், நாமிவைகளை முற்றிலும் அறிந்துகொள்ளும் பாக்கியம் பெற்றோம். அம்மணியம்மாள் தூங்கும் அறைக்கும் நமது திண்ணைக்கும் மத்தியில் ஒரு சிறு சுவர்மட்டுந்தான். எங்களிருவர்களுடைய வீடுகளும் கூரைவீடுகள். பிரசங்கங்கள் நடந்த வேளைகளோ இராக்காலங்களில் ஓசை ஓய்ந்த காலங்கள். ஏதாவது ஒரு இரவு நாம் அயர்ந்து தூங்கிவிட்டாலும் மறுநாள் காலையில் நேற்று என்ன பிரசங்கம் என்று ஒரு தடவைமட்டும் அம்மணியைக் கேட்டுவிட்டால், அவள் வெகு சந்தோஷமாய் ஒன்றுவிடாமல் சொல்லுவாள். இவ்வளவு ஸம்பத்தும் நமக்கிருந்தபடியால் நாம் இக் கிரந்தம் எழுதும் பேறு பெற்றோம். நாம் இவ்வளவு புண்ணியம் பண்ணியிருந்தும் ஏதாவது இரண்டொரு பிரசங்கங்களை மறந்துவிட்டே யிருக்கலாம். அதனால் உலகத்துக்கு உண்டாயிருக்கும் நஷ்டம் வெகு அதிகமாயிருக்கலாம். அக் குற்றத்துக்காக நமது நண்பர்கள் நம்மை மன்னிப்பார்கள் என்று நம்பி யிருக்கின்றோம்.

முதலாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் சந்தைக்குப்போய் சாமான்கள் வாங்கிவந்தது

நீங்கள் என்றைக்காவது ஒருநாள் சரியாய் சாமான்கள் வாங்கிவந்ததுண்டா? குப்பையும் கூளமுமாய் எல்லா

சாமான்களையும் வாங்கிவந்தால் நஷ்டம் யாருக்கு? கடைக்காரன் எது கொடுக்கிறானோ அதை வாயைத் திறவாமல் வாங்கிவந்து விடுகிறீர்கள்! கடுகு பாதி மண்! ஆறுதடவை புடைத்தேன், இன்னும் மண் போகவில்லை. புளி கன்னங்கறேல் என்று அடையாயிருக்கிறது, உங்களுக்கு என்று ஒன்பது வருஷத்துப் புளியை அந்தப் பாழாய்ப் போவான் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தானோ! அவன் வாங்கின காசு கரியாய் மாறுதா! பருப்பு பார்த்துவாங்கினீர்களே! அதற்கு அடித்துக்கொள்ள இரண்டு கைகளும் போதா. பூ என்று ஊதினால் பறக்கும். இலைப்பருப்பைக் கொடுத்து ஏய்த்துவிட்டான். குண்டுப்பருப்பு ஒரு கடையிலும் கிடைக்காமற் போயிற்று? திருப்பத்தூர் குண்டுப்பருப்பு சிரிப்பாய் சிரிக்கிறது. உங்களுக்குமட்டும் எங்கிருந்து இலைப் பருப்பு கிட்டிற்றோ தெரியவில்லை? போகும்போதே எண்ணெய் ஒரு கடைக்கு இரண்டு கடையாக பார்த்து வாங்குங்கள் என்று படித்துப் படித்துச் சொல்லியிருந்தேன்! காறல் எண்ணெயை ஒரு குடம் வாங்கிக்கொண்டு வந்து நிற்கின்றீர்கள். அதை யார் தொடப்போகிறார்கள். உடனே அந்த குடத்தை கடையில் கொண்டுபோய் போட்டுவிட்டு வந்து மறுகாரியம் பாருங்கள். நெய் பீணநாற்றம் வீசுகிறது! இதற்கு விலை படிக்கு ஒரு ரூபாயும் கொட்டிக்கொடுத்தீர்கள். குழந்தைகள் இந்த நெய்யை விரலால் தொடமாட்டா. இப்பொழுதே திருப்பிவிடுங்கள். இந்த நெய்யை கலத்தில் போட்டுக் கொள்ளுவதைவிட வெறுமன்னம் புசிக்கலாமே! அந்த பழம்புளியைக்கொண்டு மசிபோல் ஒரு குழம்பிட்டு இந்த நெய்யையும் குத்திக்கொண்டால் நீங்கள் கொண்டு வந்திருக்கும் இலைப்பருப்பு வாசனை கம் என்று ஊரைத் தூக்கும். உங்களை எப்படித்தான் உங்கள் தாயார் பெற்றாளோ! வெல்லம் ஆய்விட்டது என்று நான் சொன்னால் உடனே ஒரு மணு வெல்லம் வாங்கிவிடவேண்டுமா? "தெருப்புழுதி கைநிரம்ப" என்பது நீங்கள் வாங்குகின்ற

Kovilpor Acadamy

சாமானுக்காகத்தான் வழக்கில் வந்தது! சளிப்பு ஒரு நாழிகை வழி தூரம் அடிக்கிறதே. உங்கள் மூக்குக்குத் தெரியவில்லையா? ஒவ்வொரு நாளைக்கும் ஒரு அணு மூக்குப்பொடி போட்டுக் கொண்டால் உமக்கு வாசனை எப்படித் தெரியும்? இவைகளெல்லாம் போகட்டும். நல்ல அரிசியிருந்தாலல்லவா ஒரு அன்னமாவது சித்தப்படுத்தி, விளாவின மோரையாவது விட்டுக்கொண்டு சாப்பிடலாம். பழுத்து வண்டுகள் ஊறும் அரிசியை வாங்கிவந்தீர்களே!

''நாளை நீ போய் நல்ல சரக்குகள் பிடித்துவா. என்னை வீணாய் நிந்திக்காதே. எதை வாங்கிவந்தாலும் நீ குற்றஞ் சொல்லுகிறாய்.''

நான் சந்தைக்குப் போகிறேன், நீங்கள் சட்டி விளக்குங்கள்; இதுதான் நியாயம்! இந்தப் பேச்சு உங்களுக்குத்தான் அழகாயிருக்கிறது! நீங்கள் எதைக் கொண்டு வந்தாலும் வாய்திறவாமல் ஒப்புக்கொண்டால் நான் நல்லவள். ஒரு பெண்சாதி என்று இருந்தால் புருஷனைப் பார்த்து இப்படிப் பணத்தையும் பாழாக்கி உபயோகமற்ற சாமான்களை வாங்கிவரலாமா என்று கேட்கமாட்டாளா? அது பிசகா? ஏன் நான் ஒரு பேச்சு சொன்னால் வாயில் பொத்து, பொத்து என்று போடுகின்றீர்கள்? எக்கேடு கெடட்டும், நமக்கென்ன என்றிருக்க எனக்கு மனம் வரவில்லையே! எனது பாழும் புத்தியை செருப்பாலடிக்கவேண்டும். நல்லது ஒன்றுக்கும் உதவாத உளுந்து ஒரு மூட்டை கொண்டுவந்தீர்களே! உடைத்துப் பார்த்தால் வறுத்த உளுந்துபோலிருக்கிறதே! தோசைக் கரைத்தால் விழுது காணுமா! அப்பளம் செய்தால் வெளுப்பாயிருக்குமா! அந்த மூட்டை உளுந்து அவ்வளவையும் அப்பளமிட்டு உமக்கே கொட்டுகின்றேன்! நீர்தான் புசிக்கவேண்டும்.

''அப்படியே செய்''

Koviloor Acadamy

"அப்படியே செய்" என்று வெகுசுலபமாய் சொல்லி விடுகின்றீர்கள். சண்ணுக்கும் பார்க்க அழகாயிருந்தா லல்லவா ஒரு காரியம் செய்யத் தோன்றும். அந்த உளுந்தால் அப்பளமிட்டால் ஒடுபோலல்லவோ யிருக்கும். என் வயிற்றெரிச்சல் தீர நாளை அந்த மூட்டையை மணி கர்ணிகையில் கொட்டிவிடுகின்றேன். நல்லது! பாக்கு வாங்கிவந்தீர்களே! யார் போட்டுக்கொள்ளுகிறது என்று வாங்கிவந்தீர்கள்? ஒரு பாக்கு மாதிரிக்காக வாயில் போட்டேன். உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் கசக்கின்றது. பறைச்சி பள்ளிச்சிகூட கிராம்பு கலந்த பாக்கு உயர்ந்த பாக்காய் இப்பொழுது போட்டுக் கொள்ளுகிறார்கள். அவர்களிலும் கேடுகெட்டவள் நமது மனைவி என்று தொத்தல் துவர் பாக்கை வாங்கிவந்து வீசி எறிந்தீர்கள். என்று வெள்ளிக்கிழமை. ஒருவராவது பாக்கு வெற்றிலை பிசிக்காமல் படுக்கார்கள். இது நியாயமா? இதை நான் 'கேட்கப் போனால் பொல்லாதவள்!

"நான் சொல்லவில்லையே."

நீங்கள் சொல்லாவிட்டால் என்ன! நானே சொல்லிக் கொள்ளுகிறேன். நீ போய் சாமான்கள் வாங்கிவா என்றால் போதாதா.

"திருப்பித் திருப்பிச் சொல்லுவதில் என்ன பயன். தூக்கம் அதிகமாக வருகின்றது. பேச்சை நிறுத்தேன்."

'உள்ளத்தைச் சொன்னால் உடம்பு எரியும்' என்பார்கள். நானும் உள்ளத்தைச் சொன்னால் பொல்லா தவள்தான்.

என்ன! வாய் திறக்கவில்லை! தூங்கிவிட்டீர்களா?

அம்மனி அப்பொழுது சொன்ன சொல் ஒன்றுதான் உண்மையாயிற்று. ஏனெனில் இவள் இப்படித்தான் சிக்கொண்டே யிருப்பாள் என்று ராமபிரஸாத் தூங்கிப்

Kovilloor Acadamy

போய்விட்டான். மற்ற விஷயங்களைக்குறித்து மறுநாள் பேச நிச்சயித்து அம்மணியும் கண்ணடைத்தாள்.

இரண்டாவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் காய்கறி வாங்கினதற்காக மனைவி புகழ்தல்

இன்றைக்கு நீங்கள் வாங்கிவந்த வாதமொடக்கிக் கீரை வாய்க்கு நன்றாக இருந்ததா? உங்களுக்கு பித்து தான் பிடித்திருக்கிறது! ஒருவன் ஒருநாளைக்கு எத்தனை கீரைகள் சமையல் செய்வாள்! வாதமொடக்கி ஒரு கட்டு, அகத்திக்கீரை இரண்டு முடிப்பு, சேமைக் கீரை ஒரு கூடை, எல்லாம் ஒரே அடியாய் வாங்கிவந்தீர்கள். வாடிப் போகாதா, என்று கேட்டால் வாய்திறக்கவில்லை. இன்று துவாதசி யில்லையே, அகத்தி ஏன் என்றால், பூவும் பிஞ்சு மாக விருந்தது, ஆசையாயிருந்தது என்றீர்கள். மூன்றாங் கீரை என்னத்திற்கு என்றால் உடம்புக்கு நல்லது என்று பல்லிளிக்கிறீர்கள். நாளைக்கு நமது கொல்லையில் முளைத் திருக்கும் அருகம்புல்லை அறுத்து அதை உப்புப்போட்டு சுண்டி இலையில் போட்டால் அதுவும் ஒரு ருசிதான். தினந்தோறும் கீரை தின்றால் குழந்தைகளுக்கு வயிற்றில் கிருமி உண்டாகாதா? அது போகட்டும்.

Kovilool Acadamy

கீரையிற்றான் மூன்று விதம். எத்தனைவிதம் கறிவாங்கி வந்திர்கள். கொத்தவரை ஒரு தூக்கு, மூக்குத்திக்காய் கால்கூடை, அத்திக்காய் இரண்டு தூக்கு, சுண்டைக்காய்க் கால் கூடை, பயத்தங்காய் பத்துக்கட்டு, கீரைத்தண்டு, வாழைத்தண்டு, இவ்வளவும் வாங்கிவந்தால் எதை முன்னால் பண்ணுகிறது? உங்களுக்கு என்று கறிகள் அகப்படுகின்றனவே. இவ்வளவு காய்கறிகள் வாங்கி வருவதைவிட பஞ்சு பறக்கிறதாய் வாழைக்காய், உருளைக்கிழங்கு, அவரைக்காய், புடலம்பிஞ்சு இவைகள் வாங்கிவரக்கூடாதா? கீரையும் வாங்கி கீரைத்தண்டும் வாங்கி வரப்பட்ட புத்திமான்களை நான் கண்டதே யில்லை.

"நான் முளைக்கீரை வாங்கவில்லை அடி."

காலமே எழுந்திருந்து அது ஒருகூடை வாங்கி வந்து வேறு காரியம் பாருங்கள். இனிமேல் அத்திக்காயும் ஆலங்காயும் வாங்கி வந்தால் நான் மாட்டுக்குப் போட்டு விடுவேன். மாடுகூட அத்திக்காயை தின்குமோ தின்காதோ சந்தேகம். அதற்குள்ள அறிவுகூட உமக்கில்லை. நல்லது மலிவு என்று அத்திக்காயை வாங்கிவந்திர்களா? மலிவு மலிவு தான். அதை உரலில் போட்டு நான்கு நாழிகை இரண்டு கைகளும் விட்டுப்போக இடிக்கவேண்டுமே. அது யாரால்ஆகும்? அப்படியே தான் இடித்து எடுத்துவிட்டால் அதை வேகவிட சரியாய் ஒரு சாமம் செல்லும். அதன் தலையில் ஒரு படி எண்ணெய் ஊற்ற வேண்டும். ஊற்றி னாலும் சக்கை சக்கையாகவிருக்கும். இலுப்பைக்கட்டி போலிருக்குமே ஒழிய சுறியாக லக்ஷணமாக விருக்க மாட்டாது. அத்துடனில்லை, அதற்கு இரண்டு தேங்காயாவது அரைப்படி பருப்பாவது கலக்கவேண்டும். இவ்வளவு சிங்காரமும் பண்ணினால் ஒரு அத்திக்காய் கறி பண்ணி முடியும். லாபம் வெகுலாபமாயிற்றே! எல்லா விஷயத்தி லும் லாபத்தை உத்தேசித்து செலவு நடத்தித்தானே

Koviloor Acadamy

இந்த குடும்பம் இவ்வளவு க்ஷேமத்திற்கு வந்திருக்கின்றது! வெட்கக்கேட்டை வாய்விடவேண்டாம்! நாளை முதல் ஒரே தீர்மானம்! கீரை என்பது! இனி என் உத்தரவில்லாமல் வாங்கக்கூடாது; வாங்கிவந்தீர்களோ, அப்படியே வாயிலில் கொட்டி விடுவேன்!

''நல்லது!''

அத்திக்காய் வேண்டவே வேண்டாம். கொத்தவரை வேண்டவே வேண்டாம். சுண்டை, மூக்குத்தி- இவைகள் யார்க்குப் பிடிக்கும்? அவைகளும் வேண்டாம். நல்லதாய் இரண்டொரு காய்கறி வாங்கிவந்தால் போதும். வாடி வதங்கி குப்பையில் போவதில் என்ன பிரயோஜனம்!

''அப்படியே.''

''நல்லது, அப்படியே'' என்று வெகு யோக்கியர்கள் போல் சொல்லிவிட்டு உமது மனப்போக்குப்படி எல்லாம் வாங்கிவந்து கொண்டிரும். என் பேச்சை லக்ஷியம் பண்ணுதேயும். என்ன பதிலில்லை!

எப்படி பதில் வரும்? ராமபிரஸாத் ஏற்கனவே தூங்கி விட்டான்.

Koviloor Acadamy

மூன்றுவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் தனது அத்தான் ராஜகிரிக்கு ரயில்சார்ஜ் முதலிய செலவுக்காக 5 ரூபா இனும் கொடுத்தது

ஆம், நமக்கு பணம் இறைந்து கிடக்கின்றது! அத்தானு கித்தானு! ஒரு மாதம் வெட்கங் கெட்டுப்போய் விட்டுடன் உட்கார்ந்து கொண்டு தின்று அழித்தது போதாது, கூலி கொடுத்ததும் போதாது என்று எதிர்மூச்சும் போடவேண்டுமா? அவனுக்கு கையில் 5 ரூபா செலவுக்கும் கொடுத்தனுப்பினிர்களோ! என்ன புத்தியால் கொடுத்தீர்கள்? காலை முதல் இரவு 10 நாழிகை வரையில் புழுக்கை மாதிரி நான் உழைக்கின்றேன். ஒரு காசு என் கண்களில் காட்டமாட்டேன் என்கின்றீர்கள். வாயிலில் விஷம் வந்தது, ஆசைக்கு வாங்கிப் புசிக்கவேண்டுமென்றுலும் என்னிடம் ஒரு காசுகூட கிடையாது. அந்தத் தடியனுக்கு மட்டும் கொட்டிக்கொடுக்க எங்கிருந்து 5 ரூபா உங்களுக்கு கிடைத்ததோ தெரியவில்லை.

"எல்லாம் உன் பணம் தானே அடி."

ஆஹா, வெகு ஜம்பமாய் எல்லாம் உன் பணந்தான் என்று சொல்லிச் சொல்லி ஒரு தூசுகூட என் கண்களில் காட்டாமல் எல்லாவற்றையும் இறுக முடிப்பு இட்டுக் கொண்டுவிட்டீர்கள். அந்தக் கிழவன் என்னை இவ்வளவு அருமையாக வளர்த்து குறியில் தள்ளுவதுபோல் இந்த விட்டில் தள்ளிவிட்டுப் போய் விட்டான். இவ்வளவு மோசக்

Kovilor Acadamy

கருத்து உங்களிடமிருக்கும் என்பது எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் நானும் இவ் வுலகப் பெண்கள்போல் எல்லா அதிகாரமும் என் கையில் வைத்துக்கொண்டு வெள்ளிச் சங்கிலியில் ஒரு சாவியையும் தொங்கவிட்டுக் கொண்டு நிற்பேன். நான் எல்லா விதத்திலும் அசடு. நல்லது, என்ன புத்தியால் ராஜகிரி இழவுக்கு 5 ரூபா இட்டீர்கள்? நமது காலம் முன்காலம் போலில்லாமல் எல்லாம் கஷ்டகாலமாய் முடிந்துவிட்டதே! எனது தந்தை சங்கர பிரஸாத் மட்டும் கொஞ்சம் கைகொடுத்துத் தூக்கி விட்டிராத பக்ஷத்தில் நாம் இதுகூட இல்லாமல் நடுச்சந்தி யில் நிற்கவேண்டும், என்பது உங்களுக்குத் தோன்றவில்லையா? எவன் பணத்தை எவன் எடுத்துக் கொடுக்கிறது? உமக்கும் உமக்கு கிடைத்திருக்கும் பொருளுக்கும் என்ன சம்பந்தம்? நீங்கள் நெற்றித் தண்ணீர் நிலத்தில் விழ சம்பாதித்த பொருளா? அந்த புத்தியற்ற கிழவன் உமது குணத்தை யறியாமல் எல்லாவற்றையும் உமது வசமாக்கி என் வாயில் மண்ணைத் தெள்ளிப் போட்டுவிட்டு கண்ணை மூடிக்கொண் டான். இரண்டாம் புடவை மெல்லியதாய் ஒன்று வேண்டும் என்று நான் ஆறுமாத காலமாய் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு வருகிறேன். மதுரை சுங்கடிப் புடைவை இக்காலத்தில் வண்ணத்தி முதல் 4 ரூபாவுக்கு வாங்கிக் கட்டுகிறாள். அந்தத் தடியனுக்குக் கொடுக்க 5 ரூபா உங்களுக்குக் கிட்டிற்று. எனக்கு புடைவை வாங்கிக் கொடுக்கமட்டும் ஆறுமாதகாலமாய் உங்களிடம் பண மில்லை. என்னைத்தொட்டு தாலிகட்டியாய் விட்டது. நான் எக்கேடு இனி போனாற்றானென்ன? கந்தையைக் கட்டிக் கொண்டு நடுத்தெருவில் நடந்தாலும் அது உங்களுக்கு வெட்கமில்லை. அத்தான் மட்டும் சுகமாய் ரயிலேறி ஊர் போனால் போதும்! உங்கள் உறமுறையார் உம்மைப்போல் நல்லவர்களில்லை என்று உம்மைப் புகழ்ந்தால் போதும்! உங்களுடைய சொந்த பெண்சாதி என்ன அவஸ்தைப் பட்டாற்றானென்ன? நீங்கள் ஊருக்கெல்லாம் நல்லவர்கள்.

Koviloor Acadamy

வீட்டுக்கு மட்டும் சத்துரு! நல்ல நல்லவர்கள்! உங்கள் குணம் உண்மையாய் நானல்லவோ அறிந்திருக்கிறேன், நீங்கள் வெகு கபடர்கள்.

என்னைப் பெண்ணாக அடைய என்னுடைய தாய் தந்தையர்கள் எவ்வளவோ தான தருமங்கள் பண்ணினார்கள். பாவி என் வயிற்றிலும் இரண்டு பெண்கள் பிறந்து மரம்போல் நிற்கின்றன. பெண்ணில்லை என்று யார் துக்கப் பட்டார்கள். இவ்விரண்டும் பிள்ளைகளாய்ப் பிறந்திருக்கக் கூடாதா? இவ்வளவு வீண் விசாரமின்றி ஒரு முழத் துணியைக் கட்டிவிட்டு சுகமாகவிருக்கலாமே! சீமைச் சீட்டிகள் எவ்வளவோ மலிவாக விற்கின்றனவே; அந்த ஐந்து ரூபாவுக்கு இவ்விரண்டு குழந்தைகளுக்கும் கதவுபோல இரண்டு பாவாடை தைத்தால் இன்னும் இரண்டு வருஷ காலம் விசாரப்படாமலிருக்கலாமே! நமது குழந்தைகளே என்று கொஞ்சமாவது உங்களுக்கு தயையில்லாமற் போயிற்றே! அத்தான் மேல்மட்டும் பச்சாத்தாபம் வந்து 5 ரூபா சரேல் என்று அவிழ்த்துக் கொடுத்தீர்களே!

சொல்லிக் காட்டவேண்டாம் என்றாலும், என் வயிறு கொதிக்கிறதே. எரிமுட்டை இந்த வீட்டுக்கு மாதம் ஒரு ரூபாவுக்கு வாங்கவேண்டியிருக்கிறது. முட்டைக் காரி 3 மாதமாய் என் வாணாளை எடுக்கின்றாள். நானு மிதோ அதோ என்று சாக்குச்சொல்லி வருகின்றேன். அவளும் தான் எத்தனைநாள் பொறுப்பாள்? இன்று சாயந்திரம் "நீ என்ன மனுஷியா; உப்புப்போட்டு சோறு உண்கிறாயா!" என்று என்னை கண்டபடி பேசிப்போனாள். அந்தத் தடியனுக்கு அவிழ்த்துக்கொடுத்த பணமிருந்தால் அந்தக் கடன் அப்படியே அடைந்து இரண்டொரு ரூபாவும் மிகுந்து நிற்காதா? உங்களுக்கு வீட்டுக்காரியம் எப்படிப்போனாலென்ன? ஊரார் உங்களை நல்லவர் என்று சொன்னால் போதும்.

Koviloor Acadamy

என்னவோ ஏழை பிழைத்துப் போகட்டும், ராஜகிரி, என்கிறீர்கள். நாம் மட்டும் வெகு பணக்காரர்கள் என்று எப்படி நீங்கள் எண்ணுகின்றீர்களோ தெரியவில்லை. பெருங்காயம் இருந்த சிமிழ் மணப்பதுபோல் என் தந்தை பணத்தால் நீங்கள் மணக்கலானீர்கள். துர்குணம் மட்டும் போகவில்லை. உங்களுக்கு புத்தியிருக்கின்றதா யில்லையா? அநியாயமாய் ஐந்து ரூபாவை கரியாக்கி விட்டீர்களே.

நேற்று நமது முற்றத்திலிருந்த கிணற்று பிடிச்சுவர் இடிந்து விழுந்துவிட்டது. உடனே ஒரு கொத்தனை அழைத்து வந்து காட்டி என்ன செலவாகும் என்று விசாரித்தேன். 3-ரூபா செங்கல், 1-ரூபா சுண்ணாம்பு, கூலி-ரூபா, ஆக 5-ரூபா அடங்கும் என்றான். நடு முற்றத்தில் பிடிச்சுவரின்றி கிணறு இப்பொழுது நிற்கும்படியாய்விட்டது. உங்கள் அருமை அத்தானுக்கு தண்டங் கொடுத்த அந்த ஐந்து ரூபாயிருந்தால் காலையில் இந்த வேலைக்கு உதவாதா? நமது குழந்தைகள் எல்லாம் சிறு குழந்தைகள் என்பது தெரியாதா? நமது பையன் சங்கரன் துஷ்டத்தனம் உங்களுக்குத் தெரியுமே. பொழுது விடிந்ததும் குடுகுடு என்று ஓடி கிணற்றில் விழுந்து பிராணனை விடுவான். அந்த சிரமத்தி உங்களைத்தான் பிடிக்கும். நமது யோக்கியதை என்ன, நமது செலவென்ன, நமது முதலென்ன—இவைகளை யெல்லாம் கொஞ்சமாவது யோசிக்காமல் 5 ரூபாவை வீசி எறிய உமக்கு இம்மாதிரி பைத்தியம் பிடிக்கும் என்று நான் எண்ணவே யில்லை.

நமது கடைசிக் குழந்த அம்பிகாதாஸனுக்கு ஆண்டு நிறைவு இன்னும் மூன்று நாளிருக்கிறது. அதற்கு வேண்டிய அப்பளம் முன்னதாகவே பண்ணி வைத்துக் கொள்ளவேண்டி உளுந்துக்காக ஒரு ரூபா உங்களை நான் நேற்று காலமே கேட்டேன். இன்னும் 1 மாதம் என்னைப் பணம் என்று கேட்காதே என்று வாயடியடித்து விட்டீர்கள். என்னைக்

Koviloor Academy

கண்டால் உங்களுக்கு யமனைக் காண்கின்றுப்போலிருக்கிறது. அத்தான் மட்டும் உங்களுக்கு என்ன மாயப்பொடி தூவினுனே தெரியவில்லை. எனக்கு இல்லை என்று சொன்ன ஒரு நாழிகைக்குள் அவனுக்குமட்டும் உண்டு என்று எப்படி 5 ரூபா அவிழ்த்துக்கொடுத்தீர்களோ தெரியவில்லை. இந்த அவமானம் பட்ட பிறகு மானமுள்ள பெண்சாதி யானுல் நாக்கைப் பிடிங்கிக்கொண்டு சாவாள். ஏதோ கடவுள் 5-6 குழந்தைகளைக் கொடுத்துவிட்டாரே என்று அவர்கள் முகத்துக்காக நான் உம்மைக் கட்டிக்கொண்டு அழுகிறேன். ஆண்டு நிறைவு நடந்தால் என்ன, நடக்கா விட்டால் என்ன, என்று சொல்லுகிறீர்கள். ஆனுல் ஒரு நல்ல நாள், பெரிய நாள் என்பது வேண்டாமா? அப்படி நாம் ஏழையா யிருக்கிறோம் என்று எந்த செலவாவது குறைந்ததா? அத்தான் பணம் கேட்டபொழுது "நான் ஏழை அப்பா, என் கையில் பணம் ஏது?" என்று சொல்லக் கூடாதா? அப்பொழுதுமட்டும் புத்தி கெட்டுப் போக வேண்டுமா? என் குழந்தைகள்தானு பாபம் பண்ணின? என்ன புத்தி! நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு இவ்வளவு துரோகம் பண்ணுவீர்கள் என்று நான் எண்ணவே யில்லையே!

அடுத்த மாதம் நாம் அகத்தியம் தாந்தோணிபோய் சங்கரனுக்கு முடிவாங்கவேண்டும் என்று எண்ணியிருந்தேன். தலையெல்லாம் குழந்தைக்குச் சடைகள் மண்டியிருக்கின்றன. ஈரும் பேனும் குலுங்குகின்றன. குழந்தைக்கு எண்ணெய் தேய்க்கமுடியவில்லை. சீப்புவைத்து தலைவாரப்படவில்லை. சடையை அவிழ்த்தால் பேன் மணல் கொட்டுவதுபோல் கொட்டுகிறது. தாந்தோணிக்கு வண்டி செலவு ஆளுக்கு ஒரு ரூபா. நாமிருவர்களும் குழந்தையை எடுத்துக் கொண்டு அவ்விடம்போய் முடிவாங்கிக்கொண்டு திரும்பிவர 5 ரூபாதான் பிடிக்கும் என்று நான் உங்களிடம் சொல்லி யிருக்கிறேன். பேன் உபத்திரவத்தால் குழந்தை உடம்பு நாளுக்குநாள் துரும்பாய்போகின்றது. ஒரு வாய் சாதங்கூட

Koviloor Acadamy

ருசியாய் குழந்தை சாப்படுகின்றதில்லை. எந்த விஷயம் எப்படிப்போனாற்ருன் உங்களுக்கு என்ன விசாரம்! உங்கள் அத்தான் ஒருவன் க்ஷேமமாயிருந்தால் போதும். அந்தப் பாவி உயிருடன் ஊர்போய் சேருவானு? என் குழந்தைகள் பணத்தை கொள்ளையடித்துக்கொண்டு புறப்பட்டவனுக்கு தாந்தோணி சாமி சரியான கூலி கொடுக்கும்.

''அடி, அவனை ஏன் நிந்திக்கின்ருய்? என்னை என்ன சொல்ல வேண்டுமோ சொல்லு, அயலானை நிந்திப் பானேன்.''

நிந்திப்பானேனு? என் வயிறு கொதிக்கிற கொதிப்பு நீங்கள்அறிவீர்களா?அவ்வளவறிவிருந்தால் அந்த ஐந்து ரூபா கொடுத்திருப்பீர்களா?

நல்லது போன மழையில் நமது கொட்டில் சார்பு விழுந்தது உங்களுக்கு நன்ருய்த் தெரியுமே. நமது எருமை மாட்டைக் கட்ட வேறு இடமில்லாமல் வெட்டவெளி யிற்ருனே கட்டியிருக்கின்ருேம். அது பனியில் விறைப்பது உங்களுக்குத் தெரியாதா? பனி சகிக்க முடியாமல் முதலில் கன்று செற்றது. பனியில் விறைத்து விறைத்து மாட்டின் கறவையும் பாதியாய் குறைந்தது. அந்த ஐந்து ரூபாவுக்கு சார்பு போட ஏற்பாடு செய்தால் நமக்கு ஒரு காரியம் முடிந்திருக்காதா? ஒரு காரியம் என்ருல் ஒரு காரியம்! இப்படி கண்டவனுக்கெல்லாம் காசை கரியாக்கிவிட்டால் அப்புறம் இந்த குடும்பம் முன்வருவதெப்படி?

உங்களுக்கு ஆயிரம் வேண்டியவனுக விருக்கலாம் ராஜகிரி. அதற்காக உங்கள் வீட்டுக் காரியத்தை மறந்து அவனுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று எந்த சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது.

''நீ படித்த சாஸ்திரத்தில்தான் சொல்லியிருக்கிறது.''

பேச்சுக்கூட வேண்டுமா உங்கள் புத்திக்கு! நான் ஒரு பெண். சாஸ்திரம் படிக்கவில்லை, என்று என்னை பரிகாசம் பண்ணவேண்டுமா? நான் படித்த சாஸ்திரமோ நீங்கள் படித்த சாஸ்திரமோ இப்பொழுது நீங்கள் வாழ்வது! சங்கரபிரஸாத் சொத்தா அல்லது நீங்கள் படித்த சாஸ்திரமா உங்களுக்கு இப்பொழுது சோறு போடுகிறது! நன்ருய் யோசித்துப் பாருங்கள். வெட்கமில்லையா? வெட்க மிருந்தால் அரை நிமிஷத்தில் அந்த ஐந்து ரூபாவை அழித்திருப்பீர்களா?

என்றிவ்வாறு அம்மணிபாய் அன்றிரவு தனது பிராண நாயகனுகிய ராமபிரஸாதுக்கு மந்திரோபதேசம் செய்து சிரமம் மேலிட்டு கண்மூடினுள். ஸப்தமேகங்களும் வருஷித்து ஓய்ந்தால் எவ்வளவு சந்தோஷமிருக்குமோ அதுபோல் ராமபிரஸாதும் எப்படியாவது இன்றிரவு இவ்வளவுடன் நமது நாயகி கண்ணயர்ந்தாளே என்று ஆனந்தத்தில் மூழ்கி, அவ்வளவு சுலபமாய் அன்றிரவு போனதற்காக சவித்துத் தானும் தூங்கத் தொடங்கினுன். அத்தான் ராஜகிரிக்கு 5 ரூபா மட்டும் தனது கணவன் அநியாயமாய் கொடுத்திருக்காத பக்ஷத்தில் அம்மணிபாய் சித்தாந்தத்தின்படி அப்பணத்தால் தனக்கு ஒரு சுங்கடிப் புடைவை வாங்கிக்கொண்டிருக்கலாம். இரண்டு பெண் குழந்தைகளுக்கு கதவு போல் இரண்டு பாவாடை தைத் திருக்கலாம். எரிமுட்டைக்காரிக் கடன் தீர்த்திருக்கலாம். கிணற்றுச் சுவரை சீர்திருத்தியிருக்கலாம். சங்கரனை கிணற்றில் விழாமல் காப்பாற்றி யிருக்கலாம். அம்பிகா தாசன் ஆண்டு நிறைவைச் சிறப்பித்திருக்கலாம். தாந்தோணிப்பெருமாளுக்கு பிரார்த்தனை செலுத்தி யிருக்கலாம். மழையில் விழுந்த கொட்டகையை கட்டி யிருக்கலாம். இவ்வளவு காரியங்களும் ஐந்து ரூபா போன தால் நின்று போயிற்றென்று இவள் நினைப்பு. மந்திரமும் தலையணை மந்திரமாகையால் "ஆம்" "ஆம்" என்று ராமபிரஸாத் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

Koviloor Acadamy

நான்காவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் நாட்டியம் பார்த்து திரும்பி தாமதமாய் வீடு வந்தது

துலைந்தது! இன்றுடன் இந்தக் குடித்தனம் முழுகிப் போயிற்று! ஒரு பெண்பிள்ளை எத்தனை நாழிகை இரவில் கண்விழித்துக்கொண்டு கணவனுக்காக கதவு திறந்து வைத்துக்கொண்டிருப்பாள்! நான் என்ன மனுஷியா? அல்லது மாடா? உங்களுக்கென்ன? சுகமாய் நாட்டியம் பார்த்து வந்துவிட்டீர்கள். நீங்கள் நாட்டியம் பார்த்து வந்ததால் இந்தக் குடித்தனத்துக்கு ஒரு உப்புக்குப் பிரயோசனமுண்டா?

''ஆமடி, உனக்கு ராக கியானமிருந்தால் அந்த சுகம் உனக்குத் தெரியும்.''

ஆகா, வெட்கக்கேட்டை வெளியில் சொல்லிக்கொள்ள வேண்டாம்! நானும் நல்ல பணக்காரன் வீட்டில்தான் பிறந்தேன். எத்தனையோ நாட்டியம் என் தந்தை காலத்தில் நானும் ஒரு காசு செலவில்லாமல் பார்த்திருக்கிறேன். அந்த ஜம்பம் வேண்டாம். உங்களுக்குத் தெரிந்த ராகத்துக்கு மேல் எனக்கும் தெரியும். நாட்டியம் பார்க்கிறதென்றால் காலமில்லையா? தாலி வாங்குகிற வேளைக்குமேல் ஒரு பெண்பிள்ளை புருஷனுக்காக கார்த்துக்கொண்டிருப்பாளேயானால் அந்த வீடு என்னவிதமாய் முன்னுக்கு வரும்? ஏது இப்படி ஒரு பெண்பால் சொல்லுகிறாள் என்று நீங்கள் முகம் சுணுக்கவேண்டாம். உங்களிஷ்டம். நீங்கள் எக்கேடு

Koviloor Acadamy

கெட்டுப் போங்கள். நான், நாளைமுதல், என் அப்பனுடைய, கதவுதிறந்து வைத்துக்கொண்டு யிருக்கவேமாட்டேன். நடு இராத்திரியில் கதவை மல்லாத்தி வைத்திருந்தால் எவனுவது உட்புகுந்து காய்ச்சிக் குடிக்கும் சட்டிகளை கொள்ளைகொண்டு போவான்.

அடடா! என்ன நாற்றம்? என்ன நாற்றம்! கொஞ்சங் கூட சகிக்கமுடியவில்லையே. மூக்குப்பொடி போட்டாற்று னென்ன? இப்படி உங்களைப்போல் போடப்பட்டவர்களை நான் பார்த்ததேயில்லை. மூக்கிலிருந்து கன்னங்கரேல் என்று சளி ஸதா வழிந்துகொண்டு என்ன அஸக்யமாய் தோன்று கிறது!

''எத்தனையோ பெயர்கள் பொடி போடவில்லையா?''

ஆம். போடுகிருர்கள். நீங்களும் வேண்டுமானுல் விம்பு—ன் நாளைக்கு ஒரு அணுப் பொடி வாங்கி உங்களுடைய மூக்கோட்டைகளுக்குள் திணித்துக்கொள்ளுங்கள். நான் உங்கள் வழிக்கு வரவேயில்லை. மூக்கில் பொடி வழிய இப் படுக்கையில் படுக்கவேண்டாம். என்னுல் என்ன சகித்துப் பார்த்தாலும் சகிக்கக்கூடவில்லையே. இந்த நாற்றத்தால் எனக்கு தலைவலி வந்துவிட்டதே. என் உடம்பு என்னவோ பண்ணுகிறது. வயிறு குமட்டிக்கொண்டு வாந்தி வருகிருப் போலிருக்கிறது. முகத்தை அந்தப் பக்கம் தயவுசெய்து திருப்பிக்கொள்ளுங்கள்.

நாட்டியம் பார்க்கப்போனவன் க்ஷேமமாய் வாழ்ந்ததை நான் ஒருபொழுதும் கண்டதே யில்லை. நல்ல ஸகவாசம்! நாட்டியம் பார்க்க வரப்பட்டவர்கள் எல்லோரும் உங்களைப் போல் பெண்சாதிகளை ஒதுக்கி வைத்தவர்களாகவே யிருப் பார்கள். மானிகள் எங்கேயாவது நாட்டியம் பார்க்கப் போவார்களா? உமக்கு நல்ல ஸகா ஏற்பட்டான்! அந்த துஷ்டன் குஷால்தாஸ் உம்முடன் சேர்ந்தானு! அவன் ஒரு நாளும் வீட்டிலேயே தூங்குகிறது இல்லையாம். அவன்

Koviloor Acadamy

பெண்ஜாதி வாயில்லாப் பூச்சி. அவள் சகித்துக்கொண்டி ருப்பதுபோல் நானுமிருப்பேன் என்று எண்ணிவிட்டீர்களா என்ன? நாளை இன்றிரவு வந்தமாதிரி வாருங்கள்! அப் பொழுது சொல்லுகிறேன்! வீணாய் நாம் அதிகமாய் கோபிக்கக்கூடாது. என்ன இருந்தாலும் தாலிகட்டின புருஷன் என்று நான் பைத்தியக்காரியாக விருக்கவிருக்க நீங்கள் தலைக்குமேல் ஏறுகிறீர்கள். ஐயோ! ஐயோ! நான் தலையில் அடித்துக்கொள்ளட்டுமா! கொஞ்சம் எழுந்திருந்து தான் அந்த மூக்கை சிந்தி வாருங்கள். என்ன துர்க்கந்தம்! வாயிலெடுக்க வருகிறதே! என் ஜென்மத்தை நான் எங்கு கொண்டுபோய் தொலைப்பேன்? பாவி கிணற்றில் தள்ளுவது போல இந்த வீட்டில் என்னைத் தள்ளிவிட்டுப் போய் விட்டானே. நல்லது இந்த மாதிரி பொடியை பிடிப்பிடியாய் மூக்கில் அடைத்துக்கொண்டு நீங்கள் கண் விழித்தால் உங்கள் தேகம் என்னத்திற்கு உதவும். நாளை நீங்கள் கீழே படுத்துவிட்டால் இருக்கிற வேலை போதாதென்று உங்க ளுடன் யார் சிரமப்படுவார்கள்?

"நல்லது! படுகிற அவஸ்தை நான்தானே படுவேன். உனக்கு ஒன்றுமில்லையே."

வெகு சரி! எனக்கு அவஸ்தை வேறு வேண்டுமா? நீங்கள் படுத்துவிட்டால் வென்னீர், விளாநீர், புனப்பாகம், கஞ்சி இவைகளெல்லாம் வேளைக்கு வேளை உமக்கு கொடுப்பது யார்? அது அவஸ்தையில்லை போலிருக்கிறது! உமக்கு மருந்து கொடுக்க அம்பட்டனை கூட்டிவர நான் ஸத்தியமாய் வெளியில் போகமாட்டேன். அந்த துஷ்டன் குஷால்தாஸ் உள்ளே வந்தால் அவன் காலை முறிப்பேன். அந்த அற்ப நாய் இந்த கிரகஸ்தன் வீட்டுக்குள் நுழைவானேன்? அவனுடன் சேர்ந்து இதுவரையில் கெட்டது போதாதா?

"நல்லது! நீதான் அம்பட்டனை கூட்டி வரமாட்டேன் என்று விட்டாயே. அவனையாவது நானனுப்பி அம்பட்டனை வரவழைத்துக் கொள்ளக்கூடாதா?"

Koviloor Acadamy

ஏன் அப்படியாவது நாட்டியம் பார்த்து உடம்பைக் கெடுத்துக்கொண்டு நோயால் வருந்துவானேன்? அதற்கு வைத்தியனை அழைத்துவர அந்த நாய் இந்த வீட்டுக்குள் நுழைவானேன்? நல்ல உயிராயிருந்தால் வைத்தியன் என்னத்திற்கு? தலையில் எழுதியபடி நடக்கிறது நடக்கட்டும். என்னன்ன கூத்திற்கு நான் பெண் பிறந்தேனோ அத்தனையும் அநுபவித்துத் திருகிறேன்!

"என்ன பெண்பிள்ளையடி நீ!"

ஆகா! என்னைக் கண்டால் உங்களுக்கு ஆகவில்லை. அந்தப் பொடியின் மேலிருக்கும் விசுவாசம் என் பேரிலிருக்கக் கூடாதா? பொடி மட்டையை விடாமல் தலைமாட்டில் காப்பாற்றி வைத்துக் கொண்டு படுக்கின்றீர்கள். அதே படுக்கையில் என்னைக் கண்டால் சருப்பத்தைக் காண்பதுபோல் உங்களுக்கிருக்கிறது. உங்கள் பொடியை விடாமல் பத்திரமாய் வைத்துக்கொள்ளுங்கள். என்னை வேண்டுமானால் கழுத்தைப் பிடித்து காலையில் வெளியில் தள்ளி விடுங்கள். குஷால் தாஸை கூப்பிட்டுக்கொள்ளுங்கள். இப்படி எத்தனை பெயரோ, அப்படி எத்தனை பெயரோ யிருக்கின்றார்கள். நானும் அவர்கள் கூட்டத்தில் சேறுகிறேன். என்ன முழுகிப் போயிற்று. என்னை வாயிலில் தள்ளினால் அவமானம் யாருக்கு?

இன்றுமுதல் உங்கள் குணம் எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. இன்று கூத்துக்குப் போனீர்கள். இது முதல் நாள். இத்துடன் இந்த துஷ்ட சகவாசம் நிற்கப்போகிறதில்லை. இந்த ஸகவாசம் உங்களை ஒருநாளும் விடப்போகிறதில்லை. இன்றையதினம் ஒரு ரூபாயாவது கொடுத்துத்தான் வந்திருப்பீர்கள். இல்லை என்றால் என் புத்தி எங்கு போயிற்று! எனக்குத் தெரியாதா? இம்மாதிரி தினம் போய் தினம் ஒரு ரூபா துலைத்துவரப் போகிறீர்கள். உப்புப்புளிக்கு வேண்டுமென்றால் பணம் கிடைக்காது. பொடிக்கு 1 அணா எங்கேயாவது தப்பாமல் உங்களுக்குக் கிடைக்கும். ஒரு சொட்டு

Koviloor Acadamy

நல்ல எண்ணெய் யில்லையென்று நானும் மூன்று நாளாகக் கெஞ்சினேன். விடிந்தால் வெள்ளிக்கிழமை. பெண்குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்தாகவேண்டுமே. சூரியோதயமானதும் நான் கிண்ணத்தைக் கையிலேந்திக் கொண்டு யார் வீட்டில் போய் நிற்பேன். அதைக் காதில் போட்டுக்கொள்ள மாட்டேன் என்கின்றீர்கள். கூத்துக்கு பணமிட்டுவிட்டு வந்து விட்டீர்கள். பொய்யும் சொல்ல ஆரம்பித்து விட்டீர்கள். பணம் கொடுக்காமல் உங்களை அங்கு யார் உட்கார்த்தி வைத்திருப்பார்கள்? நாளை முதல் நான் இனி உங்களிடமிருந்து வீட்டுச் செலவுக்கு ஒன்றும் எதிர்பார்க்கமுடியாது. பணமெல்லாவற்றையும் கூத்தில் கொட்டிவிடப் போகிறீர்கள். இப்படி நீங்கள் குடித்தன சொத்தை அழிக்க ஆரம்பித்து விட்டால் நாளை குழந்தைகள் தலை எடுப்ப தெப்படி? போயிற்று! போயிற்று! குடிமுழுகிப் போயிற்று!! இனி மேற்றான் நமக்கு எல்லாச் செலவுகளுமிருக்கின்றன. ஒரு குழந்தைக்கு கலியாணம், மற்றொரு குழந்தைக்கு ஸீமந்தம். ஒருவனைப் பள்ளிக்கு வைத்தல், எல்லாம் படிப்படியாய் இருக்கின்றனவே. ஒன்றையும் கவனியாமல் நீங்கள் கூத்தாடிகளுடன் சேர்ந்து கூத்துப் பார்த்துக் கொண்டும் பொடி போட்டுக்கொண்டுமிருந்தால் நாம் பிழைத்து முன்னுக்கு வருவதெப்படி?

ஐயோ! நீங்கள் செய்கிற அக்கிரமங்களை நினைக்க நினைக்க எனக்கு தூங்கவேண்டு மென்றாலும் தூக்கம் பிடிக்கவில்லை. பாவி நான், இவ்வித கவலைகளுக்கா பெண் பிறந்தேன்? குழந்தைகள் மட்டு மில்லாவிட்டால் நீங்கள் எக்கேடு கெட்டு எருக்கு முளைத்துப் போனாலெனக்கென்ன?

உலகத்தில் எவனாவது யோக்கியன் என்று பெயரெடுக்க விரும்புகிறவன் பொடி போடுவானா? அது என்ன சர்க்கரையா, கற்கண்டா? மூக்குக்குத் தித்திக்குமா? துணியெல்லாம் பாழ்! வீடெல்லாம் ஆபாசம்! இந்த வழக்கம் உங்களை விடுகிறவரையில் நீங்கள் ஒரு

பொழுதும் வாழப்போகிறதே யில்லை. பொடி போட்டுக் கொண்டு இன்று பாதி ராத்திரி வரையில் நாட்டியம் பார்த்துவந்திர்கள். நாளை இரவு முழுமையும் வரமாட்டீர்கள். குஷால்தாஸ் துணை உமக்கிருக்கிற வரையில் வீட்டு நியாபகமே வேண்டாம். குஷால்தாஸ் மனைவியைப்போல் நானும் ஒரு பைத்தியக்காரியல்ல. இவ்வாறு இந்தக்குடித்தனத்தை அழிக்க, நான் உங்களை இனி ஒருபொழுதும் விடவேமாட்டேன். நான் என்ன பைத்தியக்காரியா, என்று அம்மணிபாய் அதிகமாய் பேச வாய் எழாமல் விம்மி விம்மி அழத்தொடங்கினாள். ஒரே கருத்தாய் அவள். மந்திரோபதேசத்தைக் கேட்டு பிரமித்திருந்த ராமபிரஸாத் அவள் அழ ஆரம்பித்ததும் மெய் பதறி அவளிடம் வெகு அன்பும் ஆதரவுமாய் பேசி சாந்தப்படுத்தி அவளைத் தூங்கச் செய்தான். இரண்டொரு தடவை அவளை பிரசங்கத்தில் தடுக்கப் பார்த்து தனது வல்லமை பிரயோஜனமற்றுப் போனபடியால் தனது மனைவி தன்மேல் சாட்டிய குற்றங்கள் அவ்வளவையும் அவன் ஒப்புக்கொண்டதாகவே எண்ண வேண்டியிருக்கிறது.

ஐந்தாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் பாகவத கோஷ்டியில் சேர்ந்தது

சேலத்தில் சில நாயக்கர்களும் வாலாக்களும் ஒர் பஜனைக் கூடம் ஏற்படுத்தி அதில் சனிக்கிழமைதோறும் கூடி ராமபஜனை, கிருஷ்ணபஜனை முதலிய பஜனைகள் செய்து வந்தார்கள். ராமபிரஸாத் ஒரு நாள் குஷால்

Koviloor Acadamy

தாஸுடன் அவ்விடம் போயிருந்தபொழுது அவனும் அந்த கோஷ்டியில் சேர்ந்து ஓர் சனிக்கிழமை இராத்திரி பஜனை செய்பவர்களுடன் சேர்ந்து பஜனை செய்துவிட்டு இரவு 10, 11 நாழிகைக்கு வீட்டுக்கு வந்தான். அவன் உட்புகுந்ததும் அம்மணிபாய் தாமதிக்காமல் தனது மந்திரோபதேசத்தைச் செய்யத் தொடங்கினாள்.

போதும், போதும், இனி உங்களுக்கு பெண்சாதியா யிருப்பதைக்காட்டிலும் நடுச்சந்தியில் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு நிற்கலாம்.

"அடியே! வெகு நாழிகையாய்விட்டது. உனது உபதேசங்களை நாளைவரையில் நிறுத்திவைத்துக்கொள். எனக்கு உடம்பெல்லாம் வலிக்கின்றது, படுக்கவேண்டும்."

ஆகா படுக்கவும் வேண்டுமா? அவ்வளவு சிரமம் என்பதுகூட உங்களுக்குத் தெரியுமா? நான் நாளைவரையில் என் பேச்சை நிறுத்திவைக்கமாட்டேன். உங்களையும் தூங்கவிடமாட்டேன். உங்களை இன்றிரவு நான் தூங்க விடுவேனானால் நான் சங்கரபிரஸாத் மகளல்ல. சிரமத்துடன் சிரமமாய் நீங்கள் செய்த அநியாயத்தையும் கேட்டு விட்டே தான் நீங்கள் இன்று கண்ணடைக்கவேண்டும். உங்களிஷ்டப்படி எல்லாம் இரவில் இவ் வீட்டுக்கு வருகிறது என்று உங்களுக்கு என்ன தைரியம் வந்து விட்டது! நான், போனால் போகிறது, என்று கொஞ்சம் இடம் கொடுத்தால் இவ்வளவு இறுமாப்பா உங்களுக்கு? நாளை அந்த குஷால்தாஸை இழுத்துவாருங்கள். அவன் தலையைச் சிரைக்கச் செய்கிறேன்! உங்கள் யோக்கியதைக்கு பாகவத கோஷ்டி ஒன்றுவேண்டுமா? எல்லாம் கண்டாய் விட்டது! இனி வைகுண்டம் ஒன்றுதான் பாக்கி. உங்க ளுக்கு! அதை அப்படியே பாகவதர்களுடன் சேர்ந்து கண்ணராக் காணப்போகிறீர்கள்? அப்படி நீங்கள் என்னை விட்டு மிஞ்சிப்போக நான் ஒருபொழுதும் உங்களுக்கு

Koviloor Acadamy

இடங்கொடுக்கவேமாட்டேன்! மரியாதைக்காரன் எவனாவது பாகவத கோஷ்டியில் சேருவானா?

"என்னடி இது உனக்கு! இரவில் பிறந்த பிள்ளையும் ஆகவில்லை. பகலில் பிறந்த பிள்ளையும் ஆகவில்லை. நாட்டியத்துக்கு போனால் நாய்போல பிடுங்குகிறாய். அது வேண்டாம் ஸத்காலக்ஷேபம் பண்ணுவோம் என்று பாகவதாளுடன் சேர்ந்து பஜனை செய்தால் அப்பொழுதும் கடி நாய்போல் கடிக்கிறாய்."

நான் நாய் தான். நாயாகவே யிருக்கட்டும்! நாயின் கணவன் நாய்தானே. நீங்கள் செய்கிற ஸத்காலக்ஷேபம் எனக்கு நன்றாகத் தெரியுமே! பாகவதாள் சரித்திரம் நான் நன்றாய் அறிந்திருக்கிறேனே! தலைதெரியாமல் நீங்கள் தாளம் தட்டுகிறது எனக்குத் தெரியாதா? அந்த துஷ்டன் குஷால்தாஸ் இந்த துன்மார்க்கத்தில் உங்களை யிழுத்துவிட்டுவிட்டான். நாளை விடிந்தல்லவோ அவனை நான் தீரக்கேட்கவேண்டும். பாகவத கோஷ்டியில் சேர்ந்து நீங்கள் பரம பாகவதாளாய் மாறினால் எனக்கென்ன? அந்த பாகவதாளுக்கும் உமக்கும் நீங்கள் என்னைப் பண்ணிவைக்கும் அவமானம் விளங்கவில்லையே. எத்தனைநாள் விளங்காமலிருக்கும், பார்ப்போம். நாளை மட்டும் பஜனைக்கூடத்துக்கு நீர் போம், பார்க்கிறேன்! நேரில் அவ்விடம் வந்து உமது மடியில் கைபோட்டு உம்மை வீட்டுக்கு இழுத்துவராவிடில் நான் ஒரு மனுஷியா?

என்னையும் உங்கள் பெண்களையும் உங்கள் பிள்ளைகளையும் இவ்வீட்டில் தனிமையில் விட்டு தடியன்கள் நடுவில் அப்படிப் போய் உட்காருவது உங்களுக்கு எப்படிப் பிடிக்கிறது. இந்த வீட்டிலிருக்கும் எங்கள் கோஷ்டியையே பாகவத கோஷ்டியாய் நினைத்துக்கொள்ளுங்களேன்! ஐயோ இப்படி வீணாய்க் கெட்டுப் போவீர்களா! எங்கள் தலைகளில் இப்படி மண்ணை வாரிப் போடுவீர்களா!

Koviloor Acadamy

பஜனை என்றால் இன்றுடன் ஒழிந்தது என்றெண்ண முடியவில்லை. சனிக்கிழமைதோறும் வந்துகொண்டே யிருக்குமே. எனக்குத் தெரியாதா யுக்தி. இனி சனிக்கிழமை இரவு 5 நாழிகைக்குள் வந்தால் ஒழிய உமக்கு இந்த வீட்டில் சோறு கிடைக்காது! அதற்குள் வந்தாலொழிய நான் குழந்தைகளுக் கெல்லாம் அன்னம் போட்டுவிட்டு மிகுந்த அன்னத்தில் தண்ணீர் ஊற்றிவைத்து விடுவேன், நீங்கள் எக்கேடு கெட்டுப்போங்கள்.

''உனக்கு ஏதோ பைத்தியம் பிடித்துப்போய் விட்டது.''

ஆம்! நாலைந்து பெயர்களைக் கேட்டால் உங்களுக்குப் பைத்தியம் பிடித்ததோ எனக்குப் பிடித்ததோ தெரிய வரும். பைத்தியம் மட்டுமா? மோசக்காரர்களல்லவா நீங்கள்! இவ்வளவு மோசம் உங்களிடமிருப்பது தெரிந் திருந்தால் என் தந்தை உங்களுக்கு என்னைக்கொடுத்து பணத்தையும் வாரிக்கொடுத்திருக்க மாட்டாரே! அந்தப் பணத்தை பஜனைக்கூடத்திலும் கொட்ட ஆரம்பித்து விட்டீர்கள்.

''ஸத்தியமாய் நான் பஜனைக்கூடத்துக்கு ஒரு காசு கூட கொடுக்கவில்லை.''

ஆயிரம் ஸத்தியம் பண்ணுங்கள்.உங்களை யார் நம்பு வார்கள்? கூத்துப் பார்க்கிறவனுக்கும் பொடி போடுகிற வனுக்கும் ஆணி யேது, ஸத்தியமேது? காசு கொடுக்க வில்லை என்று சொல்லி என்னை ஏய்க்கப்பார்க்கிறீர்கள். உங்கள் குணம் எனக்குத் தெரியாதா? கொண்ட பெண் ஜாதி குணமறியாளா? பாகவத கோஷ்டியை நானறியேனா? அவர்கள் பணம் பிடிங்கிகளாயிற்றே! இனி பேசி என்ன பிரயோஜனம். குஷால் தாஸைமட்டும் நான் நாளைக்குப் பார்க்கட்டும்! ஒரு தரித்திரன். பழைய அமுதுக்கு வழி யில்லை அவனுக்கு! கர்வமா கங்குகரையில்லை. அம்பட்ட னுக்கு தலை சிரைத்த காசு கொடுக்க அவனுக்கு வழியில்லை.

Koviloor Academy

அவன் யோக்யதைக்கு கூத்தும் பாகவதமும் வேண்டுமா? அவன் எக்கேடு கெட்டு போகட்டுமே! உங்களையும் அவன் என்ன தைரியத்தால் கெடுத்தான். நான் ஒருவளிருக்கிற செய்தி அவனுக்குத் தெரியாதா? உங்களை அவன் பெரிய பாகவதர்களாய் பண்ணி உங்கள் தலையைத் தடவி உங்களை அழித்துவிடப் பார்க்கிறான்.

''உனக்கென்ன தெரியுமடி?ஏன் வீணாய் தூஷிக்கிறாய்?''

உங்களுக்கென்ன தெரியும். ஒன்றும் தெரியாது. எனக்கு எல்லாம் தெரியும். நேற்று கூத்து! இன்று பாகவதம்! நாளை தாஸி வீடு! மற்றும் நாள் உங்கள் வாழ்வு திண்ணையிலே! படிப்படியாய் அவன் உங்களைக் குழியில் தள்ளி வருகிறான். மோக்ஷமாவது! வைகுண்டமாவது! ஒரு ஜாமகாலம் பஜனைக்கூடத்தில் உட்கார்ந்தால் வீட்டில் பெண்ஜாதி பிள்ளைகள் கதி என்னவாய் முடியும்? பணமில்லாமல் உங்களை பாகவதம் கேட்க யார் விடுவார்கள்? ஏன் வீண்வார்த்தை? என்று சொல்லிக்கொண்டே அம்மணி பாய் தூங்கினாள். இவ்வளவுடனாவது அவளுக்குத் தூக்கம் வந்ததே என்று ராமபிஸாத் களித்தான்.

ஆறுவது
மந்திரோபதேசம்

பாகவதர்களுக்கும் விபூதி தரிப்பவர்களுக்கும் கலகம்

''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது'' என்னும் பழமொழி எல்லாருக்கும் தெரிந்தவிஷயம்.சேலத்தில் இரண்டு கக்ஷி. பாகவதர்கள் மதம் சிலாக்கியமா அல்லது விபூதி தரிப்பவர்கள் மதம் சிலாக்கியமா என்று இந்த உலகம்

உண்டானதுமுதல் சண்டையுண்டு. அவனவனுக்கு அவனுடைய மதம் சிலாக்கியம் என்பது நிச்சயம். நமக்கோ எல்லா மதமும் சிலாக்கியந்தான். ராம பிரஸாத் பஜனைக் கூடத்தில் சேர்ந்த கொஞ்ச நாளைக்கெல்லாம் பாகவதர்களுக்கும் விபூதி தரிப்பவர்களுக்கும் ஏதோ கலகம் நேரிடும் போலிருந்தது. அதற்காக எல்லா பாகவதர்களும் ஓர் இரவில் ஒன்றுகூட ஆரம்பித்தபொழுது குஷால்தாஸ் இரவு 10 நாழிகைக்கு ராமபிரஸாத் வீட்டுக்குவந்து சுருக்கமாய் சங்கதியைச் சொல்லி அவனை அச்சமயத்துக்கு பஜனைக் கூடம் வரும்படி வேண்டினான்.

அம்மணிபாய் குஷால்தாஸில்லாத சமயத்தில் தன் கணவன் முன்பாக குஷால்தாஸை வாயில்வந்தபடியெல்லாம் நிந்தித்ததைப் பார்த்திருக்கிறோம். அன்றிரவு குஷால்தாஸ் வந்ததும் ராமபிரஸாத் அவனை தன் மனைவி அன்று இலேசில் விடாள், கண்டபடி நிந்திப்பாள், என்று நடுநடுங்கி விட்டான். ஆனால் வாய்மட்டும் அம்மணிபாயுக்கு அதிகமே யொழிய வேறு புருஷனைக் கண்டவுடன் வேங்கியம் மட்டும் போகவில்லை. அன்றியும் அவனை நிந்தித்துவிட்டால் தனது புருஷனுக்கு மிகுந்து நிற்க மாட்டாதே என்று காத்துக் கொண்டு கடுஞ்சினத்துடன் ஒதுங்கி நின்றாள்.

''நல்லது, நீங்கள் போங்கள்! நான் 5-நிமிஷங்களுக்குள் வருகிறேன்'' என்று தன் கணவன் குஷால்தாஸிடம் சொல்லி அவனைஅனுப்பிவிட்டுக் கதவைத் தாளிட்டதும் அம்மணிபாய் குத்துண்ட பெண்யானை கர்ஜிப்பது போல ஒரு கர்ஜனை கர்ஜித்து தன் புருஷன் முன்பாக வந்துநின்றாள். அப்பொழுது நாம் அவள் சப்பைக்காலையும் அம்மை வடுமுகத்தையும், குருட்டுக் கண்ணையும் பார்த்திருக்க வேண்டும். அதன் பிறகு நமது கண்களுக்கு வேறு காக்ஷியே வேண்டாம்.

நன்றாகத்தின்றுவிட்டு கோவில் காளை போல் கொழுத்துத் திரிகிறான் குஷால்தாஸ்; அவனுக்கு வேறு வேலையில்லை

Koviloor Academy

போலிருக்கிறது. அவன் மனைவி ஒரு அசடு; நானுமப்படியா யிருந்தால் உங்களுக்குக் கொண்டாட்டந்தான்! இப்படி எல்லாம் வரப்போகிறதென்று நான் அன்றைக்கே ஊகித்து விட்டேன். நீங்கள் பாகவத கோஷ்டியில் சேர்ந்து சந்தி சிரிக்கப்போவது எனக்குத் தெரியாதா? இரவு பத்து நாழிகைக்குமேல் பெண்சாதியுடன் வாழும் புருஷனை எந்தத் தடியன் வெட்கங்கெட்டுகூப்பிடுவான், எந்த வெட்கங்கெட்ட புருஷன்தான் வருகிறேன் என்று ஒப்புக்கொள்ளுவான்! பாகவதாள் பஜனைக்கூடத்தை என்னத்திற்காகக் கட்டினார்கள். ஊரார் குடியைக் கெடுக்கத்தான். "படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில்" என்பது பொய்யா! உலகமெல்லாம் பட்டுக்கயிறும் நாமமுமாய்ப் போனாலென்ன? அல்லது சாம்பலாய்ப் போனாலென்ன? இதற்கு ஒரு கக்ஷியா? கலகமும் வேண்டுமா? அந்தக் கலகத்தில் நீங்கள் சிக்கிக் கொண்டால் நாளைக்கு உங்களைப்பார்த்து உலகம் சிரிக்காதா? மதம் என்றால் நாலுமிருக்கும் என்பது நீங்கள் சொல்லும் முன் எனக்கும் தெரியும்! சண்டைதானா மதத்திற்கு அழகு? இது இவ்விதமாய் முடியும் என்பது எனக்குத் தெரியும்! நீங்கள் பாகவதர்களுடன் சேர்ந்து விபூதிக்காரர்களுடன் சண்டை செய்வீர்கள். 10 பெயர்கள் மண்டைகள் உடைப்படும். நாளை நான்கு கச்சேரிகள் ஏறி செலவுக்கு என் தாலி அறுபடவேண்டும். இரவு 10 நாழிகைக்குமேல் இந்த பனிக்காற்றில் நீங்கள் வெளிப்புறப்பட்டால் காலை குளிரும் காய்ச்சலுமாய் விடு திரும்பலாம். என் அப்பன்மேல் ஆணையிடுகிறேன்! நான் பத்தியம் வடித்துப் போடவே மாட்டேன்!!

செலவில்லாமல் பஜனைக்கூடத்தில் சேர்ந்திருப்பதாக நீங்கள் சொல்லலாம், அது நீங்கள் சொல்லும் ஆயிரம் பொய்களில் ஒன்று. ஒருகால் தப்பித்தவறி நிஜமாயிருந்தாலும் நாளைச் செலவுக்கு யார் கொடுக்கிறது. நீங்கள் கோர்ட்டு ஏறிவிட்டால் இந்த குஞ்சு குழந்தைகளுக்கு யார் தேடிக் கொட்டுகிறது. வேண்டாம்! வேண்டாம்!! அற்ப சகவாசம்

Koviloor Acadamy

வேண்டாம்!!! குஷால்தாஸ் சிநேகதம் இத்துடன் போதும். என் தந்தை விபூதி தரித்தார். உங்கள் தந்தை நாமம் சாத்திக்கொண்டார். ஆகையால் நமக்கு விபூதியும் நாமமும் ஒன்றேதான். நாம் சிவன் கோவிலுக்கும் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். அரியும் சிவனும் ஒன்று; அறியாதவன் வாயில் மண்! நானித்தனை சொல்லியும் புறப்படப் போகிறீர்களா? இதோ வந்தேன்!

இவ்விதமாயவள் சொல்லிக் கதவைச் சங்கிலியிட்டு இரட்டைப் பூட்டும் பூட்டி சாவியை இக்குமடியில் வைத்துக் கொண்டாள்.

என் செய்வான் ராமபிரஸாத்! அன்று அவனுக்கு இரண்டுவித சந்தோஷம். முதலாவது குஷால்தாஸை நேராக நிந்திக்காமல் விட்டதொன்று; இரண்டாவது தலையணையில் நடக்கவேண்டிய மந்திரோபதேசம் முந்தியே நடந்துவிட்டபடியால் நித்திரா பங்கம் நேரிடாது என்பதுமே யாம். அன்று அவன் சந்தோஷமாய்த் தூங்கினான்.

ஏழாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் இரவில் ஒரு பாகவதனை உணவுக்கு அழைத்தது

ஆயிற்று! உங்கள் பாகவத நண்பர் புறப்பட்டுப் போனாரா? அவருக்கு விடை கொடுத்தனுப்ப மனம் வந்ததா?

Koviloor Acadamy

இது ஒரு குடித்தனக்காரன் வீடு, இதில் நமது பெண்சாதி பிள்ளைகளிருக்கிறார்கள், என்கிற நியாபகம் உங்களுக்கிருக்கிறதா? அவரைக்கூட அழைத்து வராமல் வாயிலில் நிறுத்தி நீங்கள் மட்டும் வந்து இன்னொருவருக்கு இலைபோடு என்று சொல்லியிராவிடில் அவருக்கு நான் பிண்டம் போட்டிருக்க மாட்டேன். அவ்வளவு பெரியவர் வாயிற்படி நுழைந்து உள்ளே வந்த பிறகு அன்னமில்லை என்று எப்படி சொல்லுகிறது! மேலும் இரவு காலம்! இல்லை என்று சொல்ல மனம் வரமாட்டேன் என்கிறதே! நீங்கள் என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் என் தர்ம சிந்தை போகமாட்டேன் என்கிறதே! இன்று ஓர் இரவுபோனால் போகட்டும்! நாளை இப்படி யாரையாவது கூட்டிக்கொண்டுவந்து "போடு இலை" என்றால் நான் அடுப்பில் ஒரு செம்பு தண்ணீ ஊற்றிவிட்டு வாயிலில் நடந்துவிடுவேன். அப்புறம் உங்கள் பாடு!

நல்லது இன்றிரவு என்ன உணக்கையுடன் அந்த விருந்தாளியை அழைத்துவந்தீர்கள்? உங்கள் பித்ரார்ஜித சொத்தில் சாதம் போடலாம் என்று நினைத்தீர்களா? வீட்டில் இன்ன இருக்கிறது—இல்லை என்று விசாரித்துக் கொண்டல்லவோ ஒரு தடியனை அழைத்துவரவேண்டும்: ஒன்றும் பேசாமல், ஒன்றும் கேட்காமல் முக்குறுணிப் பிள்ளையார் ஒருவரை உள்ளே அழைத்துவந்தால் அவர் வயிற்றுக்குக் கொட்ட நான் எங்கே போகிறது? பழைய அமுது வீட்டில் கொஞ்சமாய் இருக்கிறதென்று இரண்டுபடி வெண்கலப் பானை வடித்திருந்தேன். நீங்களிருவரும் இரண்டெலைகளை இழுத்துக்கொண்டு போட்டு உட்கார்ந்ததும் ஒரு பருக்கைகூட பாக்கியில்லாமல் வெண்கலப்பானையை வறண்டி வறண்டி அவன் இழவுக்குக் கொட்டினேன். அடியே! அம்மா! நானும் சாப்பிடுகிறவர்களைப் பார்த்திருக்கிறேன். அவன் சாப்பிட்டதுபோல அசுரச்சாப்பாட்டை நான் பார்த்ததே யில்லை. ஒரு குடம் குழம்பா! அவன்

Kovilloor Acadamy

இலையில் ஏதாவது கொஞ்சம் குறைந்தால் கொண்டா கொண்டா என்று நீங்கள் பண்ணுகிற அதிகாரத்தில் குறைவேயில்லை. யாராவது ஒரு விருந்தாளியை அழைத்து வந்துவிட்டால் என்ன? உங்களுக்குத் தலையே தெரிகின்ற தில்லை. கொண்டுவா ஊர்காய், கொண்டுவா கிடாரங்காய், சுண்டைக்காய் வதக்கு, டாங்கர் கொஞ்சம் கரை, என்று வறட்டு அதிகாரம் எவ்வளவோ, அதுதான் சமயம் என்று, பண்ணிவிடுகிறீர்கள். நானும் 18 முழப்புடைவை கட்டும் பெண்பால்தானே. ஒருவனுக்கு இலையைப் பார்த்து பறிமார எனக்குத் தெரியாதா? ஏதோ சில வீட்டிலிருக்கும், சில இல்லாமலிருக்கும், டாங்கர் கரை என்றீர்களே. டாங்கர் அறைத்து நீங்கள் நேற்று சட்டியில் வாரிவைத்தீர்களா என்ன? கொண்டா! கொண்டா!! கொண்டா!! கொட்டு! கொட்டு!! கொட்டு!!! இதுதானா இலையில் உட்கார்ந்து எழுந்திருக்கிறவரையில்! நான் என்ன பச்சைக் குழந்தையா! அல்லது வஞ்சகியா! பெரிய மனிதர் வீட்டில் 4-5தடவை சாப்பிட்டுப் பார்த்திருந்தால் உங்களுக்குத் தெரியும். வீட்டு ஆண்பிள்ளைகள் வாய் திறக்கமாட்டார்கள். சாப்பிட உட்கார்ந்தவன் இலையில் போட்டதை புசித்துப்போவான், அவர்கள் எல்லாம் கெட்டிக்காரர்கள். அவர்கள் கையில் தான் காசும் நிற்கும். உமக்கு உமது அற்ப புத்தி போகிற தில்லை. கொண்ட பெண்சாதியை மட்டும் நன்றாக அதிகாரம் பண்ணத் தெரிகின்றது. இது ஒரு குடித்தனமே! நாளை குழந்தைகள் என்ன பண்ணும் என்கிற விசாரம் உமக்கு இல்லவேயில்லை! நாளை குழந்தைகள் எழுந்திருந்து பசிக்கிறது என்று சொல்லுமே; பொழுது விடியுமுன் நான் அவை களுக்கு எப்படி. பொங்கிக்கொட்டுவேன்! உங்களுக்கும் அந்தத் தடியனுக்கும் சமையல் செய்த அன்னம் அவ்வளவை யும் கொட்டிவிட்டு, வேண்டுமானால் கேளுங்கள், சட்டியில் ஒட்டிக்கொண்டிருந்த புளித்த பழைய அமுதைப் பிழிந்து வைத்துக்கொண்டு புசித்தேன். காலமே ஸ்நானம் பண்ணி னேன். சிக்கு எண்ணெய். தலை எண்ணெய் போகவேயில்லை.

Koviloor Academy

நெஞ்சு கற கறவென்கிறது, மூக்கு கொண கொண என்கிறது. அத்துடன் புளித்த பழைய அமுதை புசித்து விட்டேன். நாளை காய்ச்சலாய்ப் படுத்தால் அந்தத் தடியன் வந்து பொங்கிப் போடுவானா?

"உடம்பு சரியாயில்லை என்று தெரிந்திருந்தால் அப்படியாவது அந்த ஈரச்சோற்றை சாப்படுவானேன். லங்கணம் பரமௌஷதம், இரவு பட்டினி கிடந்தால் காலமே உடம்பு கலகலவென்று இருக்கும்."

ஆம், ஒருவேளை சோறில்லாவிட்டால் ஜீவன் காதில் நிற்குமே! அந்த லங்கணம் பாகவதனுக்கு சொல்லுகிறது தானே! 5-நாள் லங்கணமிருந்தாலும் அவன் தொப்பை குறையாதே. அவனை பட்டினிபோட மனம் வரவில்லை. என்னை லங்கணமிருக்கக்கூடாதா என்று வறட்டு ஆக்ஞை செய்கிறீர்கள். நீங்கள் செய்கிற அநியாயத்துக்கெல்லாம் உட்பட்டால் நீங்கள் சொல்லமாட்டீர்களா? உங்கள் வீட்டுப் புழுக்கை நான்! உங்களுடைய பெண்சாதியாய் என்னைப் பாவித்திருப்பீர்களேயானால் இம்மாதிரி பேசுவீர்களா?

"அப்பா இந்தச் சொல் கேட்பதைவிட பிராணன் போய்விட்டால் நலம் என்று தோன்றுகிறது."

அப்படியே தான் எனக்கும் தோன்றுகிறது. பாவி என்னை இவ்வளவு அவஸ்தை உங்களிடம் படுவதற்கு என் அம்மாள் பெற்று விட்டாளே! அம்மைபோட்டு அவஸ்தைப் பட்டேனே! அப்பொழுது இந்தப் பிராணன் படக்கென்று போகக்கூடாதா? நல்ல நாளும் பெரிய நாளும் வெள்ளிக் கிழமையுமாய் இந்தப் பேச்சு உங்களிடம் கேட்கத்தானே என் ஆயுள் கல்லில் செதுக்கப்பட்டது போல் நின்று விட்டது. இந்தப் பிராணன் படக் என்று போகவில்லையே! படக் என்று போகவில்லையே!! என்று கன்னத்தைக் கிள்ளிக்கொண்டு வயிற்றிலடித்துக்கொண்டு அம்மணிபாய் கீழே விழுந்தாள்.

Koviloor Acadamy

அவள் அவ்வாறு அடித்துக்கொண்டு விழுந்ததும் ராம பிரஸாத் ஒன்றும் செய்யத் தோன்ருதவனுய், மனங்கலங்கி அதுவரையில் அவள்மேல் தனக்கு வந்த கோபத்தை முற்றிலும் மறந்து, அவளை எப்படியாவது சாந்தப்படுத்த முயன்று நல்ல வார்த்தை சொல்லி, இனி ஒரு விருந்தாளியையும் அழைத்துவருவதேயில்லை, என்று வாக்குத்தத்தம் பண்ணி, அன்று செய்த அபராதத்தை மன்னிக்க வேண்டி அவளைப் படுத்துறங்கச்செய்து, பெரிய ஆபத்திலிருந்து தான் விடுபட்டதாகக் கருதினுன். அவள் மந்திரோபதேசத்தை மறுபடி ஒருதடவை நன்ருக யோசித்துப் பார்த்து எல்லாம் நமது க்ஷேமத்தை உத்தேசித்துத்தானே இவள் சொல்லுகிருள், நாம் ஏன் கோபித்துக் கொண்டோம், என்று ஒருவாறு தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு தானும் நித்திரை செய்யலானுன்.

எட்டாவது

மந்திரோபதேசம்

ஓர் குளிர் நாள் இரவு போர்த்துக்கொள்ளும்படி ராமபிரஸாத் ஒரு கம்பளியை ஒரு சிநேகிதன் வேண்டுகோளின்படி அவனுக்கு இரவல் கொடுத்தது

இல்லை, கம்பளி ஜாஸ்தியாயிருந்தால் கண்டவனுக்கெல்லாம் கொடுக்க புத்தி தோன்றுகிறதோ என்கிறேன்? என்ன காதில் விழவில்லையா? எவனே ஒரு தடியன்

Koviloor Acadamy

இன்று அந்தக் கம்பளியைப் போர்த்துக் கொள்ளுகிறது! நாளை அதே கம்பளியை நான், அதாவது பெண்பால் போர்த்துக் கொள்ளுகிறது! வெகு மரியாதை! வெகு அழகாயிருக்கிறது! கொடுக்க மட்டும் தெரிகின்றதே, வாங்கத் தெரியுமா? இத்துடன் மூன்று கம்பளிகள் இந்த வீட்டைவிட்டுத் தொலைந்தன, ஒன்றுவது திரும்பிவரவில்லை. கல்போல் ஒரு கம்பளியை சுலபமாய் உங்கள் சிநேகிதனுக்கு அனுப்பிவிட்டீர்களே. இன்று நான் என்ன செய்கிறது. குளிரில் விறைத்துக்கிட என்கின்றீர்கள். இந்தச்சொல், ஒன்றுதான் நான் கேட்கவேண்டியதில் பாக்கியா யிருந்தது. இதையும் கேட்டாய் விட்டது. அவன் குளிரில் விறைத்தால் அவன் உடம்பு தாங்கும், என் பாவி உடம்பு தாங்காதே! உங்களுடன் பட்டு பட்டு உடம்பு புண்ணாயிருக்கிறதே! கூரை வீடு குளிர்காற்றும் கிர் என்று அடிக்கிறது, காதில் கேட்க வில்லையா? ஒன்றும் தெரியாது போல் தூங்குவதாகப் பாசாங்கு செய்யவேண்டாம். நானின்று உங்களைத் தூங்க விடேன். என் வயிறு எரிகிறது. இன்று அடிக்கிற சீறு காற்றால் நானும் என்குழந்தைகளும் பொழுது விடியும்வரையில் உயிருடனிருப்போம் என்று எண்ண இடமேயில்லையே. ஒரு கம்பளிக்கு இரண்டு கம்பளியாய்ச் சேர்த்து போர்த்திக் கொண்டால் எனக்கும் என் குழந்தைகளுக்கும் செல்லாதா என்ன? அந்தக் கட்டையில் போவானுக்குத்தான் செல்லும்! அவன் மேல் துளிக்காற்று படக்கூடாதா? எங்கள் பிராணன் எக்கேடுகெட்டால் உங்களுக்கு சிந்தையில்லையா? நல்லது முதலிரண்டு கம்பளிகள் போனால் போகட்டும் என்றிருந்தேன். இன்று மூன்றும் கம்பளியும் போய்விட்டது. பாவி! பாவி! இன்றிரவு குழந்தைகளுக்கு போர்த்துக் கொள்ள கம்பளியே யில்லையே! என் குழந்தைகளை கொன்று விட்டீர்களே! குழந்தைகள் க்ஷேமத்தை கொஞ்சமாவது கவனிக்காத தகப்பன் இருந்தென்ன இல்லாமற்போனென்ன?

Koviloor Acadamy

"என்னடி ஒரீரவு நான் கம்பளி கடன் கொடுத்ததற்கு இவ்வளவு நீலியாட்டம் ஆடுகிறாய்."

நீலியாட்டமா! தெரிந்தது! தெரிந்தது!! வேண்டுமென்றே நீங்கள் இன்று கம்பளி கடன் கொடுத்திருக்கிறீர்கள். இவள் எப்படியாவது குளிரில் விறைத்து சாகட்டும் என்று நீங்கள் கம்பளி கடன் கொடுத்திருக்கிறீர்கள். நான் போனால் ஒரு சனி துலைந்தது என்றிருக்கும். நீங்கள் அப்படி எண்ண எண்ண எனக்கு ஆயுள் வளரும். இல்லாவிடில் என் குழந்தைகளை யார் காப்பாற்றுவார்கள். இவள் எப்பொழுது கண் மூடப்போகிறாள் என்றுதான் நீங்கள் எதிர்பார்த்திருக்கிறீர்கள்.

"ஏன் இல்லாததெல்லாம் சொல்லிக்கொண்டு என் பிராணனை வதைக்கிறாய். நான் இதோ ஒட்டோட்டமாய் ஓடி அந்தக் கம்பளியை வாங்கிக்கொண்டு வருகின்றேன். பேச்சை அதிகமாய் வளர்ப்பானேன். நீ சௌக்கியமாய்த் தூங்கு."

நீங்கள் வாங்கிக்கொண்டு வாருங்கள்! நானதை கையால் தொடுவேனா பாருங்கள்! ஒரு புருஷன் போர்த்திக் கொண்டதை நான் வாங்கிப் போர்த்துக் கொள்ளுகிறது! அப்புறம் நான் குலஸ்திரீ! முகத்தில் மீசை முளைத்த ஆண் பிள்ளையானால் இப்படி நீங்கள் பேசுவீர்களா? அந்தக் கம்பளியை நான் துணுக்கு துணுக்காகக் தெருவில் எறியாவிடில் நான் ஒரு பெண்பிள்ளையா? அல்லது அதை உங்கள் கண்கள் முன்னே நெருப்பில் போட்டுக் கொளுத்துகிறேன். அதைத் தீயில் வைக்கின்றேன். பாருங்கள். ஐயோ! அதற்கு நான் ஓரத்தில் கயிறு திரித்து முடிந்ததெல்லாம் வீணாயிற்றே! வெகு நாளிருக்க வேண்டும் என்று தொடையில் வைத்தல்லவோ திரித்து கயிறு முடிபோட்டேன்! தொடையில் திரித்த எரிச்சல் இன்னும் வாங்கவில்லையே! இப்படி நீங்கள் செய்வீர்கள் என்று நான் நினைத்திருந்

Koviloor Acadamy

தால் அத்துடன் ஒருநாளும் இவ்வளவு சிரமப்பட்டிருக்க மாட்டேனே! ஆம் சிரியுங்கள்! உமது ஜன்மம் சிரிப்பாகத்தான் முடிந்தது! ஒரு சிறு கம்பளத்தைக் காப்பாற்றிக் கொள்ளத் தெரியவில்லை. நீங்கள்தானு இக்குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறீர்கள். நாளைப்பொழுது எனக்கும் என் குழந்தைகளுக்கும் நற்பொழுதாய் விடியவேண்டும்.

என்று அம்மணிபாய் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ராமபிரஸாத் சிரமம் மேலிட்டவனுய் அயர்ந்து நித்திரை செய்கின்றவனுய் குறட்டைவிட்டான். அது கண்டு அவ்வுத்தமியும் தனது உபதேசத்தை நிறுத்தித் தூங்கலானுள்.

ஒன்பதாவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் ஓர் இரவு சாப்பிடும்பொழுது சமையல் நன்ருயில்லை என்று சொன்னது

இன்றிரவு சாப்பாடு நன்ருயில்லை! நாளை நானே நன்ருயில்லை என்பீர்கள்!! இப்பொழுது இந்த வீட்டில் உங்களுக்கு எதைப் பார்த்தாலும் நன்ருகப் புலப்படவில்லை! நான் நாளைப்பொழுது விடியவேண்டுமே என்று கார்த்துக் கொண்டிருக்கிறேன். என் குழந்தைகளை அழைத்துக் கொண்டு நான் வெளியே போய்விடுகிறேன். உங்களுக்கு யார் சமையல் செய்தால் சாப்பாடு நன்ருக விருக்குமோ அவர்களை அழைத்துவந்து ருசியாக சமையல் செய்யச் சொல்லி சுகமாய் சாப்பிடுங்கள்.

Koviloor Acadamy

"சைய்! வாயை மூடு."

சைய்! வாயை மூடா! என்றையதினம் என் அருமைத் சந்தை போனரோ அன்றையதினமே என் வாயை ஊசியையும் நூலையும் போட்டு தைத்துக் கொண்டு விட்டேனே. நான் என் வாயை திறக்கிறதேயில்லையே. இன்றையதினம் நான் பொன்னை உறைத்துப் புளிச்சார் காய்ச்சி வைத்திருக்க நீங்கள் சமையல் நன்ருகவில்லை என்று சொன்னீர்களே! என் மனம் துடிக்கிறதே! இதைவிட எந்தப் பெண்சாதி சமையல் செய்வாள்? என்னைப்போல் ஒரு பயந்தவள் உங்களுக்கு மனைவியாக வந்தாளென்றல்லவோ என்னைக் கண்டபடி யெல்லாம் பேசுகிறீர்கள். வாய்மூடு, கைகட்டு என்று அதிகாரப் பேச்சுக்கள் பேசுகிறீர்கள். எவளாவது ஒரு அற்ப முண்டை உமக்கு வாழ்க்கைப்பட்டிருந்தால் அவளிடம் நீங்கள் படும் பாடு அப்பொழுது தெரியும்.

மத்தியானம் பண்ணின குழம்பு பாதி கற்சட்டி அப்படியே மிதந்துவிட்டது. அதற்கென்ன, வீணுக மிகுந்த குழம்பை குப்பையில் கொட்டுவானேன் என்று அதையே இரவுக்கும் வைத்து ரஸம் மட்டும் புதிதாய்ச் செய்தேன். ஒருநாள் இராத்திரி புதுக்குழம்பு இல்லாமற் போனல் என்ன! விருந்துவேற்ருள்கள் ஒருவரும் வரவில்லையே. நமது வீட்டில் நாம் கஞ்சியை உள்ளுக்குள் உட்கார்ந்து குடித்தால் என்ன குற்றம். புதுக்குழம்பு பண்ணுத காரணத்திற்காக நீங்கள் வெடு வெடு என்று என்மேல் விழுந்துகொண்டு சமையல் நன்ருகவிருக்கவில்லை என்று எப்படி குற்றம் சொல்லலாகும்? இப்படிச் சொல்லுவதுகூட உட்கார்ந்து சாப்பிடும் குழந்தைகளுக்கு நல்ல மாதிரிகள் சொல்லிக் கொடுக்கவென்ரு? உமது புத்தி என்ன புத்தியோ தெரிய வில்லையே? நீங்களேயிப்படி கேட்க ஆரம்பித்தால் நாளை சிறு குழந்தைகளும்கூட பழங்குழம்பு எனக்கு வேண்டாம், என்று சொல்லி முரட்டுத்தனம் பண்ண ஆரம்பிக்கும்.

Koviloor Acadamy

அவர்களுக்கு கெட்ட வழிகளை நீங்களே உபதேசித்துக் கொடுக்கிறீர்கள். உங்களைத்தான் நான் கண்டிக்கிறேன். அவைகளை அவ்வாறு கண்டிக்க என் பெற்றமனம் வரவில்லை. ஒருக்கால் கண்டித்தாலும் இரண்டுங் கெட்டானான குழந்தைகளாகையால் அவைகளுக்கு ஒன்றும் தெரியாது.

பழங்குழம்பு பிடிக்காமலிருப்பதற்கு நாமும் இப்பொழுது பணக்காரர்களாக விருக்கவேண்டும். அப்பொழுது இரண்டு மூன்று பரிசாரகர்களையும் நியமித்து இரவில் ஒரு பருப்பு, புளிக்குழம்பு, பொறித்த குழம்பு, மோர்க் குழம்பு ஆக மூவகைக் குழம்புகளும் சுடச்சுட செய்து வைத்து நானும் சிரமமில்லாமல் தூங்கலாம். அப்படி சாப்பிட்டு சாப்பிட்டுத் தான் குஷால்தாஸ் தகப்பனார் குடியை அழித்தார். நானும் அவ்வாறுசெய்து ஏற்கனவே பாழாய்விட்ட நமது குடித் தனக்கதைக் கெடுக்கவேண்டும் என்று நீங்கள் உத்தேசிக் கிறீர்கள். நான் பைத்தியக்காரியல்ல. வீணாய்ப் பண்டங் களைப் பாழாக்கி நாளைக் கடன் கேட்கமாட்டேன்.

நல்லது, அந்தக் குழம்பு அப்படித்தான் என்ன கெட்டுப் போயிருந்தது? நான் மற்ற பெண்டுகளைப்போல் ஜில் என்று வைத்திருந்து இலையில் குத்தினேனா? இல்லையே? எவ்வளவோ ஜாக்கிரதையாய் அடுப்பில் சுட வைத்துக்கொண்டு வந்து பறிமாறினேன். குழம்பு சாப்பிட்ட கை வாசனை எனக்கு இன்னும் போகவில்லை. உங்களுக்கு மட்டும் பிடிக்கவில்லை. புதுக்குழம்பு செய்திருந்தால் அதும் பாதி மிகுந்துவிடும், பழங்குழம்பு குப்பைக்கு, புதியதிலும் பாதி குப்பைக்கு.

"அதற்காக நான் சொல்லவில்லை; ஒரு துவையலாவது புதிதாய் செய்து வைத்திருக்கக்கூடாதா?"

சரி, உங்களுக்கு செட்டுக் குடித்தனம் நன்றாகத் தெரிந்திருக்கிறது! பைத்தியக்காரர்கள் துவையல் எளிது

Koviloor Acadamy

ன்று எண்ணுவார்கள். அது முற்றிலும் பிசகு. துவையல் ஒன்று செய்வதைக்காட்டிலும் 5-கறிகள் செய்யலாம். ஒரு துவையலுக்கு ஒருபடி மிளகாய் வற்றல், ½ படி உளுத்தம் பருப்பு. கால் படி கடுகு, மாங்காயவ்வளவு பெருங்காயம், ஒரு விசை எண்ணெய், இவ்வளவும் வைத்து அறைத்து வழித்து அம்மியில் பாதி, குழவியில் பாதி, கீழே சிந்தினது பாதி, இவ்வளவும் முடிந்து மிகுந்து நிற்பது விளாங்கனியவ்வளவு. அதை சாப்பாட்டில் போட்டு பிசைந்து கொண்டால், மற்ற சாதத்துக்கு மூன்று முட்டை நெய் யென்றால் அதற்கு முப்பது முட்டை நெய். நல்லது, பெரியவர்களுக்குத்தான் துவையலால் சாப்பிடத் தெரியும். சிறு குழந்தைகளுக்குத் தெரியாது, அவர்களுக்கு ரஸமோ குழம்போ வேறு சித்தப்படுத்தவேண்டும். அப்பொழுது அதை குழந்தைகளுக்கு மாத்திரம் என்று ஒரு சிறு அளவில் செய்யமுடியாது. பெரிய குழந்தைகளுக்கும் தான் செய்ய வேண்டும். ஆகவே இரட்டிப்புச் செலவு. துவையல்செய்த குடித்தனம் இதுவரையில் முன்னுக்கு வந்ததாக நான் கேள்விப்படவேயில்லை. இப்பொழுது மிளகாய் வற்றல், கடுகு, உளுத்தம் பருப்பு இவைகள் விலை உமக்குத் தெரியுமா? போனமாதம் படி 3 துட்டுக்கு ஒருவரும் சட்டைபண்ணி வாங்காத மிளகாய் வற்றல் இப்பொழுது படி 3-அணா. உமக்கு அந்த விசாரம் என்ன. புகையிலை விலை ஏறினால் பொடி குறைந்துபோகுமே என்று விசாரப்படுவீர்கள். பிராமணார்த்தக்காரனுக்கு நெய் விலை தெரிவானேன்! நீங்கள் எப்படியிருந்தபோதிலும் நான் விட்டுக்கொடுக்கக் கூடாதென்று எவ்வளவோ சிரமப்பட்டு நீங்கள் மாதச் செலவுக்குக் கொடுக்கும் கொஞ்சத்தை நான் அழகாய் செலவிட்டுவரும்பொழுது சமையல் நன்றாகவில்லை, குழம்பு பழைய குழம்பு என்று என் தலைமேல் ஏறுகிறீர். என்னால் சகிக்கக்கூடவில்லை. என்னுடைய சிரமத்துக்கும் புத்திக்கும் இதுதானா கூலி?

Koviloor Acadamy

என்னைவிட இன்னும் அதிகச்செட்டும் கட்டுமாய் குடித்தனஞ் செய்யும் ஒருத்தியை காண்பியுங்கள். நான் என் காதை அறுத்துக்கொள்ளுகிறேன்! அதற்கென்ன! பணத்தையெல்லாம் ஒரு நாளில் வாரி இறைக்கச்சொல்லுகிறீர்கள். அதற்கேற்ற பெண்பிள்ளை நானில்லை.

சாப்பாட்டில் ருசிபார்த்து சாப்பிடப்பட்டவன் ஆண் பிள்ளையா? போட்டத்தை பசுப்போல் சாப்பிடப்பட்டவன் தான் யோக்யன்! அதுதான் உங்களுக்கும் அழகு! எனக்கும் அழகு! குழந்தைகளையும் நல்ல மார்க்கத்தில் கொண்டுவர வழி. இனிமேல் சாப்பாட்டில் வாயைத் திறந்தீர்களோ குடிமுழுகிப்போகும். இன்று பழைய குழம்பு என்றீர்கள். நாளை கறி சிரார்த்தக் கறிமாதிரி சுண்டிவைத்திருக்கிறது, வதக்கவில்லை என்பீர்கள். அதன்பிறகு ஒரு கறி போதாதென்பீர்கள். அப்புறம் ஒரு துவையல் தப்பாமல் வேண்டும் என்று அதிகாரம் பண்ணுவீர்கள். என்ன விருந்தாலும் ஒரு அப்பளம்கூட சுட்டுவைத்திருந்தால் வாய்க்கு வேண்டியிருக்கிறது என்பீர்கள். இதற்கெல்லாம் இடங்கொடுக்கப்பட்டவள் நானல்ல. இந்தக் குடித்தனத்தை நான் காப்பாற்ற வந்திருக்கிறேனே யல்லாது இதை அழிக்க நான் வரவில்லை. உமக்கு என் சமையல் இஷ்டமில்லாத பக்ஷத்தில் இரண்டாம் பெண்சாதி ஒருவளை கலியாணம் பண்ணிக் கொள்ளுங்கள். அவளும் நீங்களும் சந்தி சிரிக்கலாம். பழங் குழம்பா! சமையல் நன்றாகவில்லையா!! இனி பத்திரம்!!! ஜாக்கிரதையாகப் பேசுங்கள்!!!!

Koviloor Acadamy

பத்தாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் பஞ்சாயித்து சபையில் சேர்ந்து கேசவதாஸ் குடும்ப விபாகம் செய்து கொடுத்தது

நிரம்ப அழகாயிருக்கிறது! நீங்கள் என்னிடம் சொல்லா விட்டாலும் நான் எல்லாம் கேள்விப்பட்டு சந்தோஷ மடைந்தேன். இது ஒன்றுதான் பாக்கியிருந்தது! எல்லா ருக்கும் ஒரு உத்தியோகம் என்றால் நமக்கும் உத்தியோக மில்லாமலிருப்பானேன் என்று பஞ்சாயித்து உத்தியோகம் ஸம்பாதித்துக்கொண்டீர்களாக்கும்! கேசவதாஸ் நமக்கு அநேக உபகாரம் செய்திருக்கிறார்! அவர் குடும்ப விபாகம் நீங்கள் முன் நின்றுதான் நடத்திக் கொடுக்கவேண்டும்! அதுமட்டுமல்ல, பிறந்ததுமுதல் எத்தனையோ குடும்பங் களுக்கு நீங்கள் விபாகம் ஏற்படுத்தி யிருக்கிறீர்கள்! கேசவ தாஸ் அதைக்கொண்டு உங்களை அழைத்தார்! வெளியில் உங்கள் உத்தியோகத்தைச் சொல்லிக்கொள்ள வேண்டாம். கேட்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது.

"நானிப்பொழுது உன்னிடம் சொல்லிக்கொள்ள வர வில்லையே."

ஆம். அந்த வஞ்சனையைத்தான் நானும் சொல்லு கிறேன். என்னிடம் உங்களுக்குக் கிடைத்த உத்தியோ கத்தைச் சொல்லுவானேன்? நான் என்ன உங்கள் சத்துரு என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். உங்களுக்கு வேண்டிய வனான குஷால்தாஸிடம் சொல்லுவீர்கள். அவன்தான்

Koviloor Acadamy

உங்களுக்குப் பெண்சாதி. அவனைத் தொட்டுத்தானே நீங்கள் தாலிகட்டினது. நான் என்ன ஒரு புழுக்கை!

"இது என்ன புத்தியில்லாமல் பேசுகிருய். எதில் ஆரம்பித்து எதில் கொண்டுவந்து முடிக்கிருய். ஏதாவது புத்தியுடன் பேசினுல் பேசு."

ஆம், நான் புத்தியில்லாதவள்தான். புத்தியிருந்தால் என்னை ஒரு பஞ்சாயித்தாக நியமித்திருக்கமாட்டார்களா? புத்தி என்பது எல்லாம் உங்களுக்கும் உங்கள் சிநேகிதன் குஷால்தாஸுக்குந்தான். மற்றவர்கள் எல்லோரும் மடையர்கள். நீங்கள் எக்கேடு கெட்டுப்போனுல் எனக்கென்ன? நமக்கு இருக்கிற வேலை தலைக்கு மேலிருக்கிறதே, பஞ்சாயித்தாய் நாம்போய் உட்காருவானேன் என்று நான் என் சபலத்தால் சொன்னேன். கேசவதாஸ் குடும்பத்தில் பாகம் ஏற்ற வித்தியாசமாக ஏற்பட்டால் பிற்காலத்தில் "என் தலையில் மண்ணைவாரிப்போட்டாயே பாவி" என்று ஒருவன் உங்கள் காலில் அடித்துவிழுவான். மேலும் பஞ்சாயித்து உத்தியோகம் இன்றுதான் ஆரம்பித்திருக்கிறது. குடும்ப விபாகம் என்ருல் இலேசில் முடிவுபெறுமா. எத்தனைநாள் செல்லுமோ, எத்தனை பழைய சண்டைகள் வெளிக்கிளம்புமோ, எத்தனை பெயர்கள் மண்டையில் ரத்தக் காயம் படுமோ. அதில் நீங்கள் என்ன புத்தியுடன் சிக்கிக் கொண்டீர்கள்? நீயும் இருக்கிருயா என்ருல் நீயும் இருக்கிருயா என்று நாம் சொல்லிவிட்டு எல்லாக் காரியங்களிலேயும் ஒதுங்கி நிற்பது மேலா, அப்படிக்கில்லாமல் நமக்கு சம்பந்தமில்லாத காரியத்தில் நாம் தலையிட்டுக்கொண்டு கரும்பாயிருக்கிறவர்களை யெல்லாம் வேம்பாகப் பண்ணிக் கொள்வது மேலா? எந்தக் குடும்பம் எப்படிப் போனுல் என்ன? நம்முடைய நாற்றம் நமக்குப் போதாதா? பிறருடைய நாற்றமும் விலைக்கு வாங்கிக்கொள்ளவேண்டுமா? நல்லது நான்கு நாள் நாம் சிரமப்படுகிறோம். அதனுல் நமது குடும்ப உப்புப்புளிச் செலவுக்காவது இரண்டு காசு

Koviloor Acadamy

லாபம் நமக்கு உண்டா? உண்டென்றால் போனால் போகட்டும் நமது கணவன் பஞ்சாயித்தில் சேர்ந்ததில் நன்மையுண்டு என்று நான் சந்தோஷமாயிருப்பேன். நல்லது என்னை ஒரு பேச்சுக் கேட்டீர்களா? அவ்வளவென்ன அலட்சியமாய் நான் உங்களுக்கு ஆய்விட்டேன்.

பஞ்சாயித்தில் சேர்ந்தபிறகு நினைத்த வேளைகளி லெல்லாம் வீட்டைவிட்டு வெளியே போய்விடுகிறீர்களே. நான் ஒண்டிக்காரி; என்னவாய் வந்தவர்களுக்கு ஸால்ஜாப் செய்வேன்? எத்தனை நாழிகை நான் இரவில் சோற்றை வைத்துக்கொண்டு கார்த்திருப்பேன்? உயிரை என்னிடம் வைத்து பிராணனை வாங்கிவிடுகிறீர்கள். உம்முடன் குடித்தனம்செய்ய பிரமதேவனாலும் முடியாது. நானும் ஒரு பிராணிதானே, ஒருநாள் விழித்திருக்கலாம், இரண்டு நாள் விழித்திருக்கலாம், இனி நம்மால் ஆகாது. நாளை பஞ்சாயித்திலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுவீர் களானால் நீங்களும் பிழைத்தீர்கள், நானும் பிழைத்தேன், என்று சொல்லிக் கொஞ்சத்துடன் நிறுத்தினாள். அன்று அவ்வளவு கொஞ்சமாய் சொல்லி தனது உபதேசத்தை அம்மணிபாய் நிறுத்தியதும் ராமபிரஸாத் தானும் பிழைத்த தாக எண்ணிக்கொண்டான்.

பதினொன்றாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் சங்கரிக்கு தைப்பூசம் பார்க்கப் போனது

சௌக்கியமாய் திரும்பிவந்தீர்களா? நிரம்ப சந்தோஷம்! பூசம் சங்கரியில் நன்றாகவிருந்ததா? வேடிக்கைப் பார்க்க

Koviloor Acadamy

மனதிற்கு திருப்தியாயிருந்ததா? எப்படியாவது திருப்தியுடன் திரும்பிவந்தீர்களே! அதே போதும்!!

''நான் சங்கரியில் பூசம் பார்த்த சமாசாரம் நான் வருவதற்கு முன் உனக்கெப்படித் தெரிந்தது?''

எனக்கு எல்லாம் தெரியுமே! இது ஒன்றுமட்டுமா! நீங்கள் செய்கிற ஒவ்வொரு அக்கிரமமும் எனக்கு நன்ருகத் தெரியும். எனக்கு ஒரு பக்ஷியல்லவா எல்லாவற்றையும் வந்து சொல்லிவிடுகின்றது. இவளுக்கொன்றும் தெரியாது. இவளை நாம் ஏய்த்துவிடலாம் என்று நீங்கள் உங்கள் மனதிற்குள் எவ்வளவோ கெட்டிக்காரத்தனமாகத்தான் நினைத்திருக்கின்றீர்கள். சுவாமியல்லவோ ஒருவர் இருக்கிருர்! அவர் மட்டில் என் பங்கிலில்லாவிட்டால் இதற்குள் என்னை எவ்வளவோ நீங்கள் மோசம் பண்ணியிருப்பீர்கள். இதற்குள் நானிருந்தவிடமே தெரியாமல் செய்திருப்பீர்கள். நான் அவ்வளவு பைத்தியக்காரியல்ல. ஆனுல் ஒருவிதத்தில் பைத்தியக்காரிதான். எப்படியென்ருல் நான் எவ்வளவோ மரியாதையாய் எப்பொழுதும் நம்மைத் தொட்டுத் தாலி கட்டின கணவர்மேல் நாம் குற்றஞ்சொல்லக்கூடாதென்று வெகு பயத்துடன் நீங்கள் செய்துவருகிற அநியாயங்களுக்கெல்லாம் வாயை மூடிக்கொண்டேயிருக்கிறேன். என் மனம் சகிக்காமல் போகும்போதுதான் ஏதோ இரண்டு சொற்கள் என் வாயைவிட்டுச் சொல்லுகின்றேன். இருந்தாலும் இவ்வளவு அக்கிரமமும் பொய்யும் புருஷர்களுக்காகாது! நீங்கள் முந்தாநாள் காலையில் வீட்டை விட்டுப் புறப்படும்பொழுதே உங்கள் முக ஜாடையால் நீங்கள் சங்கரிக்குப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. ஆனுல் நீங்களோ வெகு யோக்கியர் போல திருப்பத்தூரில் பாசிப்பயறு மலிவாக விருக்கிறது. 10-ரூபாவுக்கு வாங்கிப்போட்டால் இந்த வருஷம்முடிய இழுத்துக்கொண்டிருக்கும், நான் போய்வருகிறேன், என்று சொல்லிப் புறப்பட்டீர்கள். அந்த ரூபாவை சங்கரியில்

கரியாக்கி வந்திருக்கிறீர்கள். என்னுடன் உண்மையைச் சொன்னால் நானப்பொழுது தடுப்பேனா? அல்லது தைப் பூசம் பார்க்க பெண்சாதியையும் குழந்தைகளையும் கூட அழைத்துப்போனால் சாதியைவிட்டுத் தள்ளிவிடுவார்களா? ஜாதிக்கு அவமானமா? குலத்துக்குக் குறைவா? எங்களுக்கும் அந்த வேடிக்கை பார்த்துவிட்டு வந்தால் மனம் குளிராதா? ஸ்வாமி தர்சனம் செய்தால் புண்ணியம் வராதா? இவ்வளவு வஞ்சகமும் செய்து பொய்யும் சொல்லி ஸ்வாமி தர்சனம் செய்தால் உங்களுக்கு எந்த லோகம் கிட்டுமோ அது சுவாமிக்கித்தான் தெரியும்!!

"இல்லையடி, நான் புறப்படும்பொழுது சங்கரிக்குப் போவதாக எனக்கு உத்தேசமே யில்லை. வண்டிப் பேட்டைக்குப் போனதும் ஜனங்கள் தைப்பூசத்துக்கு வண்டி பேசிக்கொண்டிருந்தார்கள். நாமும் இந்தத் தடவை சங்கரி போய்வருவோம் என்று ஸ்வாமி தர்சனத்துக்குச் சென்றேன். நான் வீட்டைவிட்டு புறப்படும்பொழுது மனப்பூர்வமாய் அந்த எண்ணம் எனக்கில்லவே யில்லை."

ஆயிரம் சொன்னீர்கள்! நான் நம்பவேமாட்டேன். என்னை ஏமாற்ற உங்களால் முடியாது. இவள் கிடக்கட்டும், அற்ப முண்டை! இரண்டுநாள் நாம் வீடு என்கின்ற விசாரமேயில்லாமல் சுகமாய் சஞ்சாரம் பண்ணிவருவோம், என்று கால்வீசிப் புறப்பட்டுவிட்டீர்கள். அதற்குத் தக்கபடி இரண்டு தடியர்கள் சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டால் உங்களுக்கு புதையல் அகப்பட்டாற்போல் ஆனந்தம் பொங்கிவிடுகின்றது. நாளைக்கு வீட்டில் உப்புப் புளியில்லை என்றால் அவர்கள்தானே வாங்கிப்போடுவார்கள். 10 நாழிகைக்கு இலையை எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தால் அவர்கள்தானே பிண்டம் பொங்கிக்கொட்டுவார்கள்!

"என்னடி உன் துஷ்ட வாய் அடைக்கிறதில்லை. ஏதாவது ஒன்றில் ஆரம்பித்து ஒன்றில் திரும்பி கண்டவனையெல்லாம் பிடித்துத் திட்டுகிறாய்."

Kovilool Acadamy

நல்லது! இத்தனைநாள் பழகி என் குணம் உங்களுக்கு இப்பொழுதாவது புலப்பட்டதே! என் வாயை துஷ்ட வாய் என்கிறீர்களே. இவ்வாறு உரக்கப் பேசி என்னை மோசம் பண்ணி ஏய்க்கப் பார்க்கின்றீர்கள். கொஞ்ச காலத்துக்கு முந்தி நான் கொஞ்சம் கோபக்காரியாகத்தானிருந்தேன். நீங்கள் எப்பொழுதாவது ஒரு சமயத்தில் வெளியிற் சென்றால் நான் கோபித்துக்கொள்ளுவதுண்டுதான். இப் பொழுதோ வெளியிலிருப்பதே உங்கள் வாடிக்கையாய் விட்டது. என் கோபத்தை நானிப்பொழுது முற்றிலும் விட்டுவிட்டேன். அதில் ஏதாவது பிரயோஜனமிருந்தால் நான் அதை என்னிடத்தில் நிறுத்திக்கொள்ளலாம். இவள் போகின்றாள், இவள் ஒரு புழுக்கை என்று நீங்கள் என்னை காலால் ஒரு புழுவை நசுக்குவதுபோல் அலட்சியம் செய்து விட்டீர்கள். என் கதியெல்லாம் இரண்டுவேளை சோறும் ஒரு புடைவையும். ஒரு வேடிக்கையுண்டா? விநோத முண்டா? உற்சவமுண்டா? உறவாடுதலுண்டா? ஒன்று மில்லை! வாயிலில் அலைந்து திரியும் நாயும் வயிறு வளர்க் கின்றது, நானும் வளர்க்கின்றேன்! அதற்கும் எனக்கும் சின்ன வித்தியாசம். ஏதோ மரம்போல நிற்காமல் இரண்டு மூன்று சிறு குழந்தைகளை சுவாமி என்மேல் கண்திறந்து கொடுத்துவிட்டார். அவைகளுக்காக இந்த வீட்டில் நானிவ்வளவு கவலைப்பட்டு நிற்கின்றேன். உங்களுக்கு ஒருவித கவலையுமில்லை: உற்சவம் கொண்டாடுகிறீர்கள்.

''அப்படியானால் சுவாமி தர்சனம் செய்து வருவதில் பாவமா? உலகத்தார் ஒருவரும் சுவாமி தர்சனத்திற்கு போகவில்லையா?''

உலகத்தார்போல் யோக்யமாய் நான் சங்கரிக்கு தைப் பூசம் பார்க்கப்போகிறேன் என்று தைரியமாய்ச் சொல்லி விட்டுப் போகின்றதுதானே? அப்படி செய்வதல்லவோ ஆண்பிள்ளை சிங்கத்திற்கு ஓர் லக்ஷணம். நானவ்விடம் போக உத்தேசிக்கவேயில்லை; மனப்பூர்வமாய்ச் சொல்லு

Kovilor Acadamy

கிறேன்,- ஸத்தியமாய் சொல்லுகிறேன், ஸத்தியமாய் சொல்லுகிறேன் என்று இவ்வாறு வழவழ என்று பொய் சொல்லிப் பிதற்றுவானேன்? நீங்களிவ்விடம்விட்டு புறப்படுவதற்கு 10-15 நாட்களுக்கு முன்னதாகவே இந்த யோசனை செய்திருந்தீர்கள். எனக்கு எல்லாம் தெரியும். என்னை ஒரு கபோதி என்று நினைக்கவேண்டாம். இந்தக் கழுதைக்குக்கூட உற்சவமா என்று என்னை வேண்டுமென்றே அவமதித்துப் போனீர்கள். நீங்கள் உலகத்தார்களைப்போல யோக்கியராக விருந்தால் உங்களுடைய மனைவியையும் குழந்தைகளையும் கூடவே இட்டுக்கொண்டு போயிருப்பீர்கள். தைப்பூசத்திற்கு ஒருவராவது பெண்சாதி பிள்ளைகளை அழைத்துவரவேயில்லையா? எல்லாரும் உங்களைப்போலவே அறுத்துவிட்ட கழுதைபோல தனிமையிற்றான ஓடிவந்தார்கள்? உங்களுக்கு என்னை அழைத்துப்போக இஷ்டமிருக்குமா? நான் உங்கள் மனைவியா? விலைக்கு வாங்கின பெண் நான்!!

நானே கூடவரவில்லை! நிர்விசாரம். வேடிக்கை முற்றிலும் நன்றாக நாய்போல் அலைந்து திரிந்து பார்த்திருப்பீர்கள். நான் ஒரு வேடிக்கையும் பார்க்கவில்லை, நேராக சுவாமியிருந்த விடஞ்சென்று சேவித்து வந்தேன் என்று நீங்கள் எனக்குச் சொல்லவேண்டாமே! போதும்! உங்கள் குணம் எனக்கு நன்றாகத் தெரியுமே. நீங்கள் போனவருஷத்தில் துலாமாஸ ஸ்நானத்துக்கு பவானிக்கு நேராகப் போய்வந்த சமாசாரம் எனக்குத் தெரியாதா? அதுபோல் தானிதுவும். வழியிலிருந்த வேடிக்கைகள் எல்லாவற்றையும் பார்த்து காசையும் கரியாக்கி கடனும் வாங்கிக்கொண்டு ஊர் வந்திருப்பீர்கள். போனவருஷம் நீங்கள்வந்த வெட்கக்கேடு வருஷமாயிரமானாலும் எனக்கு மறக்குமா? அது போலவேதான் இந்த வருஷமும் இருக்கும். அப்பொழுது துலாஸ்நானம்! இப்பொழுது தைப்பூசம்! உங்களுடைய காரியங்கள் உங்களுக்கே அவமானத்தை உண்டாக்கவில்லையே! என்னைப்போல் எந்த மனைவியாவது

Koviloor Academy

நீங்கள் செய்துவருகிற அக்கிரமங்களை வாய்திறவாமல் சகித்திருப்பாளா? என்னையும் என் குழந்தைகளையும் வேண்டாமென்று தள்ளிவிட்டு பொய்பேசி திருப்பத்தூர் போவதாகச் சொல்லிவிட்டு மோசமாய் சங்கரிபோய் காசை கரியாக்கிவிட்டு வந்திர்களா? வண்டிச்செலவு போக வர ஒரு ரூபாயிருக்கட்டும். கோவில் செலவும் படிச் செலவும் ஒரு ரூபாயிருக்கட்டும். பாக்கி ரூ. 8 எங்கே? முடிப்பை அவிழ்த்துக்காட்டுங்கள் பார்ப்போம். தலையைச் சொரிகின்றீர்களே! இல்லாவிடில் உங்கள் குணம் எனக்குத் தெரியாதா?

தைப்பூசத்துக்குச் சென்றீர்கள். அங்கு ஒரு தொம்பன்வந்து கூத்தாடினான். வேடிக்கை பார்த்தீர்கள். எல்லோரும் கால் ரூபா சொடுத்தார்கள். நீங்கள் ஒரு ரூபா கொடுத்தீர்களா? எனக்குத் தெரியாதா உங்கள் அசட்டுத்தனம். பணம் நீங்கள் ஸம்பாதித்திருந்தாலல்லவோ அதை பாதுகாக்க வேண்டிய வருத்தம் உங்களுக்குத் தெரியும்! எவனோ ஒருவன் வெட்கங் கெட்டுப்போய் உங்களிடம் கொடுத்து விட்டான். அதை கூத்தாடிகளுக்கும் குரங்காட்டிகளுக்கும் கொடுத்து நீங்கள் அழிக்கிறீர்கள். பாவி நான் கஷ்டப்படு கிறேன். அந்த தொம்பக் கூத்தாடிக்குக் கொடுத்த பணத்தை என்னிடம் கொடுத்தால் நான் அவனைவிட அழகாய் கூத்தாடுவேனே! உங்கள் யோக்யதைக்கு கூத்தும் வேண்டுமா? கூத்துப்பார்க்கவில்லை என்று என்னை லாயடிக்கவேண்டாம். உமக்கு ஒரு குஷால்தாஸ் வேண் டியவனிருந்தால் எனக்கும் என் அத்தானொருவன் வேண்டிய வனிருக்கிறான். அவன் நீங்கள் செய்த சங்கதிகளை எல்லாம் உமக்கு முன்னதாகவே இங்குவந்து சொல்லிவிட்டான். (இதைக் கேட்டதும் ராமபிரஸாத் முகம் வாடிவிட்டது. தன் மனைவி அன்று பெரிய பிரசங்கம் செய்யப்போகிறாள். தான் வாயைத் திறவாமல் கேட்க வேண்டுமே யல்லாது வேறுவழியில்லை என்று ஏங்கி நின்றான்.) அது என்ன கூத்தோ! எப்படித்தான் ஒரு ரூபாயை கரியாக்கி அதைப் பார்க்க

Koviloor Acadamy

உங்களுக்கு மனம் வந்ததோ!! குழந்தைகள் கூத்துப் பார்க்கும். எருமை மாதிரிவயது சென்றவர்கள் 5-6 குழந்தைகளைப் பெற்றெடுத்த பிறகு கூத்துப்பார்க்கும் புதுமை நான் கேட்டதே யில்லை! தைப்பூசம் பறையர்களுக்கு விசேஷம். பறையர்களுடன் ஒரு பறையனாய் நீங்கள் மாறிவிடுவீர்கள் என்று நான் நம்பவேயில்லை. அப்புறம் நீர் நேற்று செய்ததை எல்லாம் நான் சொல்லட்டுமா?

கூத்து பார்த்து விட்டு ராட்டனம் சுற்றினீர்கள். கழுதையின் மேல் உட்கார்ந்து சுற்றினீர்களா? குதிரையின் மேல் உட்கார்ந்து சுற்றினீர்களா? இன்னுமிரண்டு வயது போகவேண்டும், இராட்டன மேறிச் சுற்ற!! உம்முடன் வேறு உம்மைப்போன்ற எவனுவது ராட்டனத்தில் உட்கார்ந்தானு? குஷால்தாஸ் வரமாட்டேன் என்ருன். ராட்டனமாவது நாம் ஏறவாவது போடா பைத்தியக்காரா, யாராவது நமது ஊரார்கள் கண்டால் கேலி செய்வார்கள், என்ருன். அவனையும் பிடித்திழுத்து வைத்து சுற்றச் சொல்லி அவன் கூலியையும் நீங்களே கொடுத்தீர்கள். ஏனெனில் பணம் நமக்கு செலவிட வகை புலப்படாமல் இறைந்து கிடக்கிறது. அப்படிச் செய்ய உமக்கு புத்தி தோன்றுகிறது. தலை சுற்றி கீழே விழவில்லையா? என்ன தைரியமாய் ராட்டனமேறினீர்கள்.

அந்த வேடிக்கையானதும் ஒரு பட்சணக்கடையில் புகுந்து மிட்டாய் வாங்கினீர்கள். நீங்களும் உமது சிநேகிதனும் வயிறு வெடிக்கத் தின்றீர்கள். என் குழந்தைகளுக்கு ஒரு கடுகவ்வளவு கொண்டுவந்தீர்களா? உங்கள் வயிற்றில் புழுப்புழுக்காதா? இவ்வளவு வஞ்சனையா?

போதும் போதும்!! நீர் செய்த அக்கிரமங்களை ஒவ்வொன்ருக எடுத்துச்சொல்ல ஆயிரம் நாக்குகளுள்ள ஆதிசேஷன்தான் வரவேண்டும்; எங்கேடோ கெட்டு எங்கங்கோ திரிந்து எல்லாப் பணத்தையும் கரியாக்கி வெறும்

Koviloor Acadamy

காலும்வெறுங்கையும் வாடினமுகமுமாக வந்து சேர்ந்தீர்கள்! ரூபா பத்து பாழாயிற்று. நீங்கள் பயறுவாங்கப் புறப்பட்டு பல் இளித்துக்கொண்டு வந்த புதுமையைக் கேட்டால் ஆண்களும் பெண்களும் சிரிசிரி என்று சிரிக்கமாட்டார்களா. இந்த வயதில் உமக்கு வேடிக்கையும் விநோதமும் பார்க்கப் பிடித்ததே. உமது ஜன்மம் குட்டிச்சுவர் ஜன்மமாயிற்றே! வயது புகுந்ததால் உமக்குண்டான லாபம் என்ன! உம்மை புருஷனாகப் படைத்து நான் படும் அவஸ்தை என்ன? நன்றாகச் சற்று யோசித்துப் பாரும். தைப்பூசம் ஒன்றும் வேண்டுமா! நன்றாக இருக்கின்றது!!

என்று கர்ஜித்துக்கொண்டே அம்மணிபாய் அன்று நிறுத்தினாள். அவள் கணவனும் இரண்டு மூன்று சங்கதிகளை எடுத்துக்காட்டி மற்றவைகளை விவரமாய்ச் சொல்லாமல் அற்றுடன் விட்டாளே என்று கொஞ்சத்தில் கொஞ்சம் சந்தோஷமடைந்தான்.

பன்னிரண்டாவது

மந்திரோபதேசம்

அம்மணிபாய் நார்மடி நனைத்து உலர்த்தத் தவறினது

என்ன! உங்களைத்தான் கூப்பிடுகிறேன் இப்பொழுது தானே படுக்கையில் படுத்தீர்கள். அதற்குள் தூக்கம் எப்படி வரும்! இன்றுகாலமே இருந்த குணமில்லையே. படுக்கையில் படுத்தவுடன் எப்படி உடனே தூக்கம் வருமோ தெரியவில்லை. நல்லது பொல்லாதது எவ்வளவோ

Koviloor Acadamy

பேசவேண்டியிருக்கும். கொஞ்ச நாழிகையாவது பேச வேண்டாமா? இதற்கு முன்னால் நீங்கள் இப்படி ஒரு பொழுதும் தூங்கவேமாட்டீர்களே! நான் அயர்ந்து தூங்கி விட்டாலும் எவ்வளவோ அன்பாய் என்னை எழுப்பி அன்று ஸமாசாரம் முற்றிலும் ஒன்றுவிடாமல் என்னிடம் பாடம் ஒப்பிப்பதுபோல் ஒப்பித்துவிட்டுத் தூங்குவீர்களே. இப் பொழுது என்னைக்கண்டால் உங்களுக்கு வேம்பைக் காண்பது போலிருக்கின்றதா என்ன?

''சைய்! போ! இன்று எனக்கு தூக்கம் வெகு ஜாஸ்தியா யிருக்கிறது!''

தூக்கம் ஜாஸ்தியா? அப்படியா? உங்களைத் தூங்கவிடப் போகிறது யார்? நானும் இன்று காலை 10 நாழிகைமுதல் பொறுக்கமாட்டாமல் பொறுத்துக் கொண்டிருந்தேன். என்னதான் நமக்குத் தெரிந்தவர் அந்த அருணாசலப் பஞ்சாங்கி என்றிருந்தாலும் அவர் முன்பாக நாம் ஒன்றும் வாய் திறக்கக்கூடாதென்றிருந்து விட்டேன். நானின்று இராத்திரி இதைப்பற்றி உங்களுக்கு சரியான உத்தரம் சொல்லாவிட்டால் என் மனம் சகிக்குமா! நான் காரண மில்லாமல் உங்களை எழுப்பி வீண்பேச்சு பேசி என் வாயைக் காட்டுவதுண்டா? ஒரு தடவை உங்கள் நார்மடியை நனைத்து உணர்த்த நான் மறந்ததால் என்ன முழுகிப் போய்விட்டது? இல்லை, ஒவ்வொரு அமாவாசையிலும் எள்ளு என்பதற்குமுன் எண்ணெய் என்பதுபோல் நீங்கள் தர்ப்பணம் செய்ய உட்காருவதற்கு ஒரு ஜாமத்துக்கு முன்பாக நான் நார்மடி உலர்த்தி வைத்திருப்பேன். இன்று தையமாவாசை; மேலும் பிரதக்ஷண அமாவாசை; அதற்காக மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்துவிட்டு அரசமரத்தைச் சுற்றி வந்தேன். வேண்டுமே! பெண்ணாய்ப் பிறந்த ஜன்மத்தைப் பாழாக்கலாமா இதற்குள் அந்த பஞ்சாங்கிக்கு எத்தனை வீடுகள் ஓடவேண்டுமோ! முதலில் அசடன் எவன்! அவனுக்கு தர்ப்பணம் பண்ணிவைத்துவிடலாம் என்று உங்க

Koviloor Acadamy

னிடம் ஓடிவந்தான். யார்ராவது ஒருவனைக் கண்டுவிட்டால் அப்பொழுது உங்களுக்கு பெண்சாதியை அதிகாரம் பண்ணத் தோன்றிவிடுமே. ஏன் நார்மடியை நினைத்து உலர்த்தவில்லை என்று ஸர்வாதிகாரங்களையும் ஒரு நிமிஷத்தில் பண்ணி விட்டீர்கள். நானும் போனால் போகட்டும்: பேசுவதற்கு இதுவல்ல சமயம்; இப்பொழுதுதான் அரசவிருக்ஷத்தை பிரதக்ஷணம் பண்ணி வந்திருக்கிறார். அதற்குள் நாம் ஏதாவது சொன்னால் பிரதக்ஷண அமாவாசையில் நாம் சேகரித்த புண்ணியம் குறைவுபடும். அது கொஞ்சம் தேகத்தில் சரிக்கட்டும். பொழுது போகட்டும். பார்த்துக் கொள்ளுவோம் என்றிருந்தேன். உங்களுக்குக்கான் கோபம் என்பது வந்துவிட்டால் தலைகால் தெரியாதா?

"ஆம், எனக்குத்தான் கோபம் அதிகம்; உனக்கு கொஞ்சமாவது கோபம் என்பதே கிடையாது."

ஏன்? சந்தேகப்படுகிறீர்களா என்ன? உங்கள் தலையணையை எடுத்துக்கொண்டு அதைக் கேளுங்களேன்? இனி என்னைவிட ஸாது இந்த உலகத்தில் உண்டானால் போதும். உங்களுடன் இத்தனைநாள் வாழ்ந்த தோஷத்தால் உங்கள் கோபம் எனக்கு ஏதாவது கொஞ்சம் தொத்தியிருக்கவேண்டுமே யல்லாது எனக்கு எள்ளளவுகூட கோபமே கிடையாதே என் அம்மாள் கோபக்காரியா? இந்த ஊர் முழுமையும் கேட்டுப்பாருங்கள்! நீங்கள் என்ன சொன்னாலென்ன எனக்கென்ன! என் குணம் இந்த ராஜ்ஜியம் முழுவதுக்கு தெரியும். (அது நிஜம்) நல்லது உங்கள் கோபம் முழுவ நார்மடி விஷயத்தில்தானே இன்று இறங்கவேண்டும். நான் மட்டிலில் லாமல் வேறு ஒருவள் உமது மனைவியா யிருந்தால் இன்று அவள் உமது கோபச்சொல்லைக் கேட்டபிறகு வெட்கங் கெட்டு இந்த வீட்டில் நிற்பாளா? இன்று ஒருநாள் நீங்கலாக இதுவரையில் அமாவாஸை தவறாது நான் நார்மடி தோய்த்து உலர்த்திவைத்திருந்ததற்கு எனக்கு எந்த பலன்மாலை அடித்துப் போட்டுவிட்டீர்கள். ஒருநாள்

Koviloor Academy

தவறினதற்கு கண்டபடியெல்லாம் பேசுகிறதா? அதுவும் வேற்ருள் ஒருவனை முன்வைத்துக்கொண்டா? காலையில் எழுந்து குழந்தைகளுடன் பாடுகள் பட்டுவிட்டு ஆறு சென்று ஸ்நானம்செய்து அவஸர அவஸரமாய் அரச மரம் சுற்றி கால்கடுக்க வீடுவந்ததும் வாயால் என்னைப் பிடுங்குகின்றீர்களா? நல்லது, எனது தந்தை மட்டும் உமக்கு அந்த நார்மடி வாங்கிக்கொடுக்காமலிருந்தால் உமக்கு நார்மடிப் பேச்சு வாயால் பேச யோக்யதை யுண்டா?

"ஆனல் ஒரு பெண்சாதி என்றிருந்தால் ஏன் நார் மடியை உணர்த்தினவக்கவில்லை என்று ஒரு புருஷன் அவளைப் பார்த்து ஒருபொழுதும் கேட்கவே கூடாதா என்ன?"

ஏன் கூடாது; கேட்கத்தான் வேண்டும்; ஒரு தடவைக்கு நூறு தடவைகேட்க வேண்டியது அவசியந்தான். இவ்வாறு சொல்லி சொல்லிற்ருன் என்னை நீங்கள் அடக்கப் பார்க் கிறீர்கள்! தலை தெரியாமல் கோபித்துக்கொண்டு விடுகிறீர் கள்! காரணத்தைச் சொல்லி உங்களை சாந்தப்படுத்த வந்தால் நான் சொல்லப்புகுவதை காது கொடுத்துக் கேட்கிறதில்லை! இது உங்கள் துர்க்குணம் மட்டுமல்ல. எல்லாப் புருஷர்களும் அப்படியே. தாங்கள்தாம் எல்லா அதிகாரங்களையும் வகிக்கவேண்டுமென்று அவர்கள் மேன்மை கொண்டாடிக் கொள்ளுகிருர்கள்! பெண்ணுய்ப் பிறந்து விட்டால் அவள் தலை எழுத்து அவள் வாயைத் திறந்து ஒருபேச்சுக்கூட பேசவே கூடாது!

நல்லது, பெண்சாதிதான் புருஷன் நார்மடியைத் தோய்த்து உலர்த்தி வைக்கவேண்டும் என்று எந்த சாஸ் திரத்தில் சொல்லுகிறது?உங்களுக்கு கையும் காலுமில்லையா? நீங்கள் ஒரு நாளாவது தோய்த்துக்கொண்டால் கைகறைந்து போய்விடுமா? கை என்ன வெல்லக்கட்டியா? பெண்ணுய் பிறந்து ஈனத்தொழிலையே செய்து கொண்டிருக்க வேண்டு மென்ருல் இதைவிட கனியாணமே யில்லாமல் கன்னியாய்

Koviloor Acadamy

இருந்துவிடுவது உத்தமம் என்று எனக்குத் தோற்றுகிறது! இந்தப் பாழும் கலியாணம் என்று ஒன்று வைப்பானேன்? மனைவிகள், புருஷர்கள் வாயால் நிந்தைகள் கேட்பானேன்.

இன்னும் நன்ருக ஆலோசித்துப் பார்த்தால் நான் இன்று பிரதக்ஷிண அமாவாசையாயிற்றே என்று நேற்றே அந்த நார் மடியைத் துலக்கி உணர்த்தி மடியாக எடுத்து முளையில் மாட்டிவைத்திருந்தேன். நீங்கள் வேண்டுமென்றே வீண் குற்றஞ்சாட்ட என்னுடன் சண்டைசெய்ய வேண்டி எல்லாந் தெரிந்திருந்தும் தெரியாதவர்கள்போல் என்னை இன்று காலை சண்டைக்கு இழுத்தீர்கள். நானே குழந்தைகளுடன் பாடுபட்டுத் துரும்பாய் போயிருக்கிறேன். உங்களுடன் வாதாட என் தேகத்தில் சக்தி ஏது? என்னைவிட வேறொருவள் உமது விஷயத்தில் இவ்வளவு ஜாக்கிரதையாயிருக்கமாட்டாள். வேண்டாப் பெண்சாதிக்கு கைப்பட்டால் குற்றம் கால் பட்டால் குற்றம் என்று சொல்லும் உலகச் சொற்போல் நீங்கள் எடுத்ததற்கெல்லாம் என்னுடன் மல்யுத்தத்திற்கு நின்ருல் என்னுல் சகிக்கமுடியாது! இந்த மாதிரி நீங்கள் என்னை இம்சிப்பீர்களேயானுல் பிராணன் வெகுநாள் நிலைநிற்காது! சிரிக்கவேண்டாம்! நாளைக்குக் கொஞ்ச சிரிப்பை நீங்களே உங்களுக்குள் வைத்துக்கொள்ளுங்கள்! ஆம், நீங்கள் சிரிக்கவே சிரிப்பீர்கள், என்ன இது, இவள் நமது மனைவியாயிற்றே என்று ஏதாவது கொஞ்சமாவது அபிமானம் என்பது உமக்கு இருந்தால் நீங்கள் சிரிப்பீர்களா? பழைய தேகத்தில் பாதிதேகம் இப்பொழுது எனக்கு இருக்கிறதா? நீங்களே உங்கள் கண்களால் பாருங்கள்! குழந்தைகளுடனும் உங்கள் கோபத்துடனும் பட்டுப்பட்டு எனக்குப் போதும் போதும் என்று ஆய்விட்டது. அமாவாஸை ராத்திரியில் ஒன்றும் அதிகமாய்ச் சொல்லக்கூடாது. மறைத்துச்சொல்ல நான் வெகு நாளிருக்கப் போகிறதில்லை. நான் கண்மூடின பிறகு உமக்கு வரப்போகிருளே இளையாள் அவள் நார்மடியை உமக்கு

Koviloor Acadamy

வேளை தவறாமல் தோய்த்துக் கொடுப்பாள்! என் நன்மை இப்பொழுது உமக்கு விளங்காது. அப்பொழுது நன்றாக விளங்கும்! அப்போது அம்மணிபாயைப் பற்றி நன்றாய் நினைத்துக்கொள்ளுவீர்கள். ஆனால் அப்பொழுது உமக்கு உடுத்துக்கொள்ள நார்மடியிருக்குமோ சந்தேகம்! கௌபீன மாவது இருந்தால் அதுவே உமது பாக்கியம் என்று நீர் எண்ணிக கொள்ளலாம்.

''அடியே! என்ன கடோரமடி உன் மனம்.''

நீங்கள் தான் அப்படிச் சொல்லுகிறீர்கள்! வேறு ஒருவராவது இதுவரையில் அப்படி என்னை ஒருபொழுதும் சொன்னதே யில்லை.

''உன் குணத்தை நானறிந்தாற்போல் அவர்கள் அறிய வில்லையே''

அது நிஜம்! அப்படி அவர்கள் அறிந்துகொள்ள அகத்தியமே யில்லையே. உங்கள்கோப குணத்தை நீங்களே இதில் பார்த்துக்கொள்ளுங்கள். உமக்குள்ள கோபத்தை எனக்கும் ஈசுவரன் கொடுக்காமல் இவ்வளவு சாதுவாய் என்னைப் படைத்தானே நாம் இவ்வளவாவது மரியாதையாக வாழ் கின்றோமோ! இல்லாவிடில் எலியும் பூனையும்போல் நாம் வாழ வேண்டும். உம்மைப்போலவே கோபகுணமுள்ள ஒரு பெண் உமக்குப் பெண்சாதியாய் வந்திருக்கவேண்டும். அப்பொழுது தெரியும் அந்த வித்தியாசம் உமக்கு! நீர் என்னை அடக்கி வைத்துவிட்டீர்! நான் ஒரு பைத்தியக்காரி! வாயைத் திறந் தால் மூடுகின்றாயா என்ன என்று சொல்லி என்னை ஊமை யாகப் பண்ணிவிட்டீர். இப்படியும் நமது ஜன்மம் ஊமை ஜன்மமாய் முடியுமா என்று நினைக்க நினைக்க எனக்கே வெட்கமாயிருக்கிறது.

இன்று காலையில் கூச்சலிட்டீர்களே! அம்மாதிரி கூச்ச விட்டால் உங்கள்பிள்ளைகளும் உங்களைப்போல் துர்க்குணிகள்

Koviloor Acadamy

ஆவர்கள். தந்தையின் நல்ல வழக்கம் அவர்களுக்கும் படியும்! காலைமுதல் மாலைவரையில் நார்மடி பேச்சுத்தானா?

"போதுமே! பேச்சை இத்துடன் நிறுத்தேன். நான் நார்மடியைப்பற்றி இவ்வளவு தூரம் சொன்னேனே? இல்லையோ! நீ இந்த விஷயமாய் பேச ஆரம்பித்து ஒரு ஜாமமாயிற்றே; நிறுத்தேன்."

நான் நிறுத்தமாட்டேன்! நீங்கள் என்ன சொன்னாலும் சரி! ஒரு பெண்சாதி உம்மிடம் அகப்பட்டுக்கொண்டாள் என்று இம்மாதிரி அவள் பிராணனை வாங்கிவிடலாமா? ஒரு நார்மடிக்காக என் தேகம் பாதி உலர்ந்து வாடிப் போகலாமா? இந்த நார்மடிக் குற்றத்திற்காக நான் என் உயிரை இழக்கிறதா! நான் வாயை மூடவேமாட்டேன். சைய்! சைய்!! எல்லாப் புருஷர்களும் இப்படித்தானா ஸ்திரீ ஹத்திதோஷம் சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள்.

இனிமேல் ஜாக்கிரதையாக விருக்க எனக்கு இன்று முதல் புத்திவந்தது! இனி என் பிராணன் உள்ளவரையில் நானந்த நார்மடியை மட்டும் என் கையால் தொட்டால் நான் சங்கரபிரஸாதுடைய மகளல்ல! இத்தனைநாள் நான் செய்து சம்பாதித்த புண்ணியம் போதும்! இனி யாரைக் கொண்டாவது அமாவாஸையில் நார்மடியைத் தோய்த்து உலர்த்தச் சொல்லுங்கள். இத்தனை பிடுங்கலுடன் எத்தனை நாள் நானிருக்கப்போகிறேனோ தெரியவில்லை. கொஞ்ச நாளைக்குள் என் காலம் ஆய்விடும். என் உயிர் போன தோஷம் உமது தலையில் விடியும். உம்மைப்போல் நான் ஒரு புருஷனாக விருந்தால் நீர் என்னை கஷ்டப்படுத்துவது போல நான் உம்மை கஷ்டப்படுத்தி யிருக்கமாட்டேன். இந்த நார்மடி விஷயமாய் வாயைத் திறந்தே யிருக்க மாட்டேன். உமது நெஞ்சம் கல் நெஞ்சம் என்பதற்கு ஐயமேயில்லை!

Koviloor Academy -

இவள் என்னவேண்டுமோ சொல்லிக்கொள்ளட்டும் என்று ராமபிரஸாத் இந்த உபதேசம் முடியுமுன் நித்திரை போனான்.

பதிமூன்றாவது

மந்திரோபதேசம்

அம்மணிபாய் தனது தாயார் சேலத்திலேயே தன்னுடனிருக்கவேண்டும் என்று தனது கணவனை வேண்டியது

என்ன! அதற்குள் தூக்கம் வந்துவிட்டதா என்ன? இன்னும் ஒரு ஜாமப்பொழுதுகூட ஆகவில்லையே! (ராம பிரஸாத் கொஞ்சம் இரும்புகின்றார்) சரி, நான் நினைத்த படியே யிருக்கிறது. நேற்றைக்கின்று கபம் பாதி சௌக்யமாய் விட்டதென்று தோன்றுகிறது. ஜலதோஷம் முறிந்துவிட்டது. நாளைக் காலமே கொஞ்சம் மஞ்சளையும் மிளகையும் தட்டி ஓமத்தில் கலந்து அறைத்துத் தேய்த்துக் கொண்டு ஒரே சூடாக வென்னீர் வைத்து ஸ்நானம் செய்து விட்டால் இந்தக் கபம் முற்றிலும் வாங்கிவிடும். முந்தா நாள் உங்கள் தேகம் இருந்ததை பார்க்கப்படவில்லையே. என்ன மாயமாய் வந்துவிட்டது! எனக்கு மாங்கலிய பலம் சரியாயிருக்கவேண்டுமே என்று வயிறு குழம்பி அம்மாளுக்கு செவ்வாப்பேட்டைக்குச் சொல்லி அனுப்பினேன். அவள் வந்து ஒருபிடி மிளகு, ஒருபிடி கண்டந்திப்பிலி இரண்டையும் அம்மியில் வைத்து விழுதுபோலரைத்து ஒரு பஞ்சபாத்திரக்

Koviloor Acadamy

கஷாயம் சித்தப்படுத்திக்கொடுத்தாள். அதை உங்களைக் குடிக்கச்சொல்லுகிற பாடு தெய்வமறிந்தது! ஏதோ நீங்கள் முன்போல் உங்கள் தேகத்தைப் பாதுகாத்துக்கொள்ளுகிறதில்லை. வெகு அலக்ஷியமா யிருக்கின்றீர்கள். இப்படியிருக்கவேகூடாது நல்லது, இந்த சமயத்துக்கு அம்மாள் வந்தாளே! எவ்வளவு நமக்கு சகாயமாயிருக்கிறது என்று நீங்கள் எண்ணுகிறீர்கள். நீங்களோ மலைபோல் கிழே படுத்துவிட்டீர்கள். இரண்டுங்கெட்டான் குழந்தைகள் கண்ணுங் கண்ணீருமாய் நிற்கின்றன. நான் உங்களைப் பார்ப்பேனா? குழந்தைகளைப் பார்ப்பேனா? வீட்டுக் காரியத்தைப் பார்ப்பேனா? ஒண்டிக்காரி நான் என்ன செய்வேன்? அவள் வந்தாளோ பிழைத்தேனோ! நீங்கள் என்ன எண்ணுகின்றீர்கள்.

"எனக்கென்ன தெரியும், உனக்கு ஸகாயமாயிருந்தால் நிரம்ப ஸந்தோஷம்."

உனக்கு ஸகாயமாயிருந்தால் என்று நாவில் நரம்பில்லாமல் சொல்லுகின்றீர்களே, இதைக் கேட்கத்தானே எனக்கு சைய் என்று வருகின்றது. அவளால் உங்களுக்கு ஒருவித சகாயமுமில்லை போலிருக்கிறது! நீங்களே யோசித்துப் பாருங்கள். குழந்தைகள் உங்கள் குழந்தைகளில்லைபோல பேசுகிறீர்களே! அவளிந்த வீட்டில் அடி வைத்தது முதல் பாட்டி! பாட்டி! என்று எல்லாக் குஞ்சுகளும் அவளைச் சுற்றிக்கொண்டு விட்டன. விலங்கு தெறித்தவள்போல நான் சுகமாய் வளைய வருகின்றேன். இது உங்களுக்கு சகாயமில்லையா? நீங்களிப்பொழுது பிழைத்தெழுந்தது யாரால்? யார் மருந்து? அந்த மகாலக்ஷுமி கையாற் தொட்டுக் கொடுத்தால் எல்லாம் மருந்தாகுமே. அவள் உங்கள் மேல் எப்பொழுது பார்த்தாலும் தன்னுயிரை விட்டுக் கொண்டு தவித்து நிற்கின்றாள். உங்களுக்கு அவள் சகாயம் இல்லை என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம்?

Kovilos Acadamy

"நீ சகாயம் என்று சொல்லச் சொன்னால் நான் சொல்கிறேன். சரித்தானே!"

அம்மாடி! இவ்வளவு கல் நெஞ்சம் நான் எங்குங் கண்டதில்லை! நேற்றுத் தேங்காய்ப் பால் வெகு ருசியாயிருக்கின்றது என்று ஒரு கிண்ணத்துக்குப் பதிலாக மூன்று கிண்ணங்கள் குடித்தீர்களே! அது யார் பண்ணின பால் தெரியுமா? என் தாயார். ஐயோ! அவருக்கு ஜலதோஷம் வெகு ஜாஸ்தியாயிருக்கிறது, தேங்காய்ப்பால் காய்ச்சிக் கொடுத்தால் ஒரே தடவையில் நீர் முறிந்து விடும், என்று என்னிடம் சொல்லி அந்தமகராஜி காய்ச்சிக்கொடுத்தாளோ, நீங்கள் பிழைத்தீர்களோ! இல்லாவிட்டால் உங்கள் கதி தெரியும்! ஏதாவது நல்ல சமாசாரம் நான் சொல்ல எத்தனிக்கும்பொழுது தான் உங்களுக்கு தூக்கம் வரும்! கொஞ்ச நாழிகைக்கு தூங்காதேயுங்கள். நான் பேசுவதே வெகு கொஞ்சம்! என் வழக்கமே அதிகமாகப் பேசத் தெரியாது! அரை நாழிகைக்கு முன் நான் இங்கு வரும் பொழுது என் தாயார் என்னைக் கூப்பிட்டு "அடியே! ஜாக்கிரதை. ஜலதோஷம் இன்று முக்காலும் வாங்கிவிட்டது, இராக்காலத்தில் தூங்கும்பொழுது அவர்கள்மேல் போர்த்துக்கொண்டிருக்கும் போர்வை கலைந்துவிட்டால் குளிர்காற்று மேலேபட்டு மறுபடி சளி பிடிக்கும்; நீ இன்றிரவு விழித்திருந்து போர்வை கலைந்து போகாமல் பார்த்திரு" என்று சொல்லி என்னை எச்சரிக்கை செய்து அனுப்பினாள். அவள் உங்கள் மேல் பித்துக் கொண்டவள்போல் ஸதா கவலையாக விருக்கின்றாள். ஆனால் இது நல்லவர்களுக்குக் காலமில்லை! அவளைப்பற்றி நீங்கள் நல்லவள் என்று சொல்லமாட்டேன் என்கின்றீர்கள், அவள் ஏதோ சோற்றுக்கில்லாமல் இவ்விடம் வரவில்லை! என்னை ஒரு அருமைப் பெண்ணாய் பெற்றெடுத்த ஆசையால் இங்கு வந்தாள்!

"ஆம், அவள் வெகு நல்லவள், யார் இல்லை என்றார்கள்?"

Koviloor Academy

அப்படி வழியோடு பேசுங்கள். அதைக் கேட்கவும் எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. இன்னும் நான் உங்களுக்குச் சொல்லவில்லை. உடம்பு தேறட்டும், அப்புறம் சொல்லுவோம் என்றிருந்தேன். அவள் வெறுங்கையாய் வரவில்லை. 5-படி அவரைக்காய் வத்தல்; ஒட்டிக்கொள்ளுகிற பிஞ்சாய்ப் பறித்த வெண்டையை வத்தலாய்ப் பண்ணி ஒரு குறுணி வத்தல்; அவள் தோட்டத்தில் காய்த்த கொடும் புளிப்பு மாங்காய்கள் 500, பறித்து கொட்டையிட்ட மாங்கொட்டைகள் 500; மனைத்தக்காளி வத்தல் பதக்கு; நெல்லிமுள்ளி ஒரு மரக்கால்; இலந்தம்பழ வடம் ஒரு ஸரம்; இவ்வளவும் தூக்கமாட்டாமல் தலையில் தூக்கிக்கொண்டு வந்தாள். காலையில் நீங்கள் பத்தியம் சாப்பிடும்பொழுது இலையில் வைத்த இலந்தம்பழப் பச்சடி அவள் கொணர்ந்த வடத்தால் செய்ததுதான். இந்த வயதில் அவள் ஆசை நம்மிடம் வெகு ஜாஸ்தியாயிருக்கின்றது. காலை சமையல் அவள் சமைத்த சமையல்தான். என்ன சமையல் சமைக்கின்றாள்! இத்தனை வயதாயும் உப்புப் புளி போடுவதில் ஒரு மயிரிழை பிசகவேண்டுமே! கிடையவே கிடையாது! பதினாறு வயது குமாரி செய்யும் பாகம் செய்கின்றாள்! நளபாகமா! நானுந்தான் எத்தனையோ தடவை என் தாயார் செய்யும் ரஸம் மாதிரி ஒரு வேளையாவது ரஸம் வைக்கவேண்டும், என்று பார்க்கின்றேன். முடியவில்லையே! அவள் கைச் சமையலுக்கே அலாதி வாசனை ஒன்று எப்பொழுதுமிருக்கின்றது. அவியல் அவியல் என்று குழந்தைகள் எல்லாம் அடித்துக்கொள்ளுகின்றன. பாட்டி வரட்டும், பாட்டி வரட்டும், என்று நான சொல்லிக்கொண்டிருந்தேன். நாளை அவளை அவியல் செய்யச் சொல்லுகிறேன் பாருங்கள். தேவாமிருதம் போலிருக்கும். இதொன்றுதானா! அவளுக்கு எத்தனையோ விதம் சமையல் தெரியும். ஒவ்வொன்றும் நளபாகம் என்றே சொல்லலாம். அவளுக்குத் தெரிந்த சமையல் விதம் எனக்குத் தெரியாது. அப்படித் தெரியாது என்று சொல்லுவதில் எனக்கு அவமானமே யில்லை!

Kovilor Acadamy

ராமபிரஸாத் மறுபடியும் இரும்ப அதைக் கேட்டவுடன் அவன் மனைவி,

இழவு இருமல்! எல்லாம் இன்னொரு இரவு மட்டுந் தானே எதாந்தரை பண்ணும். பார்த்துக்கொள்ளுவோம். இல்லை! நமக்கும் தான் ஒரு மனுஷ்யாள் கூடயிருந்தால் எவ்வளவோ சகாயமாயிருக்கிறதே! முன்போல என் தேகத்தில் சக்தியுமில்லையே! குழந்தைகள் அவள்மேல் பிராணனுய் இருக்கின்றனவே! ஆகையால் அம்மாளை செவ்வாப் பேட்டைக்கனுப்பாமல் இவ்விடம் நம்மிடத்திலேயே நிறுத்தி வைத்துக்கொள்ளலாமா யென்று நினைக்கின்றேன். உடம்பு பலகீனமாயிருக்கிறது, இராத்திரி ஒரு வேளையாவது கோதுமைச் சாதம் வடித்துப் போட்டால் நலமாய் இருக்கும் என்றீர்களே. அந்தக் கோதுமைச் சாதம் வடிப்பதில் அவள் தேறின கை. உங்களுக்கு எவ்வளவோ அனுகூலம். என்ன செய்யலாம் சொல்லுங்கள்?

''எனக்கு கோதுமைச் சோறு ஒன்றுதான் இப்பொழுது குறைவு! உனக்கு வேண்டும் என்ருல் உன் தாயை இவ்விடமே வைத்துக்கொள்ளேன். அதற்கு இவ்வளவு காரணங்கள் என்ன! அவளிவ்விடமிருந்தால் நான் வேண்டாம் என்பேனு? எப்படியும் ஒரு பெரியவள் வீட்டிலிருந்தால் சகாயம் சகாயந்தான்''

அப்படிச் சொல்லுவீர்கள் என்பது எனக்கு முன்னமேயே தெரியும்! ஏதோ அவளுக்கு ஒரு பிடிச்சோறு போட்டு நமக்குக் குறைந்து போகாது. அந்த நஷ்டத்தை அவள் செட்டாய் செலவிடுவதில் எடுத்துவிடுவாள். அவள் செட்டு இவ்வுலகத்திலேயே ஒருவருக்கும் கிடையாது. கொழப்புக்குப் புளி ஒரு கொட்டைப்பாக்குத் தான் எடுப்பாள். கொல்லையில் மரத்திலிருந்து உதிரும் மட்டையைக் கொண்டே அடுப்பு எரித்துவிடுவாள். அடுப்பில் ஒரு விறகுக்குமேல் வைத்து எரித்து அவள் சமையல் செய்ததை

நான் பார்த்ததே யில்லை. தேங்காய் உடைத்தால் மற்றவர்கள் சறட்டையை எறிந்துவிடுவதுபோல் எறிந்துவிடாமல் அதை அடுப்பில் போட்டு எரித்து ஒரு சக்கரைப்பொங்கல் பொங்கிவிடுவாள். அவள் சாமர்த்தியம் வெகு சாமர்த்தியம். தயிர்க்காரி மோர்க்காரி என்னை ஏய்ப்பதுபோல் என் தாயாரை ஏய்க்கமுடியாது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு நாழிகை சண்டை போடாமல் வாங்கவேமாட்டாள். அவள் மட்டும் இவ்விடமே யிருந்தால் நமது குடித்தனச் செலவு பாதி குறைந்துபோகும். நல்லது இன்று மத்தியானம் ரவை உப்புமா அவள் கிண்டிக் கொடுத்தாளே, அது எப்படி யிருந்தது?

"எப்படி யிருந்ததோ? அது தான் எனக்கு நினைவாக்கும்!"

எப்படியிருந்ததோவா. இந்தப் பெர்ய் உங்களுக்கு ஒருநாளும் விடுகின்றதில்லையே. நான் உப்புமா கிண்டும் போதெல்லாம், "என்னடி களியாய் அடித்துவிட்டாய்! உன் தாயார் ஒன்றுடன் ஒன்றுபடாமல் உதிரியாய் உப்புமா கிண்டுவதுபோல் நீ ஏன் கிண்டக்கூடாது?" என்று பல தடவைகளில் நீங்கள் என்னைக் கோபித்துக் கொண்டதில்லையா? இப்பொழுது ஒன்றுந் தெரியாதவர்கள் போல் எப்படியிருந்ததோ, என்கிறீர்களே. புருஷர்களே எப்பொழுதும் பொய் சொல்லப்பட்டவர்கள். அவர்களை நம்பவேகூடாது. அவள்மட்டும் நம்மிடமிருந்தால் உங்களுக்கு தினந்தோறும் கோதுமை சாதமும் உப்புமாவும் செய்துகொடுப்பாள் என்பதற்கு சந்தேகமும் உண்டோ? அவள் கை தேர்ந்த கையாயிற்றே!

"உன் கையும் தேர்ந்த கைதான்."

பார்த்தீர்களா! பார்த்தீர்களா! என்னை இப்படி அவமானம் பண்ணலாமா! எனக்குத்தான் என் தாயார் செய்கிறபடி செய்யத்தெரியாது என்று நீங்களே சொல்லி

யிருக்கின்றீர்களே. அது மட்டுமல்ல, ஊறுகாய், உப்பி லிட்டது, இவைகள் அவள் போடுவதுபோல ஒருவரும் போடமாட்டார்கள். இத்தனைக்கும் மற்ற பெண்டுகள் போடும் உப்பு உறப்பில் பாதிதான் என் தாயார் போடு வாள். அவள் செய்யும் சப்பைத் தோசையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

''சப்பைத்தோசையாவது என்ன? நான் பார்த்த தில்லை!''

ஓ! அவைகள் ருசியை நான் சொல்லவேமுடியாது! தேங்காயை அரிசியுடன் சேர்த்து ஆட்டுக்கல்லில் போட்டு அறைத்து ஒருவிதமாய் அவள் தோசை சுடுகின்றாள். நாளையதினமே பண்ணிக்கொடுக்கச் சொல்லுகிறேன். அந்தத் தோசைக்குத்தான் சப்பைத் தோசை என்று பெயர். அதை மட்டும் நாளை நீங்கள் புசித்துப்பாருங்கள். அதன் மேல் அம்மாள் இவ்விடம்விட்டு செவ்வாப்பேட்டை போக வேண்டாம் என்று நீங்களே சொல்லுவீர்கள்.

கருவடாம், அப்பளாம், தலுவடாம் இவைகள் போடு வதிலே அவளுக்குச் சமானமாய் ஒரு பெண் பிள்ளையையும் சொல்லமுடியாது. நீங்கள் போன சங்கராந்தியில் ஒரு அரிசி அப்பளம் சாப்பிட்டு இது வெகு கறகற வென்றிருக் கின்றது, யார் இட்டுக்கொடுத்தார்கள், என்றீர்களே. அது அம்மா இட்டுக்கொடுத்ததுதான்.

அவள் இவ்விடமிருந்தால் எவ்வளவோ உங்களுக்குச் சகாயம் உண்டு. இன்னும் ஒரு காரணம் சொல்லுகிறேன். யோசித்துப்பாருங்கள். எத்தனையோ நாள் நீங்கள் இரவில் வெளியிற்சென்று நாழிகை கழித்து வீட்டுக்குத் திரும்பு கின்றீர்கள். அதுவரையில் யார் விழித்திருக்கிறது. என் தாயார் மட்டிலிங்கிருந்தால் அவளுக்குத் தூக்கமே யிருக்காது. கிழங்களுக்கே தூக்கம் மட்டு! அவள் விழித்

Koviloor Academy

திருந்து உங்களுக்குக் கதவு திறப்பது நமக்கெல்லாம் எவ்வளவு சகாயம்.

இதை எடுத்துக்காட்டியதும் ராமபிரஸாத் ஒரு பெரு மூச்சு விட்டான். இதற்கு உத்தரம் சொல்ல அவனால் முடிய வில்லை. அம்மணிபாய் தன் தாயை தன்னிடம் நிறுத்திக் கொள்ள தனது கணவன் விடைகொடுத்ததாகக் கருதி ஆனந்தத்தால் நித்திரை செய்யலானாள்.

இவ்வளவுடன் இன்றிரவு கழிந்ததே என்ற ஆனந்தத் தால் ராமபிரஸாதும் நித்திரை செய்தான்.

பதினான்காவது
மந்திரோபதேசம்

வீட்டைப்பூட்டி சாவியை எடுத்துப்போய் திரும்பி வருவதாக ராமபிரஸாத் சொல்லுதல்

நல்ல இழவு இது! பொழுது விடியும் வேளையில் வீடு திரும்பிவரும் புருஷர்களை நானிதுவரையில் கண்டது மில்லை. கேட்டதுமில்லை. கிழக்கு வெளுக்கலாயிற்றே! இன்னுங்கொஞ்சநாழிகை பஜனைக்கூடத்திலிருந்துவிட்டு ஒரே அடியாய் பொழுது விடிந்த பிறகு திரும்பி வரலாமே! நல்ல பஜனைக்கூடம். புருஷன் திரும்பி வருவான் என்று ஒரு பெண்ஜாதி எத்தனை நாழிகை விளக்கு வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பாள்!

"எனக்காக நீ கண் விழித்துக்கொண்டு உட்கார்ந் திருப்பானேன்? நான் கதவிடிக்கும் பொழுது கண்விழித்துக் கொண்டு கதவு திறந்தால் போதும்!"

Koviloor Acadamy

ஏன் கண் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டும் என்று கேட்கின்றீர்களே. குதிரை கீழே தள்ளினதுமல்லாமல் குழியும்பறித்தது என்பார்கள். அதுபோலிருக்கின்றதுஉங்கள் கேள்வி. ஐயோ இவளை இத்தனை நாழிகை நமக்காக கண் விழித்திருக்கச் செய்தோமே என்று மனமிரங்குவதற்குப் பதிலாக நாவில் நரம்பில்லாமலிந்த கேள்வியையும் தைரிய மாய் கேட்டீர்களே! என் தலையெழுத்து நான் கண்விழிக் கின்றேன்! என் வயிற்றில் பிறந்த தலையெழுத்து இந்த சிறு குழந்தையும் என்னுடன் விழிக்கின்றது.

"ராதா பாயும் உன்னுடன் உட்கார்ந்திருப்பானேன்? அவளை ஏன் பிராணனை வாங்குகின்றாய். குழந்தையல்லவா அவள்!"

அவள் உங்களுக்கும் குழந்தைதான்; எனக்கும் குழந்தை தான். நீங்கள் அவளிடத்தில் வைத்திருக்கும் பிரீதியை விட எனக்கும் அவளிடம் பிரீதி உண்டு. எனக்கும் அவளை அதிகாரம் செய்ய பாத்தியம் உண்டு. நான் ஒரு பிசாசுபோல் தனிமையில் கண்விழித்துக்கொண்டு உட்கார்ந் திருப்பேனா! எத்தனை நாழிகை இந்தச் சுவர்களைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். எனக்குப் பேச ஒரு துணைவேண்டாமா! அதற்காக ராதாவை முன் தேச காலத்தில் தூங்கச்செய்து 10, 12 நாழிகைக்கெல்லாம் எழுப்பி எனக்குப் பேச்சுத்துணையாக வைத்துக்கொள்ளு கின்றேன்.

"அடியே, அநியாயமாய் இரண்டு பெயர்கள் கண் விழித்துக் கொண்டிருப்பதில் என்ன லாபம். ஏனிப்படி என்னை வீணில் வம்புக்கு இழுக்கின்றாய்?"

என்ன லாபமா? என்னிஷ்டம்! நீங்கள் எப்படி அதைத் தடுக்கலாம்? உங்களை நான் வம்புக்கு இழுப்ப தாகச் சொல்லுகின்றீர்களே! வம்புக்கிழுப்பது நானா நீங்களா? உங்களுக்கு கொஞ்சமாவது கருணையே யில்லை.

Koviloor Acadamy

இரவு முழுமையும் வீட்டுக்கு வருகின்றதேயில்லை. நீங்கள் வரும் வரையில் நான் கண்மூடுவதுமில்லை. ராதாபாய் மட்டுமல்ல, இனி எல்லாக் குழந்தைகளையும் எழுப்பி நான் என்னுடன் உட்காரவைத்துக் கொண்டு கண்விழித்திருப்பேன். நீங்கள் யார் என்னைக் கேட்க? உமக்கோ இந்த வீட்டு சிந்தையே யில்லை. உமது குழந்தைகள் எப்படிப் போனாலென்ன? உமது மனைவி இருந்தாலென்ன? மாண்டாலென்ன? உமக்கு உமது பஜனைக்கூடமும். உமது பாகவத நண்பர்களும் போதும் அவர்களுடன் கூடி அட்டகாசம் பண்ணிக்கொண்டு பொடியை வாரி மூக்கில் திணித்துக் கொண்டு மொச்சு மொச்சு என்று வெற்றிலை உண்டு ஊர் வம்புகள் பேசிக்கொண்டிருந்தால்போதும் கண்ட வம்புகள் அளப்பதில் காலம் போகிறதென்பது உங்களுக்குத் தெரியாதல்லவா! உமக்கு ஒரு மனைவி ஒருவள் உண்டு என்ற நியாபகமாவது நீங்கள் பஜனைக்கூடத்திலிருக்கும்பொழுது உமக்கு வருமா? ஏதிது நமக்காக ஒருவள் வீடடில் உட்கார்ந்து கொண்டு கண்கொட்டாமல் நமது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளே என்பதை நீங்கள் ஒரு நிமிஷமாவது சிந்தித்ததுண்டா? நிசிவேளையாயும் இன்னும் வரக்காணோமே. இருட்டில் கல் தடுக்கி வழியில் விழுந்துவிட்டாரோ என்னவோ என்று என்னுடைய பஞ்சபூதங்களும் தவித்த தவிப்பு அந்தத் தாந்தோணிப் பெருமாளுக்குத் தெரியும்! ஐயய்! பெண்டுகள் ஜன்மமும் ஒரு ஜன்மமா! அவர்கள் பிறப்பும் பிறப்பா! பேய்க்கு வாழ்க்கைப்பட்டால் புளியம் பொந்தில் குடியிருக்கவேண்டும் என்பதும் பொய்யா! ஒரு பெண் எவனுக்கு வாழ்க்கைப்படுகின்றாளோ அவன் ஆடு என்று சொல்லுகிறவிதமெல்லாம் ஆட வேண்டும். உங்களைக் கணவனாக அடைந்து நான் படும் சுகம்போதும் போதும்! இன்னும் ஓராயிர ஜன்மத்துக்கு எனக்கு இந்தவிதமான கலியாணமே வேண்டாம்.

அந்த பஜனைக்கூடத்தில் என்ன வெல்லம் தடவி வைத்திருக்கின்றதோ அதுதான் எனக்குத் தெரியவில்லை!

Koviloor Acadamy

வேளா வேளையில் வயிறு நிரம்ப சாப்பிட்டுவிட்டு உடம்பு கெட்டுப்போகாமல் காலத்தில் வீட்டில் படுத்து சுகமாய் தூங்குவதைவிட்டு கண்ட தடியன்களுடன் சேர்ந்து கழுதை ஊளையிடுவதுவதுபோல் ஊளையிட்டுக்கொண்டு அப்படி யாவது தொண்டைத் தண்ணீர் வற்ற நித்திரையற்று ஏன் அங்கு உட்காரவேண்டுமோ தெரியவில்லை. இது உங்கள் தலையெழுத்துத்தானே? இதற்கு என்ன பதில் சொல்லு கின்றீர்கள்.

''அடியே! ஏன் இப்படி அநியாயமாய் கூவுகிறாய். நான் வாரத்துக்கு ஒரு தடவைதானே போகின்றேன், சனிக்கிழமை தானே காலட்சேபம்!''

நீங்கள் வாரத்தில் ஒருதடவை தான் போங்கள் அல்லது தினம் போங்கள். பகலிலும் அங்கேயே பொங்கிப் புசியுங்கள். அப்படியே சீக்கிரம் அவ்விடமே போய் விடுவதை சீக்கிரம் இதே கண்ணாலேயே நான் பார்க்கப் போகின்றேன். நீங்கள் எக்கேடும் கெட்டு எறுக்கு முளைத் துப்போய்விடுங்கள். என் அப்பன் மேல் ஆணைவைத்துச் சொல்லுகின்றேன். வேண்டுமென்றால் உங்கள் மேலும் ஆணையிட்டுச் சபிக்கின்றேன். நான் உங்களுக்காக இனி ஒரு பொழுதும் இரவில் கண் விழித்துக்கொண்டு உட்காரப் போவதில்லை!

என் தேகம் என்ன சுண்ணாம்புச் சாந்தால் கட்டப் பட்டிருக்கிறது என்று நினைத்துவிட்டீர்களா என்ன? உங் களுடன் பட்டுப்பட்டு இந்தப் பாழும் தேகம் குத்துயிராய்ப் போய்விட்டது! அது உங்கள் கண்ணுக்கு ஏன் தெரியுமா? உங்களுக்குத்தான் உங்களைச்சேர்ந்தவர்களுடைய சுகம் துக்கம் ஒன்றும் தெரியாதே. தெருவில் அத்தானும் அம்மாஞ்சியும் போனால் அவனைக் கண்டு பரிதாபப்படுவீர்கள். கையில் காசு இருந்தால் அவிழ்த்துக் கொடுப்பீர்கள். வீட்டிலிருக்கும் இந்த புழுக்கையைப்பற்றி நாம் விசாரிக்

Koviloor Acadamy

கிறதா என்று அலட்சியம் பண்ணிக்கொண்டு வருகிறீர்கள்! சற்று கண்ணைத்திறந்துபாரும்; முன் தேகத்தில் பாதி தேக மாவது இப்பொழுது எனக்கிருக்கின்றதா? உமது கண்ணு லேயே பார்த்துச் சொல்லும். கண்விழித்து விழித்து என் உயிர் குற்றுயிராய்விட்டது.

"உன்னை யார் விழிக்கச் சொன்னது."

மறுபடியும் மறுபடியும் என்னைப்பார்த்து இப்படி கேட்கிறீர்களே. உமது நாக்கு புழுக்காதா? ஆனால் அதை நான் பார்க்கப் போகிறதில்லை. அதற்குள் நான் கண்மூடி விடுவேன் என்பது நிச்சயம். போன பிறகு வரப்போகிற இளையாள் உமக்காக கண்விழித்திருப்பாளா மாட்டாளா என்பதை நீரே பார்த்துக்கொள்ளலாம்.

"அந்த விசாரம் உனக்கென்னத்திற்கு; அப்படியே நடந்துவிட்டால் இந்த இமிசை அன்றுடன் தொலையும்."

இமிசையா? யார் யாரை இமிசை பண்ணுகிறார்கள்? நான் உம்மை இமிசை செய்கிறேனா? நீர் என் பிராணனை எடுக்கிறீரா? நீரே யோசித்துப் பாரும். நீர் செய்யும் அக்கிரமங்களை யெல்லாம் நான் ஒரு பைத்தியக்காரியா யிருந்துகொண்டு பொறுத்துவந்தால் நீர் நாக்கில் நரம் பில்லாமல் சொல்லமாட்டீரா! ஆனால் எத்தனை நாள்தான் இம்மாதிரி சொல்லப்போகின்றீர்?

"போதுமடி! இன்னும் கொஞ்ச நாழிகையாவது கண் மூட்டலாம்."

அந்த உணக்கை யிருந்தால் அப்பொழுதே வந்திருக்க மாட்டீர்களா? அந்த பஜனை கோஷ்டியைச் சேரும் முன் நீங்கள் எவ்வளவோ நல்லவர்களாக விருந்தீர்களே! அதில் சேர்ந்து இப்படிக் கெட்டுப்போவீர்கள் என்று நான் எண்ணவேயில்லை. உமக்காக நான் என் உயிரை இழக்க வேண்டியிருக்கின்றதே. எல்லாப் புருஷர்களும் இப்படித்

Koviloor Acadamy

தானா? பஜனைக்கூடத்துக்கு வருகிறவனுக்கு ஒருவனுக்காவது வீட்டில் பெண்ஜாதி என்பது கிடையவே கிடையாதா? நன்றாய் பஜனைக்கூடம் போனீர்கள்! நன்றாய் அருணோதயத்துக்கு திரும்பிவந்தீர்கள்! என்ன அநியாயம்! இதை யார் கேட்கிறது! தெய்வந்தான் கேட்கவேண்டும்.

"அடியே! நான் இனிமேல் வெளியில் போகும்பொழுது வாயிற்கதவை பூட்டிக்கொண்டு சாவியை கையில் கொண்டு போய்விடுகிறேன். நீ சௌக்கியமாய்த் தூங்கு. என்னை இப்படி பிடுங்காதே!"

அப்படியா! அப்படியே பூட்டிக்கொண்டு போய்விடுவீர்களா? அவ்வளவுக்கு தைரியம் வந்ததா? வெகு நாளாய் இந்தப் பதிலுக்கு நான் எதிர்பார்த்திருந்தேன். இன்று என் மனம் குளிர்ந்தது. வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொள்ளட்டும். நாங்கள் எல்லோரும் அடியோடு வெந்து போகவேண்டும் என்று உங்கள் கருத்து! நீங்கள் வீட்டை பூட்டிக்கொண்டு போய்விட்டு நாங்கள் கதவைத் திறந்துகொண்டு ஓட வழியில்லாமல் மாண்டுபோகட்டும். இப்படி நீங்கள் சொல்லுவது உங்களுக்கு வெகு மரியாதை. குடியும் குடித்தனமுமாயிருப்பவன் ஒருவன் வீட்டை பூட்டிக்கொண்டு சாவியை சுண்டு விரலில் நுழைத்து ஒருவருமற்ற மொட்டைக் கைம்பெண் கோவிலுக்குப் போவதுபோல் நீர் பஜனைக்கூடத்துக்குப் போகிற அழகை அந்தத் தாந்தோணி சாமிதான் பார்க்கவேண்டும்! ஆண் பிள்ளை சிங்கம் தைரியமாய் காலாகாலத்தில் கதவையிடிக்க, கையும் வளையலுமாய் மனைவியாள் கதவைத் திறந்து கணவனை உபசரிப்பதற்குப் பதிலாக நடுராத்திரியில் திருடன் மாறு சாவி போடுவதுபோல் நீர் பூட்டைத் திறந்துகொண்டு இருட்டில் வீட்டில் நுழைவது வெகு கௌரவம். உமக்கு இந்த யுக்தியும் தோன்றிற்றே! உமது புத்திதான் என்ன புத்தியோ! எனக்குத் தொந்தரை கூடாதென்று இவ்வளவு கருணையாய் ஓர் உபாயம் தேடிப்பிடித்தீர்களே! உமது

Koviloor Acadamy

கருணை என்ன கருணையோ! இப்படிச் சொல்லுவதற்குப் பதிலாக நேராக எனக்கு இனி பெண்ஜாதி வேண்டாம், நான் தனிமையில் வாழப்போகின்றேன், என்று சொல்லி விடுகிறதுதானே? நான் நாளை என் குஞ்சு குழந்தைகளை அழைத்துக்கொண்டு எங்கேயாவது போய் விடுகின்றேன்.

"ஏனடி! குரங்குக்குத் தேள்கொட்டினாற்போல் கத்து கிறாய். நீ கத்தக் கத்த என் தலைவலிக்கிறது."

நியாயம்! வெகு நியாயம்! என் பேச்சா உங்களுக்குத் தலைவலி உண்டாக்குகிறது? பஜனைக்கூடத்தில் காது பொளிபக்கேட்ட மத்தளம், ஜாலர், இவைகள் தலைவலியை உண்டாக்கவில்லை. பிடிப்பிடியாய் மூக்கோட்டையில் திணித்துக்கொள்ளும் புகையிலைப்பொடி உமக்கு தலைவலிக்கு ஒரு மருந்து. நீர் ஒரு மகாராஜா! உமதிஷ்டப்படி வெளியிற் சென்று அருணோதயத்துக்கு வீட்டுக்குத் திரும்ப லாம். இப்படி வரலாமா என்று எவ்வளவோ பயத்துடன் கொண்ட பெண்ஜாதி ஒரு சிறு பேச்சுக்கேட்டால், அதில் உமக்குத் தலைவலி வந்துவிட்டது! அதற்குக் கதவைப் பூட்டிக்கொண்டு போகவேண்டும், என்று சொல்லி விட்டீர்கள்.

இப்படி அம்மணிபாய் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ராமபிரஸாத் தூங்கிவிட்டான். இன்னும் எவ்வளவோ இவ்விஷயமாகச் சொல்ல எண்ணியிருந்த இவ்வுத்தமி, இவ்வளவுடன் அன்று மந்திரோபதேசத்தை நிறுத்தலானாள்.

Koviloor Acadamy

பதினைந்தாவது
மந்திரோபதேசம்

அம்மணிபாய் இல்லாத சமயம்பார்த்து ராம பிரஸாத் பாகவதர்களுக்கு விருந்தளித்தது

இது என்ன அநியாயம்! இது என்ன அக்கிரமம்! நான் இரண்டு நாளைக்கு என் தமையன் உடம்பு அசௌக்யமாயிருக்கிறான் என்று என் தாயாரை அழைத்துக்கொண்டு செவ்வாப்பேட்டை போனால் இந்த வீடு நிர்தூளியா! இது என்ன ஒரு சத்திரமா! அல்லது குடித்தனக்காரன் வீடா? நான் இவ்விடம்விட்டுப் போகவேண்டும் என்று எத்தனை நாள் தவம்பண்ணினீர்களோ தெரியவில்லையே! தாந்தோணிக்கு என்ன காணிக்கை செலுத்துவதாக வேண்டிக்கொண்டீர்கள்? எப்படியாவது நான் இல்லாமலிருக்க வேண்டும் என்று நீங்கள் முற்றிலும் எண்ணியிருந்தபடியாற்றான், நான் போகும்போது அவசரப்பட்டுக்கொண்டு வரவேண்டாம், இன்னும் ஒருநாள் தாமதித்துப்போகலாம், என்று உனது தமையன் கேட்டுக்கொண்டால் தங்கிவா என்றீர்களோ? நான் பைத்தியக்காரி! அந்தச் சொல்லின் அருத்தம் அப்பொழுது எனக்கு புலப்படவில்லை. கள்ளன் உள்ளேயிருக்கிறான்! அந்தச் சூது எனக்கு எப்படித்தெரியும்? உங்களுக்கு ஒரு காரியம் ஆகவேண்டும் என்றால் உங்கள் மனைவியிடம் எவ்வளவு கருணை காட்டுகின்றீர்கள்! என்ன கருணாகரக்கடவுள் நீங்கள்! நீர் குடித்தனம் பண்ணும் யோக்யதை எனக்கல்லவோ தெரியும்.

அடாடா! சுவர்கள் எல்லாம் பொடிமூக்கு சிந்திப் போட்டிருக்கின்றதே! என்ன ஆபாஸம்! என்ன அஸஹ்யம்! இந்தக் காக்ஷி உங்களுக்குப் பிடித்திருக்கின்றதே.

Koviloor Acadamy

"உனக்குப் பிடிக்காவிட்டால் ஒரு துணியை ஜலத்தில் நனைத்து சுவர்களைத் துடைத்து சுத்தம் செய்யலாம்."

அது நல்ல யுக்திதான், உங்களைத் தவிர வேறு ஒருவருக்கும் தோன்றாது! ஐயோ! சங்கராந்தி கழித்து இன்னும் 10 நாளாகவில்லையே! அந்த சங்கராந்தியின்போதுதானே நானிந்த சுவர்களுக்கெல்லாம் சுண்ணாம்படித்தேன்! ஏது, ஏது! இனி என்றால் இந்த வீட்டில் குடித்தனம் பண்ண முடியாது. அதோ! கிணற்றைச் சுற்றிப்போட்ட குத்துச் செங்கல்கள் அவ்வளவும் இரண்டு நாட்களில் என்னமாய் பேர்ந்தன! நான் புறப்படும்முன்தான் அந்தத் தாம்பிக் கயிறு வாங்கினேன். அதற்குள் அது அறுந்து முடிபோட்டிருக்கின்றது. கிணத்தண்டையிலிருக்கும் பித்தளைக்கூடை தக்காளிக்காயாய் நசுங்கிக்கிடக்கிறதே! அதைக் கவிழ்த்து கல்லால் வேண்டுமென்றே நசுக்கினீர்களா என்ன? நான் என் கிரகப்பிரவேசத்தின்பொழுது சீராகக்கொண்டு வந்த பாத்திரமன்றோ அந்தப் பித்தளைக்கூடை? அது இருக்கும் ஸ்திதியை என் தந்தை சங்கரபிரஸாத் இப்பொழுது உயிருடனிருந்து பார்ப்பாரேயானால் அவருடைய கண்களிலிருந்து ரத்தம் புறப்படுமே.

நானிங்கு இருந்தகாலத்தில் எல்லா கிரகஸ்தர்களைப் போல நீங்கள் உங்கள் பாகவத அன்பர்களை அழைத்து வந்து விருந்து பண்ணிவைக்கக்கூடாதா? திருட்டுத்தனமாய் நானில்லாத காலம் பார்த்துத்தானா இந்த உற்சவம் கொண்டாடவேண்டும்? அவர்களும் வெகு தைரியசாலிகள்! ஒரு பெண்பாலுக்குப் பயந்து, நானிருக்கும்பொழுது விருந்துண்ண வருவதற்கு அஞ்சி, நானில்லாத சமயத்தில் வந்தார்களே! என்ன தைரியம்! நல்லது பாகவதர்கள் என்றால் அவர்கள் எல்லாரும் உங்களைப்போல் பொடி போடுகின்றவர்களா என்ன? பொடி போடாவிடில் பாகவதம் மனதில் ஏறாதா என்ன? அவர்கள் பொடியைந்தான் போட்டுக்கொள்ளட்டும்! கள்ளைத்தான் குடிக்கட்டும்! என்

வீட்டுச்சுவர்களை யெல்லாம் சாக்கடையாய்ச் செய்தார்களே. அது என்ன தைரியம்? அவர்கள் மனிதர்களா? மாடுகளா? நூறுமாடுகளை ஒரேகாலத்தில் விட்டு ஓட்டினாலும் குத்துக் கல் பெயராதே. அவர்கள் கால் இரும்புலக்கைக் காலா என்ன? அல்லது இரும்புலக்கையால் கிணற்றங்கரையை இடித்தார்களா? முற்றமெல்லாம் வெற்றிலை மென்று உமிழ்ந்திருக்கின்றார்கள். பாகவதாளுக்கு எச்சில், ஆசாரம் என்பதே கிடையாதா? ஒரு பெண்ணுக்குப் பயந்து அவ ளில்லாத காலத்தில் இந்த வீட்டை த்வம்ஸம் செய்த பாகவதோத்தமர்களுடைய மகிமையை நான் என்னென்று சொல்லத்துணிவேன்! நான் உள்ளே வைத்திருந்த சாமான் கள் ஒன்றையும் காணோமே! ஒரு வருஷத்து சாமான்களும் அப்படியே அழிந்திருக்கின்றனவே.

''நான் ஒன்றும் தொடவில்லை.''

நீங்கள் ஒன்றும் தொடவில்லையா? விறகு ஒரு சுள்ளி கூட பாக்கிவைக்கவில்லையே! அரிசிச்சாலில் ஒரு அக்ஷதை கூட காணோமே. எல்லாப் பானைகளையும் உருட்டிவைத் திருக்கின்றீர்களே! வாயிற்கூட்டி வள்ளி அப்பொழுதே சொன்னாள். என்னவோ, தப்பிச்சொல்லுகின்றாள் என்றி ருந்தேன். அவள் சொன்னது ஒன்று, இங்கு நடந்திருக் கின்றது ஒன்பதாயிருக்கின்றது!

''அந்த முண்டை நாளைமுதல் இந்த வீடு கூட்டவேண் டாம். அவளை பொழுது விடிந்ததும் வாயிற்படி ஏறவிடாமல் துரத்திவிடுகின்றேன். கோழ்ச்சொல்லும் குணம் அவளுக் கிருக்கின்றது என்று நான் இதுவரையில் எண்ணவேயில்லை. அவ்வளவு பொல்லாதவளா அவள்? பார்ப்பதற்கு வெகு சாதுபோல் இருக்கின்றாள். எல்லாப் பெண்டுகளும் அப்படித் தான்.''

அப்படித்தானா? தைரியமாகச் சொல்லுவீர்களா? வள்ளியை வேண்டாம் என்று சொல்ல உமக்கு அதிகாரமும்

Koviloor Acadamy

உண்டா? நானிந்த வீட்டுக்கு யஜமானியில்லையா? நீங்கள் செய்த அக்கிரமத்தை என் உத்தரவுப்படி அவள் என்னிடம் சொன்னால் அது ஒரு குற்றமா? திருப்பத்தூரிலிருந்து 1 மணங்கு வெள்ளை வெல்ல அச்சுகள் இந்த முடாவில் போட்டு வாயை கொட்டாங்கச்சியால் மூடி மண் பூசி யிருந்தேன். ஒரு குந்துமணி வெல்லங்கூடக் காணோமே. அத்தனை வெல்லத்தையும் என்னவாய்த் தின்றீர்கள்? வெல்லமாகவே விழுங்கிவிட்டீர்களா என்ன? அது வயிறு? வண்ணான்சாலா? நூறு பெயர்களுக்கு விருந்தானால் அந்த வீடு அப்புறம் எப்படி உருப்படும்?

''நான் நூறு பெயர்களுக்கு ஒருநாளும் விருந்திட வில்லை.''

பத்துப்பெயர்கள் குறைந்தே யிருக்கட்டும். வீட்டில் அழிவுபட்டிருக்கும் சாமான்களைப் பார்த்தால் நூறு பெயர் களுக்குமேல் வந்திருக்கவேண்டும் என்றே எண்ணுகின்றேன். அத்தனை வெல்லமும் எப்படி அழிந்தது. அரிசி ஒருமணி கூட யில்லாமல் போன காரணம் என்ன?

''என்னை ஒன்றும் கேட்காதே''

ஒன்றுங் கேட்காதேயா? ஒரு காசு வேண்டும் என்று கேட்டால் என் கையில் பணமில்லை என்று வெள் என்று விழுகிறீர்கள். இப்பொழுது எல்லாம் கடைக்குச் சென்று வாங்கிவந்துதானே நாளைக் காலைச் சமையல் ஆகவேண்டும் போலிருக்கிறது. சாமான் போனவிதம் எப்படி என்றால் அதுவும் எனக்குத் தெரியாது என்று மறுமொழி சொல்லும் வண்ணம் என்னை ஒன்றும் கேட்காதே என்கின்றீர்கள். உங்களைக் கேட்காமல் நான் வேறு யாரைக்கேட்பேன்? அதோ அந்த மூலையில் எரிகின்றதே குத்துவிளக்கு அதில் அன்னப்பறவையின் தலையைக் காணோமே! ஐயோ! அது மொட்டையாக நிற்பதை பார்க்கப்படவில்லையே! நல்லது அதை யார் முறித்தார்கள்? எப்பொழுதும் படுக்கை உள்ளில் எரியும் விளக்கு தலை முறிபடுவானேன்.

Koviloor Acadamy

"எனக்கு ஒன்றுந் தெரியாது".

ஒன்றுந்தெரியாதென்று ஏன் பாகவதாளாயிருந்து கொண்டு பொய் சொல்லுகின்றீர்கள்! வள்ளி எனக்குச் சொல்லிவிட்டாள். குஷால்தாஸ் அதை நேற்றிரவு நீங்கள் எல்லாரும் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் பொழுது கீழே தள்ளிவிட்டு தலையை உடைக்கவில்லையா? அதை நீங்கள் பார்த்து நாளை என் மனைவி கண்டால் என்னை லேசில் விடாள் என்று அவனுடன் சொல்லவில்லையா? இலேசில் விடாமல் நான் உங்களை என்ன பண்ணிவிட்டேன்? காலை முறித்தேனா? கையை ஒடித்தேனா? பல்லால் கடித்தேனா? இத்தனை சாமான்கள் போயிற்றே, அவைகளுக்கு நான் என்ன செய்துவிட்டேன். வாயால் பிதற்றுகின்றேன். இவள் சொல்லுகின்றதை சொல்லட்டும், நாம் நடத்துகிறதை நடத்துவோம், என்று சிரித்துக்கொண்டே நீங்கள் என்னை ஏய்த்துவிடுகிறீர்கள். நான் வாயால் குலைப்பது ஒன்றுதான் நான் கண்ட லாபம். இந்தக் கள்ளச் சிரிப்பு எங்கு கற்றுக் கொண்டீர்களோ! நாம் எவ்வளவோ நாளாய் வெகு ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டிருந்த விளக்காயிற்றே, அந்த குத்துவிளக்கு, நல்ல வெண்கலம், என் தந்தை அதை நாச்சியார் கோவிலில் வெகு வருஷங்களுக்கு முந்தி வாங்கினாராம். தேய்த்தால் பொன் விளக்கு, அதன் காந்திக்குப் பின்வாங்கும். அந்த அருமையான விளக்கைப் பாழாக்கினீர்களே. ஒருக்கால் இவள் கொழுப்பை இப்படித்தான் அடக்க வேண்டும் என்று அதைப் பாழாக்கினீர்களா? நீங்கள் வேண்டுமென்றே செய்தாலும் செய்திருப்பீர்கள், உமது மனோதைரியம் இவ்வுலகத்தில் ஒருவருக்கும் கிடையாது. என்னை ஒவ்வொரு விதத்திலும் அவமானம் பண்ணியிருக்கின்றீர்கள்.

இதைக் கேட்டதும் ராமபிரஸாதுக்கு அடக்கமுடியாமல் சிரிப்பு வந்துவிட்டது. முகத்தை திருப்பிக்கொண்டு எவ்வளவோ முயன்று அடக்கி சிரிக்கலானான்.

Koviloor Acadamy

சிரிக்கவில்லை என்கின்றீர்களா. நான் குழந்தை போலிருக்கிறது. எனக்கு சிரிப்பின் குறி தெரியாது என்று எண்ணிவிட்டீர்கள். முகத்தை அந்தப்பக்கம் திருப்பிக்கொண்டால் எனக்குத்தெரியாதா. நல்லது சிரியுங்கள் சிரியுங்கள், வேண்டியமட்டும் சிரியுங்கள், இன்று படுக்கையில் படுத்துக் கொண்டு சிரித்தால் நாளைபொழுது விடிந்ததும் கடைத் தெருவில் நின்றுகொண்டு சிரிக்கலாம். அல்லது பஜனைக் கூடத்தில் உட்கார்ந்துகொண்டு நகைக்கலாம். எனக்கு நாவு வரண்டு போயிற்று. கொஞ்சம் தீர்த்தம் குடிக்கிறேன் அடாடா! கூஜாவின் கழுத்து முறிந்துகிடக்கிறதே. நானிது வரையில் பார்க்கவில்லையே. இதுவும் துலைந்ததா, மற்றென்னதான் சரியாயிருக்கிறது. இரண்டு நாட்களில் இந்த விடே பாழா?

"ஏனடி பழிபோடுகிறாய். வெகுநாளாக கூஜாவின் விண்டிருந்தது உனக்குத் தெரியாதா?"

பொய் சொல்லுகிறீர்களா? கிழங்குமாதிரி யிருந்ததே என் கூஜா! நான் சீமந்தத்துக்கு பால் குடிக்கக்கொண்டு வந்த கூஜாவாயிற்றே. ஒரு கிற்றுண்டா அதன் மேல். அதைப்பார்க்க அழுகை வருகின்றதே.

"அரைக்காசுக்கு உதவாது. ஏன்மாமாலம் செய்கிறாய்?"

ஐயோ! ஐயோ! அரைக்காசு பெறுதா. உங்களுக்கு என்ன தெரியும். புருஷர்களுக்கே அறிவு அவ்வளவுதான். அவர்கள் அபிப்பிராயங்கள் எப்பொழுதும் வீட்டிலிருக்கும் ஒரு சாமானும் ஒரு காசுக்குக்கூட உதவாதது என்று தான் சொல்லுவது வழக்கம்.

எவன் கயிற்றை அறுத்தான்? எவன் பித்தளைக்கூடை யை நசுக்கினான்? எவன் விசுபலகைக் காலை ஒடித்தான்? என்று ஒவ்வொன்றாய் அம்மணிபாய் கேட்கத்தொடங்கினாள்.

இவள் கேள்வி இன்று இரவு முடிய கேட்பாள், வேண்டு மென்கிற வரையில் கேட்டுக்கொண்டிருக்கட்டும்,

Koviloor Acadamy

பதில் சொன்னாற்றானே இவள் நாக்கும் நீளுகின்றது, என்று சிந்தித்துக்கொண்டு ராமபிரஸாத் அவள் கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே கவலையற்று நித்திரை செய்துவிட்டான்.

பதினாறாவது
மந்திரோபதேசம்

குழந்தைகளுக்கு தீபாவளிக்குப் புதிய துணி எடுக்க அம்மணிபாய் தனது கணவனை பணம் கேட்டது

எனக்கு எல்லாக் காரியங்களும் செய்ய தைரியமிருக்கின்றது. ஏதாவது ஒரு சமயத்தில் 'உங்களிடம் பணம்' என்று கேட்டு பணம் வாங்குகின்றதென்றால் அதுமட்டும் பிரமப் பிரயத்தினமாக விருக்கின்றது. நான் தான் என்னத்திற்காகப் பணம் கேட்கின்றேன். எனக்கு இந்த உலகத்தில் ஒரு தூசுகூட அபேக்ஷையில்லை. கழுத்தில் கட்டிய தாலி மட்டும் பலமாயிருந்தாற் போதும். அந்தமாதிரி எல்லா விஷயங்களிலும் இந்த மனத்தை ஒழித்துவிட்டு நிற்கலாம் என்றாலோ, அது முடியவில்லை. உப்புப்போட்டுச் சோறு உண்கிறவரையில் இந்த குழந்தைகளிடம் ஆசை போக மாட்டேன் என்கின்றது. உங்களுக்கோ குழந்தைகள் விசாரம் கிடையவே கிடையாது. மற்ற தந்தைகள் போல் நீங்களும் ஒரு உலகத்துத் தந்தையாய் குழந்தைகளைக் கவனித்து வருகிறவர்களாகவிருந்தால் நான் என் மனத்தை ஒழித்து "எல்லாம் தகப்பனார் பாடு நமக்கென்ன" என்று கவலையற்று நிற்கலாம்.

Koviloor Acadamy

''இவ்வளவு பிடிகை இன்றிரவு என்னத்திற்காக? அதை முதல் முதல் சொன்னால் அதிக வம்பில்லாமல் கண்ணயர லாம்''

நான் வம்புபேசுகிறவள் என்று தீர்மானித்து விட்டாற் போலிருக்கிறது! பீடிகையாவது! இல்லாதது நான்ஒன்றும் சொல்லவில்லையே! உமக்கு ஒன்றும் தெரியாதா? என் கையில் மட்டும் என் தந்தை அந்தப்பணத்தைக் கொடுத்து விட்டு கண்ணை மூடியிருந்தால் நான் எனக்கு பணம் வேண்டும் பொழுதெல்லாம் உங்களிடம் கொல்லைக்காட்டு நரி போல் பல்லைக்காட்டிக்கொண்டு கெஞ்சிக் கூத்தாட வேண்டாம். உம்மிடம் வந்து ஒரு காசு கேட்பதாயிருந்தால் என் மானத்தை ஒரு மூட்டையாகக்கட்டி மூளையில் வைத்துவிட்டு உம்மிடம் பிச்சைக்காரிபோல் கெஞ்சுகின்றேன். எனக்கும் இந்த வீடு கூட்டும் வள்ளிக்கும் என்ன வித்தியாசம்!

''உனக்கு அவ்வளவு மானக்குறைவா யிருந்தால் பணம் அடிக்கடி கேட்காமலிருக்கக் கூடாதா?''

வெகு யுக்தியாய் பேசுவதாக எண்ணிப் பேசுகின்றீர்களே! இந்த யுக்தி யாரிடம் அறிந்தீர்கள்? பாகவதர்கள் சொல்லிக்கொடுத்தார்களா என்ன? இந்த யுக்தியைக் காட்டிலும் உலகத்துத் தந்தைகள்போல் குழந்தைகள்மேல் அன்பும், கொண்ட பெண்சாதியிடம் விசுவாசமும் இருக்கக் கூடாதா? பணம் என்று நான் வாயைத் திறந்தால் உங்கள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன! உங்களிடம் பணம் என்று கேட்பதைவிட பேசாமல் ஒருவருமில்லாத ஓரிடத்தில்போய் உட்கார்ந்து நாக்கைப் பிடுங்கிக்கொண்டு பிராணனை விடுவது மேல் என்று தோன்றுகின்றது.

''ஏன் வீண் மாமாலம் செய்கிறாய்? சொல்லவேண்டியதை சீக்கிரம் சொல்லித் தொலைத்தால் நான் தூங்குவேன்.''

Koviloor Acadamy

வீட்டுப்பேச்சு, அல்லது ஒரு காசுவேண்டும் என்பதை நான் ஆரம்பித்தால் உங்களுக்கு உடனே தூக்கம்வந்து விடுகின்றது. பாகவத கோஷ்டியில் உட்கார்ந்துவிட்டால் அருணோதயம் வரையில் கண்விழிக்கின்றீர்கள். இதென்ன மாதம். உங்களுக்கு அதாவது நியாபகமிருக்கின்றதா?

''ஐப்பசி மாதம்.''

ஐயோ! இப்படி இந்தக் குடும்பத்தில் ஒருவித கவலையு மில்லாமலிருக்கின்றீர்களே. மாதம் ஐப்பசி மாதம் என்று சொல்லி வாயை மூடிவிட்டீர்கள்! என்னத்திற்காக இவள் கேட்கிறாள் என்ற குடும்பக் கவலை கொஞ்சமாவது உங்க ளிடம் விளங்கவில்லையே. மற்றவர்கள் அவர்கள் குழந்தை களை வளர்ப்பதையும் பாருங்கள். நீங்கள் நமது குழந்தை களை வளர்ப்பதையும் யோசியுங்கள். சாப்பாடு பாதி வயிறாக விருந்தாலும் கட்டிக்கொள்ள அரை நிரம்பத் துணி வேண்டுமே. எல்லாக் குழந்தைகளும் கந்தல்களைக் கட்டிக் கொண்டு வளையவருகின்றனவே. அது உங்கள் கண்களில் படவில்லையா? அடுத்த வீட்டு கேசவராவ்முதலி குழந்தைகள் எத்தனை அழகாய் உடுப்புத் தரித்துக்கொள்ளுகின்றன. மூன்றும்வீட்டு முத்துசாமிநாயுடு பெண் நேற்று நெய் கடன் வாங்கிப்போக வந்தது. அதன் சித்தாடைக்கு ஒரு முழம் கறை செக்கச்செவேர் என்று ரத்தம் தெரிப்பது போலிருந்தது அதன் சாயம். அந்தக் குழந்தை கட்டிக் கொண்டுவந்த சிற்றாடையை நீங்கள் எப்பொழுதாவது பார்த்தீர்களா?

''நான் பார்த்ததில்லை.''

நீங்கள் ஏன் பார்ப்பீர்கள்? ஒரு சமயம் பார்த்திருந்தால் உமது பாவம் துலையுமே. நீங்களும் ஒரு உலகத் தந்தை யாக விருந்தால் இந்த மாதிரி நமது ராதாபாய்க்கு ஒரு சிற்றாடை வாங்கிக்கொடுப்போம் என்று கண் குளிரப் பார்த்திருப்பீர்கள். கேசவராவ் குழந்தையைவிட நமது

Koviloor Academy

ர்ர்தாபாய் ஒன்றும் அழகில் குறைவில்லை. அரை நிரம்பத் துணிவேண்டும்; உமக்கு வெட்கமில்லையா?

''என்னத்திற்காக வெட்கம்.''

மற்ற தந்தைகள் தங்கள் குழந்தைகளுக்கு துணிமணி எடுப்பதுபோல் நீங்கள் எடுக்கவேண்டாமா? மற்றவர்கள் குழந்தைகள்போல் நமது குழந்தைகள் கௌரவமாய் காணப்படவேண்டாமா? ஒரு நல்ல நாள், பெரிய நாள், ஒரு உற்சவம் இவைகளில் குழந்தைகள் கோவிலுக்கு கூட்டிக் கொண்டுபோ என்று என் பிராணனை எடுக்கின்றன. நான் என்னத்தைக் கட்டி அவர்களை அழைத்துப்போவேன்? வீட்டுக்குள் கந்தையையும் அருதலையும் கட்டி வளைய வருவதுபோல் வெளியிலும் அழைத்துப்போனால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்?

''உனக்கு பக்தி வெகு ஜாஸ்தி! கோவிலுக்குப்போய் ஸ்வாமிதர்சனம் செய்வது தவறுகிறதே யில்லை!''

உங்கள் பாகவத கோஷ்டிக்கு என் ஸ்வாமிதர்சனம் ஒன்றும் குறைவில்லை! போன சனிக்கிழமைகூட நான் ஒரு கண்ணம் எண்ணெய் எடுத்துப்போய் சனிசுவரருக்கு விளக்கேற்றி வந்தேன். நான் ஏதோ ஒன்று சொல்ல வந்தால் ஏதோ மற்றொன்றை எடுத்து அதை மாற்றுகிறீர்கள். நானின்றிரவு சொல்லப் புகுந்ததெல்லாம் குழந்தைகளுக்கு நல்ல உடையில்லை என்பதேயாம். நீங்களே அறிந்துகொள்ளுவீர்கள் என்று இது என்னமாஸம் என்று கேட்டேன். ஐப்பசி மாதம் என்று சொல்லி விட்டு சும்மாயிருக்கிறீர்கள். தீபாவளி வருகிறதே, இந்தப் பண்டிகையை உத்தேசித்து குழந்தைகளுக்கெல்லாம் துணி எடுக்கக்கூடாதா என்று நான் உத்தேசித்துக்கேட்டது. அது உங்களுக்கு நன்றாய் விளங்கியிருக்குமா! ஒன்றும் தெரியாத திசைப்பூண்டு மிதித்தவன் மயங்கிப் பேசுவதுபோல் உங்கள் புத்தியே ஸுவாதீனமில்லாதவர்கள்போல் பேசுகின்றீர்கள்.

Koviloor Acadamy

"துணியெடுக்க பணம்வேண்டும் என்று ஒரே பேச்சில் சொல்லேன்? நான் பணம்கொடுக்கப் போகிறதில்லை. என்ன துணிவேண்டுமோ சொல்லு. நான் இந்தத்தடவை துணி எடுத்து வருகிறேன்."

போதுமே! நீங்கள் துணி எடுப்பது எனக்குத் தெரியுமே! ஒன்றுக்கும் உதவாத துணிகளாய்ப் பார்த்து சாயமே நிற்காதவைகளாய் ஒரு மூட்டைகட்டிக்கொண்டு வந்து நிற்பீர்கள். பணம் அவ்வளவையும் கரியாக்கிவருவீர்கள்! அப்படி செய்யவேண்டாம். பெண்குழந்தைகளுக்கு துணி எடுப்பது புருஷர்களுக்கு ஒன்றுந்தெரியாது. என் கையில் துணிக்காக நான் கேட்கிற பணத்தைக் கொடுங்கள். நான் நேற்று அலக்காரத்தின் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கு பந்தர்க்காரன் ஒரு சரிகை சிற்றுடைகொண்டு வந்திருந்தான். என்ன அழகு! கிட்டகிட்ட புள்ளிபோட்டு முகதலையில் குளம் கட்டி வெகு அழகாயிருந்தது. என் கையில் இப்பொழுது காசில்லை நாளைக் கொண்டுவா என்றேன். அது வாங்கினால் ராதாபாய்க்கு வெகு லக்ஷணமாயிருக்கும். நான் துணிமணிகள் மலிவாய் வாங்குவதுபோல் உங்களுக்கு வாங்கத்தெரியாது. ஏன் சிரிக்கிறீர்கள்? நீங்கள் என்னைவிட நல்ல திறுசுகள் வாங்கி வருவதை நான் பல தடவைகளில் பார்த்திருக்கிறேன்! சிரிப்பும் வேண்டுமா? நான் யாருக்காகப் பணம் கேட்கிறேன். எல்லாம் நமது குழந்தைகளுக்காகத்தானே. நமது குழந்தைகளுக்கு நல்ல ஆடைகொடுக்கவேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆசையுண்டோ அவ்வளவு ஆசை உங்களுக்கும் இல்லாமற்போமா! சிங்கம் கொடிய விலங்காயிருந்தாலும் தன் குட்டியிடம் விசுவாசமில்லாமலிருக்குமா?

"நீ சொல்லுகிறதெல்லாம் சரி. உனக்கு எவ்வளவு பணம் வேண்டும்."

நாமிருவரும் கணக்குப்பார்ப்போம் மூத்தவளுக்கு வயது 14. இனி அவளுக்கு சிற்றுடைகட்டினால் நன்றாக இருக்க

Koviloor Acadamy

மாட்டாது. புதுதினுசு ஜாகோர்ட்டு கட்டடம் புடவை வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். அது சுமார் 35 ரூபாய் பிடிக்கும். உயர்ந்த புடவைகள் 50-60-ல் இருக்கின்றன. நமது ஸ்திதிக்குத் தக்கபடி 35 ரூபாயில் வாங்கினால் அது போதும் அவளுக்கு இப்பொழுது. அடுத்தவருஷம் அவள் புருஷன் வீடுபோகும்பொழுது உயர்ந்த புடவை உள்ளே வைத்து உடுத்த வாங்கிக்கொடுக்கலாம். இரண்டாவளுக்கு சிற்ருடைபோதும். அதே இனத்து சிற்ருடை 20-25-ரூபாயிருக்கும். மூன்ருவள் ராதபாய்க்குவயது 10 நிரம்பவில்லையே. நல்ல தினசில் பாவாடை தைக்கவேண்டும். கரை அரைமுழ அகலமிருக்கவேண்டும். சாதாரண ரவிக்கைகள் வாங்கித் தைத்தால்நன்ருக விருக்காது.ரவிக்கை ஒன்றரைரூபாயாவது இருக்கவேண்டும். அப்படி ஒரு பாவாடைக்கு 10 ரவிக்கைகள் பிடிக்கும். ஆகவே ராதாபாய்க்கு ஒரு 15 ரூபா வைத்துக் கொள்ளுங்கள், சங்கரனுக்கு பனரஸ் பட்டுத்துண்டு 10 ரூபாவுக்கு வாங்கினால் போதும். அம்பிகாதாஸனுக்கு அதே இனத்தில் இரண்டுவாங்கலாம். கைக்குழந்தைகளுக்கு வாங்கினாலும்சரி, இல்லாவிட்டாலும் சரி.இல்லையெனில் ஒரு கால்ரூபாவுக்கு ஒரு சாயத்துண்டு வாங்கிக்கட்டினால் அதை மண்ணில் புறட்டிக்கொண்டிருக்கும். எனக்குத் துணியே வேண்டாம். என்னைப்பற்றி நீங்கள் ஒரு தூசு கூட செலவிடவேண்டாம். உங்களுக்கு நல்லதாய்ப் பட்டுக் கம்பி போட்டதாய் 10 ரூபாவுக்கு இரண்டுஜோடி பத்தாறு வாங்கிக்கொண்டால் நித்தியப்படி கட்டிக்கொள்ளலாம். ஆகவே நூறு ரூபா என் கையில் கொடுப்பீர்களானால் நான் நல்லவைகளாய் சாயம் போகாதவைகளாய் இவ்வினங்களை எடுத்துவைக்கின்றேன். உங்களுக்கு வேண்டிய மடிவேஷ்டிகளுக்கு என்னிடம் பணம் கொடுக்கவேண்டாம். அது புருஷர்கள்பாடு. நீங்களே எடுத்துக்கொள்ளலாம்.

"எனக்கு நமது குழந்தைகள் கணக்குத்தெரியாதா? எண்ணியெண்ணிச் சொல்லுவானேன். ஒரே அடியாய் 100 ரூபா கோடு என்று கேட்கின்றதானேன்."

Koviloor Acadamy

இப்படி வித்தியாசமாய்ப் பேசும்பொழுதுதானே எனக்கு சைய் என்று ஆய்விடுகின்றது! ஆளுக்கு இவ்வளவு பிடிக்கும் என்று கணக்குப்பார்த்தேன். என்னைவிடச் செட்டாய் செலவு செய்யப்பட்டவளினி ஒருவருமில்லை. 100 ரூபா பணமிருந்தால் நாம் தீபாவளிகொண்டாடு வதுடன் குழந்தைகளுக்குத் துணியும் எடுக்கலாம்.

''நூறு ரூபாய்! அடே அப்பா! என்ன அநியாயப் பணம் கேட்கிறாய்''

அநியாயப் பணமா? எனக்கென்ன? நான் ஒரு தூசு எனக்காகக் கேட்கவில்லை. லாலியையும் கந்தலையும் கட்டி குழந்தைகளைத் தெருவில் துரத்துங்கள், பணத்தைப் பெட்டியில் பத்திரமாக வைத்துப் பூட்டுங்கள். அவமானம் யாருக்கு? உங்கள் குழந்தைகள் அம்மணமாக நின்றால் உங்களுக்கு வெட்கமில்லையா?

''இப்பொழுதுதானே நான்கு மாதங்களுக்கு முன்பு குழந்தைகள் துணிக்கும் உனக்குப் புடவைக்கும் 40 ரூபா பணம் கொடுத்தேன்.''

அதற்கும் இதற்கும் ஸம்பந்தம் என்ன? அப்பொழுது அது வேண்டி யிருந்தது. அத்துடன் அது செலவாய் விட்டது. அதில் ஒரு காசு என் அம்பிக்கும் அண்ணாவுக்கும் அனுப்பவில்லை. அப்படி நான் செய்திருந்தால் ஈனகுலத்தில் பிறந்தவள்! இப்பொழுது தீபாவளிச் செலவுக்கு என்ன சொல்லுகின்றீர்கள்?

''இதற்கும் 40 ரூபா பணம் போதும்.''

வெகு அழகு! எப்பொழுதும் புருஷர்களே அப்படித் தான்! பெண்களுக்கு துணிவாங்கிக் கொடுக்கவேண்டி யிருந்தால் மூக்கால் அழுகின்றது வழக்கம். தங்களுக்கு எவ்வளவுமட்டும் வேண்டுமோ செலவுசெய்து கொள்ளு வார்கள். குழந்தைக்கு ஒரு காசுவேண்டும் என்றால்,

Koviloor Acadamy

என்னத்திற்கு? ஏதுக்கு? என்று ஆயிரம் கேள்விகள் கேட்பார்கள்.

"குழந்தைகளுக்கு துணிதானே தீபாவளிக்குவேண்டும்."

ஆம் துணிதான்வேண்டும். துணியைப்பற்றி புருஷர்களுக்கு என்ன தெரியும்? 40 ரூபா போதாதா என்று சொல்லுகிறீர்கள். அந்தப் பணத்தை நீங்களே எடுத்துக் கொண்டு கடைக்குப்போய் நான் சொன்னபடி துணிகள் வாங்கி வாருங்கள். உங்கள் சமர்த்தைப் பார்ப்போம்.

"உன் குழந்தைகளுக்கு ஜமீன்தார் குழந்தைகளைப் போல் உடை உடுத்தப் பார்க்கின்றாய்."

என்ன பேச்சுப் பேசுகின்றீர்கள்? வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று உலகத்தார் சொல்லுகின்றபடி பேசினால் அரைக்காசுக்கு லாபமுண்டா? நான் ஜமீன்தார் குழந்தைகளைப்போல் உடை உடுத்த விரும்பினால் நீங்கள் கவுண்டன் குழந்தைகளுக்கு உடை உடுத்துவதுபோல வேண்டுமானால் உடுத்திப்பாருங்கள். ஏதோ நமது குஞ்சுகளுக்கு சிறு பிராயமாயிற்றே; நம்மைச் சுற்றி அல்லசலிலிருக்கும் கிருஹஸ்தர்கள் நம்மைப்போல் நான்கு குழந்தைகளைப்பெற்று வளர்த்துவருகிறார்கள். அவர்கள் குழந்தைகளுக்குச் செய்யும்வண்ணம் நீங்கள் நமது குழந்தைகளுக்குச் செய்தால் போதும். நான் அதிகமாகவும் கேட்கவில்லை. குறைத்தும் கேட்கவில்லை. அக் குழந்தைகள் நடுவில் நமது குழந்தைகள் சேர்ந்து நிற்கும்போது அவைகள் நல்ல உடையில்லாமல் அவமானப்படுவதைப் பார்க்க பெற்றமனம் துடிக்கிறது. உங்களுக்கென்ன? புருஷர்களாகையால் இவைகள் ஒன்றும் கண்களில் படுகின்றதே யில்லை. இவ்வாறு உங்கள் குழந்தைகளை நீங்களே அலக்ஷியம் பண்ணினால் எல்லாரும் உங்களைப் பார்த்துச் சிரிப்பார்களே இனிமேல் சிரிக்கப்போகிறார்களா? இதுவரையில் சிரிப்பது போதாதா?

Koviloor Acadamy

"யார் சிரிக்கிறார்கள்?"

அதை எல்லாம் உங்களிடம் சொல்லுவானேன்? இன்னும் உங்கள் காதில் விழாத எவ்வளவோ சங்கதி எனக்குத் தெரியும். நேற்று மணிகர்ணிகையில் நான் ஸ்நானம் பண்ணும்பொழுது கோடிவீட்டு நெந்திரம் என்னைப் பார்த்து "என்னடி அம்மணி உன் ராதாவை பனைமரம் போல் நிறுத்தியிருக்கிறாய். அந்தக் குழந்தையின் சிவப்பான உடம்பிற்கு நெருப்புப் பறக்க ஒரு சிறு தோடு ஒன்று காதில் போட்டால் என்ன லக்ஷணமாயிருக்கும். என் புருஷன்கூட என்னிடம் நேற்று ராத்திரி சொல்லி ராமபிரஸாத் ஒன்றும் கவனிக்கின்றதேயில்லை என்று விசனப்பட்டார்," என்றாள். இத்த மாதிரி எத்தனையோ கோடானுகோடி என் காதில் விழுகின்றன. நான் உங்களிடம் பயந்துகொண்டு வாயைத் திறவாமலிருந்தாலும் ஊரார்கள் என்னைக் காணும்பொழுதெல்லாம் பிடுங்கிவிடுகின்றார்களே! என் தேகம் பட்டுப் பட்டுப் புண்ணாய்விட்டதே! நான் ஜமீன்தார் குழந்தைகள் போல் என் குழந்தைகளுக்கு உடை உடுத்த எண்ணியிருக்கிறேன் என்று என்ன தைரியமாய்ச் சொல்லுகிறீர்கள்? நான் என்ன தேவதாஸியா? அப்படி என்ன உலகத்தார் போல் மேனி மினுக்கிக்கொள்ளுகிறவளா? நானும் ஒரு குடித்தனக்காரிதானே. எவ்வளவோ மானமாய் நமது குழந்தைகள் இப்படி நிற்கின்றனவே என்று மானத்தை வெளியிடாமல் நான் கேட்டால் இப்படி கண்டபடி எல்லாம் என்னை பேசுகிறீர்களே! 100 ரூபாவுக்கு குறைந்தால் உங்கள் காசில் எனக்கு ஒரு தூசுகூட வேண்டாம்.

"இல்லை அப்படியானால் அறுபதுரூபா கொடுக்கின்றேன். அதைக்கொண்டு எப்படியாவது எல்லாக் காரியங்களையும் பார்த்துக்கொள்."

ஒரு தூசு குறைந்தால் எனக்கு உங்கள் பணமும் வேண்டாம். தீபாவளியும் வேண்டாம். நானும் எனக்குள்

Koviloor Acadamy

எவ்வளவோ சமர்த்தாய் உங்கள் கோபத்துக்கு நடுநடுங்கி குறைத்து 100 ரூபா கேட்டேன். முதலில் 40 என்றீர்கள், பிறகு 60 என்றீர்கள். என்னயிது கருவேப்பிலைக்காரி வியாபாரமா? 100 ரூபா கொடுக்கிறேன் என்று உங்கள் வாயால் சொல்லிவிடுங்கள். சொன்னாற்ருன் தூங்கலாம்.

இவளிப்படி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே ராம பிரஸாத் தூங்கிவிட்டான். தூங்கும்பொழுது 60 ரூபாவுக்கு மேலாக அம்மணிக்கு ஒரு காசு கொடுக்கிறதில்லை என்று கனவுகண்டு அதில் சபதம் கூறிக்கொண்டான். பெண்டுகள் அப்படித்தான் கேட்பார்கள். அவர்களை அடக்குகிற வழி யாய் அடக்குவோம் என்று தூக்கத்தில் தீர்மானித்தான்.

பொழுதுவிடிந்தது. பெண்சாதியின் பலம்தான் அதிக மாயிற்று. புருஷனுக்கு பலம் ஏது? வாயைத் திறவாமல் ரூபா 100 கொடுத்தான்.

பதினேழாவது

மந்திரோபதேசம்

ஜப்தி ஸொத்தை விடுவித்து ராமபிரஸாத் இரவு வீடு திரும்பினது

வெகு அழகு! நான் என்னதான் கதறினாலும் என்னை லக்ஷியம் பண்ணாமல் உங்களிஷ்டப்படியே நடந்துவந்தால் இந்தக் குடும்பம் பிழைப்பதெப்படி! என்றையதினம் உமது இஷ்டப்படி நடப்பதைவிடப் போகின்றீர்களோ தெரிய வில்லை! இல்லாதபக்ஷத்தில் நாம் வெகு சீக்கிரத்தில் அழிந்து

Koviloor Acadamy

போய் விடுவோம்! ஒரு நாளைப்போல் ஒவ்வொரு நாளும் இரவில் வெளியிற்சென்று பாதிராத்திரிக்குப் பிறகு வீடு திரும்பி வருகிறீர்கள். ஸரியான நேரத்தில் வீடுதிரும்பாத புருஷனுக்கு நியாயமாய் கலியாணமேகூடாது. என்னைத் தாலிகட்டி வீட்டில் அடைத்துவைப்பதில் லாபம் என்ன? நீங்கள் எக்கேடு கெட்டுப்போகவேண்டுமோ அக்கேடு கெட்டுப்போக எனக்கு ஆக்ஷேபமில்லை. மற்றவர்களையும் கெடுப்பதில் உமக்கு என்ன லாபம்? நீங்கள் பண்ணுகிற அநியாயங்களைப் பார்த்தால் இனி உலகத்தில் கலியாணம் என்பதையே நிறுத்திவிட்டால் நலம்போல் தோன்றுகிறது. நமது பெண் குழந்தைகளுக்கு நாளினி ஒருபொழுதும் மணம்புரிந்து வைக்கப்போகின்றதில்லை. தாயார் படுகிற அவஸ்தையைப் பார்த்த பிறகு அவைகளுக்குத்தான் மணம் புரிந்துகொள்ள மனம்வருமா? எங்குதான் போயிருந்தீர்கள்? என்னதான் இதுவரையில் செய்தீர்கள்; சொல்லுங்களேன்?

''ஒன்றுமில்லை.''

நீங்கள் சொல்லுவதில் உங்களுக்கே வெட்கமில்லையா? நடு இரவுக்குமேல் தன் வீட்டுக்குக் கதவை திருடன் இடிப்பது போல் இடிக்கும் ஒரு புருஷனுக்கு வெட்கமேது? மானம் ஏது? உமக்கு இவ்விரண்டும் போய் வெகு நாளாயிருக்கும்! எங்கு போயிருந்தீர்கள் சொல்லுங்கள்? என்ன வாய் திறவாமல் கல்பிள்ளையார்போல் வாயடைத்து நிற்கின்றீர்களே? என்னைப்பார்த்தால் இவள் ஒரு மனுஷியா இவளுக்கு நாம் பதில் சொல்லுவானேன் என்று தோன்றுகிறதா என்ன? நான் உமக்கு ஒரு லக்ஷியமா? என்னைக்கண்டால் உமக்கு வாயடைத்து விடுகிறது. ஒன்றும் பேச நா எழவில்லை. பாகவத கோஷ்டியில் கொம்மாளம் போடுகின்றீர்கள்; அவர்கள் உமக்கு வேண்டியவர்கள்; நான் வேம்பு! உம்மைப்போல்தான் எல்லாரும் கொண்ட பெண்சாதியிடம் நடந்துகொள்ளுகிறார்கள்! உமது மனத்தையே கேட்டுப்

Koviloor Acadamy

பாரும், உமக்கே தெரியும்! இரவில் சாப்பாடு கழிந்தால் உடனே வெளியில் புறப்படுகிறதே அலுவலா?

''இந்த வாரம் முழுமையும் நான் வீட்டைவிட்டு இன்றிரவுதானே வெளிக்கிளம்பினேன்.''

வாரத்துக்கு ஒரு நாளாவது வெளியில் போயே தீர வேண்டும் என்று எந்த சாஸ்திரம் சொல்லுகிறதோ அது தான் புலப்படவில்லை! ஒருநாள் போனாலென்ன ஒவ்வொருநாளும் போனாலென்ன? இவ்வளவு நாழிகை தாமதித்ததற்குக் காரணம் என்ன?

''காரணமின்றி தாமதிக்கமாட்டேன், ஒரு காரியமாகத் தான் தாமதித்தேன்.''

கொண்ட பெண்சாதியையும் குழந்தைகளையும் வீட்டி லடைத்துவிட்டு ஒரு கிரகஸ்தன் இரவு மூன்றும் சாமம் வரையில் வெளியிற்போயிருப்பது வெகு மரியாதையான காரணந்தான்!

''ஏனிப்படி என்னை புத்திகலங்கும்படி இம்சிக்கின்றாய்? இவ்வாறு நீ செய்வாயேயானால் எனக்கு பைத்தியம் பிடித்துப்போகும் என்பதில் ஆக்ஷேபமில்லை.''

அப்படி பிடித்துப்போவது வெகு உத்தமம். உம்மை வெளியில் விடாமல் ஒரேயிடத்தி லிந்த வீட்டில் கட்டிப் போடலாம். நான் சொல்லுகிற சொற்களால் பைத்தியம் பிடித்துவிடும் என்ற பயம் உமக்கிருந்தால் நீர் வெளியே போவீரா?

''நான் சொல்லுவதைக் கேள்.''

என்ன பிரயோஜனம்? நித்தியந்தான் ஏதாவது ஒரு சாக்குப்போக்கு சொல்லி அழகான ஒரு கதைசொல்லி என்னை ஏய்த்துவிடுகின்றீர்கள் நீங்கள்சொல்லுவதில் எனக்கு நம்பிக்கையே போய்விட்டது. நானும்தான் நீங்கள்

சொல்லுவதை சில சமயங்களில் நம்பிவிடுகிறேன். நான் ஒரு பைத்தியக்காரி என்று நீங்கள் நகைக்கின்றீர்கள். உமது கதையைக் கட்டிவையும். என்னை குற்றங்கண்டுபிடிக்கும் குணமுள்ளவள் என்று வீண் அபவாதம் சொல்லவேண்டாம். என்னைப்போல் வேறு ஒருவள் உங்களிடம் இவ்வளவு இம்சைப்பட்டிருந்தால் அவளிதுவரையில் பிழைத்திருக்க மாட்டாள்.

''நான் சொல்லுவதைத்தான் கேட்டுவிட்டுப் பேசேன்.''

அப்படியே உமக்கிஷ்டமான கதையைச் சொல்லும் கேட்கிறேன். நம்பமட்டும் மாட்டேன். எல்லாப் பெண்டு களையும்போல நான் ஒரு பைத்தியக்காரி; எதைச்சொன்னு லும் நம்புவேன் என்று கருதவேண்டாம். ஸத்தியம்வைத்து உமது கதையை ஆரம்பிப்பானேன்? நியாயமான கதையை வெளியிட ஸத்தியமும் ஆணையும் வேண்டியதில்லை. 50 ரூபா பணம் கஜானாவில் ஸாயந்திரம் கட்டி ஒரு ஜப்தி மீட்டுக் கொடுத்து வந்தேன். ஜப்திஸாமான்கள் சரியாய் வீடு வந்தனவா என்று சாப்பிட்டபிறகு போய் பார்த்தேன். அதனால் நாழிகை பிடித்தது என்கின்றீர்கள். இப்படி பணத்தை கண்ட தடியன்களுக்கெல்லாம் கொட்டுகின்றீர் களே. நானும் என் குழந்தைகளும் தலையில் துணியைப் போட்டுக்கொண்டு போகிறதா என்ன? எந்தத் தடியனுக்கு பணத்தைக் கொட்டிக்கொடுத்தீர்கள்.

''ஒரு தடியனுக்கும் கொட்டிக் கொடுக்கவில்லை. வேண்டியவனுக்குத்தான் கொடுத்தேன்.''

எவன் சொத்து ஜப்தியானால் உமக்கென்ன? அவன் வியவகாரங்களை எல்லாம் நீங்கள் மேல்போட்டுக்கொண்டு நிற்கலாமா, அதற்காகவாவது 50 ரூபா சாயங்காலத்தில் கஜானாவில் கட்டவாவது! நாளைக்கு உமது சொத்து ஜப்தி யானால் அவர்கள் எல்லாரும் உமக்காக வெளியில்வந்து

Koviloor Academy

நிற்பார்களா? உம்மைப்போல் எல்லாரும் பைத்தியக் காரர்களாக யிருப்பார்களா?

"அகத்தியம் நிற்பார்கள்."

வீண்பேச்சு வாயால் பேசுவதில் என்ன பிரயோஜனம். நாளையதினம் ஸ்வாமி! எப்படியாவது உமது சொத்து ஜப்தியாகவேண்டும்! எந்தத் தடியன் உமக்கு உபகாரம் பண்ணப்போகிருன், அதை நான் பார்க்கவேண்டும்! நான் சொல்லுவது நிஜமா நிஜமில்லையா என்பதை நீங்களறிந்து கொள்ள இது அவசியம் நடக்கவேண்டும். அப்பொழுது தான் உங்களுக்குத் தெரியும்.

"உனக்கு ஒன்றும் தெரியாது. உலகம் இப்படி யிருக்கும் என்பதில் உனக்கு கியானமேயில்லை."

ஆகா! அப்படியா கியானத்துடன் 50 ரூபா கொட்டி விட்டுவந்தீர்களே! தீபாவளிக்குச் செலவு கேட்டால் அதற்கு ஆயிரம் ஆக்ஷேபணை, இரண்டாயிரம் சொற்கள்! உலகம் உங்களைப்பார்த்து சிரிக்கிறது. உங்களைப்போல் மற்ருெரு முட்டாள் உலகத்திலேயே யில்லை என்று உலகத் தார் எல்லோரும் சொல்கிருர்கள். உலகத்தார்கள் எல்லாரும் உங்களை ஏய்த்து பணம்பிடுங்கி விடுகின்ருர்கள். என்னுல் மட்டுந்தான் உங்களிடமிருந்து பணம் பிடுங்க முடியாமலிருக்கிறது. இனி யிதுதான் வழி. இன்று ஒரு தடியனுக்கு ஜாமீனிருந்து பணம் செலுத்தி அவன் ஜப்திப் பொருள்களை மீட்டுவந்தீர்கள். நாளைமுதல் இதுவேதான் உமது காரியம். ஒவ்வொரு கச்சேரியிலும் நீங்கள் போய் நிற்கலாம். இதுவரையில் ஆளை மூடிவைத்துப் பேசுகிறீர்கள். நீங்கள் சொல்லாவிட்டாலும் எனக்கு புத்தியில்லையா. அந்த குஷால்தாஸ் ஸ்நேகம் என்றைய தினம் உங்களுக்கு உண்டாயிற்ருே அன்று முதல் உங்களை ஏழரை நாட்டுச்சனி பற்றிற்று! உங்கள் பிராணனை உறிஞ்சாமல் அவன் உங்களை விடப்போகிறதில்லை.

"குஷால் தாஸல்ல."

ஆகா! அப்படியா. அவனல்லவா? ஏன் வீண்பொய் பேசி நகைக்கின்றீர்கள். அவனுக்குத்தான் எங்கு பார்த்தாலும் கடன். அவனை ஒரு காசுக்கு ஒருவரும் மதிக்கின்றதில்லை. அந்த அற்பநாயின் யோக்யதை எனக்குத் தெரியாதா! அந்த அற்ப நாய்க்கா உபகாரம் பண்ணினீர்கள். வெகு அழகு. அவனைச் சேர்க்க வேண்டாம் வேண்டாம் என்று ஆயிரந்தடவை கெஞ்சிக்கேட்டுக் கொண்டேனே! அவனைப் பார்த்தால் யமனைப்பார்ப்பது போலிருக்கிறதே. நாளை அவன் புதுச்சேரிக்காவது காரைக்காலுக்காவது ஓடிவிடுவானே. தொலைந்ததா 50 ரூபா. உமக்குத்தான் உமது வீட்டுவிஷயத்திலும் இவ்வாறு விசாரமே யில்லாமற்போமா! ஜகதீசா! இவ்வண்ணம் என்னை ஏன் இம்சிக்கின்றாய்! என் புருஷனுக்கு நற்புத்தி கொடுக்கக்கூடாதா? நல்லது இவ்வளவு செய்தும் அந்த குஷால் தாசுக்கு நன்றியுண்டா? அந்த நன்றியற்ற நாயாகிய அற்பனுக்கு ஒரு நிமிஷத்தில் 50 ரூபா வாரி வீசுகின்றீர்கள்; குழந்தைகள் கந்தையைக் கட்டிக்கொள்ளட்டும். தீபாவளிச் செலவு என்னத்திற்கு என்று என்னை அதட்டுகின்றீர்கள்!

"ஏனடி நாய் குரைப்பதுபோல் குரைக்கின்றாய். நான் குஷால்தாஸ் விஷயமாய் வெளியே போகவில்லை."

ஐயோ! இந்தப் பொய் உம்மைவிடமாட்டாதா? புண்ணாயிருக்கும் என் மனத்தை ஏன் இன்னும் புண்பண்ணுகின்றீர்கள்? அந்தத் தடியனுக்காக ஜாமீன் புகவில்லை. அவனுக்காக பணம் கொடுக்கவில்லை என்றால், வேறு எவனுக்காகக் கொடுத்தீர். சொல்லித் தொலையும். அதைத்தான் கேட்போம். ஆனால் உமது பொய்யை ஒரு பொழுதும் நம்பவே மாட்டேன்!

"நம்பாவிட்டால் போ! உன் தமையன் சம்புபிரஸாதுக்காக இன்று மத்தியானம் நான் செய்வாப்பேட்டை

சென்று பணம் கட்டினேன். ஜப்தியான சொத்து திரும்பி வந்ததா என்று பார்த்துவர இன்று இரவு சாப்பிட்டு விட்டு செவ்வாய்ப்பேட்டைபோய் வந்தேன். நாழியாய் விடவே உன் வாயால் இவ்வளவு பிடுங்கல் பட்டேன்! போதுமா?''

என் தமையன் சம்புபிரஸாதுக்கா? என் ரத்தினமே! என் கண்ணே!

இவ்வளவுதான் அம்மணிபாய் சொன்னாள். அதற்கு மேல் சொல்ல வாய் எழவில்லை. தனது கணவன் தன் தமையனுக்கு அவ்வளவு உபகாரம் செய்துவந்திருக்க அக் கணவனைத் திட்டினோமே என்ற வெட்கம் அவள் ஜன்மத்தில் அன்று தான் முதல் முதல் தோன்றி ராமபிரஸாதின் உத்தம குணங்கள் அவளைக் கவர்ந்துகொள்ள விம்மி விம்மி அழுது ஒன்றும் பேசாமல் வாயடைத்து நித்திரை செய்யலானாள்.

ராமபிரஸாதும் தான் செய்துவந்த உபகாரத்தை உடனே சொல்லிவிட்டால் இவள் அடங்காள், இவள் போக்குப்படியெல்லாம்விட்டு கடைசியில் இவள் ஆச்சரியப் படும்படி தெரிவித்தால் இவள் நம்மிடம் வெகு ஸந்தோஷப்படுவாள் என்று முன்னமேயே யோசித்து வந்தவனாகையால் இந்த யுக்திசெய்து அதன் பயனை முற்றிலும் அனுபவித்தான். பயனாவது என்ன என்று நமது நண்பர்கள் சந்தேகிக்கலாம். இதன்பிறகு அம்மணிபாயின் மந்திரோபதேசங்கள் ஒரு வாரம் நின்றுவிட்டன. அவ்விரவு களிலெல்லாம் ராமபிரஸாத் நிர்பயமாய் நித்திரைசெய்து வெகுநாளாய் இளைத்த தனது உடம்பை தேர்த்திக் கொண்டான்.

Koviloor Acadamy

பதினெட்டாவது

மந்திரோபதேசம்

——

ராமபிரஸாதின் கடைசிக் குழந்தையின் ஆண்டு நிறைவு

——

நாளைப்பொழுது விடிந்தால் குழந்தைக்கு அப்தபூர்த்தி யாயிற்றே, சாப்பாட்டுக்கு யாரை எல்லாம் அழைப்பேன்.

"இதைப்பற்றி இப்பொழுது ஒரு யோசனையா? நாளைப் பொழுது விடியட்டும், பார்த்துக்கொள்ளுவோம். தூக்கம் கண்ணைச் சுற்றுகிறது."

பொழுதுவிடிந்தால் நான் வீட்டுக்காரியம் பார்ப்பேனா? உங்களுடன் பேசிக்கொண்டு நிற்பேனா? பகலெல்லாம் உழைத்தேன். உங்களுக்குமுன் எனக்கும் உங்களைவிட அதிகத் தூக்கம் வருகின்றது. ஏதோ நாளை ஒரு நல்ல நாளாயிற்றே; அதைப்பற்றி இன்றிரவு பேசுவோம் என்றால் 'செள்' என்று என்மேல் விழுகின்றீர்கள். தூக்கம் தினந்தோறும் இருக்கவே யிருக்கின்றது. ஒரு நல்ல நாள் என்றால் அப்பொழுதுதான் நீங்கள் கடுகடு சிடுசிடு என்றிருப்பது வழக்கம். நான் என்ன அதிகமாய் கேட்டுவிட்டேன். நாளை யாரை எல்லாம் சாப்பாட்டுக்கு அழைக்கிறது என்று ஒரு பெண்சாதி கேட்கக்கூடாதோ! அதற்கு அழகாய் புருஷன் மறுமொழி சொன்னால் அது கௌரவமாயிருக்காதோ. அப்படியில்லாமலா ஒவ்வொரு வீட்டிலும் எத்தனையோ விசேஷங்கள் நடக்கின்றன. அவ்வித பாக்யம் எனக்கிருக்கிறதா. இதொன்றும் வேண்டாம் என்றிருக்க என் தொண்டை அடைக்கவில்லை. என்னை என் தாயார் ஒரு ஊமைப்

Koviloor Acadamy

பெண்ணாகப் பெற்றிருக்கலாகாதா! இவ்வளவுவித அவமானங்களுக்கும் யிடமில்லாமல் நான் என் காலத்தைக் கழிப்பேனே. நீங்கள் என்னதான் என்னைத் தள்ளிவைத்துப் பேசினாலும், என்னதான் ஒதுக்கினாலும் நாளைக் காரியம் நடந்தே தீரவேண்டுமல்லவா. இன்னம் ஒரு பெண்ஜாதி என்றால் இரண்டாவது தடவை வாயைத் திறக்கமாட்டாள். என் குழந்தைமேலிருக்கும் ஆசை என்னை மறுபடியும் வெங்கங்கெட்டும் பேசச்சொல்லுகின்றது. இன்று ஒரு இரவு எனக்கு சரியான பதில் சொல்லுங்கள். நாளைமுதல் உங்கள் வழிக்கு நான் வரவில்லை.

''இதென்ன பெரும் உபத்திரவமாயிருக்கிறது, யாரை வேண்டுமோ அவர்களை அழையேன்.''

இதென்ன வேண்டாத பேச்சு. இப்படி நீங்கள் சொல்லுவதற்கு அர்த்தமே யில்லையே. இவ்வண்ணம் ஒன்றிலும் படாமல் நான் வேறு நீங்கள் வேறுபோல் பேசினால் என்ன செய்கிறது. எங்கிருந்து இவ்விதமாக பேச்சுகள் உங்களுக்குப் படிந்ததோ தெரியவில்லையே. புருஷன் பெண் சாதி என்றிருந்தால் இருவரும் ஒத்திருந்தாலல்லவோ எல்லாக் காரியங்களும் அழகாய் நடக்கும்! முன்னும் போகவிடாமல் பின்னும் போகவிடாமல் பேசினால் நான் என்ன பண்ணுவேன். உமக்குத்தான் ஆசை என்பது கொஞ்சமேனுமிருக்காதா!

''ஏனிப்படி என் பிராணனை வாங்குகிறாய். உனக்கு யாரை அழைக்கவேண்டும் சொல். கேட்போம். நானும் சொல்லுகிறேன். சீக்கிரமாய் இந்த விஷயத்தை முடித்து விட்டு கண்ணயருவோம்.''

இது அழகு. இதுதான் நூற்றில் ஒரு நல்ல பேச்சு, கோடி வீட்டில் குந்துமணி யிருக்கிறாள். அவளுக்குக் குழந்தைகள் கிடையாது; அத்துடன் நமது குழந்தைகளிடம் அவளுக்கு அதிக பிரீதி. எப்பொழுதாவது நமது வீட்டுப்

Koviloor Acadamy

பக்கம்போனல் உட்புகுந்து நமது குழந்தைகளுக்கெல்லாம் தலைவாரி முடியாமல் போகிறதேயில்லை. நேற்று அவள் புருஷர் நமது குழந்தைகளுக்கெல்லாம் ஆளுக்கொரு வாழைப்பழம் வாங்கிக்கொடுத்தார். அவளை நான் அழைக்கிறேன். அவள் புருஷரை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம், அவர்களை நீங்கள் அழைக்கவேண்டும்.

''குந்துமணியை நீ அழைப்பதில் எனக்கு அக்ஷேபமில்லை. அவள் புருஷனை எனக்குத் தெரியாது.''

தெரியாவிடில் என்ன? நல்லநாள் என்று அழைத்தால் அவர் வராமலிருக்கமாட்டார். நமது குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாழைப்பழம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று அவர் தலையில் எழுதியிருந்ததா என்ன? ஆசையாற்றான வாங்கிக்கொடுத்தார். அவரை அழைப்பதால் உங்களுக்கு நஷ்டமென்ன? நாளை, மற்றுநாள் இன்னும் குழந்தைகளுக்கு ஏதாவது அவர் கொடுப்பதை நாம் நிறுத்தவேண்டுமா.

''ஸரி ஸரி அழைக்கிறேன்.''

நடுத்தெருவு நாராயணபிரஸாதை அழைப்போமா வேண்டாமா? அவருடைய மனைவி வெகு கர்வி. அவளைக் கண்டால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

''அவர் நமது ஜாதியில் வெகு பெரியவர். அழைக்காமலிருந்தால் நன்றாயிருது.''

உங்களிஷ்டம்! எனக்குப் பிடிக்கவில்லை! அப்படிப் பார்க்கப் போனல் செவ்வாப்பேட்டையில் நமது யினத்தார் 500 வீட்டுக்காரர்களிருக்கிறார்கள். எல்லோரையும் போய் அழைத்துவாருங்கள்! கூட நான்கு ஐந்து பரிசாரர்களோ திட்டஞ்செய்து எல்லோருக்கும் வடித்துக் கொட்டுங்கள்! இல்லாவிடில் உங்கள் சமர்த்து எனக்குத் தெரியாதா?

''உனக்காக நான் அவரை அழைக்கவில்லை. போதுமா?''

எனக்காக ஒன்றும் நிற்கவேண்டாம். நான் பொல்லா தவள். நாராயணதாஸ் மனைவி உங்களுடைய அபிப் பிராயத்தில் நல்லவள்.

''ஏன் வீண் அபவாதங்கள் பேசுகின்றாய், நானவரை அழைக்கவில்லை.''

உங்களுடன் பேசி என் தொண்டைத் தண்ணீர் வற்று கிறது அதை அத்துடன் விட்டுவிடுவோம். யாரை அழைத் தாலும் அழைக்காவிட்டாலும், சங்கரிகிரிக் கிழவியை அழைத்தே தீர வேண்டும். அவள் நமது ராதாபாயின்மேல் உயிர்.

''அப்படியே.''

கடைத்தெரு கார்த்தவீரனை அழைக்கவேண்டும். அவனுக்கு சமையல் செய்து போடமுடியாது. வெற்றிலை பாக்கும் சந்தனமுமாவது கொடுத்தனுப்பவேண்டும். அவன் தான் அம்பிகா தாஸனுடைய அரைஞாணை சீர்திருத்திக் கொடுத்தான்.

''ஆகட்டும்.''

நமது வீட்டுக்கு 4-வது வீட்டிலிருக்கிறாரே இலந்தொரை வைத்தியர் அவரை அகத்தியம் அழைக்கவேண்டும். சங்கரன் வயிற்றுக்கட்டியை அவர் தான் எவ்வளவோ பாடுபட்டுக் கரைத்தார் அவரை மறக்கலாகாது.

''மறக்கவில்லை.''

காலையில் ராதாபாய்க்குப் பின்னிபட்டுக்கட்டி அனுப்பு கிறேன். ஒரு வண்டி வரவழைத்து அதில் உட்கார்ந்து கொண்டு நீங்களும் அவளுமாய் இந்தத் தெருவு முழுமையும் அழைத்து விட்டு செவ்வாப்பேட்டையில் நமது பந்துக்கள் ஒருவர்விடாமல் அழைத்துவர வேண்டும்.

Koviloor Acadamy

"அப்படியே ஆகட்டும். இத்தனைக்கும் எவ்வளவு செலவாகும் என்று நினைக்கின்றாய்."

அப்படி என்றால் குழந்தைகளைப் பெறாமலிருக்கவேண்டும். ஒன்றும் செலவேயிருக்கமாட்டாது. ஒரு நல்லநாள் பெரிய நாள் என்றால் நான்குவிதம் சமையல் செய்து ஊரார்களுக்கு விருந்தளிக்கவேண்டாமா? இல்லாவிடில் பெரியவர்கள் நல்லநாள் கொண்டாடவேண்டும், என்று ஏன் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்? தினம்தோறும் நமது வீட்டு சாப்பாடு நமக்கு இருக்கவே யிருக்கிறது! பெரியநாள் கொண்டாடினால் குழந்தைகள் பீடை நீங்கும் என்று உலகத்தார் சொல்லும் சொல் பொய்யா? அதென்ன அப்படிக் கேட்கின்றீர்கள்!

"என்னடி முன்பின் யோசியாமல் பிதற்றுகிறாய், ஒரு ஆண்டு நிறைவுக்கு ஊர் கூட்டினால் மற்றவைகளுக்கு என்ன செலவாகும்! யோசித்துப் பார்!"

அதென்னவோ! இனிமேல் குழந்தை பிறந்தால் நீங்கள் ஆண்டு நிறைவே செய்யவேண்டாம். இதற்கு செய்யத் தான் வேண்டும். உங்களுக்கு நீங்களாய் செய்யும் செலவு தோன்றாது. நான் கேட்டால் அப்பொழுதுதான் எல்லாவித ஆக்ஷேபணையும் தோன்றும். நான் விடேன்! இந்த நஷ்டம் என்னால் உங்களுக்கிருக்கட்டும்! இனி நான் ஒரு நல்லநாள் கொண்டாடுங்கள் என்று உங்களைக் கேட்கிறதே யில்லை! உங்கள் பாடு!!

இப்படி இவள் சொல்லும்பொழுது கடைசிக் குழந்தை அழ ஆரம்பித்தது. அதைச் சாந்தம் பண்ண அம்மணிபாய் அதனிடம் சென்றாள். இன்னும் கொஞ்ச நாழிகைக்கு முன் அது அழுதிருக்கக் கூடாதா என்று ராம்பிரஸாத் அதன் மேல் குற்றஞ்சாட்டிக் கொண்டு அந்த சமயம் பார்த்துத் தூங்கிவிட்டான்.

Koviloor Acadamy

பத்தொன்பதாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் என்ன எண்ணெய்க் குளி என்ன செலவு என்று பகலில் கண்டித்த விஷயத்தைக் குறித்து

என்ன அப்படி உங்களுக்கு தலைதெரியாமல் காலமே கோபம் வந்தது! நல்ல குணம் உங்கள் குணம்! தை வெள்ளிக்கிழமை என்பது எல்லோருக்கு மில்லையோ? நமது வீட்டிலும் நான்கு குழந்தைகளிருக்கின்றனவே. குந்துமணி போல் ஒன்றுமில்லாம லிருந்தால் ஒரு செலவுமில்லை. வெள்ளிக்கிழமையாயிற்றே, மாவிளக்குப் போடவேண்டுமே என்று பறக்கப்பறக்க காலமே எழுந்து வென்னீர்வைத்து எல்லாக் குழந்தைகளுக்கும் எண்ணெய் தேய்த்தேன். எங்கு பார்த்தாலும் சீயக்காய் எங்கு பார்த்தாலும் எண்ணெய். தலைவாரின மயிர் எங்கும் கிடக்கின்றது என்று கடுகடு என்று கொதித்து விழுந்தீர்களே. நான் என்ன, நமது வீட்டு எண்ணெயை வாயில் போகிறவர்களுக்கு வாரிக் கொடுத்தேனா—நமது குழந்தைகளுக்குத்தானே தேய்த்தேன் எண்ணெயை குடித்துவிடவில்லையே. எண்ணெய் முழுக் கென்றால் தலைவாராம லிருப்பார்களா? சீயக்காய் அறைக்காமலிருப்பார்களா? நான்கும்தானிருக்கும்! எந்த வீட்டில் எண்ணெய்தேய்க்காமலும் சீயக்காய் அறைக்காமலு மிருப்பார்கள்!

"என்ன பெண்பிள்ளையடி நீ. நானென்ன சொன்னேன்? கண்டபடி எங்கு பார்த்தாலும் ஆபாஸமா யில்லாமல்

Koviloor Acadamy

மட்டாயிருக்கக்கூடாதா? அவ்வளவு குழப்பம் என்னத்திற்கு என்றேன். எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னேன்!''

நீங்கள் சொன்ன சொல் எனக்குத் தெரியாதா? அவ்வளவு புத்தி எனக்கில்லையா? நான் ஏதோ இந்த வீட்டு சாமான் விஷயங்களில் கருத்தில்லாதவள் போலும் நீங்கள் தான் வெகுசெட்டாக இந்த குடித்தனத்தை தாங்குகின்றவர்கள் போலும் என்னை அவமானம்பண்ணிப் பேசிவிட்டு இப்பொழுது வார்த்தையை விழுங்குகின்றீர்களே. அதற்கென்ன நாளைக்கு இந்த வீட்டிலேயே ஒருவருக்கும் எண்ணெய் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் நிறுத்திவிடுகிறேன். எல்லாக் குழந்தைகளுடைய தலைமயிரும் சடைசடையாய் சிக்கும் பேனுமாய் மாறட்டுமே. அம்மாதிரி குழந்தைகளை வளர்க்கும் மனைவி உமக்கு ஒருவள் கிடைத்திருந்தால் வெகு ஸந்தோஷமாய் அவளுடன் வாழ்வீர்கள். என்னைக் கண்டால் உமக்கு வேம்பா யிருக்கிறது. அம்மாதிரி என் குழந்தைகளை பரதேசிகளாகவிட எனக்கு மனமில்லை! உங்கள் வாயால் இவ்வளவு சொற்கள் கேட்கவேண்டும் என்று என் தலையில் எழுதியிருக்கிறதே! கண்ட யிடங்களிலெல்லாம் எண்ணெய் சிந்தியிருக்கின்றேன் என்று என்னைச் சொன்னீர்களே! ஒரு யிடத்தில் ஒரு சொட்டு எண்ணெய் நான் சிந்தின அடையாளத்தைக் காட்டுங்கள். உங்களுக்கு உங்கள் பாகவத கோஷ்டியில் சேர்ந்த பிறகு எண்ணெய்க் குளி நின்றுவிட்டது. எண்ணெய் தேய்த்துக்கொள்ளுகிறவர்களைக் கண்டால் மனம் பிடிக்கவில்லை. அதற்காக கண்டபடியெல்லாம் பேசலாமா? உமக்கு வெட்கந்தானில்லையா?

''ஆம், எனக்கு எண்ணெய் தேய்த்துக்கொள்ளுகிறவர்களைக் கண்டால் பிடிக்கத்தானில்லை.''

அதற்கு யார் என்ன செய்வார்கள்! அதற்கு நீங்கள் எண்ணெயில்லாத ஊரில் பிறந்திருக்கவேண்டும். அந்த

Koviloor Madam

பாகவத கோஷ்டியிலேயே மூழ்கிக்கிடக்கவேண்டும். உமக்கு பிடிக்காவிடில் உலகத்துக்கே வேண்டாம் என்று நீங்கள் எண்ணிவிட்டால் உங்களைவிட பெரும் மூடன் உலகத்தி லுண்டோ? உம்முடன் இனி வாழ்வதே கஷ்டமாகவிருக்கும் போலிருக்கிறதே.

''வாழாமற்போனால் வெகு சந்தோஷம்.''

வெகு ஸந்தோஷமா! இந்தப் பாழான பிராணன் படக் என்று போகமாட்டேன் என்கின்றதே!! நீங்கள் என்ன மிருகமா? மனிதஜன்மமா? நான் இந்த குடும்பத்தைக் கட்டிக்கொண்டு யிவ்வளவு சிரமப்பட நீங்கள் ''நான் வாழாமற்போனால் வெகு ஸந்தோஷம்'' என்கிறீர்கள். உங்களுக்கு ஸந்தோஷந்தான். நீங்கள் கடின நெஞ்சம் உள்ளவர்கள். என் குழந்தைகள் சந்தியில் நிற்கும். ஒரு வாரத்துக்கு அல்லது 10 நாளைக்கு ஒரு தடவை எண்ணெய் தேய்த்துக் கொள்ளுவதில் உங்கள் கண்களில் துரும்பு உறுத்துவது போலிருக்கிறது இன்னும் உலகத்தார் போல நான்குநாளைக் கொருதடவை எண்ணெய் யிட்டுக்கொண் டால் உங்கள் அவஸ்தை வெகு அதிகமாக விருக்கும்போல் தோன்றுகிறது.

''பத்துநாளைக் கொருதடவை யிருக்கையிலேயே வீடு முழுமையும் எண்ணெய்க்கிணறு நாற்றம் நாறுகின்றதே ''

நல்ல கொள்கை உங்களுடைய கொள்கை! குழந்தை கள் தேகசௌக்யத்தை உத்தேசித்து நான் சிரமப்படுவ தெல்லாம் சாம்பலில் ஊத்திய ஆகுதிபோலாகின்றது! உமக்கு கருணையே யில்லை. உமக்கு ஒன்று பிடிக்காவிடில் ஒருவருக்கும் வேண்டாம் என்கின்றீர்கள். உம்முடன் கொஞ்சநாள் வாழ்ந்தால் உமது மனைவிக்கு பிராணனே போய்விடும் போலிருக்கிறது. உமது விஷயத்தில் மட்டில் ஒன்றும் குறைவிருக்கக்கூடாது. ஒரு நாள் கீரை பண்ணி

Koviloor Acadamy

விட்டால் தினந்தோறும் இந்தப் பாழுக்கிரைதானு என்று வெள் என்று விழுகிறீர்கள்.

"நான் அப்படி ஒருநாளும் சத்தியமாய்க் கோபித்துக் கொள்ளவில்லையே."

ஏன் ஆணைசத்தியம் செய்கின்றீர்கள்? இன்று மத்தியானம் குழந்தைகளுக்கு எண்ணெய் யிட்டு நாழியாய் விட்டதே என்று தேங்காய்த் துவையலும், ரஸமும் அவசரமாய் சமையல் செய்திருந்தேன். நீங்கள் சந்தோஷமாய் சாப்பிட்டீர்களா? ஏன் பொய் சொல்லுகிறீர்கள்? உங்கள் உணவு விஷயத்தில் கடுகவ்வளவு குறைவுபட்டால் அஸாத்ய கோபம் உங்களுக்கு வந்துவிடுகின்றதே!

"தேங்காய்த் துவையல் எனக்கு ஒருநாளும் பிடிக்காது என்பது உனக்கு இத்தனைநாள் என்னுடன் பழகியும் தெரியாதா?"

பிடிக்கும் பிடிக்காது என்பதுகூட உண்டோ? ஒரு குடும்பம் என்றால் நான்கு நாள் சமையலுந் தானிருக்கும். நமது வீட்டில்தான் இது பிடிக்கும் பிடிக்காது என்கின்றீர்கள். நாளை ஒரு கிரகஸ்தன் வீட்டிற்கு சாப்பிடப்போய் உட்கார்ந்தால் அங்கும் அப்படி சொல்லுவீர்கள் போலிருக்கிறது. நான்தான் இன்றையதினம் எவ்வளவோ காரியங்கள் செய்துவிட்டு நாழிசென்று சமைத்தேன். ஒரு வேளை ஒன்று குறைவாக விருந்தால் போனால் போகட்டும், இவள் இன்று சிரமப்பட்டிருக்கிறாள் என்று விட்டுவிடக் கூடாதா? உங்களுக்கு அதிகாரமிருக்கிறதென்று என்னை முற்றிலும் நசுக்கிவிடலாமா?

"ஏனடி ஒன்றுமில்லாததை எல்லாம் பெரியதாகப் பண்ணி கூச்சலிடுகின்றாய்?"

என் கூச்சலை நீங்கள் கொஞ்சம் சகித்துக் கொள்ளுங்கள். பகல்நேரம் ஒழியவில்லையே என்று இரவில் நீங்கள் செய்

Koviloor Academy

இந்த அக்கிரமங்களை பொறுக்காமல் எடுத்துச்சொன்னால் என்னை கூச்சலிடுகின்றேன் என்கின்றீர்கள். என் தாயார் எனக்கு அதிகமாய் கோரோசனை புகட்டிவிட்டாள். என்னுடைய வாய் பொல்லாத வாய்தான். உங்கள் வாய் போல் அடங்கின வாயில்லை. என்ன செய்கிறது! பொறுத்துக் கொள்ளுங்கள். இனி உங்கள் விஷயத்தில் ஒன்று குறை வில்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தேங்காய்த் துவையல் வேண்டாம், கீரை வேண்டாம், அப்புறம்.

''என்னடி ஒன்றில் ஆரம்பித்து மற்றொன்றில் திருப்பி என்னை வீண்வதை செய்கின்றாய்.''

நான் பொல்லாதவள். இனி என் வாயைத் திறக்க வில்லை.

என்று சொல்லி அம்மணி அன்றிரவு வாய்மூடினாள். எப்படியாவது அந்த பிரசங்கம் அவ்வளவுடன் நின்றதே என்று ராமபிரஸாத் ஸந்தோஷித்தான்.

இருபதாவது

மந்திரோபதேசம்

சேலத்து பெருமாள் கோவிலுக்கு அம்மணிபாயும் ராமபிரஸாதும் போயிருந்தபொழுது ரம்பாபாய் ராமபிரஸாதைப் பார்த்து சிரித்தது

இந்த அவமானத்துக்கு என்னை யின்றை சாயந்திரம் கோவிலுக்கு அழைத்துப்போகாம லிருக்கக்கூடாதா? தினம்

Koviloor Acadamy

தோறும் உலகத்திலுள்ள மற்ற மனைவிகள்போல் நான் கோவிலுக்கு கணவன் சையை பிடித்துக்கொண்டு போகிறது தவருகிறதே யில்லையா? இன்றைக்கு யிந்த அவமானத்திற்கா பெண் பிறந்தேன்! இனி நான் பிழைத்திருக்கிறவரையில் உங்களுடன் வெளியே புறப்படுகிறதே யில்லை என்று தீர்மானித்துவிட்டேன்.

"என்னடி எப்பொழுதும் ஒரே பாட்டாயிருக்கிறது. என்னை ஒரு நாளாவது ஸரியாய் தூங்கவிடமாட்டாயா?"

உங்களுக்கு தூக்கம்கூட வேண்டுமா? நீங்கள் செய்திருக்கிற அக்கிரமத்துக்கு வாய்கூட வேண்டுமா? உங்களுக்கு வெட்கம் மானம் ஒன்றுமில்லையா? இனி மானமுள்ள ஒரு பெண்ஜாதி உம்முடன் வெளிக்கிளம்பவே மாட்டாள். நீங்களும் மானங்கெட்ட புருஷனாய்விட்டீர்கள்! உமக்கு ஊரெல்லாம் பெண்ஜாதிகள்!

"என்னடி! உனக்கு யின்று இரவு ஏதாவது பிசாசு பிடித்திருக்கின்றதா என்ன!"

எனக்கு ஒன்றும் பிசாசு பிடிக்கவில்லை. உமக்குத்தான் ரம்பாபாய் பிசாசு பிடித்திருக்கிறது. எத்தனை நாளாய் அவள் பிசாசு பிடித்ததோ அது உமக்கல்லவோ தெரியும். அப்பிசாசு பிடித்த ஸமாசாரம் நானின்று ஸாயந்திரந்தான் கோவிலில் கண்டு கொண்டேன். வெகு அழகாயிருக்கிறது.

"அடி பாவி! ரம்பாபாய் என் சிநேகிதன் குஷால்தாஸ் பெண். எனக்கு என் பெண்ணுக்குச் சமானம். அடியே! கண் அவிந்துபோகும். கெட்டசொல் சொல்லாதே."

நான் பாவி! நீங்கள் பரமாத்மா! நான் ஒன்றும் தெரியாதவள். நீங்கள்தான் செட்டிக்காரர்! குஷால்தாஸ் வீட்டுக்கு அடிக்கடி நீங்கள் ஓடுகிற காரணம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்துவிட்டது. இதுவரையில் ஸந்தேகப்பட்டுக் கொண்டிருந்தேன். இன்று சாயந்திரம்

Koviloor Acadamy

நிச்சயமாயிற்று. ஏதோ வெகு யோக்கியர்கள்போல் அதிகமாய்ச் சீறவேண்டாம். உங்கள் யோக்யதை எனக்கு நன்ருக விளங்கிவிட்டது! இத்தனை நாள்தான் நான் பைத்தியக்காரியாக விருந்தேன்! இத்தனைநாள் என்னை மோசம் செய்தாற்போல் இனிமேலும் மோசம் செய்ய முடியாது. நீங்கள் வெகு யுக்தியாய் அவளைப் பார்த்தும் அவள் உங்களைப்பார்த்து சிரித்ததும் எனக்குத்தெரியாது என்று எண்ணிவிட்டீர்கள்! நான் என்ன கைக்குழந்தையா? அந்த முண்டை என்னை எவ்வளவு அலக்ஷியமாகப் பார்த்தாள் இல்லை இல்லை என்று நீங்கள் கோபிக்க வேண்டாம். எனக்கும் கொஞ்சம் தெரியும். எனக்கும் ஸ்வாமி புத்தி கொடுத்திருக்கின்ருர். வீட்டுப் பெண்சாதி வேம்பு; காட்டுப் பெண்சாதி கரும்பு, என்று ஜனங்கள் சொல்ல நான் கேட்டிருந்ததுண்டு! அதன் நிஜம் இன்றுதான் புரிந்தது!!

"அடிபாவி! நாவு அழுகிவிடும்? வெட்கமில்லையா? அப்படிச் சொல்லாதே."

வெட்கம் யாருக்கிருக்கவேண்டும்? ஒரு சிறு பெண்ணை ஒரு மானி கண்ணெடுத்துப் பார்ப்பானு? ரம்பாபாயிக்கும் வெட்கமில்லாமல் அவள் உம்மைப்பார்த்து சிரித்தாளே! அவள் கோணல் முகத்தை நான் கவனிக்கவில்லை என்று எண்ணவேண்டாம்? நீங்கள் என்னதான் ஒளித்துப் பேசினுலும் என்னை மோசம் பண்ணமுடியாது. நானும் அவள் வயதாயிருந்தால் என்னை பார்த்து சிரிப்பீர்கள். இப்பொழுது என்னைக் கண்டால் உமக்கு முகம் சுணுங்குகின்றது. நானும் என் வயதில் ரம்பாபாயுக்கு மேலான அழகானவளாகத்தானிருந்தேன். இனி உம்முடன் ஒருநாளும் கோவிலுக்கு வரவேகூடாது. ஒவ்வொரு சிறு பெண்ணும் உம்மை பார்த்துச் சிரிக்கிருள்!!

Koviloor Acadamy

"அடியே! அநியாயக்காரி முதலில் ரம்பாபாயை அவதூறு பேசினாய். இப்பொழுது எல்லாப் பெண்களையும் சந்தியிலிழுக்கின்றாய். இது தர்மமே அல்ல; வெகு பாவம்."

பாவம் புண்ணியம் இரண்டும் நேராய்போய் பார்த்து வந்தவர்கள் நீங்கள்தான்! இன்று சாயந்திரம் நான் கூட வந்ததாலல்லவோ பாவம் புண்ணியம் இந்த சொற்கள் வெளிக்கிளம்பின. நித்தியம் நீங்கள் இவர்களைக் காண்பதும் இவர்கள் உங்களைப் பார்த்து சிரிப்பதும் எனக்குத் தெரிய காரணம் ஏது? ரம்பாபாய் அழகு உம்மை அப்படி எல்லாம் இழுக்கிறது.

"அடியே! பாவி ஒரு உத்தமியை அவ்வாறு அநியாயமாய் நிந்திக்காதே. அவள் எனக்கு பெண்ணுக்குச் சமானம்.

அவள் ககூியில் பறிந்து பேசாமலிருப்பீர்களா? அவள் மாயப்பொடி தூவிவிட்டாள். இன்று வரையில் என்னை கூட இட்டுக்கொண்டு போகாமல் நீங்கள் தனிமையில் கோவிலுக்கும் மற்றயிடங்களுக்கும் போய் வந்த காரணம் விளங்கிற்று!

"உன் சந்தேகத்தை ஈசன்தான் தீர்க்கவேண்டும்? நான் ஒருபாவமும் அறியேன்."

இப்படி வெகு யோக்கியர்கள் போல் பேசுவதுதான் உங்களுடைய பெருந் தந்திரம். இரவில் அடிக்கடி குஷால்தாஸ் வீடு புண்ணியத்துக்காக நீங்கள் போகிறீர்கள். நாளை பொழுது விடியட்டும். நான் உங்கள் யோக்யதையை ஊரெல்லாம் அறியும்படி பிரசித்தப்படுத்துகிறேன்.

"உன்னிஷ்டப்படி செய்."

இஷ்டப்படியா! உமது சூது இப்பொழுதுதான் தெரிந்தது. அயல் பெண்களை நாடுகின்றவர்களா நீங்கள்? இந்த துர்க்குணம் உம்மிடமிருக்கும் என்று நானிதுவரை

Koviloor Acadamy

யில் சந்தேகிக்கவே யில்லையே! இவ்வளவு கெட்டிக்காரர்களா நீங்கள்? போனமாதம் முதல் வெள்ளிக்கிழமை தேங்காயை குஷால்தாஸ் வீட்டுக்கனுப்பும்படி நீங்கள் சொன்ன சொல்லின் அர்த்தம் இப்பொழுதுதான் எனக்கு புலப்படுகிறது. நான் பரமார்த்தி! வெளுத்ததெல்லாம் பால் என்றிருக்கிறேன். நான் ஒரு தடவையாவது நேராக தேங்காயை கொடுத்து வந்திருப்பேனே யானால் எனக்கு கொஞ்சமாவது சூது வெளியாயிருக்கும். இன்று என் கண்களால் கண்டுவிட்டேன்! முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கலாமா?

இவ்வளவு தூரம் அம்மணிபாய் சொல்லும் பொழுதே ராமபிரஸாத் அவ்விஷயமாய் அதிகமாகக் கேட்க காது கூசினவனாய் சரேல் என்று படுக்கையைவிட்டு எழுந்து சங்கரன் என்ற தனது குழந்தையிடம் வந்து படுத்து உறங்கலானான்.

இருபத்தோராவது

மந்திரோபதேசம்

வரலக்ஷ்மீ விரதம் நடத்த அம்மணிபாய் செய்த ஏற்பாடு

அடுத்த வெள்ளிக்கிழமை நோன்பு ஒன்று வருகின்றதே தெரியுமா?

"என்ன நோன்பு."

Koviloor Acadamy

வெகு அழகா யிருக்கிறது! இது தெரியாமலிருக்குமா? தெரிந்தே வேண்டுமென்று ஒன்றுந் தெரியாதவர்கள் போல் பேசுகிறீர்களா? தெரியத்தான் இல்லையா? உம்மைப் போல் இவ்வளவு மறதி எனக்கும் இருந்துவிட்டால் இந்த குடும்பம் என்னவாய் க்ஷேம மடையும்? நல்லது போனால் போகட்டும்! அடுத்த வெள்ளிக்கிழமை வரலக்ஷ்மீ விரதம். நான் சொல்லுகின்றேன்; இப்பொழுதாவது தெரிந்து கொள்ளுங்கள். இந்த விரதம் என் பிறந்தகத்தில் கிடையாது. உங்கள் வீட்டில் உண்டு. நான் முதல் முதல் கலியாணமாய் சேலம் வந்தபொழுது 15-16-வருஷங்களுக்கு முன் எனக்கு வரலக்ஷ்மீ விரதம் எடுத்து வைத்தீர்களே நியாபகமிருக்கிறதா?

''எல்லாம் நியாபகமிருக்கிறது. அது முதற்றான் 16-வருஷகாலமாய் நடக்கிறதே. இப்பொழுது என்ன விசேஷம். வழக்கப்படி நடத்த வேண்டியதுதானே.''

இப்படி என்னைத் தூக்கி எறிந்து பேசினால் நான் என்ன செய்வேன். என்னைக்கண்டால் ஏன் உங்களுக்கு வேம்பா யிருக்கிறது. 16 வருஷங்களுக்குமுன் இந்த விரதம் ஆரம்பிக்கும்பொழுது என்னுடன் எவ்வளவு அன்பும் ஆதரவுமாய்ப் பேசினீர்கள். அப்பொழுது நானிருந்த அழகும் சிறுபிராயமும் இப்பொழுது எனக்கிருந்தால் இவ்வளவு ஆதரவற்ற பேச்சு உமது வாயைவிட்டுப் புறப் படுமா?

''ஏதாவது பிதற்றாதே.''

ஆம், நானிப்பொழுது பேசும் பேச்செல்லாம் பிதற்ற லாகத்தான் உங்களுக்குத் தோன்றும்;அது என் தலைஎழுத்து!

''உன் இம்சை இப்பொழுது அதிகமாய்விட்டது. நான் எழுந்து போகின்றேன்.''

Koviloor Acadamy

யோகலாம்! உமக்கு சக்தியிருந்தால் புறப்படுங்கள்! நேற்று உமது குணத்தைக் கண்டுகொண்ட பிறகு இன்றிரவு நான் சதுவை உள்பூட்டு பூட்டி சாவியை மடியில் வைத்திருக்கின்றேன்!!! பகலிற்ருன் முகங்கொடுத்துப் பேசுகிறதேயில்லை! இரவிலும் ஒடப்பார்த்தால் அப்புறம் நான் போகும்வழி என்ன? ஆகையால் சந்தோஷமாகப் பேசி நமது ஏற்பாட்டை ஒருவாறு முடிப்போம். அதிகமாய் வீண்பேச்சு வேண்டாம். வரலக்ஷுமீ விரத விஷயமாய் என்ன செய்யலாம் சொல்லுங்கள். இந்த நோன்பு கணவனுடைய க்ஷேமத்துக்காக ஒரு மனைவிசெய்யும் பூஜை. உமது அனுகூலத்துக்காக நானிவ்வளவு சிரமப்பட்டுக் கேட்டால் வெளியில் ஓடிப்போகிறேன் என்கின்றீர்கள். நீங்கள் வெளியிலிவ்வண்ணம் ஓடும் காரணம் எனக்குத்தெரியாதா? வெட்கமில்லையா? நாம் இருவர்தானு இந்த நோன்பு செய்யப்பட்டவர்கள். உலகம் முழுவ இதைக் கொண்டாடுகின்றதே நியாயமாய் செய்யவேண்டியதைச் சொன்னால் உமக்கு நாய்க்கு கோபம் வருவதுபோல் கோபம் வருவானேன்? இதற்கு அதிகச் செலவும் ஒன்றுமில்லையே. யாராவது நான்கு பெயர்கள் ஸுமங்கலிகளை சாப்பாட்டுக்குச் சொல்லவேண்டும். நாம் நமது குடும்பத்துடன் ஏதாவது இரண்டொரு விசேஷ சமையல் செய்து சாப்பிடவேண்டும்.

"ஏற்பாடுகள் எல்லாவற்றையும் செய்திருக்கின்ருயே! என்னை ஏன் வருத்துகின்ருய்?"

என் ஏற்பாடு எத்துடன் சேர்ந்தது! கொண்ட கணவன் உத்தரவில்லாவிட்டால் வரலக்ஷுமீயே கோபித்துக் கொள்ளுவாளே. நீங்கள் உத்தரவிட்டாலல்லவா நோன்பின் லாபம் எனக்குக் கிட்டும். மற்ற விஷயங்களில் உங்களைக் கேட்காமல் நான் நடத்துவதுபோல இதிலும் நடந்து விட்டால் பயன்படமாட்டாதே. அதற்காகத்தான் இன்று இவ்வளவு மானக்கேடாய் நீங்கள் என்னை நடத்தின போதிலும் நான் உங்களைக் கெஞ்சி கேட்கின்றேன்!

Kovilpor Acadamy

"உன்னிஷ்டப்படி செய்ய எனக்கு ஆக்ஷேபமில்லை."

அது தான் கொண்ட புருஷனுக்கு அடையாளம். இந்த நோன்பும் கணவனை பிரதானமாக உடைய நோன்பாதலால் நீங்கள் ஒன்றும் தடுக்கமாட்டீர்கள் என்று நம்பிக்கை உண்டு எனக்கு. ஒருவிதமாய் நீங்கள் வழிக்கு வந்து விட்டீர்கள். இனி விசாரமில்லாமல் மற்ற விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். நாளை வெள்ளிக்கிழமை விசேஷ சமையல் என்னன்ன செய்வோம்?

"அதைப்பற்றி நாளை பேசிக்கொள்ளலாகாதா? அதற்கு கூட இதுதானா சமயம்?"

ஒரு நல்லநாள் பெரியநாள் விஷயமாகப் பேசத்தொடங்கினால் உங்களுக்குத்தான் இவ்வளவு குணம் எங்கிருந்து உதிக்கின்றது. எத்தனை தூக்கம்!! அந்த சமையல் விஷயத்தைக் குறித்துப்பேச ஒரு வருஷம் பிடிக்குமா! ஏனிப்படி முசுடாய் மாறிவிட்டீர்கள்!!

"உனக்கு வேண்டியபடி சமையல் செய்துகொள்."

ஒருநாளும் அப்படி செய்யவேமாட்டேன். வரலக்ஷ்மி நோன்பு எனக்காகவா நான் செய்கின்றேன்! என்னிஷ்டப்படி சமையல் பண்ண எனக்கு என்ன அதிகாரம். உங்களுக்குள்ள யிஷ்டத்தை சொல்லுங்கள். உங்கள் உள்ளம் குளிர வல்லவா நான் நோன்பு நூற்பது. என்ன கறி செய்யலாம்?

"கொத்தவரைக்காய்க் கறி ஒன்று."

சத்திரத்தில் கொத்தவரைக்காய்க் கறி செய்வார்கள். சக்கை சக்கையாய் அந்த கறி யாருக்குப்பிடிக்கும்! மாடுகள் கூட முகர்ந்து பார்க்காதே. நல்லநாளில் சமையல் செய்ய உங்களைத்தான் திட்டங் கேட்க வேண்டும்! சேனைக்கிழங்கு கறி செய்யலாமா?

"அப்படியே. ஆக்ஷேபமில்லை."

Koviloor Academy

வெகு ஸரி. அப்படி சொல்லுங்கள். உருளைக்கிழங்கு வருவல். வெண்டைக்காய் மோர்க்குழம்பு. பாகல்காய் பொரித்த குழம்பு.

''கத்தரிக்காய் புளிக்குழம்பு; புடலங்காய் பிட்லை.''

இந்த பரிகாஸம் தானே வேண்டாம்! நான் வெண்டைக்காய் மோர்க்குழம்பு, பாகல்காய் பொரித்தகுழம்பு என்றால் நீங்கள் கத்தரிக்காய் புளிக்குழம்பு. புடலங்காய் பிட்லை என்கின்றீர்கள். இரண்டு குழம்பு ஏன் செய்யவேண்டும் என்று என்புத்தியை கண்டித்தபடி. ஒரு விசேஷதினத்தில் ஒரு குழம்பு செய்வதை நான் கேட்டதேயில்லை. அதற்காக நான் இரண்டு குழம்பு சொன்னேன். நீங்கள் பரிகாஸம் பண்ணும்படி நான் சொல்லவில்லை.

''நானும் அந்த யிரண்டு குழம்புகளில்லாவிட்டால் என் இரண்டு குழம்புகளிருக்கட்டும் என்று சொன்னதாக நீ எண்ணிக்கொள்.''

ஸரி உம்முடன் சண்டைபோட எனக்கு சக்தியில்லை. நீங்கள் ஏதோ கொஞ்சம் தலைகொழுத்து யிருக்கின்றீர்கள்!! இன்னும் ஏதாவது ஒரு கறிபண்ணவேண்டும். அது இந்த ஊரில் ஒருவருக்கும் தெரியாத கறியா யிருக்கவேண்டும். அவியல் செய்வோமா!

''துவையலா.''

இன்னும் பரிகாஸந்தானா! துவையல் இந்த ஊரில் ஒருவருக்கும் தெரியாத கறி யாமா? அவியல் உங்களுக்குத் தெரியாதா. என் தாயார் எத்தனைதடவை உங்களுக்குச் செய்து போட்டிருக்கிறாள். வெகு நன்றாயிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்களே.

''ஆம் அப்படியே செய்.''

Koviloor Acadamy

பின்னும் இட்டெலி-கொழக்கட்டைகள் உண்டே அவைகளில் ஏதாவது விசேஷமான கொழக்கட்டைகள் வேண்டாமா.

''பொன் கொழக்கட்டை, வெள்ளிக்கொழக்கட்டை வேண்டுமானால் பண்ணிக்கொள்.''

நானினி வாயைத் திறக்கவில்லை. பொன் கொழக்கட்டையை வேண்டுமானால் ரம்பாபாயிக்கு நீங்கள் பண்ணிக் கொடுங்கள்! எனக்குக் கொழக்கட்டைக்கு பதிலாக நீங்கள் போட்டுக் கொள்ளும் மூக்குப்பொடியை பூரணமாக வைத்து கொழக்கட்டை பண்ணி குஷால்தாஸுக்குச் கொடுங்கள்!! அம்மனுடையகாரிடம் நாமின்றைய யிரவு அதிகமாய் பேசக் கூடாதென்று வாயை ஊசியால் தைத்துக்கொண்டு யிருந்தால் நீங்கள் தலைக்குமேல் ஏறுகிறீர்கள்! என்ன ஒன்றும் தெரியவில்லை போலிருக்கிறது? நானும் ரம்பாபாயைப் போல் அழகாயிருந்தால் இப்படி பேசமாட்டீர்கள்.

''இந்தா! அதிகமாய் பேசாதே, அந்த உத்தமியை அடிக்கடி வீண் அபவாதஞ் சொல்லாதே''

உத்தரவுப்படியே. நல்லது யாராரை அழைக்கலாம். ரம்பாபாயை அழைக்கலாமா?

''அந்த உத்தமியை அழைக்க உனக்கு யோக்யதை யிருக்கவேண்டுமே''

என்று சொல்லிக்கொண்டு இவளுடனினி இன்றிரவு வாதாடுவதில் பிரயோஜனமில்லை என்றெண்ணினவனாய் ராமபிரஸாத் கண்மூடினான்.

Koviloor Acadamy

இருபத்திரண்டாவது

மந்திரோபதேசம்

ராமபிரஸாத் ராதா கலியாணத்துக்குப் போனது

இந்தப் பாழும் பெண்ஜன்மம் வீண்! நானும் ஒரு புருஷனாக பிறந்திருக்கக்கூடாதா! எல்லாவித வேடிக்கைகளும் விநோதங்களும் புருஷர்களுக்குத்தானா! பெண்டுகளாய் பிறந்துவிட்டால் ஒரு உற்சவமும் கிடையாதா?

"நீ பெண்ணாய்ப் பிறந்தாயோ, உலகம் பிழைத்ததோ!"

இந்தப் பேச்சும் கேட்கத்தானிதுவரையில் கார்த்துக் கொண்டிருந்தேன். நான் புருஷனாய்ப் பிறந்திருந்தால் வெகு கெட்டவனாக யிருப்பேன் என்று என்னை நிந்தித்தீர்கள்! ஒன்றுமட்டும் எனக்குள் நிச்சயமுண்டு. உங்களுக்குச் சந்தேகமா யிருந்தால் உலகத்தாரைக் கேட்டுப்பாருங்கள்! நான் உங்களைவிட நல்லவனாகத்தானிருப்பேன்! இனிமேல் யிந்த பூமண்டலத்தில் உங்களைப்போல் கொடியவர் ஒருவரை நான் பார்த்ததே யில்லை. இத்தனைநாள் நான் அடங்கி ஒடுங்கி உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உங்களுடனும் உங்கள் குழந்தைகளுடனும் பட்ட பாடுக்கு இப்படித்தான் சொல்லாமல் நீங்கள் என்ன சொல்லுவீர்கள்! பாகவதர் கோஷ்டியில் சேர்ந்த நாள் முதல் உமக்கு பெண்சாதி, பிள்ளைகள் இவர்கள் மேலுள்ள ஆசை அன்பு எல்லாம் அழிந்து போய்விட்டது. நான் ஒரு மனைவி. புருஷனிடமும் குழந்தைகளிடமும் எவ்வாறு பணிவிடைசெய்து நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வாறு நடக்கின்றேன். நீங்கள் தான் எங்கள் எல்லாரையும் வேண்டாம் என்று தள்ளி

Kovilor Acadamy

விட்டு பாகவதர்களை கட்டிக்கொண்டு கூத்தாடுகின்றீர்கள். உமது மனத்தையே தட்டிக் கேளும். நீங்கள் இவ்வண்ணம் ஓடி ஓடி பாகவதர்கள் நடுவில் உட்காருவதுபோல் நானும் உமக்கு முன்னே ஓடி ஓடி, பாகவதிகள் என்று ஒரு கோஷ்டி யிருப்பதாக எண்ணிக்கொள்ளுவோம், அவர்கள் நடுவில் உட்கார்ந்தால் என்னை இந்த வீட்டுக்குள் நுழைய விடுவீர்களா?

"மாட்டேன்."

அப்பொழுது நான் நல்லவளோ, நீங்கள் நல்லவர்களோ, யோசித்துப்பாருங்கள். எத்தனை தடவை நீங்கள் பாகவத கோஷ்டியில் போய் கலந்து திரும்பிவந்தபோதிலும் நான் உம்மை என் கணவனாகக் கட்டிக்கொண்டுதானே மாரடிக் கின்றேன். உங்கள் மோதிரம் காணோம் என்று இன்று வீடு திரும்பினீர்கள். மோதிரத்தை வீட்டிலேயே ஒருகால் வைத்துவிட்டுப் போனேனா என்ன, நீ பார்த்தாயா என்ன, என்று என்னை கேட்டீர்கள், நானென்ன திருடியா? இது வரையில் திருடி என்ற வசவு நான் கேட்கவில்லை. அதையும் இன்று கேட்டாய்விட்டது. நீங்கள் ராதா கலியாணத்துக்கு போயிருந்தீர்களே. அந்த கலியாணத்துக்கு மோதிரப் பண மாக மோதிரத்தையே போட்டுவிட்டீர்களோ என்னவோ? அந்த கலியாணத்துக்கு என்னை அழைத்துப்போய் அந்த ஸமாராதனையில் எனக்கும் போஜனம் போடக்கூடாதா? அந்த வேடிக்கைகளெல்லாம் நீங்கள்தானா பார்க்க வேண்டும். மற்ற பாகவதர்கள் எல்லாரும் தங்கள் பெண்ஜாதி பிள்ளை களுடனும் வந்தார்களாம். நானும் என் குழந்தைகளுந்தானா பாவம் பண்ணினவர்கள். இத்துடன் போதாதென்று உங்கள் மோதிரம் எங்கு போயிற்றென்று என்னைக் கேட்கின்றீர்கள்.

"உனக்குத் தெரியாமற் எங்குபோயிற்று. நான் காலையில் ஸ்நாநம் பண்ணும்பொழுது கழற்றி இந்த உள்பிறையிற்றான் வைத்தேன். படுத்துக்கொள்ளும்முன் பார்த்தேன், காண வில்லை."

Koviloor Acadamy

இப்படித்தான் இருக்கும் உங்கள் சொற்கள் ஒவ்வொன்றும். உமக்கு ஏதாவது புத்தி கொஞ்சம் நெஞ்சம் மிகுந்திருக்கின்றதா? அல்லது எல்லாம் இன்று ராதா கலியாண சாப்பாட்டுடன் ஒழிந்ததா? எழுந்திருந்து அதே பிறையில் பாரும். அங்கு அந்த மோதிரம் இருக்கிறதாயில்லையா சொல்லும். இப்படித்தானே நாளையும் என்மேல் வீண் அபவாதங்கள் சுமற்றுவீர்கள். நீர் மறந்துபோனதை நான் சாக்கிரதையாய் காப்பாற்றிவைத்து "ஐயோ வெகு சிரமப்பட்டு வீடு திரும்பிவரும்பொழுது கணவர் கலங்குவார்" என்று நான் மனமிறங்கி நீங்கள் வைத்திருந்த யிடத்திலேயே இந்த அறையில் நீங்கள் வரும்முன் வைத்தேன். இவ்வளவு ஜாக்கிரதையாய் நான் செய்த உபகாரத்துக்குப் பதில் என்னை திருடி என்கின்றீர்கள்.

"அல்ல. நான் சொன்னது பிசகு. நீ வெகு நல்லவள்."

அப்படியா. வெகு ஸந்தோஷம். இன்று உம்முடன் பேசவேகூடாது. பாகவத சாப்பாடு மயக்கத்தி லிருக்கின்றீர்கள். உமக்கு மோதிரம் கிடைத்துவிட்டது. இனி வாயைத் திறவாமல் கண்ணயருங்கள்.

"நான் தூங்கவேண்டும் என்று நீ இவ்வளவு சிரமப்படுகிற காரணம் எனக்குத் தெரியும்! என் கண்ட ருத்திராக்ஷம் எங்கே? அதையும் நான் மோதிரத்துடன் தானே கழற்றிவைத்தேன்."

மோதிரத்தை ஜாக்கிரதையாய் வைத்திருந்ததுபோல் உங்கள் ருத்ராக்ஷத்தையும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

"உன்னை யார் அதை எடுத்து வைக்கச்சொன்னார்கள்? நான் சாப்பிட புறப்படும்முன் தேடு தேடு என்று அவைகளிரண்டையும் தேடிப்பார்த்து கழுத்தில் மாலையில்லாமற் போனேன். வெறுங்கழுத்தாய் பாகவத சபையில் உட்கார்ந்து சாப்பிடவேண்டியதாயிற்று. கழுத்தில் ருத்ராக்ஷமில்லாமல்

Koviloor Acadamy

இன்றுதான் சூதக நாளில் சாப்பிடுவதுபோல் சாப்பிட்டேன். என்ன அக்கிரமக்காரி நீ!!''

அப்படியா! உன்னை யார் எடுத்து வைக்கச்சொன்னார்கள் என்று என்னைப்பார்த்து நீங்கள் உங்கள் பற்களின்மேல் நாவைப்போட்டு கேட்க தைரியம் வந்ததா!! நான் உங்களுடைய கொண்ட பெண்ஜாதியல்லவா? உங்கள் கண்ட மாலையை எடுத்துவைக்க அதிகாரமில்லாமல் போயிற்று? உமக்கு சமைத்துக்கொட்ட மாத்திரம் சம்பளம் வாங்குகிற வேலைக்காரியா நான்? இவ்வளவு தைரியமா உமக்கு? இன்ன கேள்விகள்தான் மனையாளைப் பார்த்துக் கேட்கலாம் என்பதுகூட தெரியாமல் போய்விட்டதா? நீங்கள் அந்த மாலையுடன் மட்டும் வெளியிற் போயிருந்தால் உமக்கு இன்று மத்தியானமிருந்த ராதா கலியாண மயக்கத்தில் மாலையுடன் திரும்பி வீடு வந்திருப்பீர்களா? அதை அங்கு வந்திருந்த பாகவதர்கள் பிடுங்கிக்கொண்டிருக்க மாட்டார்களா? அப்படி நமது சொத்து அழியக்கூடாதென்று நான் எவ்வளவோ புத்திசாலித்தனமாய் ருத்திராக்ஷ மாலையை எடுத்துவைத்திருக்க நான் செய்த காரியத்தை அக்கிரமம் என்று சொல்லுகிறீர்களா, வெகு அழகு.

''புருஷன் நித்தியம் போட்டுக்கொள்ளும் நகையை அவன் உத்தரவின்றி பெண்சாதி தொடுவானேன்?''

நீங்கள் பேசுகின்றது உங்களுக்கே அழகாயிருக்கிறது! என்னமோ தொட்டுவிட்டேன். அதற்கு வேண்டுமானால் கையை வாங்கிவிடுங்கள்! கழுத்தை வெட்டிவிடுங்கள்!! கச்சேரியில் கொண்டுபோய் நிறுத்துங்கள்!!! இந்த குற்றத்திற்காக நீங்கள் என்ன செய்தாலும் ஸம்மதம். இவ்வளவும் நீங்கள் செய்வீர்கள்! செய்யாம லிருக்க மாட்டீர்கள்!! உங்கள் குணம் எனக்குத் தெரியாதா? இத்தனை நாள் நானுங்களுடன் பழகி இவ்வளவாவது அறிந்துகொள்ளாதவளா!

Koviloor Acadamy

"போதும் இந்தப் பேச்சை நிறுத்து, எனக்கு தலை வலிக்கிறது."

ஏன் வலிக்கமாட்டாது! நீங்கள் கொஞ்ச அக்கிரமமா இன்று காலைமுதல் செய்திருக்கிறீர்கள்!! நன்றாகத் தலைவலி வலிக்கத்தான் வலிக்கும்!!! காலை 10 நாழிகைக் கெல்லாம் ஒரு கிண்ணம் ரஸம் அன்னம் பசிக்குப் புசித்துவிட்டு அப்புறம் பாகவத சமாராதனைக்கு போகலாம் என்றேன். அதைக் கேட்கவில்லை. 15 நாழிகை வரையில் பட்டினி யிருந்து, தெருத் தெருவாய் அலைந்து பாகவதர்களுடன் உஞ்சவிருத்தி பண்ணி ராதா கலியாண உற்சவங் கொண் டாடி இன்றுமுடிய அழிந்தீர்கள். தலைவலி ஒன்றுமட்டுந் தானா! நாளைகாய்ச்சல் வரும்!! மறுநாள் ஜென்னி பிறக்கும்!! எவ்வித இம்சைகளுக்கெல்லாம் நானாளாகப் போகிறேனோ எனக்கே தெரியவில்லை!

"போதும் உன் பேச்சு. அந்த மோதிரத்தை எடு."

இந்தாருங்கள், மோதிரம் வந்ததா?

"வந்தது. ருத்ராக்ஷம் எங்கே?"

தலையணையைத் தூக்கிப்பாருங்கள். உங்கள் பொடி மட்டைக்கு அடுத்தாற்போல் அதையும் வைத்திருக்கிறேன். அதைப்பற்றி அவ்வளவு ஸந்தேகம் உங்களுக்கு வந்ததே. அது போதும்! அதை ஏன் ஒளித்துவைத்தாய் என்று என்னைப் பார்த்துக் கேட்டீர்களே! அதுவும் ஸந்தோஷந்தான்! நான் என்ன ராக்ஷஸியா? யக்ஷிணியா? உங்கள் மாலையை விழுங்கி விட்டேனா? உங்கள் மாலை வெல்லமா? பிலாச்சொளையா? அதை விண்டு வாயில் போட்டுக்கொண்டேனா? அல்லது உங்களைக் கேட்காமல் அதை அழித்து எனக்கும் என் குழந்தைகளுக்கும் நகைசெய்து போட்டுக்கொள்ளுவேனா? உம்முடன் இத்தனைநாள் வாழ்ந்து உமது 5-6 குழந்தை களுக்கும் ஒரு தாயாயிருக்கும் என்னைப்பார்த்து இப்படி

Koviloor Acadamy

பேசினீர்களே. பாகவத கோஷ்டியில் வயிறு வெடிக்கத் தின்ற மதமன்றோ உம்மை யிப்படிப் பேசச் சொல்லிற்று! அங்கு போய் நீங்கள் செய்கின்ற காரியம் எனக்குத் தெரியாதா? எல்லா சமாராதனை போலும் அது ஒரு சமாராதனையா? எல்லாரும் வித்யாசமில்லாமல் சாப்படுகிறது. கண்டபடி குடம் குடமாய் பாலையும் தேனையும் குடித்து மயங்கிக்கிடக்கிறது. ஒருவர்மேல் ஒருவர் வாசனைப்பொடிகளைத் தூவி ஆணும் ஆணும் கட்டிக்கொண்டு கொஞ்சுகிறது. என்ன வெட்கக்கேடு! இந்தக் குழப்பத்தில் உமது கழுத்திலிருந்து யாராவது ஒருவன் தங்க ருத்ராக்ஷத்தைக் கழற்றிக் கொண்டால் அது பெரும் நஷ்டமாய் முடியுமே என்று நான் யுக்தியாய், கருத்தாய், உமது மாலையை வீட்டிலேயே பத்திரப்படுத்தி வைத்தால் உன்னை யார் எடுக்கச்சொன்னார்கள் என்று என்னை அதிகாரம் பண்ணுகிறீர்கள் அந்த பரமாத்மாக்கள் மேலுள்ள நம்பிக்கை என்மேலில்லையே.

"நீ வெகு நல்லவள்."

வீணாய் என் பிராணனை வாங்கி என்னை குத்துயிராகப் பண்ணிவிடாதேயுங்கள்.

பதில் சொல்லுவதில் லாபமில்லை என்று எண்ணி ராம பிரஸாத் வாயை மூடிக்கொண்டிருந்து கண்களையும் மூடி நித்திரை செய்யலானான். அன்று பிரஸங்கம் அவ்வளவுடன் நின்றது.

Koviloor Acadamy

இருபத்திமூன்றுவது
மந்திரோபதேசம்

வரலக்ஷ்மி விரதம் நடந்தபொழுது ராமபிரஸாத் பிரஸன்ன முகத்துடன் விளங்காமலிருந்தது

போதும்! போதும்!! என் புத்தியை செறுப்பாலடித்தாற் போலாயிற்று!!! இன்றுடன் இந்தவரலக்ஷ்மி விரதத்தையே விட்டுவிட்டேன். இனி என் ஆயுள் உள்ளளவு நானிந்த விரதமே செய்கின்றதில்லை. என்ன! நான் செய்யக்கூடாத காரியம் என்ன செய்துவிட்டேன்! யாருக்காக காலைமுதல் மாலைவரையில் பட்டினியும் கிடந்து புகையில் கண்களை அவித்துக்கொண்டு ஒரு போர் குழக்கட்டையும் இட்டிலியும் செய்து கொட்டி ஒருவளாக விருந்துகொண்டு பத்து விதம் சமையலும்செய்து மூன்றுதடவை முழுகி விரதம் கொண்டாடினேன்!! எல்லாம் உங்கள் நன்மைக்காகத்தானே!!! இதற்கு ஏதோ குடிமுழுகிப்போய் விட்டதுபோல், தகப்பன் தாயை சாகக் கொடுத்ததுபோல் முகத்தை முழநீளமாய் வைத்துக்கொண்டிருக்கிறீர்களே! நல்லது இதே வரலக்ஷ்மி விரதம் 16 வருஷங்களுக்குமுன் நான் ஆரம்பித்தபொழுது அன்றுமுடிய உங்கள் முகத்தில் சிரிப்பும் கேளிக்கையும் விளங்கினவே! இன்று ஏன் உங்கள் முகம் சுடுகாடாய் விளங்கவேண்டும்?

''நீ பேசுகிற பேச்சு உனக்குத்தான் அழகாயிருக்கிறது. நான் தினமிருப்பதைவிட இன்று ஒரு வித்தியாஸமுமா யிருக்கவேயில்லை.''

அழகா! அன்று நீங்கள் என்னிடம் குழைந்து குழைந்து பேசிக்கொண்டிருந்ததையும் இன்று என்னை மாற்றுனைப்

Koviloor Acadamy

போல் கண்ணால் கூட்டுக்கொண்டு நின்றதையும் நீங்களே உங்கள் மனத்தைத் தட்டிக் கேளுங்கள். உங்களுக்காக நான் விரதம் கொண்டாடும்பொழுது நீங்கள் அல்லவா இன்று முடிய அட்டகாஸம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டும். ஒரு நிமிஷம்கூட நீங்கள் நான் பூஜைபண்ணிக் கொண்டிருந்தபொழுது அந்த யிடத்தில் உங்கள் தலையைக் காட்டவேயில்லையே.

"அவ்விடம் நான் வரவேண்டிய அவசியமே யில்லையே."

அப்படியா! மனம்போலிருக்கும் மாங்கலியம் என்பார்கள். உங்கள் மனத்தில் வரவேண்டும், என் மனத்தை சந்தோஷிப்பிக்கவேண்டும் என்றிருந்தால் நீங்கள் வராமலிருப்பீர்களா? கற்பூர ஆரத்தி முடிந்ததும் உங்களை நான் தேடு தேடு என்று தேடினேன். அப்பொழுதுதான் உங்களுக்குக் கொல்லைப்பக்கம் போக ஒழிந்தது. முப்பது நாழிகை முழுமையும் ஒழியவில்லை. நான் கற்பூர ஆரத்தி நடத்தும் போதுதான் போனீர்கள்! இது என்பேரில் வெகு விசுவாஸத்தைக் காட்டுகின்றதே!!

"அந்த சமயத்தில் இல்லாமல் போக வேண்டும் என்று நான் அப்படி செய்யவேயில்லை."

அதற்கென்ன? ஆயிரம் ஆணையிடுகின்றீர்கள். அந்த சமயத்திலில்லாமல் போனது போனதுதானே. அது என்னைச் செய்த அவமானந்தானே. நான் என்ன அம்மி மிதித்து அருந்ததி பார்த்து கலியாணம் செய்த பெண்சாதியா? உங்கள் வீட்டு புழுக்கைச்சிதானே!! பூஜைக்கு வந்த அத்தனை பெயர்களும் ஆணும் பெண்ணும் நீங்கள் என்னைச் செய்த அவமானத்தை கண்டறிந்து கொண்டார்கள். இப்படி என்னை மானபங்கம் செய்வீர் என்றால் நான் இந்த நோன்பையே கொண்டாடாமலிருப்பேன், ஒருவரையும் அழைத்திருக்க மாட்டேன்.

Koviloor Acadamy

"இது என்னடி! என் பிராணனை வாங்குகின்றாய். இது பெண்டுகள் விரதம்; புருஷர்களுக்கு ஒரு சம்பந்தமு மில்லை. நீ யாரை அழைத்தா லென்ன, அழைக்காவிட்டா லென்ன? ஏன் பிதற்றுகின்றாய்."

நானா பிதற்றுகிறேன்? இதில் புருஷர்களுக்கு ஒரு சம்பந்தமுமில்லையா! உமக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமுமில்லை என்று இனி சொல்லி விடுவீர்கள்! இவ்வளவு கல்நெஞ்சம் உமக்காகாது. ரம்பாபாயை மட்டும் நான் அழைக்கவில்லையே. அவள் வந்தகாரணமென்ன. நீங்கள் அழைத்தீர்களா?

"நீ தான் அழைத்திருக்கவேண்டும். எனக்கொன்றும் தெரியாது."

அழைக்காத வீட்டுக்கு வெட்கங்கெட்டுப்போய் அவள் எப்படி வந்தாள். அவள் வந்த காரியம் எனக்குத் தெரியாதா? உங்களைப்பார்க்க வல்லவோ வந்தாள்.

"அடி சண்டாளி!"

ஏன் வீண் பாசாங்கும் மாமாலமும் பண்ணுகின்றீர்கள். ரம்பாபாய் பேச்சை யெடுத்தாற்போதும்; பாம்பு சீறுகின்றாப் போல சீறுகின்றீர்கள்! அப்படி உங்களுக்குக் கோபமுண்டாவதினாலேயே எனக்கு உண்மை விளங்குகின்றதே.

"இப்படி உன்னை மனைவியாய் அடைந்து உன் வாயால் பிடுங்கல் படுவதற்கு பதிலாக நான் ஒரு வேங்கைப் புலியை மணந்திருந்தால் அதாவது இவ்வித அபவாதங்கள் சொல்லாமல் என்னைப் பக்ஷித்திருக்கும்."

அப்படியா? நான் வேங்கைதான். உமது மனம் அந்த ரம்பாபாய் வலையில் சிக்கிக்கொண்ட பிறகு என்னை வேங்கை என்று மட்டுமா நீர் சொல்லுவீர்!! இனி நான் எல்லாம் அறிந்துகொண்டேன்! நானு யிருடனிருக்கும் வரையில் இனி அவள் இந்த வீட்டில் கால் வைக்கக்

கூடாது. இன்று உங்களை நாடி வாராமல் அவள் என்னத்திற்காக இந்த வீட்டில் நுழைந்தாள்.

''நீ அழைக்காவிட்டால் ஒருக்கால் குழந்தை ராதாபாய் அழைத்தாளோ என்னவோ. வீண் அபவாதம் சொல்லுகிருய்.''

வீண் அபவாதமா? அவள் கண்கள் உங்களையே தேடிவந்தன; நீங்களில்லை.

இதைக் கேட்க ராமபிரஸாதுக்கு சகிக்க முடியவில்லை. சரேலென்று அவன் எழுந்து கூடத்திற் சென்று தனது குழந்தை ராதாபாயை எழுப்பி,

''நீ ரம்பாபாயை நமது வீட்டுக்கு வந்து மஞ்சள் குங்குமம் வாங்கிப் போகவாவது சாப்பிட்டுப் போகவாவது அழைத்ததுண்டா? அவள் இன்று ஸாயந்திரம் வரலக்ஷுமி பூஜை உன் தாயார் பண்ணும் பொழுது வந்திருந்தாளாமே. அது உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

அதற்கு அவள் ''நானவளை அழைக்கவுமில்லை, ஒன்றுமில்லை. அவளை அழைக்கவேண்டாமா என்று அம்மாளைக் கேட்டேன். என் மேல் கோபித்துக்கொண்டாள். நான் பேசாமலிருந்து விட்டேன். ரம்பாபாய் மஞ்சள் குங்குமத்துக்கு வரவில்லை. ''நாழியாகின்றது. பூஜை பண்ணி வைக்க வேண்டும். இவ்விடம் பூஜை முடிந்ததும் வேறு வீடு போகாமல் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்'' என்று உபாத்தியாயரிடம் சொல்லிப்போனுள் என்ருள்.

இப்பொழுது எல்லா சங்கதியும் விளங்கிவிட்டது. பூஜை செய்து வைக்கும் உபாத்தியாயரை அவள் அழைத்துப் போக வந்திருக்க அதை வைத்துக்கொண்டு அம்மணிபாய் தனது புத்தியின் மகிமையால் ஒரு அபவாதத்தை ராமபிரஸாத் தலையில் சுமற்றலானுள்.

Koviloor Acadamy

''கேட்டாயா குழந்தை சொன்னதை. இவ்வளவு தைரியமாய் அபவாதம் சொன்னாயே,''

ஆம் குழந்தைக்கு வெகுவாய்த் தெரியுமன்றோ! அவள் சொல்லுவது உண்மை. நான் இரண்டுகாரணங்களையும் உத்தேசித்தே வந்தாள் என்கின்றேன்? ஆண்பிள்ளையானால் தடுத்துச்சொல்லும். அன்றியும் அவள் இறுமாப்பு என்ன இறுமாப்பு! ''என்ன அம்மணிபாய், உங்கள் வீட்டில் பூஜை வெகு சீக்கிரம் நடந்து விட்டதே'' என்று என்னைப் புகழலானாள். இவள் புகழ் யாருக்கு வேண்டி யிருக்கிறது. இல்லை! இனி என்னால் சகிக்கமுடியாது. ஏதோ நான் உங்களை இழிசிக்கிறேன் என்று நீங்கள் என்மேல் அபவாதம் சொல்லுகின்றீர்கள். உங்கள் இம்சை என்னால் சகிக்க முடியவில்லை. நீங்களே யோசித்துப்பாருங்கள்! சில சமயத்தில் அவள் கெட்டிக்காரி. அவள் நன்றாகப் பாடுகிறாள் என்று என்னிடமே நீங்கள் சொல்லி அவளைப் புகழ்ந்து நமது ராதாபாயையும் அவளைப்போல் பழக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இப்பொழுதோ வெகு சாது போல் பாசாங்கு செய்கின்றீர்கள். நீங்கள் எக்கேடு கெட்டுப் போனால் எனக்கென்ன? இந்த விஷயத்தைப் பற்றிப் பேசிப் பேசி என் பிராணன் போய்விட்டது. நானினி இதைப்பற்றி ஒன்றும் சொல்லுகிறதில்லை. சுவாமி தான் உமக்குக் கூலி கொடுக்கவேண்டும்.

என்று சொல்லி பிரஸங்கத்தை நிறுத்தி வரலக்ஷ்மி நோன்பின் சிரமம் மேலிட்டவளாய் தூங்கிவிட்டாள்.

எப்படியாவது இவள் வாயடைத்ததே என்று ராம பிரஸாதும் தூங்கினான்.

Kovilor Acadamy

இருபத்திநான்காவது

மந்திரோபதேசம்

——

அம்மணிபாய் நவராத்திரி கொலுவுக்கு மஞ்சள் குங்குமம் பெற்றுவரப் புறப்பட்டு தாமதித்து வீடுவந்தது

——

உமக்கு நான் மனைவியாக வந்திருக்கக்கூடாது! யாராவது ஒரு பெரிய வாயாடி மனைவியாய் வாய்த்திருக்கவேண்டும்!! அப்பொழுது தெரியும் நீங்கள் படும் பாடு!! ஒன்றும் தெரியாத ஒரு ஏழை உம்மிடம் சிக்கிக் கொண்டேன் என்று என்னை அதிகாரம் பண்ண எத்தனித்தீர்கள்?

''என்ன சமாசாரம்! நான் ஒருவித அதிகாரமும் பண்ணினதாய் எனக்குத் தெரியவில்லையே.''

தெரியவில்லையா? வெகு ஸாது போல், ஒன்றுந்தெரியாத கைக் குழந்தைபோல், மெதுவாய்ச் சொல்லுகிறீர்களே! சாப்பிட உட்காரும் முன் உங்கள் கோபத்தைப் பார்த்தால் நான் அப்படியே எரிந்து விடுவேன் போலிருந்ததே!!

''என்னடி ஏதோ பிரமாதமாய் ஆரம்பிக்கின்றாய்.''

பிரமாதமா!—நான் அபாண்டமாய் ஒன்றும் சொல்லவே மாட்டேனே. நீங்கள் சொன்ன சொற்கள் சுருக்கென்று என் மனத்தில் பாயந்தபடியால் நான் சொல்லுகின்றேன். உணக்கையற்ற ஒருவளை நீங்கள் மணந்திருந்தால் அவள் வாய் திறவாதிருப்பாள்! அப்படி என்னாலிருக்க முடியவில்லையே. அப்படி என்னை என் தாயார் பெற்று விட்டாள். இனிமேல் என் குணத்தை எப்படி மாற்றுகிறது. உமக்கு

Koviloor Acadamy

இவள் ஒரு மனுஷியாயிற்றே. இவளும் நம்மைப்போற்றுனே. இவளை இமிசிக்கலாகாது என்று தோன்றவே யில்லையே.

''நீ இன்னது சொல்லப்போகின்ருய் என்று எனக்கு புலப்படவில்லையே!!!''

உமது மனத்தில் கொஞ்சமாவது இரக்கமென்பது யிருந்தால் அப்பொழுது தோன்றும். நீங்கள் கொல்கொலைக்கு அஞ்சாத கல்லுநெஞ்சத்தவர். நான் மஞ்சள் குங்குமத்துக் குப்போய் இரண்டு நிமிஷங்கள் அதிகப்பட்டு வந்ததனுல் என்ன மூழ்கிவிட்டது? இரவு போஜனம் எல்லாம் சித்த மாய் வைத்து மூடிவிட்டுத்தானே போனேன்! சொல்லாமற் போகவில்லையே!! சொல்லிவிட்டுத்தானே போனேன்!!! அப்படியாவது ஏன் போகவேண்டும் என்ருலோ கோடி வீட்டுக் குந்துமணி தினந்தோறும் நமது வீட்டுக்குவந்தாள்! இன்று கடைசி நாளயிற்றே, இன்று ஒரு நாளாவது நாம் அவளுடைய வீட்டுக்குப் போகாவிடில் நம்மைப்பற்றி அவள் என்ன எண்ணிக்கொள்ளுவாள் என்று ஒரு நூறு தடவை யோசித்து, ஒரு ஓட்டமாய் ஓடி ஒரு பாக்கு வெற்றிலை வாங்கிவருவோம் என்று சென்றேன். அதுதான் நமக்கென்னத்திற்கு. போகாமலே யிருக்கலாம் அல்லவா. என்னவோ அவள் நமது குழந்தைகள் மேல் கண்ணுக விருக்கின்ருளே; அவளுக்கோ குழந்தைகளில்லை; போகா விடில் வருத்தமடைவாள் என்று போய்வந்தேன். இரண்டு நிமிஷம் கூடத்தான் ஆய்விட்டால் என்ன. அவள் வீட்டில் சோனு வெகு அழகாய்ப் பாடிக்கொண்டிருந்தாள். கொஞ்சம் ஆசையாய் கேட்டுக்கொண்டிருந்து விட்டேன். அதற்கு பதிலாக உங்கள் வாயால் பிடுங்கல் பட்டேன்.

''ஏனடி, இப்படி வீண்சண்டைக்கு யிழுக்கின்ருய்? நீ போய் எத்தனை நாழிகையாயிற்று, குழந்தைகள் கற்று கின்றதே என்றேன்.''

Kovilogacadamy

நீங்கள் பாகவத கோஷ்டியில் ஒவ்வொரு நாளும்போய் உட்கார்ந்து அருணோதயம் வீடு வரலாம்! அதுவரையில் நான் கொட்டு கொட்டு என்று கண்கள் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது நியாயம்!! எனக்காக இரண்டுநிமிஷம் கூட நீங்கள் உங்கள் ஜன்மத்தில் ஒரு நாள் உட்கார்ந் திருந்தது அநியாயம்!! இது மனிதர்களுக்கே யியல்பு. பெண்டு களாய் பிறந்துவிட்டால் அவர்களுக்கு ஒன்றுமில்லை! ஒரு மஞ்சள் குங்குமத்திற்குக் கூட போகக்கூடாது!!

''கைக்குழந்தை அழுகிறதே. அதைக்கூட எடுத்துப் போகக் கூடாதா என்று ஒரு கேள்வி கேட்டதற்கு பிடித்துக்கொண்டு விட்டாயே.''

அந்தக் கேள்வியா என்னைக் கேட்டீர்? அது புருஷர்கள் யுக்தி. குழந்தையைப்பற்றிக் கேட்பதுபோல் கேட்டு நீ ஏன் தாமதமாய் வந்தாய் என்று சுட்டுக்காட்டுகிறது. அப்படி கேட்பதைவிட நேராக ஆண்பிள்ளைபோல் கேட்கக்கூடாது! ஒரு நிமிஷம் கைக்குழந்தைதான் அழுதுவிட்டால் என்ன? அதில் என்ன முழுகிப்போயிற்று! அழுதாலே குழந்தை களுக்கு பலம் என்று சொல்லியிருக்கிறது!! அப்படி மற்ற வீட்டுக் குழந்தைகள் போல் நமது வீட்டுக் குழந்தைகள் அழுகிற வழக்கமேயில்லை. ஒரு வேளை அழுதால் நீங்கள்தான் அதை ஒரு நிமிஷம் எடுத்துவைத்துக் கொள்ளக்கூடாதா? குழந்தைகளைத் தொடுகிறதேயில்லை என்று விரதமா? சிரிக்க வேண்டாம்! என் குழந்தையைத் தொடமாட்டீர்கள். ரம்பாபாயுக்குக் குழந்தை பிறந்தால் அதை தூக்கிவைத்துக் கொள்ளுவீரா மாட்டீரா?

''இனி இப்படி ஒரு பொழுதும் பேசாதே. அவள் உத்தமி. எனக்குப் பெண்ணுக்குச் சமானம்.''

அப்படியா! பாகவதாள் கோஷ்டியில் சேர்ந்த பிறகு உமக்கு அம்மாதிரி வித்தியாசங்கள் கூட உண்டா!

"அடியே! அநியாயக்காரி! இம்மாதிரி நீ வீண் பொல்லாப்பாலபேச்சுக்கள் பேசுவதாலல் நான் இந்த வீட்டுக்குள் நுழைகிறதேயில்லை. வேறு எங்கேயாவது யிருக்கிறேன். ரம்பாபாயைப்பற்றி இனி பேசுகிறதே யில்லை என்று நேற்று சபதம் கூறினாயே."

அவ்வளவு தைரியமா? இந்த வீட்டை விட்டு வேறு வீட்டில் தனியையிலிருக்க உடகு மனமும் வந்ததா? அது ஸகஜந்தான்! என் தொந்தரையில்லாமல் நீங்களும் ரம்பாபாயும் வாழலாம்!! இந்தச் சொல்லைக் கேட்ட பிறகு நானினி ஒரு பொழுதும் கண்மூடமாட்டேன். ஒரு நாள இரவு உங்களிடம் சொல்லி விட்டு உங்கள் உத்தரவு பெற்றுக்கொண்டு மஞ்சள் குங்குமம் வாங்கப்போய் திரும்பி வர 2 நிமிஷம் தாமதித்ததால் நீங்கள் என்னைவிட்டு ஓடுகிறதாகச்சொல்லத் துணிந்தீர்கள். நீங்கள்தினந்தோறும் செய்துவரும் அக்கிரமங்களுக்கு நான் எப்பொழுதே ஓடியிருக்கவேண்டும். உங்களுக்காக நான்எத்தனை நாள் கண் விழித்து உட்கார்ந்திருக்கிறேன்.

"உன்னை யார் அப்படி உட்காரச் சொன்னார்கள்?"

இப்படிச் சொல்லுவதுதான் புருஷர்கள் நன்றியற்றவர்கள் என்று காட்டுகிறதற்த அடையாளம்! ஐயோ ஒரு பிள்ளைத்தாச்சியை நாம் எவ்வளவு சிரமப்படுத்துகிறோம் என்ற பச்சாத்தாபமில்லாமல் உன்னை யார் உட்கார்ந்திருக்கச் சொன்னார்கள் என்று கடும் நெஞ்சத்துடன்கேட்கின்றீர்கள்!! இன்று ஒரு சாயந்திரம் எல்லாம் செய்து வைத்து விட்டு நான் வெளியில் போனதற்கு கொஞ்சம் முன்பாகப்போய் முன்பாக வரக்கூடாதா என்கின்றீர்கள்.

"அடியே! நானப்படி கேட்டேனா?"

என்ன அர்த்தம் நீங்கள் கேட்டதற்கு? நான் திரும்பி வந்தபொழுது அஸ்தமித்து ஒரு நாழிகை ஆகவில்லையே? அதற்குள் உங்களுக்கு அவ்வளவு கோபமா? என்னைப்போல்

Koviloor Acadamy

மஞ்சள் குங்குமம் வாங்கப்புறப்பட்டவர்களில் ஒருவளாவது நான் திரும்பின பொழுது வீடு திரும்பவேயில்லை. எல்லாரும் சோனுவின் பாட்டை கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தார்கள். நான் ஒருவள்தான் வீட்டில் குழந்தை என்னமாயிற்றோ! கணவர் என்ன சொல்லுவாரோ என்று பயந்து பயந்து ஓடிவந்தேன்!! அப்படிவந்தும் உங்களுக்குக் கோபம் பொறுக்கக்கூடவில்லை. மஞ்சள் குங்குமம் வாங்க ஒரு நாளாவது போகவேகூடாதா? பெண்டுகளுக்கு இம்மாதிரி வாங்கப் போக ஆசை யிருக்கமாட்டாதா? நீங்கள் தினந்தோறும் வெளியிற் போவது போலவா நாங்கள் போகின்றோம்! ஏதோ வருஷத்திற்கு ஒரு நாள். அதற்கும் ஒருவேலையாவது குறைவில்லாமல் எல்லா காரியங்களையும் முடிந்து வைத்துவிட்டு பயத்துடன் வெளியிற் செல்லுகின்றோம். புருஷர்களைப்போல நிர்விசாரமாய் வெளியிற்போக எங்களால் முடியுமா? ஐயோ! இந்த மஞ்சள் குங்குமம் என்பது பகலிலேயே வைத்துக்கொள்ளக்கூடாதா! உங்கள் வாயால் பிடுங்கல்படாமல் பகலிலேயே இதை வாங்கி வந்திருப்பேனே!!

"உன்னைப்போல் நான் பார்த்ததேயில்லை; ஒரு சொல்லுக்காக இவ்வளவு நாழிகை என்னைப் பிடித்துக்கொண்டு ஆடுகிறாயே."

நான் பொல்லாதவள் தான். நீங்கள் செய்கிறதற்கெல்லாம் வாயை மூடிக்கொண்டிருந்தால் என்னைப்போல் நல்லவளில்லை என்பீர்கள். உங்கள் அத்தானுக்கு ரயில்சார்ஜ் கொடுத்தது, சங்கரிக்கு தைப்பூசம் பார்க்கப்போனது, பாகவதகோஷ்டியில் சேர்ந்து நீங்கள் அக்கிரமம் செய்கின்றது. இவைகள் ஒன்றைப்பற்றியும் நான் கேட்காமலேயிருந்துவிட்டால் நான் நல்லவள்தான். நீங்கள் மட்டும் என்னை கண்டபடி அதிகாரம் பண்ணவேண்டும், நான் அந்த ஐந்ரூபா பணத்தைக் கரியாக்கினேனா! பத்துரூபாயைப் பாழாக்கினேனா!! எவ்வளவோ பாடுபட்டு வாயையும் கிகொண்டு வயிற்றை இழுத்துக்கட்டி

நீங்கள் செய்கின்ற அக்கிரமத்தை யெல்லாம் பொறுத்து வருகின்றேன். அதற்காக என்னை கண்டபடி யெல்லாம் பேசத் துணிந்துவிடலாகாது. உமது பெண்சாதியை இவ்வாறு அவமானப்படுத்துகிறது உமக்கே நியாமாயிருக்கிறதா?

''உன்னைக் கெஞ்சிக்கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்குத் தூக்கம்வருகிறது. இனறு போதும்! உன் வாயைமூடு!!''

கெஞ்சுகிறதா? எனனைக் கெஞ்சுவானேன்? அந்த முண்டையை வேண்டுமானால்போய்க் கெஞ்சுங்கள்! எனக்கு அந்த மரியாதை ஒன்றும் வேண்டாம். இருக்கிற மரியாதையிருந்தால்போதும். இது என்ன வார்த்தை. புருஷன் பெண்சாதியைக் கெஞ்சவாவது. நான் அல்லவோ உங்களைக் கெஞ்சவேண்டும்! நான இன்று உங்களைத் தூங்கவிடமாட்டேன். நீங்கள கண்ட யிடங்களுக் கெல்லாம் போகினறீர்கள், பாகவத கோஷ்டியில் ஒரு பாகவதராய்ச் சேர்ந்து கூத்தாடிக்குதிக்கின்றீர்கள். நான் ஒருநாள் சாதாரண மஞ்சள் குங்குமம் வாங்கப்போனால் கோபித்துக் கொள்ளுகின்றீர்கள். இனி பெண்டுகள் விஷயத்தில் நீங்கள் வாயைத திறக்கக்கூடாது. எங்களுக்கிருக்கும் சந்தோஷமும் கோஷ்டியும் ரொகு கொஞ்சம். அதற்கு எப்பொழுதாவது போய் திரும்பி இரண்டொரு நிமிஷம் தாமதித்துவந்து விட்டால் இனி நீங்கள் வாய்திறக்கவேகூடாது! குழந்தையை அப்பொழுது எனனால் எடுத்துப்போகமுடியாது!! ராமேசுரம் போயும் சனீசுரன் துலையவில்லை என்று ஒரு நாழிகை வீட்டை விட்டுப் போகும்பொழுது குழந்தையை கக்கத்திலிடுக்கிக் கொண்டுபோனால் அதில் என்ன சௌக்கியம்? நீங்கள்தான் வீட்டிலிருந்து குழந்தையை அழாமல் பாதுகாக்கவேண்டும்! பாகவதர்களுக்கு எவ்வளவோ காரியங்கள் செய்கின்றீர்களே!! வீட்டில் மனையாளுக்கு அரைநாழிகை குழந்தையை எடுத்துவைத்துக் கொள்ளுவதால் என்ன பிசகு? அது என்ன அயலார் பெற்ற குழந்தையல்லவே! உங்கள் குழந்தைதானே!

Koviloor Acadamy

என்று சொல்லிவிட்டுத் தூங்கினாள்! இத்துடன் இன்று பிழைத்தோம் என்று ராமபிரஸாதும் களித்து கண்ணயர்ந்தான்.

இருபத்தைந்தாவது
மந்திரோபதேசம்

பட்டணத்துக்கு ஒருதடவை போய் வாவேண்டும் என்று அம்மணிபாய் கணவனை வேண்டல்

என்ன! எப்பொழுதும் ஒரே வேலைதான்!! காலை எழுந்தால் சமையல் செய்து சாப்பிடுகிறது; பத்து தேய்க்கிறது. மறுபடியும் சாயந்திரம் சமையல் செய்து சாப்பிட்டு விடுடு இரவில் தூங்கி எழுந்திருக்கிறது! இதே வேலைதானா? காலைவீசி எங்கேயாவது ஒரு ஊருக்குப் போவோம் என்றால் பிறந்த வீடு புறக்கடையிலிருக்கின்றது இரண்டு நாழிகை வழிக்குள் பிறந்தவீடு புகுந்தவீடு இரண்டுமாய் விட்டது! எனக்காவது என்குழந்தைகளுக்காவது ஏதாவது ஒரு புதுமை பார்த்தோம் என்ற ஆனந்தம் உண்டா?

"அடுத்த தைப்பூசத்துக்கு வேண்டுமானால் சங்கிரிக்கு எல்லாருமாகப் போய்வருவோம்."

நல்லவேளை! அவ்வளவாவது தயை வந்ததே!! நாளை ராத்திரி பாகவதகோஷ்டி பெரிய பஜனை பண்ணுகிறார்கள்: அதை எல்லாரும் பார்த்து வருவோம் என்று சொல்லாமல் சங்கரிக்காவது போய்வருவோம் என்றீர்களே!!! அதுவே உங்கள் பெருந்தன்மைக்கடையாளம். பறப்பூசத்தில் என்ன வேடிக்கை? ஏதாவது இரண்டு ராட்டணம் போட்டிருக்கும்.

Kovilor Acadamy

பக்ஷணக்கடைகள் வைத்திருக்கும். கரும்புச்சழிகள் அடுக்கப் பட்டிருக்கும் இந்த வேடிக்கைகளுக்குத்தானு நான் உங்களைக் கேட்டேன். இந்த ஊரில்விட சங்கரியில் என்ன அதிசயத் தைப் பார்க்கப்போகிறோம். எப்பொழுதும் தான் நமது வீட்டுவேலை ஒரேமாதிரியாயிருக்கின்றது ஐந்தாறுநாளைக்குக் கதவைப் பூட்டிக்கொண்டு குழந்தைகளைக்கூட அழைத்துக் கொண்டு பட்டணம்போனால் அங்கு இந்த ஸமஸ்தானத்து வேடிக்கைகளெல்லாம் இருக்கின்றதாம்; அவைகளைப் பார்த்து வரக்கூடாதா? ஏதோ கண்காட்சி சபை என்கின் றார்கள். அதில் எல்லா ஸாமான்களும் வேடிக்கையாய் வைத்திருக்கிறார்களாம். ஐகோர்ட்டு, விளக்குக் கூண்டு, கும்பிவித்தோட்டம், கரடி புலி சிங்கம் வைத்து யிருக்கு மிடம், செத்துப்போன காலேஜி, எல்லாம் பார்க்கலாமாம். இப்பொழுது பட்டணம்போய் வருகிறவர்கள் எத்தனையோ அதிசயம் பார்த்து வருவதாகச் சொல்லுகிறார்கள். அந்த அதிசயங்களை நாமும் ஏன் போய் பார்த்துவரக் கூடாது? நாமும் நான்கு ஜனங்களைப்போல் ஏன் கண்குளிரக்கூடாது? குழந்தைகளுக்கு நாமிவைகளைக் காட்டாவிடில் யார்தான் காண்பிப்பார்கள்?

"அவ்வளவுதூரம் நாம் போய்வர நமக்கு எவ்வளவு செலவாகும், அதை யோசிக்காமல் பேசுகிறாயே!"

பார்த்தீர்களா! பார்த்தீர்களா! உமக்கு எங்கேயாவது போகவேண்டும் என்றிருந்தால் அப்பொழுது இம்மாதிரி யோசிக்கிறீர்களா? நான் வெளிக்கிளம்பவேண்டும் என்று ஒரு கேள்வி வாயைத் திறந்து கேட்டுவிட்டால் செலவென்ன பிடிக்கும் என்று அதட்டிக்கேட்கிறீர்கள். நீங்கள் தைப் பூசத்துக்கு ஒரு ஆள் புறப்பட்டுப்போய் 10 ரூபா செல விட்டு, கூட 10 ரூபா பணம் கடன்செய்து வந்தீர்களே. அந்தமாதிரி ஆளுக்கு 20 ரூபா கணக்குப்போட்டு ஒரு நூறு அல்லது நூற்றைம்பது ரூபா ஒரு தடவையில் செலவாய் விட்டால் அந்தச் செலவு எனக்குத் தகாதா? நீங்கள்

Koviloor Acadamy

அப்படி அழித்தால் நாங்கள் இப்படி அழிக்கலாகாகா? வேறு செலவு ஒன்றும் ஆகின்றதில்லையா? உங்களுக்கு மனதில்லை என்று ஒரே பேச்சாய் சொல்லிவிடுகின்றதுதானே! செலவு என்ன பிடிக்கும் என்று வீணாய் என்னைக்கேட்டு என் பிராணனை வாங்குவானேன்? ஒரு காரியம் என்று புறப்பட்டால் செலவாகாமலிருக்குமா? குழந்தைகளுக்கு விளை தங்கள் காட்டவேண்டும் என்று தகப்பனுக்கு ஆசையிருந்தால் அவர் காட்டமாட்டாரா! உங்களைப்போல்தான் எல்லா தகப்பன்மார்களும் குழந்தைகளுக்கு ஒன்றும் வேண்டாம்: மூன்றுவேளைச் சாதமும் துணியும் போதும் என்று நிறுத்திபிருக்கின்றார்களோ!! நீங்களே யோசித்துப் பாருங்கள்!!! நீங்கள் செய்யும் நியாயத்தை நீங்களே யோசித்துப் பாருங்கள். உங்களுக்கே யிஷ்டமில்லாவிட்டால் ஒன்றும் வேண்டாம். பட்டணம் போகவே வேண்டாம், உங்கள் மனம் ஒரு கல்லு, நீங்கள் நிர்விசாரமாய்த் தூங்குங்கள்!

''கடைசியாகச் சொன்னாயே அதுதான் வெகு நியாயம்! நான் ஒவ்வொரு இரவும் நிர்விசாரமாகத்தான் தூங்குகின்றேன்!''

அப்படி சொல்லுவதைவிட நீ ஒரு ராக்ஷஸி என்று என்னைச் சொல்லுங்கள். நீங்கள் என்ன வேண்டுமோ சொல்லிக்கொள்ளுங்கள்! அதற்காக எனக்கு ஒரு குறைவும் வரப்போகிறதில்லை! எனக்கு ஒன்றும் காய்த்துப் பூத்து தொங்கப்போகிறதில்லை! உங்களைப்போல ஒரு கல்நெஞ்சமுள்ளவரை நான் ஒருபொழுதும் கண்டதேயில்லை!!

''அப்படியா?''

அப்படியா! இப்படியா! நீங்களே யோசித்துக்கொள்ளுங்கள். இத்தனை நாள் நான் உழைத்ததை எல்லாம் உழைத்துவிட்டு உங்களிடம் இந்த சொல் இன்று கேட்டதைவிட ஒரு மண்சுவற்றை என் புருஷனாகக் கட்டிக்கொண்டு வாழ்ந்திருக்கலாம்.

''அப்படி செய்திருக்கலாம்.''

நிரம்ப ஸந்தோஷம். இப்படி எந்தப் புருஷன் சொல்லுவான். என்னவேண்டுமோ சொல்லிக்கொள்ளுங்கள். நான் சென்னப் பட்டணம் போகவேண்டும் என்று நிச்சயம் செய்துவிட்டேன். நான் பிடிவாதம் பிடித்தால் உங்களால் தடுக்கமுடியாது. என்ன செலவாகும் என்று எனக்குச் சொல்லமுடியாது. பெண்டுகளுக்கு செலவு விஷயம் என்ன தெரியும்? அதெல்லாம் புருஷர்களைச் சேர்ந்த பாடு. பட்டணத்தில் வீட்டு வாடகை அதிகந்தான். 10 நாள் அங்கிருக்க செலவும் அதிகந்தான் பிடிக்கும். 10 நாள் ஒரு வீடு பிடிப்பதாக விருந்தால் ஒரு மாதத்து வாடகை அவ்வூரார்கள் வாங்கிவிடுவார்கள். ஒரு மாதத்து குடிக்கூலியைக் கொடுத்துவிட்டு 10 நாளைக்குள் திரும்புவதைக் காட்டிலும் ஒருமாதம் அவ்விடம் இருந்துதான் வரவேண்டும். எனக்கோ செலம் செவ்வாப்பேட்டை இவ்விரண்டையும்விட வேறு ஊரே தெரியாது. நான் பட்டணம் போகத்தான் வேண்டும். இவ்விரண்டு ஊர்களிலிருந்து எனக்கு அலுப்பாய் விட்டது. சிரிக்கவேண்டாம். நான் என்ன சொன்னாலும் உங்களுக்கு அது சிரிப்பாகவே யிருக்கிறது. நான் கேட்பதில் என்ன சிரிப்புக்குக் காரணமிருக்கிறது. ஒருவரும் சேலத்தை விட்டு பட்டணம்போய் வேடிக்கை பார்த்து வருவதில்லையா? எப்பொழுது புறப்படுகிறது? நிச்சயம் சொல்லுங்கள். நான் நாளைமுதல் மூட்டை கட்ட ஆரம்பிக்கிறேன்.

''என்ன செலவாகும்? பணத்தைப் பார்த்துக்கொண்டல்லவோ மூட்டை கட்டவேண்டும்.''

அப்படிச் சொல்லுங்கள். புறப்படுவதில் அப்பொழுது ஆக்ஷேபமில்லை. பணத்தை நீங்கள் நாளை சம்பாதித்துக் கொண்டு உத்தரவிடுங்கள். அப்புறம் மூட்டை கட்டுகிறேன்.

''என்ன செலவாகுமோ தெரியவில்லையே.''

Kovilloor Academy

என்ன ஒரு ஆண்பிள்ளையா நீங்கள். நான்தான் ஒரு உத்தேசமாய் 150 ரூபா பிடிக்கும் என்று சொல்லியாயிற்றே. அதில் எவ்வளவு என் சமத்தால் சுருக்கலாமோ அவ்வளவும் சுருக்கிப் பார்க்கிறேன். அடுத்த அமாவாசை கழிந்த துவிதீயை புறப்படுவோமா?

''பார்ப்போம்.''

அப்படி ஸந்தோஷமாகச் சொல்லுங்கள். அடுத்த துவிதீயை பிரயாணம்.

எத்தையாவது சொல்லி அன்று தப்பி தூங்கிவிட்டால் போதும் என்று ராமபிரஸாதுக்கு ஆய்விட்டது. துவிதீயை என்று தனது மனைவி நிச்சயித்த பிறகு ஒரு ஆக்ஷேபமும் செய்யாமல் தூங்கலானான்.

இருபத்தாறுவது
மந்திரோபதேசம்

அம்மணிபாய் காளஹஸ்தி திருப்பதி, முதலிய க்ஷேத்திரங்களுக்குப் போக உபதேசித்தல்

என்ன! மத்தியானமெல்லாம் வெயிலில் அலைந்து வேடிக்கை பார்த்ததால் சீக்கிரம் தூக்கம் வந்துவிட்டதா என்ன! அது என்ன தூக்கந்தான் தூங்குவீர்களோ! எப்படித் தான் தூக்கம் வருமோ! எப்படித்தான் அத்தனை ஸாமான்களை கொண்டுவந்து வெள்ளைக்காரன் வைத்தானோ! எள்ளு, கொள்ளு, மூங்கில், சீரகம், பாசிக்காய், தானிக்காய், ஒன்றுவிடாமல் அந்த கட்டையில்

போவானுக்கு என்னமாய் நினைவிருந்ததோ! என்ன ஆச்சரியம்!! பாக்கில் எத்தனைவிதம்! புடவையில் எத்தனை வகை! எத்தனை குருவிகள் கண்ணை விழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கின்றன. எல்லாம் செத்த குருவிகள்தானே? ஏன் நாறவில்லை?

"எல்லாவற்றையும் நாறாமல் பாடம்பண்ணி பஞ்சடைத்து வைத்திருக்கிறான்."

என்ன அதிசயம்! என்ன அதிசயம்!! இந்த வெள்ளைக் காரனுக்கு செத்தவனைமட்டும் பிழைப்பு மூட்ட தெரிய வல்லையே ஒழிய மற்ற தந்திரங்கள் யாவும் தெரிந்திருக் கின்றன!!! அந்த அறையில் ஒரு அறை முழுமையும் கல்லையும் முள்ளையும் ஏன் அடைத்து வைத்திருக்கின்றான், அந்த கட்டையில் போவான்.

"அது ஒரு சாஸ்திரமாம்."

நல்ல சாஸ்திரம்! அவன் அறுத்தாற்போலிருக்கிறது!! செத்த குருவிகளையும் மிருகங்களையும் வைக்க இவ்வளவு பெரிய கட்டிடமா! எத்தனை வேலைக்காரர்கள். அது போகட்டும். காட்டிலிருக்கும் கரடி புலிகளை எல்லாம் கூண்டில் அடைத்துவைத்திருக்கிறான்.

"அது ராஜாங்கத்துக்கு ஒரு அழகு."

நல்ல அழகு!

"உன் அழகைவிட நல்ல அழகாயில்லையா என்ன?"

என்னதான் சொல்லமாட்டீர்களிப்பொழுது! ஏதாவது ஒரு கேள்வி கேட்டால் வெடு வெடு என்று வாயால் பிடுங்கி விடுகின்றீர்கள். சேலத்திலிருந்தபொழுதாவது என் மனுஷ் யாள் ஒன்று இரண்டு பெயர்களிருந்தார்கள். இவ்விடம் நீங்கள் என்னை நடு அறையில் கொன்றாலும் கேட்கப்பட்ட வர்கள் ஒருவருமில்லை!

Koviloor Acadamy

''உன் குணம்விடாமல் எந்த விஷயமோ ஆரம்பித்து எதிலேயோ கொண்டுபோய் முடிக்கின்றாயே.''

இவ்வளவு சொற்களுக்கு யிடமாவேன் என்றிருந்தால், நானிந்த பாழும் பட்டணத்துக்கே வந்திருக்கமாட்டேன். என் புத்தியை கண்டிக்கவேண்டும். பஞ்சாபீஸ், பஞ்சாபீஸ் என்று குழந்தைகள் பிராணனை வாட்டுகின்றன. அதை நாளை பார்த்துக்கொண்டு உடனே புறப்படவேண்டும். நாழிகைக்குமுன் ஊர்போய் சேர்ந்தால் போதும் போலிருக்கிறது. யள்ளு பறை ஸகவாசம் இவ்விடம் வெகு அதிகமாயிருக்கிறது.

''உன் ஆசாரத்துக்கு ஒத்துவரவில்லையா?''

உங்கள் ஆசாரத்தைவிட என் ஆசாரம் குறைந்து போகவில்லை. அம்பட்டனைக் கண்டாலும் பொடியிருக்கிறதா என்று கைநீட்டி வாங்கி போட்டுக்கொள்ளுகிறீர்களே; அதைவிட என் ஆசாரம் குறைவில்லை. நாளை பஞ்சாபீஸ் காட்டவேண்டும்.

''அதற்குள் உத்தரவில்லாமல் விடுகிறதில்லையாம். நாளை அதற்கு பதிலாக கும்பனிதோட்டம் போவோம். மற்ரு நாள் பஞ்சாபீஸ் பார்ப்போம்.''

நான் நாமிறங்கியிருக்கும் இந்த வீட்டு அம்மாளை விசாரித்தேன். கும்பனிதோட்டமாவது கும்பனிதோட்டம்; அதில் ஒன்றுமில்லையாம்! அதில் இரண்டு எருக்கம் செடி, மூன்று ஊமத்தைச் செடி, கள்ளி, பிரண்டை இவைகளை வைத்து வேலிகட்டி வைத்திருக்கிறார்கள். நமது ஊரில் பார்க்காத பிரண்டையையும் கள்ளியையுமா நாமிங்கு பார்க்கப்போகிறோம்! ஆகையால் அது வேண்டாம்; நாளை வேண்டுமானால் கப்பல் கொண்டுபோய் காட்டுங்கள்.

''வெகு ஸரி. கப்பல் ஏற உன்னால் முடியாது. கயிற்றைப் பிடித்துக்கொண்டு படகில் குதித்து தண்ணீரில் போய்

Koviloor Academy

கப்பலில் ஏறவேண்டும். அங்கும் கயிற்றைப்பற்றி கப்பல் ஏறவேண்டும். அது பெண்டுகளுக்கு அஸாத்யம்.''

புருஷர்களுக்கு மட்டும் ஸாத்யமா! எங்கு வேடிக்கை அதிகமோ அங்கு பெண்டுகளை அழைத்துப் போகிறதற்கு புருஷர்களுக்கே மனம் வருகிறதில்லை. ஏதாவது தப்புந் தவறுமாய் சாக்குப் போக்கு சொல்லிவிடுகிறது வழக்கம். எருக்கு, காட்டாமணக்கு முளைத்திருக்கும் தோட்டத்துக்கு அழைத்துப்போக ராஜா!! பஞ்சாபீஸ் அழைத்துப்போங்கள் என்றால் முடியாது; ப்ளுக்குக் கூட்டிப்போங்கள் என்றால், அஸாத்யம் என்றிவ்வாறு ஒன்றுந்தெரியாத பெண்டுகளை ஏய்த்துவிடுகின்றார்கள். என்னை யிப்படி ஏய்க்கமுடியாது.

''எனக்கும் நீ சொல்லுகின்ற இரண்டு யிடங்களுக்கும் உன்னை அழைத்துப்போக முடியாது.''

முடியாதா! முடியாதா! இனி நான் உங்களை வருத்துவதால் பிரயோஜனமில்லை. உங்கள் முகத்திலேயே முடியாது என்பது எழுதியிருக்கிறது. நானிந்த விஷயமாய் இனி வாய் திறக்கவில்லை. நாமிறங்கியிருக்கிறோமே, இந்த வீட்டு ஜனங்கள் சிவராத்திரிக்கு காளஹஸ்தி போகின்றார்களாம். இவ்வளவுதூரம் வந்துவிட்ட பிறகு நாமும் இவர்களுடன் காளஹஸ்தி போய்வருவோம். போதும் இந்த ஊர்வாஸம். இங்கு என்ன குளமா, கோவிலா? ஒன்றுமில்லை. பறைப் பட்டணம்! காலைமுதல் மாலைவரையில் நடந்து நடந்து கால்களும் கைகளும் அயர்ந்துபோகின்றன. என்ன புண்ணியத்துக்காக இப்படி நடக்கவேண்டும்! அல்லது நான்கு தனிகர்களைப்போல் நமக்கு போகவேண்டிய யிடங்களுக்கு வண்டி வைத்துக்கொண்டு போக சக்தியிருக்கிறதா? அந்த வைபவமெல்லாம் என் தந்தை காலத்துடன் துலைந்து போயிற்று. காசை யிந்த ஊரில் எண்ணி எண்ணி செலவு செய்யவேண்டியிருக்கிறது. நாளையதினமே நாம் காளஹஸ்தி போய்விடுவோம். வழியில் திருப்பதி வெங்கடாசலபதியையும் சேவிப்போம்.

''நாளையதினமே ஊருக்குத் திரும்பிவிட்டாலோ!''

எனக்குத் தெரியுமே!! அப்படி சொன்னால் இவ்வளவு தூரம் வந்துவிட்டு ஒரு அடி தூரத்தில் க்ஷேத்திரங்களிருக்க அவைகளைப் பாராமல் போனால் எல்லாரும் சிரிப்பார்களே! இத்தனை வயதாகியும் உங்களுக்குத் தெரியவில்லையே!! நான் ஊரைவிட்டு புறப்படும்பொழுதே இந்த க்ஷேத்திரங்களுக்குப் போகவேண்டும் என்று சொன்னேனே!!!

''நீ சொல்லவே யில்லை. ஏன் வீண்பொய் சொல்லுகிறாய்.''

நல்லது! நான் சொல்லுகிறது பொய்யாகவே யிருக்கட்டும்!! உங்களுடன் சண்டைபோட எனக்கு சகதியில்லை!! நீங்கள் பட்டணத்துக்கு என்னை அழைத்துவந்தது முதல் இந்த முண்டையை இவ்விடம் ஒருவரும் கேட்பாரில்லை. இவளுடன் பரிந்துபேச இவ்வூரில் ஒருவருமில்லை என்று இறுமாப்புகொண்டு தோன்றியபடியெல்லாம் பேசுகின்றீர்கள். நான் பொய் சொல்லுவதாகவேயிருக்கட்டும். நூறு பொய் வார்த்தைகள் சொல்லியாவது எனக்கு ஸ்வாமி தர்சனம் கிடைக்கட்டுமே. ஒரேநாளில் திருப்பதிக்கும் காளஹஸ்திக்கும் போய் மறுநாளில் திரும்பிவரலாமாம்.

''குழந்தைகளை எல்லாம் கூட அழைத்துக்கொண்டு திருப்பதி காளஹஸ்திபோய் வர என்னால் முடியாது.''

கிணற்றிலவர்களைத் தள்ளிவிடுவோமா! நாம் என்ன சன்னியாசியா? இவ்வளவுதூரம் பாடுபடுகிற காரணமெல்லாம் குழந்தைகளுக்காகத்தானே! உங்களுக்கு ஒன்றிலும் ஆசையில்லை! பாகவதகோஷ்டியிலும் பொடியிலும் ஆசை மாறவில்லை. முகத்தைச் சுணுக்கவேண்டாம். அந்த இரண்டு விஷயங்களையும்மட்டும் எடுத்துவிட்டால் உங்களுக்கு எங்கிருந்தோ கோபம் வந்து விடுகின்றது.

''இனி யிந்த விஷயங்களைப்பற்றிப் பேசாதே.''

Koviloor Acadamy

நான் பேசத்தான் பேசுவேன்! கொண்ட பெண்சாதியை விட யிந்த விஷயங்களைப்பற்றி வேறு யாருக்குத்தான் பேச அதிகாரம் இருக்கின்றது!! நாளை ஸ்தலங்களுக்கு புறப்படு கின்றீர்களா? மாட்டீர்களா? தக்க துணைபோகின்றதே சிவராத்திரி தர்சனம் எவ்வளவோ புண்ணியமாயிற்றே.

"ஆகா அப்படியே ஆகட்டும்."

எவ்விதமாயாவது சொல்லி கண்முடினுற்போதும் என்று ராமபிரஸாதுக்குத் தோன்றிவிட்டது. தான் என்ன மாட்டேன் என்றாலும் தன் மனைவி விடமாட்டாள், அப்படி யிருக்க வீணுய் கண்விழித்துக்கொண்டு சொற்கேட்பதில் லாபம் என்ன வென்று அவனுக்குத் தோன்றியும் விட்டது. கையில் பணம் அதிகமாயில்லாமலிருந்தும் அம்மணிபாயை விட்டுத் தப்பித்துகொள்ள க்ஷேத்திர யாத்திரை செய்வ தாக ஒப்புக்கொண்டான்.

இருபத்தேழாவது

மந்திரோபதேசம்

யாத்திரையில் நடந்த குற்றங்களை தனது கணவனுக்கு அம்மணிபாய் எடுத்துக்காட்டல்

எப்படியோ கோணல் மாணலாய் காரியங்களை முடித் துக்கொண்டு பட்டணம் வந்து சேர்ந்துவிட்டோம்! இன்று ஒரு பொழுதும் போய் நாளை எப்பொழுது ஊருக்குப் புறப்படப்போகின்றோம் என்றிருக்கிறது! எப்பொழுது வீட்டையும் வாயிலையும் காணுவோம் என்று ஆய்விட்டது!!

Kovilos Acadamy

இனிமேல் வெளியிற் புறப்பட்டால் உங்களுடன்தான் புறப்படவேண்டும்! போதும் போதும்!! இனி நூறு ஜன்மங்களுக்குப் போதும்!!! இனி உங்களுடன் க்ஷேத்திரங்களைப் பார்க்கப் புறப்படுவதைவிட சந்திக்கரையில் சோறு பொங்கி உண்ணலாம்! எங்குபோனாலும் அவஸரமா!! எங்கு சென்றாலும் அதிகாரந்தானா!! ஒரு புண்ணிய க்ஷேத்திரம் என்றால் ஒரு நாழிகை முன பின்னாகத்தான் எல்லாக் காரியங்களும் நடக்கும். உங்களுக்கோ சாப்பாட்டு விஷயத்தில் ஒவ்வாவது தவறக்கூடாது! சுவர்க்கத்துக்குப்போயும் கஷ்கத்தில் மூட்டை என்று சொல்லுகிறபடி திருப்பதி, காளஹஸ்தி சென்றும் உங்கள் சுகுருஷையே எனக்கு பெருங்காரியமாயிருந்தது! காளஹஸ்தியில் கருணைக்கிழங்கைக் கண்டால் அவ்விடத்திலேயே அதை வாங்கி வறுத்துப் பேரி செய் என்று ஜம்பமாய்ச் சொல்லி விடுகின்றீர்கள்! அதற்கு இரும்பு சட்டி வேண்டுமே. அரைப்படி எண்ணெய்யோ நெய்யோ வேண்டுமே. அவைகளுக்கெல்லாம் போனவிடங்களில் சௌக்கிய மிருக்கின்றதா இல்லையா என்பதை விசாரிக்கிறதேயில்லை! முளைக்கீரையைக்கண்டால் மசி; அரைக்கீரையைக் கண்டால் அம்பட்டபாஜி செய் என்று இந்தப்படி என் பிராணனை எடுத்துவிட்டீர்கள். சேலத்தில் நமது ஊரில் நாம் வறுவலையும் மசியலையும் கண்டதுமில்லை; தின்றதுமில்லை! காளஹஸ்தியிலும் திருப்பதியிலுந் தான் அவைகளைத் தீர்த்துக் கொள்ளவேண்டும்!! நல்ல நாக்கு உங்களுடைய நாக்கு!!!

"ஏதாவது ஒன்று புசிக்கவேண்டுமல்லவா? அந்த ஊரில் அகப்பட்ட நல்ல பதார்த்தங்களை நான் வாங்கிக்கொடுத்து சமையல் செய்யச் சொன்னால் அது ஒரு தோஷமா?"

அப்படி சாப்பாட்டு ருசியில் ஜாக்கிரதையாயிருந்தது போல் ஸ்வாமிதர்சனத்தில் இருக்கக்கூடாதா? உமக்குத் தான் சாமியில் நம்பிக்கையேயில்லையே? எல்லா சாமிகளும் பாகவத கோஷ்டியில் அடங்கியிருப்பதாக நீங்கள் சொல்லு

Koviloor Acadamy

கின்றீர்களே!! திருப்பதி மலை யேறும்முன் எல்லாரும் கபில தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்துவிட்டு மடியாய் ஏறுவது வழக்கமாம். அப்படி செய்யவேண்டும் என்று நான் சொன்னால் அது பாசித்தண்ணீர் வேண்டாம் என்றீர்கள். மலையில் ஏறினோமே. அங்கு புஷ்கரணியில் தலை முழுகுவோம் என்றால் காய்ச்சல் வரும் என்றீர்கள். ஸுவர்ண முகி காடை இறகுபோல் ஓடிற்று. அதில் கால்வைக்கக்கூடா தென்றீர்கள். கோவிலில் நுழைந்ததும் நாழிகையாயிற்று; நாழிகையாயிற்று; புறப்படு; புறப்படு என்று துரிதப்படுத்தினீர்கள்!! எனக்கு ஒவ்வொரு சாமியையும் தொட்டுத் தொட்டு சேவிக்க ஆசை. நீங்களோ, எல்லாம் பார்த்தாய்விட்டதல்லவா. வெளிப்படு வெளிப்படு என்று அதிகாரம் பண்ணுகிறீர்கள்! நல்ல அதிகாரம்! உங்களுடன் கோவிலுக்கு யாராவது வருவார்களா? ஸ்நாநமில்லை. சாவகாசமான சேவையில்லை. கற்பூரஹாரத்திக்கு ஒரு ரூபா போட வேண்டிக்கொண்டேன். அதற்கு பணமில்லை என்று விட்டீர்கள். என்ன க்ஷேத்திர தர்சனம்! துலுக்கர்களுக்கும் நமக்கும் என்ன வித்யாசம்!

''இன்னமொரு தடவை உனக்கிஷ்டமானபடி யாரைக் கூட அழைத்துக்கொண்டு க்ஷேத்திரங்கள் சுற்றவேண்டுமோ அவர்களுடன் போய்வா.''

இந்த வாய் ஒன்றுதான் உமக்குப் பெரிது! நல்லது கீழ்திருப்பதியில் ஸ்வாமி புறப்பட்டபொழுது ராத்திரிநீங்கள் மாத்திரம் எங்களை யெல்லாம் தூங்கப் பண்ணிவிட்டு உற்சவம் பார்க்கப் போனீர்களே. அந்தக் காரணம் எனக்குத் தெரியாதா?

''தெரிந்தால் உனக்குள் வைத்துக்கொள்.''

ஒருக்காலும் வைத்துக்கொள்ள மாட்டேன். சேலம் போனபின்பு உங்களுக்குத் தகுந்தபடி புத்தி சொல்ல வேண்டும் என்றிருந்தேன். இதற்குள் உமக்கே தலை

Kovilur Acadamy

பொறுக்கவில்லை. நீங்கள் ஸ்வாமியையா பார்க்கப் போனீர்கள்! தேவடியாளையல்லவா தொடரச்சென்றீர்கள். மேளத்துக்கு முன் அம்முண்டைகள் எதிரில் நீங்கள் பல்லிளித்துக் கொண்டு நின்ற வெட்கத்தை நாமிறங்கியிருந்த வீட்டுக்கு வாயில் வழியாக ஸ்வாமி போகும்பொழுது நான் பார்த்தேன். நீங்கள் என்னைப் பார்க்கவில்லை. என்னை வீட்டை விட்டு வெளியே அழைத்துப்போகவுமில்லை. உமது கவனம் எல்லாம் அம்முண்டைகள் மேலிருந்தது! நான் வாயிலில் வரும் சாமியை பார்க்க வெளியே வந்து உமது திருட்டைக் கண்டுபிடித்தேன். இதுமாதிரி எத்தனை கள்ளத்தனம் உம்மிடமிருக்கின்றதோ அவைகள் யாருக்குத் தெரியும்?

''அடி பாவி! வீண்வார்த்தைகள் சொல்லாதே. நான் எல்லாரையும்போல் ஸ்வாமியைத்தான் பார்க்கப்போனேன். பாதி ராத்திரியில் உன்னை எழுப்புவானேன். வீடோ அயலார் வீடு நீ உள்ளே படுத்திருந்தாய். நான் வெளித்திண்ணையில் படுத்திருந்தேன். இவைகளெல்லாம் உனக்குத் தெரியாதா?''

என்ன யுக்திப் பேச்சுப் பேசுகின்றீர்கள்! உமது வஞ்சனை எனக்குத் தெரியாதா? திருப்பதியில் நாமிறங்கியிருந்த வீட்டில் ஒருவருமில்லை. அது தர்மகர்த்தா வீடாம். கூடத்தில் 100 சந்தனக்கட்டைகள் அடுக்கியிருந்தன. இரண்டு சிறுகட்டைகளை பொறுக்கி நான் நமது மூட்டைகளில் ஒளித்து வைத்தேன். ஒருவருக்கும் தெரியாதபடி துணியைப்போட்டு சுற்றியிருந்தேன். நீங்கள் என்ன மூட்டை கனக்கிறது என்று சொல்லி திருடியை சோதிப்பதுபோல் என் மூட்டைகளை சோதித்து அந்த சந்தனக்கட்டைகளை வீசி எறிந்து என்மேல் நாய் விழுகின்றாற்போல் விழுந்தீர்களே! அந்த அவமானம் எனக்கு ஒருபொழுதும் ஆரவே ஆராது!!

''வேண்டவே வேண்டாம்; ஆராமலே யிருக்கட்டும்.''

இப்படி யார் கொண்ட பெண்சாதியைப் பார்த்துச் சொல்லப்போகின்றார்கள்! திருப்பதியில் புறக்கடையில்

சந்தனமரம் வளருகிறது! கூடத்தில் கணக்கில்லாமல் கட்டைகள் படிகள்போல் அடுக்கியிருந்தன. அவைகளில் இரண்டு எடுத்தால் யார் சொத்து குறைந்தது? என்ன நஷ்டம்? நல்லது யாருக்காக எடுத்தேன்? நான் சந்தனம் அரைத்து நெற்றியில் வைத்துக்கொள்ளப் போகிறேனு?

நீங்கள் நியாயத்தை நன்ருக அறிந்தவர்! உமக்குத் தெரிந்த நியாயம் எனக்குத் தெரியாது!! நீர்தான் தர்மராஜா! நான் திருடி என்ருல் என்னை குலத்தைவிட்டு நீக்கிவிடும்! சிரிக்கவேண்டாம். இவ்வளவு அவமானத்திற்கு என்னை சேலத்தைவிட்டு இழுத்து வரவே வேண்டாம்! நானும் ஊரைவிட்டு வந்தயிடத்தில் ஒன்றும் சொல்லக கூடாதென்று இருக்கின்றேன். நீங்கள் செய்த அவமானங்களை என்னுல் சகிக்கமுடியவில்லை.

என்று சொல்லிக்கொண்டே தூங்கினுள். அது ஒன்றே தான் க்ஷேத்திர யாத்திரை செய்ததின் பெரும் பயன் என்று கணவன் கருதி தூங்கலானுன்.

இருபத்தெட்டாவது
மந்திரோபதேசம்

அம்மணிபாய் சேலம் திரும்பிவந்ததும் வீடுபோனபோக்கு

எலி வளையானுலும் தனி வளைவேண்டும்! எப்படியோ நமக்கு என்று ஒரு குடிசையாவது யிருந்தால் என்ன ஸந்தோஷம்!! சென்னப்பட்டணம் கண்காட்சி சபையைவிட

இந்த வீடு எனக்கு ஸந்தோஷமாயிருக்கிறது!!! தன்னூரை விட்டு வேறு ஊருக்குப்போகும் சுகம் ஒரு சுகமா? எப்படி சிலபெயர்கள் நாய்கள்போல் அலைகின்றார்களோ அதுதான் எனக்கு விளங்கவேயில்லை! இன்று நமது வீட்டுக்கு நாம் திரும்பிவந்தது காணாதது கண்டாற் போலிருக்கின்றது.

"அப்படியா?"

என்ன பரிகாஸம்! உங்கள் பரிகாஸத்தை உங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளுங்கள்!! வேண்டும் என்றால் ரம்பாபாயுக்குக் கொஞ்சம் கொடுங்கள். உமக்கு வீடு சௌக்கியப்படுமா! பாகவத கோஷ்டிதான் சந்தோஷமாயிருக்கும்! நான் ஒரு பொறுப்பா? அதிலும் நானின்றைய தினம் உம்மை வெளியில் விடவில்லை. நல்லது வீட்டிற்குள் நுழைந்த பிறகு நாமில்லாத காலத்தில் இந்த வீட்டில் என்ன நின்றது; என்ன போயிற்று; கணக்குப்பார்த்தீர்களா! ஒன்றுமில்லை! ஒரு மாதத்திற்குக் காணும்படி எரிமுட்டை அடுக்கிவைத்திருந்தேன். அதில் முக்காலையும் வள்ளி எடுத்துப் போய்விட்டாள். பழயநாள் வீடுகூட்டி என்று அவளை நம்பி வீட்டை அவள்வசம் ஒப்பித்திருந்தால் இவ்வித மோசம் பண்ணுவாள் யென்று நான் நினைக்கவேயில்லை.

"பூட்டிவைத்துப் போகக்கூடாதா?"

எரிமுட்டையை நீங்கள் பெண்ணாய்ப் பிறந்தால் பூட்டி வைத்திருப்பீர்கள். என்னைப்போன்ற பெண்டுகள் இது வரையில் பூட்டிவைத்ததாக நான் கேள்விப்படவில்லை. வேண்டுமென்று பரிகாஸந்தானே செய்கின்றீர்கள்? இந்த பரிகாஸம் உமக்கு அடுக்குமா? நல்லது நான் பழம்பானைகள் கற்கள்போல் வெகு கெட்டியானவைகளை அந்தப்பறணில் அடுக்கிவைத்திருந்தேன். அவைகளில் எத்தனை காணாமற் போயிருக்கும் என்று நினைக்கின்றீர்கள்.

"எல்லாம் காணாமற் போயிருந்தாலும் எனக்கு ஸந்தோஷம்."

Koviloor Acadamy

உமது புத்தி இப்படி மாறின பிறகுதான் இந்தக் குடும்பமும் இப்படிப்போயிற்று. புதிய பாண்டம் நாளை காசு கொடுத்தால் அகப்படும்; பழையவைகள் கோடி கொடுக்கினும் கிடைக்கமாட்டா. நாளைக்கு எண்ணெய் வாங்கி வைக்கவேண்டும். நான் பறணில் கவிழ்த்திருந்த பழைய குடத்தை காணோமே! அதற்கு என்ன செய்வீர்கள்?

"அதற்கு என்ன செய்கிறதா? புதுக்குடத்தில் வாங்கி வைக்கிறது."

அப்படியா? அதற்கு காசுவேண்டாம்! கற்பூர ஆரத்திக்கு பணமில்லை என்றீர். கொயவன் குடத்துக்குத் தப்பாமல் காசு கொடுப்பீர். அது எனக்குத் தெரியும்! புதுக்குடத்தில் ஒரு செம்பு எண்ணெய் ஊற்றினால் அதில் பாதி குடம் குடித்து விடும். அது நமக்கு வெகு லாபமாயிற்றே! நாளை பொழுது விடியட்டும். அந்த வள்ளி முண்டையை நான் லேசில் விடப்போகிறதில்லை. அவள் இவ்வளவு திருடு என்று நான் எண்ணவேயில்லை. அவளைப்பற்றி நான் கண்டிக்க ஆரம்பித்தால் நீங்கள் பரிந்துகொண்டு வருகின்றீர்கள். அவள் தயவு உமக்கு வேண்டும். கொண்ட பெண்சாதி வேண்டாம். ஒரு வீடு என்றிருந்தால் பெண்டுகள் பாடு எவ்வளவோயிருக்கும். வாயிற்கூட்டியை ஒரு வீட்டுக்காரி கோவித்துக் கொண்டால் அதில் புருஷர்கள் புகுந்து பேசவரலாமோ? வரவர வள்ளி முன்போலில்லவே யில்லை. வெகு சோம்பேறியாய் விட்டாள். ஏன் ஒன்று செய்யவில்லை என்று நான் ஒன்று கேட்டால் அவள் பத்து மறுமொழி சொல்லி சண்டைக்கு நிற்கின்றாள்.

"ஆம். நீ உன் மரியாதைக்குள்ளிருக்க வேண்டும்!"

ஆம், நாளை வள்ளி வந்ததும், அம்மா; தாயே, கோபிக்காதே. இதோ கட்டில் போட்டிருக்கின்றேன்; உட்கார்ந்திரு என்று சொல்லி அவள் கை துடப்பத்தை நான் வாங்கிக்கொண்டு வீடு விளக்குகின்றேன். அப்பொழுது உங்கள் கண்கள் குளுகுளு வென்றிருக்கும். அவளுக்கு மாதம்

கொடுப்பது 3 பணம். அந்த பணத்தில் ஒரு பணம் துணி துவைகக. அந்த முண்டை வெகு அக்கிரமம் செய்கின்றாள். துணிகளையெல்லாம் நனைத்து நனைத்து பிழிகின்றாளே அல்லாமல் ஒன்றையாவது கசக்கி அடித்து துவைக்கின்றதேயில்லை. போனால்போகிறது என்று இதுவரையில் பொறுத்தேன். அவள்பிழிந்து வைத்ததை எல்லாம் மறுபடி துவைத்து துவைத்து என் கைகள் இரண்டும் செவந்துபோயின. நாளை முதல் வேறு ஆள்போடட்டுமா?

"அப்பொழுது தெரியும் அவள் வள்ளியை நல்லவளாக்குவாள்."

வீடெல்லாம் வெளுத்திருக்கிறது. நாமிவ்விடம்விட்டுப் போயிருந்த ஒரு மாஸகாலத்தில் வள்ளி ஒரு நாளாவது இந்த வீட்டை மெழுகி யிருப்பாள் என்று நான் எண்ணவில்லை. அவளுக்குத்தான் என்ன கர்வம், என்ன அழும்பு. ராணிபோலல்லவோ மினுக்கிக்கொள்ளுகிறாள். ஒன்று கேட்டால் பத்து பதில் கேட்கின்றாள். நாம் விளக்கேற்றி வைத்துக்கொள் என்று எண்ணெய்க்காகக் கொடுத்த காசை அவள் எடுத்துக்கொண்டிருப்பாள். நல்லது யிருக்கட்டும். விசை என் கைப்பிடிருக்கிறது. நாளை அவள் வாயில் மண்ணைத் தெள்ளிப் போடுகிறேன். நாளை போன மாதச் சம்பளம் கொடு என்பாள். எண்ணெய்க் காசுக்கும் போன மாத சம்பளத்துக்கும் சரி என்கின்றேன். போனால் போய் விடட்டும். ஒரு மாதச் சம்பளம் லாபந்தானே. அதென்ன கையில்.

"விஷ்ணு ஸகஸ்ரநாமம்."

அந்த துடப்பத்தை கீழேபோடுங்கள்! என் சொல்லைவிட அது அவ்வளவு ருசியா? நான் பேசினால் தூக்கம் பிடிக்கிறது என்கின்றீர்கள். அந்த இழவை கையிலெடுத்தால் தூக்கம் போய்விடுகின்றதா? அப்படி பெண்சாதி வேண்டாம் என்று சொல்லுகிற புஸ்தகம் ஒரு புஸ்தகமா?

Koviloor Acadamy

"அதன் ருசி உனக்கென்ன தெரியும்? நான் காளஹஸ்தியில் கால் ரூபா கொடுத்து வாங்கினேன். இதுவரையில் படிக்க ஒழியவில்லை. அரை நாழிகை பார்க்கிறேன்."

அந்த தங்கப்பாட்டு புஸ்தகத்தை நாளை பார்க்கலாம். நான் சொல்லியும் புத்தியில்லையா!

என்று சிறிக்கொண்டு விளக்கை வாயால் ஊதி அணைத்து விட்டாள்.

எப்படியாவது பிரசங்கத்தை நிறுத்தினாளே என்று சந்தோஷமடைந்து அன்றிரவு ராமபிரஸாத் தூங்கினான்.

இருபத்தொன்பதாவது
மந்திரோபதேசம்

ராதாபாய்க்கு தாலூகா காதுகுத்த அம்மணிபாய் உத்தரவு கேட்குதல்

என்ன பொழுது ஒருபக்கம் புகும்முன் ஒரேதூக்கம் தூங்க ஆரம்பிக்கின்றீர்கள்! நான் இன்றிரவு எவ்வளவோ ஸங்கதிகள் பேசவேண்டும் என்று நினைத்திருக்கிறேன். உங்களுக்குத் தூக்கம் வெகு அதிகமாக விருக்கின்றபடியால் முக்கியமான விஷயங்கள் இரண்டொன்று பேசி நிறுத்தி விடுகின்றேன். நமது குழந்தை ராதாபாய்க்கு வயது ஆய் விடுகின்றது. இளம்பிராயத்திலேயே பாக்கி நிற்கும் இரண்டொரு காதுகளைக் குத்தவேண்டும். காதுத்தண்டு முற்றினால் குழந்தை அவஸ்தைப்படும். நாளை வெள்ளிக்கிழமையாயிற்றே, குழந்தைக்கு தாலூகாக்காது வாளிக்காது இவ்

Koviloor Acadamy

விரண்டையும் குத்திவிடுவோமா. அதற்கு அதிகச்செலவு ஒன்றுமில்லை. கால் ரூபா இந்தா என்று சொல்லி வெற்றிலை பாக்குடன் வைத்து ஆசாரி கையில் கொடுத்தால்போதும். என்ன உத்தரவு சொல்லுகிறீர்கள்?

''எனக்கு இப்படி காதுகளில் ஒரு பாகமாவது வீண் போகாமல் எங்கு பார்த்தாலும் குத்தி ஓட்டை பண்ணுவது பிடிக்கவேயில்லை.''

உங்களுக்கு பிடிக்கவில்லையா? எங்கு ஒருக்கால் பிடிக்கும் என்று சொல்லுவீர்களோ என்று காத்திருந்தேன். நான் சொல்லுவது ஒன்றுந்தான் உங்களுக்குப் பிடிக்காதென்பது எனக்கு நன்ருகத் தெரியுமே. உலகத்தில் காது குத்துகின்ற வழக்கமேயில்லை! நமது வீட்டில் மட்டும் நான் புதிதாக ஆரம்பித்தேன்! அது உங்களுக்குப் பிடிக்கவில்லை!! நீங்களும் உலகத்தாரைப்போல் பெண்சாதிமேலும் குழந்தைகள்மேலும் ஆசை வைத்திருந்தால் உமக்கு இவைகளெல்லாம் பிடிக்கும். நீங்கள் ஒருவருடனும் சேராதவர்கள். உமக்கு ஒன்றும் பிடிக்காது. உமக்கு பிடிப்பதெல்லாம் இரண்டு தான்:—பாகவதகோஷ்டி, மூக்குப்பொடி!! ஏன் பிடிக்கவில்லை? காரணத்துடன் சொல்லுங்கள்?

''என்னவோ பிடிக்கவில்லை. லப்பை ஜாதி பெண்கள் ஒவ்வொரு காது வரம்புகளிலும் 1000 பொத்தல் விட்டுக் கொள்ளுகின்ருர்கள். நீயும் உன் குழந்தையை அவ்வாருகப் பண்ணப்பார்க்கின்ருய். சிறிய தோடு ஒன்று போட ஒரு சிறு காது மட்டும் இக்காலத்தில் பெண்களுக்குக் குத்தினுல் போதும். அதுதான் அழகு. ஏற்கனவே நீ நமது குழந்தைக்கு 15 யிடங்களில் காதுகுத்திவிட்டு இன்று தாலுகாக்காது குத்தவும் ஜில்லாக்காது குத்தவும் கேட்கின்ருய். எனக்குத்தான் இலவகள் ஒன்றும் பிடிக்காதென்பது உனக்குத் தெரியுமே. என்னைக் கேட்பானேன். முன்னமேயே நீ பல காதுகள் குந்துங்காலத்தில் நான் தடுத்தேன், என்பேச்சைக்

Kovilooor Acadamy

கேட்கவேயில்லை. இப்பொழுதும் நான் சொல்லுகிறபடி நடக்கப்போகிறதில்லை இது பெண்டுகளுடைய ஜன்மத்தில் பிறந்த இயல்பு ஜெம்பமாக எனனை உத்தரவு கேட்பானேன்.

ஆம் நான் பொல்லாதவள். நான் உத்தரவுப்படி நடக்கிறதில்லை. அவ்வாறு செய்யாமல் நான் என்ன அக்கிரமம்பண்ணினேன. உங்கள் தம்பி தமக்கை குழந்தைகள் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டேனு? நல்லவேளை உமக்கு தம்பித் தமக்கைகள் ஒருவருமில்லை! அப்படியே யிருந்து விட்டால் அவாகள் குழந்தைகள் தலையில் கல்லைப் போட்டேன் என்று நீங்கள் ஒரே ஸாதனை ஸாதித்துவிடுவீர்கள்!! யாருக்காக நான் இவ்வளவு கவலைப்பட்டேன். எல்லாம் குழந்தைக்காகத்தானை. அதிலும் பெண்குழந்தை. அவளுக்கு 12-13 வயதாயிற்றே. நாளை யாராவது பெணகேட்க வந்தால் பளிச்சு என்று தொன்னை போல் காதைக்காட்டிக் கொண்டு ராதா நின்றால் அவளை யார் லக்ஷியம் பண்ணுவார்கள். என்னை, வேண்டுமானால், அந்தக் காது குத்திக் கொள்ளாதே; இந்தக் காது குத்திக்கொள்ளாதே என்று அதிகாரம் பண்ணுங்கள்; உங்கள் நாய்க்குணமிப்படியிருக்கும் என்று அறிந்தே என் தந்தை எனக்கு எல்லாக் காதும் குத்திவிட்டே பிராணனை விட்டார். குழந்தைக்கு காதுகுத்த வேண்டாம் என்று நீங்கள் அதிகாரம்பண்ணவாவது!! ஏதோ இரண்டொரு வருஷம் நம்மிடமிருக்கப் போகிறாள்! அதன பிறகு நான் உங்கள் வாயால் பிடுங்கல் படுவது போல எவனிடமாவது பிடுங்கல் படப்போகிகின்றாள்! அதைப்பற்றி இப்பொழுது விசாரம் என்ன? காதுகளுக்கு நகைபோடமாட்டேன் என்று சொல்லிவிடுங்கள். ஒரே பேச்சில் உங்கள் ஆக்ஷேபம் அடங்கி விடும்! அதை விட்டு லப்பை ஜாதியார்கள் காது அதிகமாக குத்திக் கொள்ளுகிறார்கள் என்று விண்வாதம் பேசுகிறீர்களே. இது உமக்கு நியாயமா? தருமமா? நல்லது இந்த ஊர்பட்டிக் காடுல்லை. சேலம். எல்லா பிராமணஸ்திரீகளும் தாலுக்கா

Koviloor Acadamy

காது குத்திக்கொண்டு காது நீரம்ப நகை போட்டுக் கொண்டிருக்கிறார்களா யில்லையா பாருங்கள். அவர்கள் எல்லாரும் லப்பைச்சிகளா? நாமாவது கௌட பிராமணர்கள்! அவர்கள் எல்லாரும் இந்த ஊர் பிராமணர்கள்தானே. அவர்களைவிட நீங்கள் என்ன உயர்ந்தவர்கள்? அவர்களுக்குக் காது குத்தும்பொழுது அவர்கள் தந்தைகளெல்லாரும் இவ்விதமாக வேண்டாம் என்று தடுத்தார்களா? ஏதாவது ஒரு சுப வார்த்தையை எடுத்துப்பேச ஆரம்பித்தால் வீண் கோணவழக்குச் சொல்லுகிறதே உமது தொழிலாய் விட்டபடியால் உம்முடன் எவள் வாழ்வாள்?

''ஏனிப்படிப் பேசுகின்றாய்? அது கர்ணாடக வழக்கம் என்று தானே சொன்னேன்.''

ஆம்! நான் காது குத்திக்கொள்ளவில்லை! உமது தாயார் தாலுக்கா யிட்டுக்கொள்ளவில்லை! உமது பாட்டி வாளி போட்டுக்கொள்ளவில்லை. நீங்கள் ஒருவர்தான் கர்ணாடகமில்லாமல் பிறந்திருக்கின்றீர்கள்!

''நானும் கர்ணாடகந்தான் நீ. தான் என் காதுகளை தினந்தோறும் குத்துகின்றாயே!''

தெரிந்தது தெரிந்தது! இப்படிப் பேச்சை வீண்வார்த்தை படிக்கையாகச் சொல்லுவதுபோல் சொல்லி என்னை மடக்க வேண்டாம். நான் உங்களுக்குக் காது குத்துவதாகவே யிருக்கட்டும். அது வேறு. நாளைத் தட்டான் கம்பிகொண்டு வந்து குழந்தையின்காதைக்குத்துவது வேறு. உமக்குக் கர்ணாடகமாயிருக்கட்டும். எனக்கு கர்ணாடகமில்லை. என் அருமைக் குழந்தையை நான் வெருங்காதாகப் பார்க்க மாட்டேன். நாளை நான் காது குத்தாமலிருக்கவே மாட்டேன். நீங்கள் கர்ணாடகம் என்று சொன்னால் காதுகுத்துவதையார் நிறுத்தப் போகின்றார்கள். நாளைக்கு அவள் வெறுங்காதாய் நின்றால் சித்திரைபிறந்ததும் அவளையார்மணம் புரியவிரும்புவார்கள்.

Koviloor Acadamy

உமக்குத்தான் அந்தச் சிந்தையே யில்லையே. அதுயிருந்தாலல்லவோ குழந்தையிடம் மனமிறங்குவீர்கள். வேளை தப்பாமல் சாப்பிட்டு கும்பகர்ணன்போல தூங்கினால் போதுமே! இனி யிந்த விஷயமாய் நான் உம்மிடம் பேசப் போகிறதே யில்லை. உம்முடைய புத்தி உமது சுவாதீனத்திலிருந்தால் உம்முடன் பேசுவதில் பிரயோஜனமுண்டு. நீர் இரவு 5 நாழிகைக்குமேல் பாகவதகோஷ்டிக்குப் போவதற்குப் பதிலாக நாளை மாலை வெயிலுடன் புறப்பட்டுப்போய் விடும். நான் காது குத்திவைக்கும் பொழுது அந்த சர்ணுடக வழக்கத்தை நீர் பார்க்கவேண்டாம். ரம்பாபாயைப்போய் பார்த்துக்கொண்டிரும்.

''வேண்டாம்! வேண்டாம்!''

அவள் பெயரைச்சொன்னால் உமக்கு நாய்க்குக் கோபம் வருவது போல் ஏனிப்படிக் கோபம்வருகிறது? நீர் நாளைச் சாயங்காலம் எங்கு உமக்கு யிஷ்டமோ அங்கு போய்விடும். நான் என்னிஷ்டப்படி ராதாபாய் காதை குத்திக் கொள்ளுகிறேன். அந்தக் குழந்தைக்கு தகப்பன் என்று உமக்கு எவ்வளவு பாத்திய முண்டோ அவ்வளவு பாத்தியம் எனக்கும் தாய் என்று கொஞ்சம் உண்டு.

அன்றிரவு அவ்வளவுதான் ராமபிரஸாதுக்குத் தெரியும். ஏனெனில் ஈசனே மனமிரங்கி அவனிடம் நித்திராதேவியை ஏவிவிட்டார். மறு நாள் சாயங்காலம் தன் குழந்தை குத்தின காதில் குங்குமம் பூசியவளாய் தன்னை நமஸ்கரிக்கக் கண்டு அவளை ஆசீர்வதித்தான்.

Koviloor Agadamy

முப்பதாவது

மந்திரோபதேசம்

ஒருநாள் அம்மணிபாய் செவ்வாப்பேட்டை போயிருந்த சமயத்தில் சமையல்கட்டை ராமபிரஸாத் சீர்திருத்தினது

எனக்கு யிப்பொழுது யிருக்கிற கோபத்துக்குப் பேசாமல் இரண்டாம் புடவையை சுருட்டிக்கொண்டு செவ்வாப் பேட்டைக்குப் போய்விடலாமா என்று தோன்றுகிறது! என்ன சிரிக்கிறீர்களே! வேண்டுமென்று ஹடமாய் நானில்லாத சமயத்தில் சமையற்கட்டை உங்களை யார் சீர்திருத்தச் சொன்னார்கள்? தொட்டிமுற்றத்தில் நன்றாய் வெயிலடித்துக் கொண்டு எத்தனை அழகாய் கிணற்றங்கரை யிருந்தது. அந்த மூலையில் ஓட்டை நெருங்க யிழுத்துவிட்டு ஒரு சொட்டு காற்றில்லாமல் பாழாக்கினீர்களே! அடடா! சுண்டெலி செத்த நாற்றம் நாறுகின்றதே! நானிங்கு குடித்தனம் பண்ணப்போகிறதில்லை. இப்பொழுதே வெளியில் போகின்றேன், புருஷர்கள் இந்த காரியம் தானாகச் செய்யலாம், இது கூடாது என்பதை அறியார்களா? என்ன, சமையல் கட்டுக்காவது நான் யஜமானியாக விருக்கக் கூடாதா? அதாவது உங்களுக்குச் சகிக்கக்கூடவில்லையா?

"முன்தடவை கூரையைத் தூக்கிவிட்டேன். கோட்டை வாயில்மாதிரி திறந்த வெளியாகச் செய்தேன் என்றாய். இப்பொழுது இறக்கிவிட்டேன். ஒரு சொட்டு காற்றில்லாமல் பண்ணினேன் என்கின்றாய். என்னை என்னதான் செய்யச்சொல்லுகிறாய்."

Koviloor Acadamy

உமக்குத்தான் இன்னது செய்கிறதென்று தெரிய வில்லையே! கையையும் காலையும் மடக்கி வைத்துக்கொண்டு சுகமாயிருக்கக்கூடாதா? குடுகுடு என்று ஓடி கொற்றனைக் கூட்டி வந்து கிணற்றங்கரையைப் பாழாக்குவானேன்? உமக்கென்ன கூடத்தில் சுகமாய் உட்கார்ந்துகொண்டு 10 நாழிகையானதும் இலை ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு "போடு அன்னம்" என்று அதிகாரம் பண்ணு வீர்கள். பகல் முப்பது நாழிகையும் இவ்விடத்தில் பழம் பழுக்கப்போட்டால் அவிந்துபோவதுபோல் அவிவது நானல்லவா!

"நீதானே கூரையைத் தாழ்த்த சொன்னாய்."

ஆம் யார் யில்லை என்று சொல்லுகிறார்களிப்பொழுது! வேட்டால் மதனியை வேட்பேன்! இல்லாவிட்டால் பரதேசம் போவேன் என்று பேசினால் நான் எவ்வாறு மறு மொழி சொல்லமுடியும்? கூரையைத் தூக்கிவிட்டால் ஒரே உயரமாகத் தூக்கிவிடுகிறது. அவ்வளவு உயரம் வேண்டாம் என்றால் ஹடத்துக்கு முற்றிலும் இறக்கிவிடு கிறதா?

"நான் அப்படி முற்றிலும் மூடவில்லையே, உன் கண்களை நன்றாகத் திறந்துபார்."

கண் எனக்கு இன்னும் அவிந்துபோகவில்லை! போனாலும் உங்களுக்கு சம்மதந்தான்! அப்படியே போய்விட்டாலோ கிணற்றில் தள்ளி கல்லை தூக்கிப் போட்டுவிடுவீர்கள்!! அதற்கென்ன? ஒரு சாண் இடைவெளி விட்டிருக்கிறீர்கள். அது இருந்தாலென்ன இல்லாவிடிலென்ன?

"ஏன் வீண்வார்த்தை? கொற்றன் இவ்வளவு போதும் என்றான். நாளைக்கு உனக்காகவேண்டுமானால் நீயே யிருந்து கொண்டு எவ்வளவு உயர்த்தவேண்டுமென்று சொல்லு கிறாயோ அவ்வளவு உயர்த்திக்கொடுக்கச் சொல்லுகிறேன்."

Kovilur Acadamy

அதற்கு காசு செலவில்லை! கொற்றன் ஒன்றுங் கேட்கா மல் செய்துவிடுவான். அதுதான் நான் எப்பொழுதும் சொல்லுகிறது. அசட்டுக்கு இரட்டிப்புச் செலவு. இவ் வண்ணம் காசு வீணாகப்போகின்றது உங்களுக்குத்தெரியவே தெரியாது. நியாயமான செலவுக்குக் கேட்டால் வம்புக்கு நிற்பீர்கள். அது போகட்டும் அம்மி வழவழவென்றுபோய் ஆறுமாதங்களாயின. அதில் குழவியைவைத்து அரைத்து முடிப்பதற்குள் என் பிராணன்போய் திரும்பிவருகிறது. வெந்த கத்திரிக்காய்கூட வெகுநாழிகைக் கப்பாற்றான் மசிகின்றது. எத்தைக்கண்டாலும் துவையலரைக்கச்சொல்லு கிறீர்களே! அதற்காகவாவது அதைப்பொளித்து வைத்தீர் களா? உலக்கைக்குப் பூண் ஒன்றுபோய் ஒன்பது மாதங்களா யின. அதை பூண்போட்டு வைக்கக்கூடாதா? கல் திருகைக்கு அச்சுப்போய் ஐந்துமாதங்களாயின. நானும் அச்சுப் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டுக்கேட்டு வாய் அயர்ந்தேன். நானும் ஒரு புருஷனாய்ப்பிறந்திருந்தால் ஒரு விறகுகுச்சியை ஒடித்து ஒரு நிமிஷத்தில் அச்சு சீவிபோட் டிருப்பேன்! பாகவதகோஷ்டியில் சேர்ந்த பிறகு உங்களுக்கு ஏகாதசி விரதம் தப்புகின்றதே யில்லை. மற்றநாள் வீண் சோறு. ஏகாதசியன்று தேங்காய் துருவிப்போட்டு நெய் சொட்டச் சொட்ட உப்புமா. அந்த பலகாரத்துக்காக வாவதுஅச்சுப்போட்டு வைத்தீர்களா? அமாவாசை வந்தால் புளிக்காத தோசை. அன்று அரைத்து வார்க்கவேண்டுமே. கொஞ்சம் புளிப்பாயிருந்தால் "இந்தத் தோசை நாய்கூட முகராது" என்று ஏசிக்காட்டுவீர்களே ஆட்டுக்கல்லின் குழவி சிக்குகிறது உங்களுக்கு நன்றாகத் தெரியுமே. அதை செவ்வையாகச் செய்து வைக்கக்கூடாதா? இவைகள் ஒன்றிலும் உமது புத்தி போகவேயில்லை. உமக்கு புத்தியே யில்லை. கிணற்றங்கரையை முற்றிலும் மூடி காளை வாய் போல் ஒரு வென்னீரடுப்பு கட்டமட்டும் தெரிந்தது! அந்த அடுப்புக்கு யார் விறகு கொண்டுவந்து போடுவதாக உத்தேசித்தீர்கள். சேர்வராயமலைக்காட்டையே வெட்டி

Koviloor Academy

வந்தாலும் ஒரு நாளைக்குக் காணுதே. அக்கினி நக்ஷத்திரம் பிறந்துவிட்டது. வெண்ணீர் அடுப்பு வெகு அவசியம்! வேறு விஷயங்கள் நான் சொன்னவைகள் அவசியமேயில்லை. உங்களுக்கென்ன பைத்தியம் பிடித்ததா! நாளை சூரியோதயமானதும் யாரையாவது கூப்பிட்டு வந்து உமது கையைக் காட்டி பித்தந்தெளிய மருந்து கொடுக்கச் சொல்லவேண்டும்! என்ன புத்தி!! என்ன புத்தி!!!

"ஆம் பைத்தியந்தான். நீ வாயை மூடினால் அதுவே பைத்தியத்துக்கு மருந்து."

அப்படியா? என் வாயை வீணாய்ப் பெருக்கினதுமின்றி எவ்மேல் குற்றமும் சொல்லுகிறீர்களா. நாளை அக் கொற்றனை கொண்டுவாருங்கள். அவன் தலையை சிரைக்கிறேன்.

என்று சொல்லிக்கொண்டு அம்மணிபாய் அன்றைப் பொழுது கண்ணயர்ந்தாள். ராமபிரஸாதும் தனது தலையை கையால் தடவிப்பார்த்து மொட்டையாகவில்லை, இன்று பிழைத்தோம், என்று பூரித்து தூங்கலானான். என்ன நல்ல தூக்கம் தூங்கினபோதிலும் அவன் கனவில் அம்மி, குழவி, ஆட்டுக்கல், உலக்கை, இவைகள் அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்தன.

முப்பத்தோராவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாதை நம்பி ஒரு ரகஸ்யமும் சொல்லக்கூடாதென்று அம்மணிபாய் எடுத்துக்காட்டுதல்

இனிமேல் மட்டும் என்னிடமிருந்து ஏதாவது ஒரு ரகஸியம் நீங்கள் அறிந்துகொள்ளுவதைப் பார்ப்போம்!

என் பிராணன் போனாலும் உங்களிடம் ஒரு ரகஸியமும் சொல்லமாட்டேன். இப்படியா, என்னை சந்தியிலிழுத்து விட்டு என் தலையில் அபவாதத்தைச் சுமற்றினீர்கள்! இனி என் வாயைத்திறந்து உங்களுக்கு ஏதாவது சொல்லக்கூடாத விஷயத்தைப்பற்றி நான் சொன்னால் நான் சங்கர பிரஸாதின் மகளல்ல. புருஷனுக்கும் பெண்ஜாதிக்கும் ஒத்துமையென்பது யில்லாவிடில் எவ்வாறு உலகம் நிற்கும்? என்ன நான் சொல்லுவது ஒன்றும் தெரியாதவர்கள்போல் ஆந்தைவிழிப்பது போல் விழிக்கின்றீர்கள்! நான் உங்களிடம் வைத்திருந்த நம்பிக்கையே இன்றுடன் அழிந்துபோயிற்று! நானின்ன விஷயமாய்ப் பேசுகிறேன் என்பது புரியாதவர்கள் போல் பார்க்கவேண்டாம் இன்றுடன் உங்களுக்கும் எனக்கும் உள்ள நம்பிக்கை என்பதே பாழாய்விட்டது. ஒரு வீட்டில் கணவனுக்கும் மனைவிக்கும் அவர்கள் பேசிக்கொள்ளும் ரகஸியங்கள் கோடானகோடியிருக்கும்! ஒருவனைப்பற்றியாவது அல்லது ஒருவளைப் பற்றியாவது ஒரு மனைவி தனது புருஷனிடம் தான் கேட்டபடி எத்தனையோ சங்கதிகள் சொல்லலாம். அச்சங்கதிகளை கணவன் தனது உள்ளத்தில் பூட்டுப்போட்டு பூட்டிவைத்துக் கொள்ள வேண்டும். அப்படியின்றி என் மனைவி என்னிடம் சொன்ன ஸமாசாரத்தைக் கேளுங்கள் என்று நீங்கள் ஒரு பறையை கழுத்தில் கட்டிக்கொண்டு தெருத்தெருவாய் நீங்கள் தம்மட்டம் அடிக்கலாமா?

"என்னடி ஒன்றும் புரியாமல் எதையோ மனதில் நினைத்துக்கொண்டு பேசுகிறாய்."

ஒன்றும் புரியாமலிருக்கிறீர்களா? கங்காபாய் பெண்ணைக் கலியாணம் பண்ண வந்த உமது அத்தானும் அத்தான் மகனும் ஏன் இந்த வருஷம் கலியாணம் வேண்டாம் என்று ஓடிப் போனார்கள். அது உமது கிலகத்தானே! உம்மிடம் மட்டும் நான்ஒருரகஸியஞ் சொல்லியிருந்தால் அதை மடக்கு என்று சந்தியிற் பானையைப்போட்டு உடைப்பதுபோல்

உடைத்து என் மானத்தை வெளிவிட்டீர்களே! என்ன தைரியத்தைக்கொண்டு அம்மாதிரி செய்தீர்கள்? நான் உமக்கு இனிவேண்டாமா? வயதாய் விட்டதென்று என்னிடம் இவ்வளவு அலக்ஷியமா? அநியாயமாய் ஒரு கன்னிகையை நாசம் பண்ணினீர்களே! நீங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தால் நாளைக்கு முகூர்த்தம் நடந்து விடுமே. ஒரு குடும்பத்திலேயே கல்லைத் தூக்கிப்போட்டுவிட்டு தலையணையில் சுகமாய் தலை வைத்துத் தூங்க உங்களுக்கு தைரியமிருக்கிறதே!

''நான் என்ன செய்தேன். வாயைவிட்டுச் சொல்லேன்?''

நான் அதை வாயைவிட்டுச் சொல்ல வேண்டுமா? உமக்கு ஒன்றுந்தெரியாதா? நான் உம்மிடம் ஒப்பித்திருந்த ரகஸ்யத்தை என்ன தைரியத்தைக்கொண்டு வெளிவிட்டீர்கள்? நாளை மணி கர்ணிகைக்கு குடத்தை எடுத்துக்கொண்டு நான் தலை முழுகப் போகும்பொழுது எனக்கு முன் அங்கு ஸ்நாநம் பண்ண கங்காபாய் வந்திருப்பாளே. நீங்கள் என்னை சந்தியிலிழுத்துவிட்ட பிறகு எவ்வண்ணம் அவள் முகத்தில் நான் விழிப்பேன்? நாங்களிருவர்களும் குழந்தைப்பருவம் முதல் விளையாடி வளர்ந்தவர்கள் ஆயிற்றே; நானின்றிரவு உங்களை எளிதில் தூங்கவிட மாட்டேன். கங்காபாய் நாளை என்னைப் பார்த்து என்னுடைய குழந்தை கலியாணத்தில் கல்லைப்போட்டாயே என்று என்னை முலு முலு என்று சண்டைபிடிப்பாளே. கங்காபாய் பெண்ணைப்பற்றி உமக்கு என்ன தெரியும் என்று உமது அத்தான் கேட்டால் எனக்கு ஒன்றுந்தெரியாது என்பதாய்ச்சொல்லி நீங்கள்வாயை மூடிக் கொண்டிருக்கக்கூடாதா? ஒரு கலியாணம் பண்ணிவைக்க எத்தனையோ பொய்கள்சொல்லவேண்டும்என்பதுசாஸ்திரம். செவ்வாப்பேட்டை மங்களதாஸ் தனது மாமன் பிள்ளைக்கு பெண்பார்த்து கலியாணம் பண்ணிவைத்தது உமக்குத் தெரியாதா? பெண்ணைப்பற்றி மங்களதாஸை அவர் மாமன் கேட்டபொழுது ''பெண்ணாவது பெண், சித்திரத்தில் எழுதிப்பார்க்கவேண்டும்; சந்திரன் போல் முகம், தாமரை

Koviloor Acadamy

யிதழ்போன்ற கண்கள். அம்புபோன்ற புருவம், எலுமிச்சம் பழநிறம், நீண்டமூக்கு, விசாலமான கண்கள். அந்த விசாரம் என்னத்திற்கு; உங்கள் பெண்களை அப்பெண்ணின் காலில் கட்டிகசையடியடிக்க வேண்டும்'' என்று பொய்யும் புழுகும் சொல்லி கன்னங்கரேல் என்றுஒரு லக்ஷணமில்லாதபெண்ணை கலியாணம் பண்ணி வைத்தான். மாமனையே மருமான் கலியாணவிஷயமாய் மோசம்பண்ணலாம் என்றிருந்தால் உமது அத்தானை நீர் ஏன் மோசம் செய்யக்கூடாது? நாளை முகூர்த்தம் முடிந்த பிறகு கங்காபாய் பெண்ணுக்கு வலிப்பு என்பதை நீர் வெளியிட்டு யிருந்தால் உம்மேல் இந்தகுற்றம் ஏற்படுமா? என் தலை இப்படி உருளுமா? இந்த விஷயத்தில் என் பெயரையிழுத்து விட்டு நல்ல காரியத்தையும் கெடுத்தீர்களே. நீங்கள் என் கணவன் என்றும் நான் உங்களை நல்லவர்கள் என்றும் நம்பி இனி ஒருபொழுதும் ரகசியம் சொல்லவே மாட்டேன். வாயை கோட்டான் போல் மூடிக்கொண்டு விழித்துப்பார்க்கின்றீர்களே. நீர் உமது அத்தானிடம் பூசனிக்காயை உடைப்பது போல் கங்காபாய் பெண்ணுக்கு வலிப்பு உண்டு என்று சொல்லவில்லையா.

''ஆம்; சொன்னேன்.''

மனைவி சொல்லும் சொல்லை மனதில் வைத்துக் கொள்ளத் தெரியாத புருஷர்களுக்கு வெட்கமேது? மானமேது? ''ஆம் சொன்னேன்'' என்று அழுத்தந்திருத்தமாய் வெட்கங் கெட்டுப்போய் என்னைப்பார்த்துச் சொல்லுகிறீர்களே! அந்த ரகசியம் உமக்கு எப்படித் தெரிந்தது? நான் சொல்லியபடியாலன்றோ! நான் சொல்லாமலிருந்தால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள். நான்தான் ஏன் உங்களிடம் தெரிவித்தேன். இது ஒரு ரகஸியம்: நமது புருஷனுக்குத் தெரியாமல் நம்மிடமிருப்பதில் நமக்கு என்ன ஸந்தோஷம். நமது கணவன் நம்மை துரோகம் பண்ணமாட்டார் என்றல்லவோ சொல்லிவிட்டேன். நான்

Koviloor Academy

ஒன்றுந் தெரியாதவள். என்னிடம் கற்றுக்கொண்ட ரகஸியத்தை என்னுத்தர வில்லாமல் வெளியிட்டு என் பிராணனுக்கு அபாயம் கொண்டுவந்து வைத்தீர்களே! நாளை கங்காபாய் முகத்தை நான் எப்படிப் பார்ப்பேன்? இன்று மத்தியானமே உமது அத்தான் கலியாண விஷயத்தைப் பற்றி அடுத்த வருஷம் யோசிப்போம் என்று சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விட்டானும்.

''அவன் போனது நியாயந்தான்.''

நியாயந்தான்! நீங்களும் ''கங்காபாய் பெண்ணை உன் மகனுக்கு கலியாணம் செய்துவைக்காதே'' என்று உமது அத்தானிடம் சொன்னது நியாயந்தான்! நானும் கங்காபாயும் ஒருநாள் சாணி துவைத்து எரிமுட்டை தட்டிக் கொண்டிருந்த பொழுது ''அம்மணி, என் பெண் மூத்தவளுக்கு ஒரு வலிப்பு இருக்கிறது. எப்பொழுதாவது வருஷத்துக்கு இரண்டுமூன்று தடவை வந்துவிடுகின்றது. அது ஒருவருக்கும் தெரியாது. உனக்குமட்டும் சொன்னேன். ஏதாவது உனக்கு வைத்தியம் தெரியுமா'' என்று என்னைக் கேட்டாள். அப்படி அவள் என்னிடம் சொன்னபொழுது இக்காலத்தில் இந்த சங்கதி இவ்வளவு பயிரங்கமாகும் என்று அவள் எண்ணியிருப்பாளா? அதை நான் உங்களிடம் மட்டும் சொன்னால் நீங்களிப்படி என்னை மோசம் பண்ணலாமா?

''அப்படி ரகஸியமாய் வைத்துக்கொள்ள வேண்டும் என்றிருந்தால் அவள் உன்னிடம் சொல்லியிருக்கவே கூடாது.''

அது அவள்மேல் ஒரு தப்பிதமா? வெகு அழகு! நீங்கள் செய்தது நியாயம்! அவள் என்னிடம் சொன்னது அநியாயம்! என்ன? புருஷர்கள் எண்ணம் எப்பொழுதும் கொடிய எண்ணம்! பெண்டுகளாய்ப் பிறந்துவிட்டால் வாயையே திறக்கக்கூடாது. ஊசிபோட்டு தைத்துக்கொள்ள

வேண்டும்! இந்த அதிகாரம் உம்மால் பண்ணமுடியாது! உமது பெண்சாதிக்கு நீர் யஜமானேயல்லாமல் கங்காபாயை கண்டித்துப்பேச உமக்கென்ன அதிகாரம்! அவள் என்னிடம் ஒன்றும் சொல்லி யிருக்கக்கூடாதென்று நீங்கள் உமது படுக்கையில் படுத்துக்கொண்டு அதிகாரம் எவ்வாறு செய்யலாம்? ஒரு கலியாணத்தில் கல் போட்டீர்களே! அது உமக்கு புண்ணியமா! அது போகட்டும். என் தலைக்கு அபவாதம் கொண்டுவந்து வைத்தீர்களே. நான் உம்மிடம் சொல்லியிருந்த விஷயத்தை நீர் எப்படி வெளியிடலாம். நீர் என் கணவன் என்றுதானே நான் உம்மிடம் மட்டும் ரகசியமாகச் சொன்னேன். இன்னும் எவ்வளவோ தெரியும். அவைகளை யினி வெளியிடுவேனு? நீங்கள் என்னதான் என்னை இமிசித்துக்கேட்டாலும் வாயைத் திறப்பேனு! உமக்கு தயை என்பதே யில்லை! உமக்கு கருணை கிடையாது!! பாவ புண்ணியங்கள் தெரியாது!!! அதிகமாய்ப் பேசுவதில் லாபமே யில்லை. இன்னும் ஒரு சங்கதி நான் உங்களைக் கேட்கின்றேன். அத்தானிடம் என்னைப்பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையா?

''உன்னைப்பற்றி நான் அவனிட்ம் என்ன சொல்லப் போகிறேன். ஒன்றும் சொன்னதாக எனக்கு ஒருவித நியாபகமும் யில்லையே.''

வலிப்பு இருந்தாலென்ன? அப்படித்தான் அம்மணி பாய்க்கும் தலைச்சனைப் பெறுகிறவரையில் யிருந்ததாம்! அதன்பிறகு அவளுக்கு வலிப்புவந்ததை நான் பார்த்ததே யில்லை. ஆகையால் நீ கங்காபாயின் மகளை உன் மகனுக்கு மணம் செய்துவைக்கலாம் என்று சொல்லவில்லையா. அந்த சங்கதியை பற்றி நீங்களிருவரும் பேசிக்கொண்ட பொழுது என் விஷயம் வெளிப்படுவானேன்.

''உன் விஷயம் ரகஸியம் ஒன்று மில்லையே! உனக்கு இப்பொழுது வலிப்பு ஒன்று மில்லையே. உனக்கு வலி ங்கினதுபோல் கங்காபாய் பெண்ணுக்கும் சில காலத்

Koviloor Acadamy

துக்குள் நீங்கிவிடும் என்று அனுகூலமாக சொன்ன சொல் தானே.''

நல்ல அனுகூலம்! என்னை எல்லாருமறிய அவமானம் பண்ணிவிட்டு எனக்கு அனுகூலமாகப் பேசினதாகச் சாதிக்கின்றீர்களே. நான் நாளையதினம் உமது வாய் சாக்கடை நாற்றம் நாறுகின்றது என்று பாகவதகோஷ்டியில் வந்து சொல்லுகிறேன்! உமக்கு அது சம்மதமா! அப்படி உம்மை பற்றி நானே சொன்னால் அது எனக்கு அவமானமல்லவா? அந்த எண்ணம் உமக்கும் இருக்கவேண்டாமா? என்னைப் பற்றி நீங்கள் வெளியே குற்றஞ்சொன்னால் அது உங்களுக்கும் குறைவாயிற்றே என்கிற எண்ணம் உங்களுக்கில்லாமல் போயிற்றே! இனி என்ன சொன்னாற்றான் உமக்கு புத்திவரும். ஒருநாளும் உமது குணம் மாறப் போகிறதில்லை. நீர் உமது அத்தானுக்கு நல்லவரானீர். இப்பொழுதா நல்லவர்? அன்று 5 ரூபா ரயில் சார்ஜ் கொடுத்தனுப்பினீர்களே! அன்று முதல் நல்லவர்!நான்தான் கங்காபாய்க்குப் பொல்லாதவளானேன். இன்றிரவு உமது குணத்தை நான் நன்றாகத் தெரிந்துகொண்டேன். இனி உம்மிடம் ஒரு ரகஸியமும் சத்தியமாகச் சொல்லவே மாட்டேன்.

என்று சொல்லி அம்மணிபாய் கண்மூடினாள். இவள் ரகஸியம் இவளிடமேயிருக்கட்டும். இவள் கண்ணயர்ந்தாற் போதும் என்று இவள் கணவன் கருதி ரகஸ்யத்தைக் கேட்க ஆசைகொண்டு இவளை விழித்திருக்கச் செய்யாமல் இவ்வளவுடன் தூங்கினாளே, இதுவே நமது பாக்கியம், என்று நினைத்தவனாய் தானும் தூங்கலானான்.

Koviloor Acadamy

முப்பத்திரண்டாவது
மந்திரோபதேசம்

வள்ளியை வீட்டைவிட்டு அனுப்பியது

இன்று நான் உங்கள் குணங்களைப்பற்றி முற்றிலு மறிந்து கொண்ட பிறகு எனக்கு ஒரு பேச்சுக்கூட பேசாமல் உங்கள் வாஸனையையே மறந்து தூங்கவேண்டும்! உங்களுடைய முகாரே ாகம்கூடஆகாது என்று எண்ணியிருந்தேன். அந்த அற்ப முண்டை வள்ளியுடன் சண்டைபோட்டுபோட்டு என்தொண்டையெல்லாம்விரணமாயிருக்கின்றது. தலைதூக்க முடியவில்லை! தலைவலி! சாம்பராணித் தைலம் கொஞ்சம் வாங்கிக் கொடுக்க ஒருவருக்கும் ஒழியவில்லை! என் தலையில் ஒரு சவுக்கத்தை முறுக்கியாவது கட்டக் கூடாதா? அது என் வலியை கொஞ்சம் குறைக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என் தலை யிடித்தாலென்ன? என் மண்டை வெடித்தால் என்ன? இவள் பிராணன் எப்படியாவது போய்விட்டால் ஒரு சனி தொலைந்தது என்று நீங்கள் சுகமாயிருக்கிறீர்கள்! எனக்கு மட்டும் இத்தனை அவஸ்தைகளுடன் பிராணனை சுவாமி பலமாய் போட்டுவிட்டார்! தலைக் நக் கட்டுவதில் பிரயோஜனமில்லை. உள்ளுக்கு மருந்து சாப்பிடவேண்டும் என்று யுக்தியாசச் சொல்லுகிறீர்கள். அதுவும் உங்களுடைய குணத்துக்கு ஒத்ததாகத் தானிருக்கிறது! மேலுக்கு ஒரு கந்தக் துணியை சுருட்டிக் கட்ட உங்களுக்கு மனமில்லை! நீங்கள்தான் எனக்கு உள்ளுக்கு மருந்துசெய்து வைக்கப்போகின்றீர்கள்! இந்த மாதிரி ஒரு கலகத்தை வேண்டுமென்று இழுத்துவிட்டால் நான் வள்ளி சமாசாரத்தை யின்றிரவு பேசாமல் தூங்கி விடுவேன் என்று நினைக்கின்றீர்கள். "அவகாத் தள்ள

Koviloor Acadamy

வேண்டாம், தள்ளவேண்டாம், அவளைப்போல் அவ்வளவு நல்லவளாக வேறொருவள் அகப்படமாட்டாள்'' என்று நீங்கள் சொன்ன காரணம் எனக்கு இரண்டு நாளைக்கு முந்தித்தான் தெரியவந்தது! அதற்கு முந்தியே அவள் கள்ளத்தனத்தை நான் கண்டறிந்துவிட்டேன். என்ன கூலி கொடுத்தாலும் திருப்தியில்லாமல் அவள் முகத்தை முழுநீளம் வைத்துக்கொண்டும், ஏதாவது நான் ஒரு பேச்சு சொன்னால் அதற்கு பதிலாக ஒன்பது பேச்சுக்கள் சொல்லிக் கொண்டும்அமிஞ்சைக்காரியம் மனமில்லாமல்செய்துகொண் டும் என்னை ஏய்த்துக்கொண்டு வந்தாள். ஒரு புழுக்கைக்கு இவ்வளவுதைரியம் எப்படி வந்தது என்று நான் ஸந்தேகித் தேன்முதல்முதல் ஸந்தேகித்தபொழுதே அந்த முண்டையை வீட்டைவிட்டு ஓட்டியிருக்க வேண்டும்! பதறக்கூடாது எல்லாம் பார்த்துக்கொண்டு நிதானமாய்ச் செய்வோம் என்றிருந்தேன்! ஆனால் நேற்று வரையில் அவள் இன்ன காரணத்தால் என்னை இவ்வளவு அலட்சியம் செய்கின்றாள் என்பது எனக்கு விளங்கவே யில்லை. உமது தயவு அவளுக்கு முற்றிலுமிருக்கும் ஸங்கதி நேற்றுத்தான் தெரியவந்தது! அவ்வளவு நல்லவர்களா நீங்கள்? பாகவத மதத்தின் ஸித்தாந்தம் அப்படிச் சொல்லி யிருக்கிறதா என்ன? உமக்கு குட்டிச் சுவருக்கு புகுந்தது போல் வயது புகுந்தும் துஷ்ட புத்தி போக வில்லையா?

''ஏனடி! வீண் அபவாதம் சொல்லுகிறாய்.''

அப்படியா! அம்மாதிரி வீணாய்ச் சொல்லுகிறது எனக்கு ஒரு பொழுதும் வழக்கமே யில்லை! அவ்வாறு சொல்லி யிருக்கவேண்டும் என்றால் ஒரு வருஷத்துக்கு முந்தியே சொல்லி அந்த முண்டையை யிந்த வீட்டை விட்டு ஓட்டி யிருப்பேனே. அப்படி நாம் புருஷர்கள் மேல் பாவம் சொல்லக் கூடாதென்று அஞ்சியல்லவோ இன்று வரையில் காத்திருந்தேன். நேற்று என் ஸந்தேகம் நிச்சயமாயிற்று! இன்று அவளைத் துலைத்தேன். நீங்கள் வெகு யோக்கியர்கள்.

Koviloor Acadamy

உங்கள் யோக்யதை 10 வருஷங்களுக்கு முன்னமேயே எனக்குத் தெரியுமே! அக்காலத்துடன் அது ஒழிந்தது: இப்பொழுது நீங்கள் வெகு நல்லவர்களாய்விட்டீர்கள்: ஒருவித துர்குணமும் கிடையாது என்று நான் நினைத்திருந்தேன். 10 வருஷங்களுக்குமுன் நான் மூன்றும் பிரஸவத்துக்கு செவ்வாப்பேட்டை போயிருந்தபொழுது எனக்கு சக்களத்தி கருப்பி என்று இந்த ஊரில் ஒருவளிருந்தாளே. அவளை நான் இன்னும் மறக்கவில்லையே. நீங்கள் பாகவதகோஷ்டியில் சேர்ந்தாலென்ன? விபூதி ருத்ராக்ஷம் தரித்தாலென்ன? துளஸிமணி அணிந்தால் என்ன? நிமிஷத்துக்கு நிமிஷம் பட்டுக்கயிறை கையில் பிடித்துக்கொண்டு சிவ ராம என்று ஜபம் பண்ணுகிறீர்கள். இந்த வேஷத்தைக் கண்டு நீங்கள் வெகு யோக்யர்களாய் விட்டீர்கள் என்று நானும் நேற்றுவரையில் மோசம் போயிருந்தேன்! புருஷர்களை யினி நம்பவேகூடாது. அவர்கள் எல்லாரும் இப்படியேதான். படிப்பது ராமாயணம்; இடிப்பது பெருமாள் கோவில். கழுத்தில் தாவடம் மனதில் அவகடம் என்ற சித்தாந்தம் புருஷர்களிடந்தான்! அவர்கள் வெகு கொடியவர்கள்! அவர்களை நம்புகிற பெண்டுகள் தலையில் துணியை உதறிப் போட்டுக்கொண்டு வெளியிற் செல்லவேண்டும்! பத்து வருஷமானால் என்ன? பைத்திப்பத்து நூறு வருஷமானாற்றானென்ன? உமது துர்குணம் உம்மை விட்டுப் போகாது! அப்பொழுது கருப்பி இப்பொழுது வள்ளி என்று நேற்றுத்தான் வெளியாயிற்று!

"அடியே! நீ ஒரு புத்தி யற்றவள். ஒரு காரணமுமில்லாமல் வீணாய் அபவாதம் வாய் கூசாமல் பேசுகிறாயே."

நான் வாய் கூசாமல் பேசுகிறேன்! நீங்கள் வெகு கூச்சமும் வெட்கமுமாய் நடக்கறீர்களே? அதில் எனக்குக் கொஞ்சம் கடன் கொடுங்கள். காரணமில்லாமல் நான் சொன்னேன் என்கிறீர்களே. நான் அவளுக்கு கூலி கொடுக்கும் போதெல்லாம் "போனால் போகட்டும், அவள்

Koviloor Acadamy

ஏழை. அவள் கேட்டபடி கொடு. ஏதோ இரண்டு நாள் நின்றுவிட்டதற்காக கூலியைப் பிடிக்காதே'' என்று வெகு கருணையுடன் நீங்கள் பேசினீர்கள். அவளும் உங்களைவிட உங்கள் யஜமான் நல்லவர் என்றாள். உங்களுடைய திருட்டுத் தனம் நேற்றல்லவோ எனக்குத் தெரியவந்தது.

''நான் தயையால் சொன்னால் நீ விபரீதமாய் அர்த்தம் பண்ணுவது பாவம்! வீண் பாவத்தை கட்டிக் கொள்ளாதே!''

ஆம்! நான் பாவி! பாவியாகவே யிருக்கட்டும்! நேற்று இலுப்பைக்கட்டி அரைத்ததற்கு நான் அவளுக்கு இரண்டு துட்டு கூலிகொடுத்தேன். நீங்கள் குடுகுடு என்று ஓடி வந்து போனால் போகட்டும் மூன்று துட்டுகொடு என்றீர் களே. என்ன நியாயம்! பத்து வருஷங்களுக்கு முந்தியிருந்த துர்குணம் உமக்கில்லாத பக்ஷத்தில் நீங்கள் அவ்வண்ணம் சொல்லி யிருப்பீர்களா.

''அபவாதம் வேண்டாம். என் குணம் ஈசுவரனுக்குத் தெரியும்''

தாளிவீடு நுழைகின்றவர்களுக்கும், பொடி போடுகின்ற வர்களுக்கும் தெய்வம் ஒன்றிருக்கிறதா! ஏன் வெட்கங் கெட்டு தெய்வத்தை யிழுக்கின்றீர்கள்! இத்தனை வயதாயு மிவ்வளவு குழந்தைகளைப் பெற்றபிறகும் உமக்கு உமது கெட்டபுத்தி நீங்கவில்லை!

''ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் உளரலாமா?''

எனக்கு எல்லாந் தெரியும். உமக்கும் எல்லாந் தெரியும். முகத்தில் மீசை முளைத்த ஆண்பிள்ளையானால் தைரியமாய் நீங்கள் உமது குற்றத்தை ஒப்புக்கொண்டு பேசுவீர்கள். நான் அவளை வேண்டாம் என்று தள்ளும் பொழுது, அவளைப்பற்றி ஏன் பரிந்து கொண்டு பேசவந்தீர் கள்? அவள் நல்லவள் என்று நீங்கள் சொல்லுவதைக்

Koviloor Acadamy

காட்டிலும் அவள் என்னைவிட சின்னவள் என்று சொல்லும். அது உண்மை! கூலி வேலைசெய்யும் வீடு கூட்டி உமக்கு அழகு! அவளைக் கண்டால் உமக்கு முகத்தில் சிரிப்பு! என்னைக் கண்டால் கடுகடுப்பு!! வீடு கூட்டிக்கு அழகும் வேண்டுமா? உமது துர்குணம் ஒருநாளும் விடாது. நீர் ஒன்றுமில்லை என்று ஆணையிட்டால் யார் நம்புவார்கள்? இரண்டு வருஷங்களுக்கு முந்தி தொம்பாள் என்று ஒரு வீடு கூட்டியை வேலைக்கு அழைத்து வந்த பொழுது அவள் வேண்டாம், பார்ப்பதற்கு வெகு கோரமாயிருக்கிறாள் என்று சொல்லவில்லையா?

"ஆம் சொன்னதுண்டு! அதற்கும் இதற்கும் என்ன ஸம்பந்தம்."

என்ன ஸம்பந்தமா? முகத்தை சமயத்தில் திருப்பிக் கொள்ளாதேயுங்கள்! நானாவது நன்றாக உங்கள் முகத்தைக் கொஞ்சம் பார்க்கட்டும்! வள்ளி பார்த்த முகத்தை நான் பார்க்கக்கூடாதா? தொம்பாள் அழகில்லை; வேண்டாம். வள்ளி அழகுள்ளவள் வீடு கூட்டவேண்டும் என்றால் அதன் அர்த்தத்தை நீங்களே யோசித்துப்பாருங்கள்! அதற்கென்ன வீண்ஜெம்பமாய் நல்ல படம், நல்ல புஷ்பம், நல்ல துணி, இவைகளை ஆசையாய் வேண்டும் என்று சொல்லுவதுபோல் ஏதோ தொம்பாளைவிட வள்ளி பார்ப்பதற்கு லக்ஷணமாயிருந்தாள் வேண்டும் என்று சொன்னேன் என்கின்றீர்கள்! ஆனால் குழந்தையை ஏய்ப்பதுபோல் என்னை ஏய்க்கமுடியாது! பத்து வருஷங்களுக்கு முன் நீங்கள் சீரழிந்த சமாசாரம் எனக்குத் தெரியும்! இப்பொழுதும் சொல்லவேண்டாம் என்றாலும் வெட்கங்கெட்டுபோய் சொல்லவேண்டி வருகின்றது. ரம்பாபாய் விஷயமும் எனக்குத்தெரியும். எத்தனை வருஷங்களாயினுந்தான் என்ன? எத்தனை குழந்தைகள் பிறந்தாற்றானென்ன? பாகவத கோஷ்டியில் புகுந்து சிவ, ராம் என்று தப்பளைபோல் சொல்லிக் கொண்டிருந்தாற்றானென்ன? உமது துர்குணம் உம்மை விடவே யில்லை,

Koviloor Acadamy

மறுபடியும் வள்ளியை விட நல்லவள் கிடைக்க மாட்டாள் கூலிக்காரிகள் அப்படித்தான். சிரமத்துக்குத் தக்கபடி கூலி கேட்பார்கள். ஒரு காசு அதிகமாய் கொடுத்தால் என்ன கெட்டுப்போயிற்று! அவளையே அழைத்து வைத்துக்கொள். அவளிடம் திருட்டுப் புரட்டு கிடையாது என்கின்றீர்கள்! என் தாலியில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன்! அவளை நீங்கள் மறுபடி கூப்பிட்டு வைத்தால் அவளே இந்த வீட்டுக்கு சுகமாய் எஜமானியாயிருக்கட்டும். இந்த வீட்டை விட்டு நான் வெளியே போய் விடுகின்றேன். உமக்கு அவள் வெளியே போக வேண்டுமா, நான் போக வேண்டுமா?

"இரண்டு பேர்களும் போய் விட்டால் ஒருவித அவஸ்தையுமில்லாமலிருக்கும்!"

அப்படியா? எப்படியாவது நானிந்த வீட்டிலிருக்கக் கூடாதென்று உமக்கு எண்ணமா? அந்த புழுக்கை முண்டைக் காக நானிந்த வீடுவிட்டுப் போவேனா? அவளை நேற்றுடன் ஒழித்து அவளுக்காக ஒரு ஸ்நாநம் பண்ணி விட்டேன். அத்தால்தான் நீர் கோத்துக்கொண்டு தலைவலி பிளக்கின்றது! முதல் தேதி வந்ததும் சம்பளத்துக்கு வந்து நிற்பாள். இரண்டு துடப்பம் மூன்று சாணிச் சட்டி இவை களைக்காணோம். இவைகளை கொண்டுவந்து கொடுத்தா லொழிய அவளுக்கு சம்பளம் கொடுக்கக்கூடாது! எனக்குத் தெரியாதே! கொடுத்துவிட்டேனே! என்று சொல்லிவிடுவீர் கள்என்று நான் முன்னமேயே எச்சரித்தேன். சாக்கிரதை, பாழும் தலைவலி உயிரையே கொண்டு போகும் போலிருக் கிறது! இனிமேல் பேச என்னால் முடியாது.

என்று சொல்லி அம்மணிபாய் கண்மூடினாள். ஐயோ ஒரு குற்றமுமில்லாத வள்ளி வீண் அபவாதத்துடன் வீட்டை விட்டு ஓட்டப்பட்டாளே என்று நினைத்துக்கொண்டு ராமபிரஸாதும் நித்திரை செய்யலானான்.

Koviloor Acadamy

முப்பத்திமூன்றுவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் ஊராச்சிக்கோட்டையில் தர்காஸ்து பிடித்தது

எனக்குத் தெரிந்துவிட்டதே! உங்கள் அத்தான் அவ்வளவு அவஸரமாய் இங்கு வந்துபோன விஷயம் தெரிந்துவிட்டதே! நீங்கள இவ்வளவு மோசக்காரரா? இத்தனை துரோகம் செய்பவர் என்று நானிதுவரையில் எண்ணவேயில்லையே? இப்பொழுதுதான் நாளைக்கு நாள் ஒவ்வொன்றாக உங்களுடைய யோக்யதைகள் எனக்கு வெளியாகின்றன! ஆனாலும் இவ்வளவு வஞ்சகம், கொண்ட மனைவியிட மாகாது! ஆகவே ஆகாது! இத்தனை வஞ்சகத்தை மனத்தில் அடைத்துவைத்துக் கொண்டு ஒன்றும் தெரியாதவர்கள்போல் வெகு சாதுவாய் தலையணையிற் தலைவைத்து தூங்குகின்றீர்களே! உங்கள் தைரியம் என்ன தைரியம்! ஊராச்சிக்கோட்டையில் நீங்கள் தர்காஸ்து பிடித்த சமாசாரத்தை என்னிடம் சொல்லக்கூடாதா? அந்த ஸந்தோஷ விஷயத்தைக் சேட்க எனக்கு பாத்தியமில்லையா? என்னதான் பேசவேண்டாம் என்று நிச்சயம் செய்து கொண்டு வந்தாலும் ஏதாவது ஒன்று பேசும்படி வந்து விடுகின்றதே! அது என் தலைவிதி! இவ்வண்ணம் எல்லார் தலைகளிலும் மண்ணை வாரிப்போடுவீர்கள் என்று நான் எண்ணவே யில்லை! என்ன அநியாயம்!

"அநியாயம் என்ன?"

என் தந்தை ஏதோ இரண்டு காசு உங்களிடம் கொடுத்துப்போனார். அதை இதுவரையில் நீங்கள் என்ன

Kovilool Academy

நான் அழித்தபோதிலும் அவருடைய பூஜாபலத்தால் வளர்ந்தகொண்டே வந்தது. அப் பணத்தை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாத பொட்டல் நிலத்தில் கொண்டுபோய் கொட்டிவிட்டீர்கள்! ஊராச்சிக்கோட்டை நிலம் நல்ல நிலமாயிருந்தால் பவானிக்காரன் அதை தர்காஸ்து பிடித்து உழுது பயிரிடமாட்டானா? சேலத்துக்காரன் வாங்கும்படியாக அந்நிலம் நிற்குமா? அதை யறியாமல் அங்கு கொண்டுபோய் கையிலிருந்த பொருளை யெல்லாம் கொட்டிவிட்டீர்களே! நாளை நானும் என் குழந்தைகளும் உண்ண உணவற்று கட்டத் துணியற்று நிற்கும்போது நீங்கள் கண்குளிரப் பார்ப்பீர்கள். பணத்தை அழிப்பதில் யோசனை யில்லாமல் போயிற்றே!

"யோசனையுடன்தான் அழித்தேன். நமக்கு ஒன்றுக்கு டத்து லாபம் வரும்! நமது கஷ்டம் என்பது ஊராச்சிக் கோட்டை, தர்காஸ்துடன் ஓடிப்போய்விட்டது."

அப்படியிருந்தால் அது எனக்கு மிஷ்டந்தான்! ஆனாகப்படியில்லை யென்பது எனக்கு நன்றாகத்தெரியாதா? உமது அத்தான் வந்தபொழுதே தெரியுமே. இதுவரையில் அவன் தொட்ட காரியங்களில் ஏதாவது ஒன்று உருவான துண்டா? அவன் எத்தனையோ குடித்தனங்களைக் கெடுத்து விட்டு கடைசியில் உமது குடித்தனத்துக்கு ஒரு சகுனியாய் வந்தான்! அந்த தடியன் இங்கு வருவானேன்? அவன் ஏதோ குசுகுசு என்று உங்கள் காதில் 10 நாளைக்கு முன் சொன்னால் உடனே புறப்பட்டுபோய் காசைக் கரி யாக்கிவிட்டு வீடு வந்தீர்கள். என்னிடம் எங்கு சொல்லிக் கொண்டு போனால் நான் தடுப்பேனோ வென்று பொய் சொல்லி இதோ ஒரு நாழிகைக்குள் வருகிறேன் என்று ஓடினீர்கள். நான் அவ்வளவு அசுகியம்! அவன் பேச்சு உங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை! நாளைக்கு உங்கள் பிணம் விழுந்தால் அவன்தான் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து தலையை அவிழ்த்துக்கொண்டு அழப்போகிறான்! கெடுதலை

Koviloor Acadamy

நினைக்கவேண்டாம் என்றாலும் நீங்கள் செய்கிற அக்கிரமம் அதை நினைக்கச் சொல்லுகின்றது! பத்து நாள் வீட்டை விட்டுப்போய் திரும்பிவந்தீர்களே. உங்கள் முகம் எப்படியாயிற்று, கண்ணாடியில் வேண்டுமாயின் நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்! பத்து நாள் என் கை போஜனமில்லாமல் உங்கள் உடம்பு அரை உடம்பாய் விட்டதே. நீங்கள்தானா ஊராச்சிக் கோட்டையில் பயிரிடப்போகிறீர்கள்? இந்த வயதிலா! ஏதோ உங்களுக்கு புத்தி மோசம் வந்துவிட்டது. எவன் சொல்லையோ கேட்டுக்கொண்டு பணத்தைப் பாழாக்கி விட்டீர்கள்! இந்த வீட்டு விஷயங்களைப் பார்க்க உமக்கு புத்தியில்லையே. வெளியூரில் உழவுக்கு நிலம் பிடித்தீர்களே? இப்படி உங்களுக்கு பித்துப் பிடிக்குமா? எவனையாவது கூப்பிட்டுக்கொண்டு வந்து உமது தலையில் எலுமிச்சம்பழம் தேய்த்து நூறு குடம் ஜலம்விடச் சொன்னால் தேவலை போலிருக்கிறதே! ஊரார்கள் எல்லாரும் உம்மைப்பார்த்து இப்பொழுது சிரிக்கும் சிரிப்புப் போதாதா! நீர் கைப் பணத்தை முற்றிலும் இழந்து வீடு திரும்பும்பொழுது இன்னும் அதிகமாய் எல்லாரும் பல்லிளிக்கவேண்டுமா? ஒன்றுக்கு பத்து லாபம் வருவதை நானிதுவரையில் கேட்டதேயில்லை. அது ஒரு உண்மையா? பத்துநாள் வெளியிற் சென்ற காரணத்தால் உடம்பு இளைத்த நீங்கள் தானா ஊராச்சிக்கோட்டை மிராசுதாராகப் போகிறீர்கள்!

''நான் அங்கு போகவேண்டியதேயில்லை! அத்தான் பார்த்துக்கொள்ளுவான்.''

அத்தான் தொட்டால் அன்றே அழிந்தது என்று நான் தான் படித்துப் படித்துச் சொன்னேனே! உமக்கு இந்த காரியத்தில் ஒருநாளும் க்ஷேமமுண்டாகப் போகிறதேயில்லை! உம்மை நாயாக்கி நடுத்தெருவில் நிறுத்த நல்லவனொருவன் சேர்ந்துவிட்டான்! பணத்தாசை என்ற பிசாசும் உம்மைப் பற்றிற்று. இந்த பிசாசு பிடித்தவர்கள் பிழைத்ததேயில்லை? வாதம் ஊதி பணம் சம்பாதித்தவனை நீங்கள் பார்த்த

Koviloor Acadamy

துண்டா? அதற்கும் நீர் யிப்பொழுது யிறங்கி யிருக்கும் காரியத்துக்கும் ஒருவித வித்தியாசமுமில்லை! தேனுக்காசைப் பட்டு தேனீ அத்தேனில் கால்வைத்து மாட்டிக்கொண்டால் அப்புறம் அது பிழைப்பதும் உண்டோ! லாபம் லாபம் என்று ஆசைகாட்டிப் பேசுகின்றீர்களே. அந்த லாபம் வந்து எனக்கென்ன உபயோகம்? இதுவரையில் எனக்கு என்ன அதிகமாகச் செய்தீர்கள். இனிமேல் அதிகமாகச் செய்வீர்கள் என்று நான் எதைக்கொண்டு நம்பலாம்? எப்பொழுது நான் கேட்டாலும் ஒன்றுமில்லை என்ற ஒரே வாக்குத்தான் எனக்கு அளிக்கின்றீர்கள்.

''ஏன் வீண்சண்டை? இந்த விஷயமாய் வரும் லாபம் அவ்வளவும் உனக்கே நான் தருவேன்.''

'பகலுக்கு வாழலாம் கழுத்தே சுகமாகவிரு!' என்று நான் சொல்லவேண்டியதுதான். உமது அத்தான் தொட்ட காரியம் உருப்படாது! அப்படியே உமது நல்ல தசையால் உருப்பட்டாலும் அவன் உமது கண்களில் ஒரு காசு காட்டாமல் தப்புக்கணக்கு எழுதி உம்மை மோசம் செய்துவிடுவான்! அவனும் நல்லவனாயிருந்து உம்மிடம் இரண்டுகாசு காண்பித்தால் நீர் என்னை ஏமாத்திமோசம் செய்துவிடுவீர். என்ன என்று அம்மணி கேட்க ராமபிரதாஸ் ஏற்கனவே தூங்கிவிட்டபடியால் பதில் வரவில்லை. நாளைப் பேசிக்கொள்ளுவோம் என்று அம்மணியும் தூங்கலானாள்.

Koviloor Acadamy

முப்பத்திநான்காவது
மந்திரோபதேசம்

அம்மணிபாய் கொஞ்சம் காயலாயிருந்த பொழுது மரணபண்டுக்கு பணங்கட்ட புருஷனுக்கு மந்திரம் ஓதுதல்

என்னைப்போல் புத்தியுள்ளவன் இவ்வுலகத்தில் கிட்டாதென்று பலதடவை உங்களையே நீங்கள் புகழ்ந்து பேசிக் கொண்டிருக்கின்றீர்களே! அது நியாபக மிருக்கிறதா? இன்று எனக்கு அதிகமாய்ப் பேச திராணியில்லை. காலமே அவ்வளவு புனப்பாகம் சாப்பிட்டதுதான்! வாயுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை! எத்தைக்கண்டாலும் வாயிலெடுக்க வருகின்றது! 11 நாள் காய்ச்சல் என்று வைத்தியன் சொன்னான். இன்றைக்கு 5 நாளாயிற்று. இன்னும் 6 நாள் நான் பிழைத்திருந்து படுக்கையைவிட்டு எழுந்து என் குழந்தைகளுக்குத் தாயாராகும்பொழுது பார்த்துக்கொள்ளுவோம்! உங்களுடன் ஒரு சங்கதி வெகுநாளாகப் பேசவேண்டும் என்று எண்ணி யெண்ணி மறந்து மறந்து போகின்றேன். இனிமேல் மறக்கக்கூடாது. மறக்காமல் நினைத்துக்கொண்டு சொல்லும்படியான காலம் வந்துவிட்டது!

''என்ன?''

என்ன? இப்பொழுதுகூட என்னை அதட்டவேண்டுமா? காடு வாவா என்கிறதே! இப்பொழுதாவது என்னிடம் பக்ஷமாய்ப் பேசக்கூடாதா? இப்பொழுது கூட என்னிடத்தில் இவ்வளவு குணத்தோடு கூடியிருக்கும் நீங்கள்தானா எனக்குப் பிறகு என் குழந்தைகளைக் காப்பாற்றப்போகின்றீர்கள்? மரணபண்டு, மரணபண்டு - என்று சொல்லுகின்றார்களே.

Koviloor Acadamy

அதற்கு குழந்தைகள்பேரில் இப்பொழுதாவது ஏதாவது நீங்கள் கட்டக்கூடாதா? செவ்வாய்பேட்டை சங்கரராமன் மாப்பிள்ளை குழந்தைகளின்பேரில் 10,000 ரூபாவுக்கு மரணபண்டில் பணம்கட்டி படக்கு என்று மாண்டு போனான்! சங்கரராமன் பெண் அப்பணத்தைக்கொண்டு அவள் சாமர்த்தியத்தால் குழந்தைகளைக் காப்பாற்றி வருகிறாள். நீங்களோ பணத்தை எல்லாம் ஊராச்சிக் கோட்டை சப்பாத்துகாட்டில் கொட்டிவிட்டீர்கள்! நானோ கொஞ்சநாளில் வாயைப் பிளக்கப் போகிறேன்! குழந்தைகள் கதி என்னமாய் முடியும்! நானும்போய் குழந்தைகள் நிற்கதியாய் நீங்களும் இளையாளைக் கலியாணம் பண்ணிக் கொண்டுவிட்டால்

* * *

"நான் ஒருநாளும் இனி கலியாணமே பண்ணிக் கொள்ளமாட்டேன்."

அப்படித்தான் சாமாவையர் சொல்லி ஒருவருக்கும் தெரியாமல் பாலக்காட்டுக்கு ஓடி 86-ம் வயதில் 10 வயது பெண்ணை கலியாணம் பண்ணிக்கொண்டுவந்தார்! மூத்தாள் குழந்தைகளை சந்தியில் நிறுத்தினார். நானப்படி மோசம் போகும்படி விட மாட்டேன்.

"ஏதாவது புத்தியுடன் பேசினால் உன்னுடன் பேசலாம் போதும் நிறுத்து. தூக்கம் கண்ணைச் சுழற்றுகின்றது."

நான் எப்பொழுது நியாயமாகப்பேச ஆரம்பிக்கின் றேனோ அப்பொழுதுதான் அநியாயமாய் நான் பேசுவதாக உமது புத்தியில் புலப்படுகிறது! அப்பொழுதுதான் அக்காளும் உம்மிடம் வருகிறாள்! அவலக்ஷணங்கள் அவ்வளவும் உம்மிட மமைந்திருக்கின்றன!

"அப்படியா? நிரம்ப ஸந்தோஷம்"

பாருங்கள்! நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள். குழந்தை களுக்கு என்ன வழி. ஏதோ கையிலிருந்த கொஞ்சத்தைப்

Kovilur Acadamy

பாழாக்கினீர்களே. மிகுந்து நிற்கும் மற்றவைகளை சுருக்கிப் பிடித்து குழந்தைகளுக்கு உபகாரமாக மரணபண்டில் கட்டக்கூடாதா என்று பேச ஆரம்பித்தால் என்னைக் கன்னத்தில் அடிக்கின்றீர்கள்! ரம்பாபாய் பேசினால் அனுகூலமாக பதில் சொல்லுவீர்கள்!

"அவள் பேச்சை இனி எடுக்காதே என்று நான் எச்சரித்திருக்கின்றேனே. வெட்கங் கெட்டுமறந்தாயோ?"

எடுக்கவில்லை! எடுக்கவில்லை! இப்பொழுது எடுத்ததற்கு கன்னத்தில்போட்டுக் கொள்ளுகிறேன்! குஞ்சு குழந்தைகளைப் பெற்றவளுக்கு வெட்கமேது. நீங்கள் என்னதான் செறுப்பாலடித்தாலும் எனக்கு மானமில்லை! நீங்கள் இளையாளைக் கலியாணம் பண்ணிக் கொள்ளும் பொழுது என் குழந்தைகளை சந்தியில் நிறுத்தாமல் அவர்களுக்கு மரணபண்டில் நாளைக்குக் கட்டுங்கள் இல்லாவிடில 4-5 நாளைக்குப் பின்புபோகும் என் உயிரை நான் நாளையதினமே போக்கிக் கொள்ளுவேன். என்பேரில் நீங்கள் ஒன்றும் கட்டவேண்டாம். என் தேகஸ்திதி எனக்குத் தெரியும் நான் 5-6 நாளைக்குமேல் உயிருடனிருக்கமாட்டேன். கலியாணம பண்ணிக்கொள்ளப் போகிறதில்லை என்று வீண் சத்தியம் செய்ய வேண்டாம்! நான் நம்பமாட்டேன். புருஷர்களுக்கு மயான வைராக்கியம் என்பது நான் எவ்வளவோ கேட்டுமிருக்கிறேன். பார்த்துமிருக்கிறேன்! நான் என் கண்களை மூடிக்கொண்டு போன பிறகு நீங்கள் யாரைக் கலியாணம் செய்து கொண்டாற்றான் எனக்கென்ன விசாரம்! வள்ளியையே வேண்டுமானால் தாலி கட்டுங்கள்! என்னைப்போல் ஒரு பயந்த பத்தினி உமக்குக் கிட்டுகிறதை நீங்களே அறிந்து கொள்ளுவீர்கள்! என் குணத்தை நானே சொல்லிக் கொள்வதில் என்ன லாபம்! உலகத்தைக் கேட்டால் சொல்லும். உமது குணமும் 16-17 வருஷகாலமாய் நான் உம்முடன் பழகின பிறகு எனக்கு நன்றாகத் தெரியும்! அதைத் தெரிந்துதான் மரணபண்டுக்குக் கட்டச்சொல்லுகின்றேன்! வேண்டாம்! தடுத்துச்

சொல்ல வேண்டாம். எனக்கு எல்லாம் நன்ருய் விளங்கி விட்டது. ஊராச்சிக்கேட்டையிலிருக்கும் உமது அத்தான் உமத்கு ஒரு பெரும்நாமம் போடப் போகிருன்! அதற் காசத்தான் கொஞ்ச நெஞ்சம் கையிலிருக்கிறதை என் குழந்தைகள் பேரில் கட்டச்சொல்லுகின்றேன். நீங்கள் இளையாளைக்கட்டிக் கொண்டு என் குழந்தைகளை மோசம் பண்ணப் போகிறீர்கள். அதற்காகத்தான் மரணபண்டில் பணம் கட்டாமற்போனல் நான் பிராணனை விடுவேன். என் ஹத்தி உம்மை சுற்றிக் கொள்ளும். நாலைந்து நாட்களுக்குப் பிறகு போகும் பிராணன் இப்பொழுதே போய்விடட்டுமா என்ன ?

அதற்கு ஆக்ஷேபமில்லை என்று ராமபிரஸாத் சொல்லு வதுபோல் குறட்டைவிடவானுன். அம்மணிபாயும் காய்ச்ச லால் அதிகமாகப் பேச முடியாமல் அன்று கண்ணயர்ந் தாள். அதுவும் கணவன் பாக்கியம்.

முப்பத்தைந்தாவது
மந்திரோபதேசம்

ராமபிரஸாத் சீட்டாடியது

"தினந்தோறும் எத்தனை நாழிகை கழித்து இரவில் ஒரு புருஷன் வீடு வருகிறது!"

"அப்படி இன்றிரவு அதிக நாழிகை ஆகவேயில்லையே"

'ஆம்!பெண்ணுய் பிறந்துவிட்டால் நாழிகையாயிற்றே என்று உங்கள் நாளில் வாயையே திறக்கக்கூடாது. நேற்று இப்படித்தான் வந்தீர்கள். நாழிகையாயிற்றே என்றேன் வாயடி கையடி அடித்து ஒன்றுமேயில்லை என்றீர்கள்!

முந்தாநாளுமப்படியே! வெட்கங்கெட்டுப் போய் நானும் தினந்தோறும் கெஞ்சிப் பார்க்கிறேன் நீங்கள் ஒரு நாளாவது சரியாய் வராமல் இந்த பதினாறு பதினேழு வருஷகாலமாய் இவ்வாறு அக்கிரமம் செய்து வருகிறீர்கள். இனி நான் வாயைத் திறக்கப்போகிறதில்லை. என் காலமாய்விட்டது! எனக்குக் காய்ச்சல் என்பது தெரியுமே? குழந்தைகள் இருட்டில் தவிமையாகத் தவிக்கின்றன! நானோ படுத்த படுக்கையாக விருக்கிறேன்! இப்பொழுது கூட வழக்கம்போல் ஒரு புருஷன் பாதிராத்திரி வீடு திரும்புவதாக இருந்தால் குழந்தைகளுடைய கதி என்ன? என் கதியைப் பற்றிய விசாரம் இன்றுடன் எனக்கு நீங்கி விட்டது! என் தேகத்தில் சக்தியுமில்லை, இன்னும் இரண்டு நாளைக்கு மேல் நான் உயிருடனிருக்கப் போகிறேன் என்ற எண்ணமுமில்லை. இவ்வளவு சொல்லியும் என்னவாய் உடம்பு இருக்கிறது என்று ஒரு கேள்வி நீங்கள் வயைத் திறந்து மரியாதைக்காவது கேட்கிறீர்களா! ஊராச்சிக் கோட்டையில் உங்கள் காசை கரியாக்கிவிட்டீர்கள்! நானும் போய்விடுவேன்! குழந்தைகளை சந்தியில் விடாமல் ஏதோ கிழவியாயிருந்தாலும் என் தாயார் ஒருவளிருக்கிறாளே! அதுவே குழந்தைகள் பாக்கியம்! அவள் கையில் சொற்பம் காசிருக்கிறது! அதைக்கொண்டு குழந்தைகள் தலை எடுக்கிற வரையில் அவள் பார்த்துக்கொள்ளுவாள் அப்புறம் தலையெடுத்து வயிறு வளர்த்துக்கொள்ளும். இப்பொழுது சிறிது காலமாய் உங்கள் நடவடிக்கை முற்றிலும் மாறிற்று! குஷால்தாஸ் ஸகவாஸம் சற்று குறைவுபட்டிருந்தது. மறுபடியும் யதாபிரகாரம் ஆரம்பித்து விட்டது! நீங்கள் இப்பொழுது போய்வந்து கொண்டிருக்குமிடம் தெரியாமல் என் பிராணன் போயிருந்தால் என் ஆத்மா எவ்வளவோ திருப்தியாய் பரமபதம் சேர்ந்திருக்கும்! முந்தாநாள் நீங்கள் குஜராத்தி சத்திரம்போய் ஒரு ரூபா மேஜைவைத்து சீட்டாடவில்லையா? பாகவத கோஷ்டியிலிருந்து இப்பொழுது சீட்டு கோஷ்டியிலிறங்கி

Koviloor Acadamy

னீர்கள். நாளைக்கு முடிச்சவிழ்க்கிறவர்கள் கூட்டத்தில் சேர்ந்தாலொழிய உமக்கு சீட்டுக்கு மேஜைப்பணம் அகப் படமாட்டாது. முந்தாநாள் உமக்கு எவ்வளவு நஷ்டம்.''

"முந்தாநாள் நான சீட்டு ஆடவேயில்லை.''

"சத்திரத்துக்கு சத்தியமாகப் போகவே யில்லையா?''

"போயிருந்தேன். சீட்டாட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். நானாடவில்லை.''

"வெகு நல்லகாரியம்! பார்த்தீர்களல்லவா! பார்த்தா லென்ன? ஆடினாலென்ன? மேலும் அப்படித்தான் மெது வாக ஆரம்பிக்கிறது. முதல் முதல் ஒருநாள் பார்க்கிறது, இரண்டாவது நாள் ஆட ஆரம்பிக்கிறது. மூன்றாவது நாள் மேஜை வைக்கிறது. அதன்மேல் கோர்ட்டு ஏறி ஜெயிலில் போய் உட்காருகிறது! இன்றிரவு உமக்கு மூன்றாம் நாள். நாளை கோர்ட்டுக்குப் போவீர். நாளையினின்று ஜெயிலில் உட்காரலாம். அப்பொழுது தான் என் பிணமும் இந்த வீட்டில் விழும். குழந்தைகள் கதறிக்கொண்டு நிற்பார்கள். நீங்கள் ஜெயிலில் கூழ் காசசிக்கொண்டு நிற்கலாம். வெகு கௌரவமான பிழைப்பு! நமது குலங்கோத்திரமென்ன? நமது மரியாதை யென்ன? எல்லாவற்றையும் மறந்து அந்த குஷால் தாஸ் சொற் கேட்டு இப்படி கெட்ட வழி பிலிறங்கு வீர்களா? சீட்டாட்டம் ஒரு குடும்பி ஆடும் ஆடடமா? போக்கிலிகள் ஆடும் சூதாட்டமல்லவா சீட்டாட்டம்! சூதாடித்தான் பஞ்சபாண்டவர்கள் வனவாசம் செய்தார் கள், துரௌபதி சந்தி சிரித்தாள். நானும் அப்படிதான் ஆனால் நான் கண்மூடிகொண்டு போய்விடுவேன். என் குழந்தைகள் சந்தி சிரிக்கபபோகின்றன.''

"நானின்று ஒரேநாள் சீட்டாடினேன். மேஜையுமில்லை ஒன்று மில்லை. இதற்கு இவ்வளவு பேச்சா?''

"விஷம் எவ்வளவு வேண்டும்! நீங்கள் ஒருநாள் தான் ஆடுங்கள்; ஒரு யுகந்தான் ஆடுங்கள்! எனக்கென்ன! ஒரே

தடவைஒரே தடவை என்று எத்தனையோ தடவைகள் நீங்கள் சொல்லி எவ்வளவோ அக்கிரமங்கள் செய்திருக்கிறீர்கள். கருப்பி வீட்டுக்குச் சென்றதும் ஒரே தடவைதான்! அதனால் பாதகமில்லை என்பது உமது சித்தாந்தம். வள்ளியைப் பார்த்து ஒரே தடவைதான சிரித்தீர்கள்! உம்மைப்பார்த்து ரம்பாபாய் ஒரே தடவை தான் சிரித்தாள்! இன்றிரவு நான் பிராணனை கையில் பிடித்துக்கொண்டு படுக்கையில் ஒரே கிடையாய் கிடக்கிறேன். ஏன் தாமதித்து வந்தீர்கள் என்றால் ஒரே தடவைதான் சீட்டாடினேன் என்கிறீர்கள்! உம்மை எந்த மனைவிதான நம்புவாள்? நீங்கள் செய்கின்ற குற்றங்களெல்லாம் உமக்கே அவமானததை உண்டாக்க வில்லையா? சீட்டாட்டததிலுட்கார்ந்தால் பொய், சத்தியம், சண்டை, ஆணை, கெட்டசொற்கள் எல்லாம் புறப்படும். பிடிப்பிடியாய் மூக்குபொடி போட்டுக்கொள்ளவேண்டும். குடங்குடமாய் மூக்கு சிந்தவேண்டும். சண்டை மண்டை உடையும். போக்கிலிகள் ஆடும் விளையாட்டு சீட்டாட்டம் என்பது உமது வயதில் இத்தனை குஞ்சு குழந்தைகளைப் பெற்றெடுத்துவிட்டு எவனாவது சீட்டாட்டத்துக்குப் போவானா? மானியாயிருக்கப்பட்டவன் ஒருபொழுதும் சீட்டாடுகிற இடத்தில் அடியே எடுத்து வைக்கமாட்டான்! நீங்களோ மானங்கெட்டவர்கள்! சீட்டில் மூழ்கி தலையெடுத்தவனை நானிதுவரையில் பார்த்ததேயில்லை. சீட்டைக் கைப்பிடித்தால் தரித்திரமும் கைப்பற்றும்! என்னுடைய சிறு தாயாருடைய இளைய மாமியாருடைய ஒன்றுவிட்ட மைத்துனி புருஷனுக்கு மாமனொருவன் சீட்டில் மூழ்கினான். அவன் தந்தை அவனுக்கு இரண்டு லட்ச ரூபா ரொக்கப் பணமும் இரண்டாயிரம் காணி நிலமும் வைத்து விட்டுப் போனார். இத்தனை ஆஸ்தியையும் இரண்டு வருஷத்தில் தோற்று மகுடஞ்சாவடியில் செததுக்கிடநதான்! போலீஸ்காரன் அவன் பிணத்தைப் புரட்டும்பொழுது அப் பிணத்தின் கீழ் ஒரு மூட்டை சீட்டுக்கட்டு இருந்ததாம்! அதுதான் அவன் ஆஸ்தி.''

Koviloor Acadamy

"இன்று குஷால்தாஸுக்கு ஒரு நாழிகைக்குள் இருபது ரூபா லாபம் வந்ததே."

"பார்த்தீர்களா! நீங்கள் ஆடித்தானேயிருக்கிறீர்கள்! உங்களுக்கும் லாபமோ நஷ்டமோ வந்திருக்க வேண்டுமல்லவா! குஷால்தாஸுக்கு லாபம் வந்தது என்றும் நீர்மட்டும் மேஜை வைத்து ஆடவில்லை யென்றும் சொன்னால் யார் நம்புவார்கள்?"

"நானவனுடன் ஆடவில்லை; எங்கள் கக்ஷி வேறு"

"என்ன வேண்டுமோ சொல்லிக்கொள்ளுங்கள் உம்மை யினி ஒருகாசுக்கு நம்பப்போகிறதில்லை! லாபம் லாபம் என்று சூதாடிகள் சொல்லிக் கொள்ளுவதெல்லாம் எனக்குத் தெரியும்! ! அது எப்பொழுதும் உருப்படாத லாபம்! ! சூதில் ஜெயித்து இதுவரையில் எவன் வாழ்ந்தான்? விரல் மடக்க வேண்டும். ஒருவாரம் நெய்வாங்கப் பணமாயிற்று, இன்றைக்கு இலை, வரி, காய்க்கு உபயோகமாயிற்று என்று இவ்வாறு பல பக்தர்கள சீட்டாட்டத்தின் லாபத்தைப் புகழ்ந்து பேசிக்கொள்ளுவது வழக்கம்! இது அவர்கள் பெரும் சூதர்கள் என்பதற்கு அத்தாக்ஷியேயல்லாமல் வேறன்று. நான் பிரிந்து போகும் காலம் வந்துவிட்டது நான் இந்நிலைமையில் உங்களை விட்டுவிட்டுப் போகக்கூடாது. உங்களுக்கு சீட்டாட அவ்வளவு புத்தி கிடையாது. பாகவத கோஷ்டியில் உம்மையிழுத்துவிட்டு உமது பணத்தை கழுவாகக்கரைத்த குஷால் தாஸ் இப்பொழுது சீட்டுக் கச்சேரியிலும் உம்மை யிழுத்துவிட்டிருக்கிறான். அவனை நாளை அழைத்து வாருங்கள். நல்ல எண்ணத்துடன் அவனிந்தத் தொழில் செய்யவில்லை. அவன் மோசமறிய உமக்கு புத்தியில்லை. இன்றுதான் உமது நாசகாலத்துக்கு முதல்நாள். நாளை முதல் உம்மை வெல்ல உருண்டையைக் கரைப்பது போல கரைத்துவிடுவான. இன்றிரவு பாதிராத்திரி திரும்பினீர்கள். நாளை மூன்றாம் ஜாமத்துக்கு வருவீர்கள் மற்ற நாள் அருணோதயம் வரையில் ஆடுவீர்கள். கண்கள் இரண்டும் குழியில்